ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் பூருவாசார்யர்களால் ரஸகனமாக
வியாக்கியானம் செய்யப்பெற்ற ஸ்ரீராமாயண ச்லோகங்களும்
அந்த வியாக்கியானங்களுங் கொண்ட

# ஸ்ரீராமாயண ஸௌரபம்

இது


புதுடில்லியில் வாழும் மஹாமேதாவியும் ஸதாசார்யஸூக்தி
ரஸிகருமான
டாக்டர் ஸர் K. S. க்ருஷ்ணன், F.R.S.
அவர்களின் விருப்பத்தின்படி

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்
**அண்ணங்கராசார்யரால்**



சென்னை ஸத்க்ரந்த பிரகாசகஸபையின் சார்பாக

மதராஸ் ரத்னம் (பிராஞ்ச்) பிரெஸ்ஸில்
அச்சிடுவிக்கப்பட்டது.

நந்தன ௵ மார்கழித்திங்கள்
**1953**

இதன் விலை 1—8—0

கிடைக்குமிடம்:
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

# முன்னுரை

நமக்கு வாய்த்த நித்யாநுபவக்ரந்தங்களில் ஸ்ரீராமாயணமும் திவ்யப்ரபந்தமுமே தலைசிறந்தவை யென்பது அநுபவரஸிகர்கள் அறுதியிட்ட தொன்றும். ஸ்ரீராமாயணப்ரவசனம் உலகில் அக்ஷராஸ்யர்களான ஸகல மதஸ்தர்களும் ஆங்காங்கு நடத்தி வருகிறார்களெனினும் பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில் ஸதாசார்ய பரம்பரையிற்படிந்து பஹுச்ருதரானவர்கள் செய்யும் ஸ்ரீராமாயண ப்ரவசநம் தனிச்சிறப்புப் பெற்ற தென்பதில் ஸந்தேஹிப்பாராருமில்லை. *பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ப்ராசேதஸாதேச பல ப்ரதாய, ஸ்ரீபாஷ்யகாரோத்தம தேசிகாய ஸ்ரீசைலபூர்ணாய நமோ நமஸ் ஸ்தாத்* என்று போற்றப்படுகிற திருமலை நம்பிவழியாகப் பெருகி நம்பிள்ளை பக்கலிலே தேங்கின ஸ்ரீராமாயண விசேஷார்த்த ப்ரவாஹமானது பகவத் விஷயம் முதலான நாலாயிர திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்களில் வெள்ளங்கோத் திருக்கின்றது. ஸ்ரீராமாயண வ்யாக்யாதாக்களில் மிக்க பெரும்புகழ் பெற்றவரான ஸ்ரீகோவிந்தராஜர் சிறந்த பகவத் விஷயாதி காரியாயிருந்தபடியாலே நாலாயிர வியாக்கியானங்களில் தாம் அற்புதமாக அநுபவித்த ஸ்ரீராமாயண விசேஷார்த்தங்களைத் தம்முடைய வியாக்கியானத்திலே வடமொழியில் மொழி பெயர்த்து ஆங்காங்கு எழுதியிருப்பதனாலேயே அவருடைய (ஸ்ரீராமாயண) வியாக்கியானம் சிறப்புற்றோங்கி விளங்குகின்றது.

பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த விபுல வியாக்யானத்தோடு கூடிய ஸ்ரீராமாயண தனிச்லோக கிரந்தம் தனிப்பட இருந்தாலும், அதில் சேராத பலபல ச்லோகங்களின் ரஸமயமான பொருள்கள் நாலாயிர திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில், ரத்நாகரத்தில் ரத்னம்போல் உறைந்துள்ளன. திவ்யப்ரபந்த வியாக்கியானங்கள் ஸேவிக்கும்போது அவ்வர்த்த விசேஷங்கள் ஒருவாறு அநுபவிக்கப்பட்டாலும் பிறகு அவை மறந்துபோய்விடும். நித்யாநுபவம் செய்யவேண்டிய திவ்யார்த்த விசேஷங்களாகையாலே அவ்வர்த்தங்கள் தனிப்புத்தகமாக விளங்கவேணுமென்று கருதிய [வைகுண்டவாஸியான.] திருக்குடந்தை மஹா மஹோபாத்யாய. R. V. கிருஷ்ணமாசார்யஸ்வாமி அவற்றைத் தனிப்படவே தொகுத்துப் பலவாண்டுகட்கு முன்பு ஸ்ரீராமாயண தனிச்லோகம் என்ற பெயரால் வெளியிட்டிருந்தார். அப்புத்தகம் வெகுநாளாகவே துர்லபமாய் விட்டது. தவிரவும் அதில் சில பரிஷ்காரங்களும் செய்யவேண்டியிருந்தது. செய்து ஸ்ரீராமாயண ஸௌரபம் என்னும் பெயரால் இது வெளியிடப்பட்டது. உண்மையில் ஸ்ரீராமாயணத்திற்குப் பரிமளம் நம் ஆசார்யர்களின் திவ்ய வ்யாக்கியானங்களேயாதலால் இந்நூலுக்கு இத்திருநாமமிட்டது மிகப் பொருத்தமேயன்றோ.

இங்கு முக்கியமாக ஒன்று விஜ்ஞாபிக்கவேண்டியிருக்கிறது. புதுடில்லியில் வாழும் ஸ்ரீமான் உ. வே. டாக்டர். ஸர். K. S. க்ருஷ்ணன்ஸ்வாமியை அறியாதாரில்லை. அவரை மேனாட்டுப் புலவர்கள் மஹா மேதாவி யென்று கொண்டாடுமதிசயத்தின் ஹேதுவை அடியேன்போல்வார் தெரிந்துகொள்ள ப்ரஸக்தியில்லை. அந்த மஹான் நம்முடைய ஸம்பிரதாய க்ரந்தங்களில் ஆழங்காற்பட்டிருக்குமதிசயம் மிக வியக்கத் தக்கதே. இவ்விஷயத்தை அடியேன் நேராக நன்கு அநுபவித்தவனாகையால் "அஹம் வேத்மி மஹாத்மாநம்" என்கிற முறையில் இதனை விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். அப்பெரியாருடைய விருப்பம் இவ்விஷயத்தில் நெடுநாளாக இருந்தது. இப்போதே இது நிறைவேறப் பெற்றது. இதற்காக அந்த ஸ்வாமியிடம் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐதிஹ்ய நிர்வாஹரத்நமாலா என்கிற வொருநூலும் அந்த மஹானுடைய நியமனத்தினாலேயே சில வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீராமாநுஜனில் ப்ரசுரஞ் செய்யத் தொடங்கப் பட்டு ஸமாப்தியடையாமலே நின்றிருக்கிறது. அதுவும் தனிப்புத்தகமாக அச்சாகி வருகின்றது. விரைவில் வெளிவரும். அந்நூலும் இந்நூலுமாக இரண்டும், ஸம்ப்ரதாயரஸிகர்களாய் * சீர்கலந்த சொல் நினைந்து போதுபோக்க விரும்புவார்க்கு நித்யாநுபவ யோக்கியங்களென்பது அடியேனுடைய துணிபு.

இங்ஙனம்

ஸ்ரீவைஷ்ணவதாஸன் ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசார்யன்.**

ஸ்ரீ:

# இந்தக் க்ரந்தத்தில் உதாஹரித்து வியாக்கியானிக்கப் பெற்ற ஸ்ரீராமாயணச்லோகங்களின் அநுக்ரமணிகை. (லக்கம்—பக்கலக்கம்)


| | பக்கம் |
|---|---|
| அத்யந்தஸுக ஸம்வ்ருத்த: ... | 41 |
| அதோநு கிம் து : க்கதரம் ... | 28 |
| அத ஹரிவரநாத : ... | 82 |
| அத்ய ராஜகுலஸ்யாஸ்ய ... | 33 |
| அநந்யதைவத்வமியம் ... | 60 |
| அகித்ரஸ் ஸததம்ராம : ... | 68 |
| அபியாதா ப்ரஹர்த்தாச ... | 12 |
| அபிஷிச்யச லங்காயாம் ... | 4 |
| அவ்யக்தரேகாமிவசந்த்ர ... | 54 |
| அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ... | 52 |
| அஸ்மிந்மயா ஸார்த்தமுதார. ... | 45 |
| அஹமஸ்யாவரோ ப்ராதா ... | 50 |
| அஹஞ்ச ரகுவம்சச்ச ... | 74 |
| அஹம்புநர் தேவகுமார ரூபம். ... | 15 |
| ஆசசக்ஷே த ஸத்பாவம் ... | 31 |
| ஆந்ருசம்ஸ்யம்பரோ தர்ம : ... | 71 |
| ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச ... | 50 |
| ஆர்த்தோவா யதிவா ... | 78 |
| இதீவதேவீ வசநம் ... | 67 |
| இமாமஸித கேசாந்தாம் ... | 56 |
| இமா யதா ராக்ஷஸராஜ பார்யா: ... | 54 |
| இயம் ஸீதா மமஸுதா ... | 6 |
| இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே. ... | 40 |
| ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க். ... | 19 |
| உத்திஷ்டோத்திஷ்ட கிம் ... | 85 |
| உத்பபாத கதாபாணி : ... | 76 |
| உபதப்தோதகா நத்ய : ... | 27 |
| ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம். ... | 36 |
| ஏவம் ஸீதாம் ததாத்ருஷ்ட்வா. ... | 55 |
| ஏவமுக்தஸ்து ராமேண ... | 39 |
| ஏஷஸர்வஸ்வ பூதஸ்து ... | 75 |
| ஏஷா விபத்யாம்யஹமல்ப ... | 59 |
| க்யாதஃப்ராஜ்ஞஃக்ருதஜ்ஞச்ச : ... | 59 |
| க்ருதாபராதஸ்யஹி தே ... | 52 |
| கச்சிந்ந துஷ்டோவ்ரஜஸி ... | 31 |
| கஜம்வா வீக்ஷ்ய ஸிம்ஹம்வா ... | 28 |
| கதம்தாசரதௌ பூமௌ ... | 25 |
| கதாந்வஹம் ஸமேஷ்யாமி ... | 42 |
| காந்தஸ்மிதா லக்ஷ்மண ... | 45 |
| கார்யே கர்மணி நிர்திஷ்டே. ... | 74 |
| கிந்த்வாமந்யத வைதேஹ : ... | 20 |
| கிம்கோபமூலம்மநுஜேந்த்ர ... | 52 |
| கிம்புநர்மத்விதோஜந : ... | 78 |
| கிமர்த்தம் தவ நேத்ராப்யாம். ... | 62 |
| குசலீயதி காகுத்ஸ்த : ... | 66 |
| கௌஸல்யா லோகபர்த்தாரம். ... | 72 |
| க : க்ரீடதி ஸரோஷேண ... | 69 |
| க்ஷதப்ரரூடாமிவ ... | 54 |
| க்ஷமயாஹி ஸமாயுக்தம் ... | 81 |
| க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணஸா. ... | 65 |
| ககநமதிவிசாலம்லங்கயித்வா. ... | 82 |
| கச்சதா மாதுலகுலம் ... | 8 |
| குணைர்தசரதோபம : ... | 11 |
| குருஷ்வ மாமநுசரம் ... | 21 |
| குஹேநஸஹிதோராம : ... | 2 |
| குஹேந ஸார்த்தம் தத்ரைவ. ... | 27 |
| சரித ப்ரஹ்மசர்யஸ்ய ... | 30 |
| சைத்ர : ஸ்ரீமாநயம்மாஸ : ... | 14 |
| ஜ்ஞாதிதாஸீ யதோஜாதா ... | 15 |
| ஜடிலம் சீரவஸநம் ... | 35 |
| ஜீவந்தீம் மாம் யதாராம : ... | 73 |
| த்ரைலோக்யமபி நாதேந ... | 12 |
| த்ரைலோக்யராஜ்யம் ஸகலம். ... | 56 |
| த்வயி கிஞ்சித்ஸமாபந்நே ... | 84 |
| தத்ர காஷாயிணே வ்ருத்தாந். ... | 16 |
| ததோவாநர ராஜேந ... | 3 |
| ததஸ்ஸாகர வேலாயாம் ... | 81 |
| ததஸ்ஸா ஹ்ரீமதீபாலா ... | 66 |
| ததோஹர்ஷ ஸமுத்பூதோ ... | 29 |
| ததாகதாம் தாம்வ்யதிதாம் ... | 61 |
| ததாபிஸம்தேந ஸுயுக்த ... | 29 |
| ததோக்தோதர்மசீலேந ... | 34 |
| ததவஸ்த்தம்து பரதம் ... | 33 |
| தம்த்ருஷ்ட்வா சத்ருஹந் ... | 42 |
| தாவத் த்வஹம் தூத ஜிஜீ ... | 67 |
| தேநநாதேந மஹதா ... | 3 |
| தேவயம் பவதாரக்ஷ்யா : ... | 38 |
| தௌவநாதி கிரீம்ச்சைவ ... | 45 |
| த்ரஷ்டும் சக்யமயோத்யா ... | 5 |
| ததர்ச பிங்காதிபதேரமாத்யம், ... | 61 |
| தஹந்தீமிவ நிச்வாஸைஃ ... | 57 |
| தாநயஜ்ஞ விவாஹேஷு ... | 26 |
| தாஸீநாம் ராவணஸ்யாஹம் ... | 86 |
| தீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் ... | 17 |
| தீப்தபாவகஸங்காசைஃ ... | 76 |
| திபோ நேத்ராதுரஸ்யேவ ... | 88 |
| துஷ்கரம் க்ருதவாந்ராமஃ ... | 55 |
| நகோத்தமம் புஷ்பிதம் ... | 61 |
| நசஸீதா த்வயாஹீநா ... | 26 |
| நசாக்நிஜம் பயம் ... | 4 |
| நசாஸ்ய மாதா ... | 67 |
| நத்வாமிஹஸ்தாம்ஜாநீதே ... | 68 |
| நதேம்பா மத்யமாதாத ... | 42 |
| நதே மநுஷ்யா தேவாஸ்தே ... | 29 |
| நதேவலோகாக்ரமணம் ... | 21 |
| நந்தந்த்யுதித ஆதித்யே ... | 37 |

| | பக்கம் |
|---|---|
| நந்திக்ராமேகரோத் ... | 2 |
| நஹாஹம்மபி கைகேயி ... | 18 |
| நமாம்ஸம்ராகவோபுங்க்தே ... | 68 |
| நமேது:க்கம் ப்ரியாதூரே ... | 75 |
| நஹி தேராஜபுத்ரம்தம் ... | 89 |
| நாந்ருக்வேதவிநீதஸ்ய ... | 50 |
| நிப்ருத: ப்ராணத: ப்ரஹ்வ: ... | 86 |
| நிவாஸவ்ருக்ஷ: ஸாதூநாம் ... | 51 |
| நிஸ்வநம் சக்ரவாகாநாம் ... | 52 |
| நைஷாபச்யதி ராக்ஷஸ்ய: ... | 56 |
| ப்ரதேஹி ஸுபகேஹாரம் ... | 89 |
| ப்ரஸீதந்து பவந்தோமே ... | 39 |
| ப்ராசேவது மஹாபாக: ... | 63 |
| ப்ரியவாதீச பூதாநாம் ... | 13 |
| பதிவ்ரதாத்வம் விபலம்மமேதம் ... | 60 |
| பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட: ... | 48 |
| பத்மஸௌகந்திகவஹம் ... | 49 |
| பதிஸம்யோக ஸுலபம் ... | 37 |
| பதிஸம்மாநிதா ஸீதா ... | 17 |
| பரவாநஸ்மி காகுத்ஸ்த ... | 39 |
| பக்ஷீச சாகாநிலய: ... | 59 |
| பம்பாதீரே ஹநுமதா ... | 2 |
| பமந்த்ராயா நசமாது: ... | 91 |
| பாபாநாம்வா சுபாநாம்வா ... | 87 |
| பிசாசாந்தாநவாந்யக்ஷாந் ... | 78 |
| புத்ரத்வயவிஹீநம் தத் ... | 24 |
| புரேவமே சாருததீமநிந்திதாம் ... | 46 |
| பபூவ புத்திஸ்துஹரீச்வர ... | 54 |
| பஹவோ ந்ருபகல்யாணகுணா: ... | 12 |
| பாஹூம்புஜகபோகாபம் ... | 81 |
| பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந ... | 40 |
| மமத்வச்வா நிவ்ருத்தஸ்ய ... | 27 |
| மயூரஸ்ய வநேநூநம் ... | 48 |
| மரணாந்தாநிவைராணி ... | 86 |
| மித்ரபாவேநஸம் ப்ராப்தம் ... | 77 |
| மித்ரமௌபயிகம்கர்த்தும் ... | 57 |
| முநேவக்ஷ்யாம்யஹம் ... | 1 |
| யதாதம் புருஷவ்யாக்ரம் ... | 73 |
| யதிவாராவணஸ்ஸ்வயம் ... | 80 |
| யச்சராமம் நபச்யேத்து ... | 18 |
| யஸ்த்வயா ஸஹஸஸ்வர்க்கோ .. | 21 |
| யாவந்நசரணௌப்ராது: ... | 34 |
| யேது ராமஸ்ய ஸுஹ்ருத: ... | 23 |
| ரக்ஷிதவ்யாஸ்த்வயா ... | 38 |
| ரம்யமாவஸதம் க்ருத்வா ... | 2 |
| ராகவேணாபயேதத்தே ... | 80 |
| ராஜ்யஞ்ச தவாக்ஷேயம் ... | 19 |
| ராஜ்யஞ்சாஹம்ச ராமஸ்ய ... | 30 |
| ராஜ்யாத்ப்ரம்சோவநே ... | 47 |
| ராம: கமலபத்ராக்ஷ: ... | 64 |
| ராமம் மேநுகதாத்ருஷ்டி: ... | 24 |
| ராமம் தசரதம்வித்தி ... | 23 |
| ராம லக்ஷ்மண குப்தாஸா ... | 82 |
| ராமஸ்துஸீதயா ஸார்த்தம் ... | 6 |

| | பக்கம் |
|---|---|
| ராமஸ்ஸீதா மநுப்ராப்ய ... | 4 |
| ராம ஸுக்ரீவயோரைக்யம் ... | 65 |
| ராமோ ராமோ ராமஇதி ... | 90 |
| ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ... | 38 |
| ரூபௌதார்ய குணை: பும்ஸாம் ... | 14 |
| லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: ... | 5 |
| லோகநாத: புராபூத்வா ... | 51 |
| வ்யஸநேஷு மநுஷ்யாணாம். ... | 14 |
| வநப்ரவேசே ரகுநந்தநஸ்ய ... | 91 |
| வாக்மீ ஸ்ரீமாந் ... | 1 |
| வாஹிவாத யத: காந்தா ... | 76 |
| விஷயேதே மஹாராஜ ... | 27 |
| விபீஷணஸ்து தர்மாத்மா ... | 42 |
| விஷஸ்ய தாதா நஹி ... | 60 |
| வைதேஹிரமஸே கச்சித் ... | 34 |
| ஸ்ரீமதா ராஜராஜேந ... | 82 |
| ச்ரோதும்புந ஸ்தஸ்யவசோ ... | 67 |
| சக்ரசாப நிபேசாபே ... | 49 |
| சத்ருணமப்ரகம்ப்யோபி ... | 84 |
| சத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ... | 85 |
| சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா ... | 73 |
| சாகாம்ருகா ராவணஸாயகார்த்தா: ... | 84 |
| சுபாம் நிமித்தாநி சுபாநி ... | 61 |
| ஸ்நுஷாதசரதஸ்யாஹம் ... | 62 |
| ஸ்நேஹோமே பரமோராஜந் ... | 91 |
| ஸ்மரந் ராகவ பாணாநாம் ... | 85 |
| ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய. ... | 22 |
| ஸங்கத்யாபரத: ஸ்ரீமாந் ... | 88 |
| ஸசாபி ராம: பரிஷத்கத: ... | 5 |
| ஸதம் நிபதிதம் பூமௌ ... | 71 |
| ஸதாம் புஷ்கரிணீம்கத்வா ... | 47 |
| ஸதேவகந்தர்வ மநுஷ்ய ... | 46 |
| ஸபங்காமநலங்காராம் ... | 54 |
| ஸபித்ராச பரித்யக்த: ... | 69 |
| ஸபாஷ்பகலயா வாசா ... | 30 |
| ஸமயா போதித: ஸ்ரீமாந் ... | 69 |
| ஸமாத்வாதசதத்ராஹம் ... | 69 |
| ஸமுத்ரம் ராகவோராஜா ... | 80 |
| ஸர்வதாபிகதஸ்ஸத்பி: ... | 1 |
| ஸர்வாந்போகாந்பரித்யஜ்ய ... | 56 |
| ஸலக்ஷ்ணலக்ஷ்மணஸந் ... | 53 |
| ஸச்ருத்வா வாநரே ... | 64 |
| ஸஹசராஹிதேவ ... | 57 |
| ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா ... | 15 |
| ஸஹி தேவைருதீர்ணஸ்ய ... | 10 |
| ஸாதிர்யகூர்த்வம்ச ... | 61 |
| ஸாப்ரஸ்கலந்தீ ... | 53 |
| ஸுபகச்சித்ரகூடோஸௌ ... | 35 |
| ஸுஸ்வாகதாம் வாசம் ... | 59 |
| ஸுஹ்ருதோவா பவத்விதா: ... | 77 |
| ஹாராமஹாலக்ஷ்மண ... | 59 |
| ஹிமஹதநலிநீவநஷ்ட ... | 57 |
| ஸ்வப்நேபி யத்யஹம் வீரம் ... | 63 |

ஸ்ரீ:
ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.
நம்பிள்ளை திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

# ஸ்ரீ ராமாயண ஸௌரபம்.

## ஸம்க்ஷேப ராமாயணம்.

---

मुने वक्ष्याम्यहं बुद्ध्वा.

முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா. 7.

பொழிப்புரை : வால்மீகிமுனிவரே, நான் அறிந்து சொல்லுவேன்.

பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யானம்.

(சிறியதிருமடல். 21)

*ஜ்ஞாதுமேவம்விதம் நரம்* என்று ப்ரச்நம்பண்ணின ஸ்ரீவால்மீகிபகவானுக்கு ஸ்ரீநாரதபகவான் ஆனவாறே சொல்லுகிறேனென்றான். அதுக்குக் கருத்தென்னென்னில்—அநந்யபரனாய் ப்ரக்ருதிஸ்த்தனானவாறே சொல்லுகிறேனென்றாமிறே. பதார்த்தங்களை உள்ளபடி அறிந்திருக்கிறவன் இனி ப்ரக்ருதிஸ்த்தனானவாறே சொல்லுகிறேனென்றது—ப்ரச்நரூபத்தாலே ராமகுணங்களை ஸ்மரிப்பித்து நெஞ்சை உடையப் பண்ணினாயிற்று. தெளிந்து நான் ப்ரக்ருதிஸ்த்தனானவாறே சொல்லுகிறேனென்றானுமித்தனையிறே. "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்னுமாப்போலே.

२. वाग्मी श्रीमान् ।

வாக்க்மீ ஸ்ரீமாந் .9 . 2

(ஸ்ரீராமன்) நன்றாகப்பேசுந்திறமையுள்ளவன், பேசும்போது விலக்ஷணமான சோபையுள்ளவன்.

பெரி-வ்யா. (திருப்பாவை. 16) பூ அலர்ந்தாற்போலே வார்த்தை சொல்லுகிற போதை ஓஷ்ட்டஸ்ப்புரணமென்னவுமாம். "வாக்க்மீ ஸ்ரீமாந்".

३. सर्वदाऽभिगतः सद्भिः समुद्र इव सिन्धुभिः ।

ஸர்வதாபிகதஸ் ஸத்பிஸ் ஸமுத்ர இவ ஸிந்துபி:. 15. 3

(ஸ்ரீராமன்) கடல் நதிகளால் (அடையப்படுவது)போல், ஸாதுக்களால் எப்பொழுதும் தாமாகவந்து அடையப்பட்டவன்.

பெ-வ்யா. (திருவிருத்தம். 100) [ஸர்வதாஅபிகதஸ்ஸத்பி:] பெருமாள் ச்ரமஞ் செய்துவிட்டு ஒரு நிழலிலே இருந்தவளவிலே பரஸம்ருத்த்யேகப்ரயோஜநரானவர்கள் அதுக்கு உறுப்பானவை கற்கைக்காக வந்து படுகாடுகிடப்பர்கள். [ஸமுத்ர இவ ஸிந்துபி:] இப்படிக் கிடக்கிறது இவர்குறை நிரப்புகைக்கோவென்

னில்-பண்டே நிரம்பி நிற்கிற கடலை நிரப்புகைக்கன்றிறே ஆறுகள் வந்து புகுருகிறது. நடுவு தரிப்பில்லாமையித்தனையிறே.

४. गुहेन सहितो रामो लक्ष्मणेन च सीतया ।

குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா. 28. 4

*ஸ்ரீராமன், குஹனோடும் லக்ஷ்மணனோடும் ஸீதையோடும் கூடினான்.*

ஈடு—(*திருவாய்மொழி. 2-4-ப்ரவேசம்*) கூடப்போன இளைய பெருமாளோடும் பிராட்டியோடும் கூடிற்றாய்த் தோற்றிற்று ஸ்ரீகுஹப்பெருமாளோடு கூடினபின்பிறே. இப்படியிறே அவன்றனக்கும் அந்வயவ்யதிரேகங்களிருக்கும்படி.

५. रम्यमावसथं कृत्वा रममाणा वने त्रयः ।

ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரயஃ. 30. 5

*(ராமன், லக்ஷ்மணன், ஸீதை, ஆகிய) மூன்றுபேரும் அழகிய க்ருஹத்தை (பர்ணசாலையை)ச் செய்து (கட்டி) காட்டில் களிக்கின்றவராய் (இருந்தனர்.)*

ஈடு—(*திருவாய். 2-8-1*) [*ரம்யம் ஆவஸதம் க்ருத்வா*]—அறுபதினாயிரம் ஆண்டு மலடு நின்ற சக்ரவர்த்தி தன்னுதரத்துக்குப்போரும்படி சமைத்த மாளிகைகளிலும், திருவுள்ளத்துக்குப் பொருந்தி அழகியதாயிருந்தது காட்டிலே இளையபெருமாள் சமைத்த ஆச்ரமமாயிற்று. [*த்ரயோ ரமமாணாஃ*]—நாயகரான பெருமாள் ரஸமல்லவே பிராட்டியது, பிராட்டிக்குப் பிறக்கும் ரஸமன்றே பெருமாளது, அப்படியே அச்சேர்த்தி கண்டு உகக்குமவரிறே இளையபெருமாள். [*வநே*] 'படைவீடர் காட்டிலே ரமித்தார்கள்' என்று தோற்றாதே, காடர் காட்டிலே வர்த்தித்தாப்போலே பொருந்தியிருந்தபடி.

பெரி-வ்யா. (*நாச்சியார் திருமொழி. 14-1*) பெருமாளும் பிராட்டியுமாய்ப் பள்ளிகொண்டருளும்போது இளையபெருமாள் கையும் வில்லுமாய் உணர்ந்துநின்று நோக்கி, 'ரமமாணாஃ என்கிறபடியே இருவருமான கலவியில் பிறக்கும ஹர்ஷத்தில் மூவராகச் சொல்லலாம்படி அந்வயித்து அவர்களுடைய ஸம்ச்லேஷத்துக்கு வர்த்தகராயிருக்கும்.

६. नन्दिग्रामेऽकरोद्राज्यं रामागमनकाङ्क्षया ।

நந்திக்ராமேகரோத் ராஜ்யம் ராமாகமநகாங்க்ஷயா. 37. 6

*(பரதன்) ராமனது வரவில் விருப்பத்தால் நந்திக்ராமம் என்னுமிடத்தில் ராஜ்யத்தை நடத்தினான்.*

ஈடு—(*தி—வாய். 2-4-1*) [*ராமாகமநகாங்க்ஷயா*] இன்னமொருகால் அவர்முகத்திலே விழிக்கிலாமாகில் அருமந்த ப்ராணனைப் பாழே போக்குகிறதென் என்று ராஜ்யத்தையும் தொட்டுக்கொண்டு கிடந்தானிறே.

७. पम्पातीरे हनुमता संगतो वानरेण ह ।

பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ. 56. 7

*(ராமன்) பம்பையென்னும் தாமரைப்பொய்கையின் கரையில், ஹநுமான் என்கிற வாநரத்தோடு கூடினான், ஸந்தோஷம்.*

ஈடு—(*தி—வாய் 6-1-1*) வழிப்பறியுண்டவிடத்தே தாய்முகங் காட்டினாப்போலே காணும் பிராட்டியைப் பிரிந்து நோவுபடுகிற ஸமயத்திலே திருவடி வந்து

முகங்காட்டினபடி. ஹநுமதா—தளர்ந்து 'ஆவாரார்துணை' என்று தடுமாறுகிற ஸமயத்திலே, வெற்றித்சமூம்புசுமந்த ஆண்பிள்ளையோடே கூடப்பெற்றதென்கிறது. வாநரேண—ஸந்யாஸிவேஷங்கொண்டு வந்து பிரிவை விளைத்து நலிவுபண்ணுமவனைப் போலன்றிக்கே, செவ்வியானொருவனோடே சேரப்பெறுவதே. ஹ—ரிஷி கொண்டாடுகிறான். போகத்துக்குச் சேர்த்துக்கொள்கிறோம், ஸத்தைநோக்குவாரைப் பெற்றோமிறே என்று

८. ततो वानरराजेन ।

தததோ வாநரராஜேந. 59. 8

(ஸ்நேஹமான) பிறகு, குரங்குகளுக்கு அரசனால் (ஸுக்ரீவனால்) (வாலிக்கும் தனக்கும் ஏற்பட்ட விரோதம் முதலியன ராமனிடத்தில் தெரிவிக்கப்பட்டன).

பெ—வ்யா. (நாச்சி-7-7) பெருமாள் மஹாராஜரை முடிசூட்டுவதற்குமுன்னே 'வாநரராஜேந' என்றானிறே ரிஷி.

९. तेन नादेन महता निर्जगाम हरीश्वरः ।

अनुमान्य तदा तारां सुग्रीवेण समागतः ।

தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீச்வரஃ,

அநுமாந்ய ததா தாராம் ஸுக்ரீவேண ஸமாகதஃ. 66. 9

பெரிய அந்த சப்தம் நிமித்தமாக வானரராஜனான வாலி அந்தப்புரத்திலிருந்து வெளிக்கிளம்பினான். அப்போது தாரை என்னும் தனது பத்தினியை (நல்லவார்த்தை சொல்லி) ஸம்மதிக்கச்செய்து, ஸுக்ரீவனோடு (யுத்தஞ்செய்வதற்காக) வந்து சேர்ந்தான். ததா தாராம் அநுமாந்ய நிர்ஜகாம என்றும் அந்வயிக்கலாம்.

பெ—வ்யா. (நாச்சி. 10-1) மஹாராஜருடைய மிடற்றோசையின் தசைப்பைக் கேட்டு, 'முன்புபோல கோழைத்தனமாயிருந்ததில்லை. ஓரடி இவனுக்கு உண்டாக வேணும். நமக்கு இரைபோருமாகில் பார்ப்போம்' என்று புறப்பட்டானிறே.

பெ—வ்யா. (பெரியதிரு. 9 5-8) முன்பு பலகாலும் நம்வாசலிலே வந்து அறை கூவக் கண்டறிவோம். இப்போது அங்ஙனன்றிக்கே இவன்மிடற்றோசையில் தசை பிறந்தபடியால் இதுக்கு ஓரடி உண்டாகவேணும். ப்ரபலனொருவனைப் பற்றி வந்தானாகவேணும். [நிர்ஜகாம]—முன்போலே புறப்பட்டுத் தரையிலே கைமோதிப்போகாதே இவனும் இவனடியாக வந்தவனும் இலக்குப்போருமாகில் புறப்பட்டுப் போரப் பார்ப்போமென்று புறப்பட்டான். அடியுண்டென்றறிருந்தானாகில் பின்னைப் புறப்படுவானேனென்னில்—[ஹரீச்வரஃ]—எதிரிகள் ஜீவித்திருக்க உஜ்ஜீவித்திருந்தவனல்லாமையாலே.

பெரி—வ்யா. (திருவிருத்தம்-51) [மஹதா]—மஹாராஜர்மிடற்றில் தசைப்புக்கு உரமுண்டென்று தோற்றும்படியிருக்கை. [நிர்ஜகாம]—புறப்பட்டான் [ஹரீச்வரஃ]—பண்டு சிலர் அறைகூவ இருந்தறியாதவன். [அநுமாந்ய]—ஆண்களோடே கலக்கவேண்டாவோ என்றான். [ததா]—ஸர்வஸ்வஹரணம் பண்ணினாலும் புறப்படவொண்ணாத அவஸ்த்தை. 'பர்த்தாரம் பரிஷஸ்வஜே' வுக்கு ஆசைப்பட்டிருக்குமே அவள்.

ஈடு—(தி—வாய். 10-6-5) மஹாராஜர் வந்து அறைகூவ, 'பூர்வக்ஷணத்திலே பரிபவப்பட்டுப்போனவன் இப்போது வந்து அறைகூவும்போது வெறுமனல்ல, போதில்லாப்போதிலே நீ புறப்படக்கடவையல்லை' என்று தாரைகாற்கட்டச்செய்தேயும்

க்ஷத்திரியனுகையாலே பரிபவம் பொறுக்கமாட்டாமை புறப்பட்டு, 'மிடற்றோசை இருந்தபடி என்? பழைய கோழைத்தனம் அற்றுத் தெளிந்து முழங்கியிருந்தது. இதுக்கு ஓரடி உண்டாகவேணும். உண்டாய்த்தாகில் நமக்கிரை போருகிறது' என்றுனிறே. [ஹரீச்வரஃ]—இதுக்குமுன்பு பிறர் அறைகூவ ஜீவித்தவனல்லன்.

१०. अभिषिच्य च लङ्कायां राक्षसेन्द्रं विभीषणम् ।

कृतकृत्यस्तदा रामो विज्वरः प्रमुमोद ह ॥

அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்,

க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வரஃ ப்ரமுமோத ஹ. 83. 10

இலங்கையில் விபீஷணனை ராக்ஷஸரின் அரசனுக பட்டாபிஷேகஞ்செய்து அப்பொழுது, செய்யவேண்டியதைச்செய்து முடித்த (க்ருதார்த்தனை) ராமன், தாபம் நீங்கினவனுய் ஸந்தோஷித்தான்.

ஈடு—(தி—வாய். 6-2-10) [அபிஷிச்ய க்ருதக்ருத்யஃ] ஸ்ரீபரதாழ்வானைப்போலே 'நான் முடிசூடேன்; நீர் முடிசூடும்' என்று முடிக்கிருய்க்கில் செய்வதென் என்று உடம்பு வெளுத்துக் காணுமிவர் இருந்தது. 'ஒருபடி அத்தலைச் சுமையைக் கழித்துப் போந்தோம். இதுவும் தலைச்சுமையாகில் செய்வது என்' என்று. இக்ஷ்வாகு வம்ச்யர்க்குப் பணியிறே முடிக்கிருய்க்கை. அடிக்கிருயாதிருக்கையும் முடிக்கிருய்க்கையுமிறே ஸ்வரூபம்.

११. रामः सीतामनुप्राप्य राज्यं पुनरवाप्तवान् ।

प्रहृष्टमुदितो लोकः . . . . ॥

ராமஸ்ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவாந்,

ப்ரஹ்ருஷ்டமுதிதோ லோகஃ...................... 87. 11

ராமன் ஸீதையை அடைந்து (ஸீதையோடுசேர்ந்து ஸிம்மாஸனத்திலிருந்து) மறுபடியும் ராஜ்யத்தை அடைந்தான். உலகம் (ஜனங்கள்) தேஹத்தில் மயிர்க்கூச்சலும் மனஸ்ஸில் ஸந்தோஷமுமுள்ளதாக (ஆயிற்று).

ஈடு—(தி—வாய். 7-10-1) மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப்புக்கால் ப்ரஜைகளுக்கு ஒருகுறையும் பிறவாதிறே. ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்கு ஆநந்தமுண்டாக, அச்சேர்த்தியைக் காண்கையாலே லோகத்துக்கு ஆனந்தமுண்டாக, அதுதன்னைக் கண்டு, ப்ரஜை பால்குடிக்கக்கண்டு உகக்கும் தாயைப்போலே, இவர்களுக்குண்டான ப்ரீதியைக்கண்டு அத்தாலே தாங்கள் இனியராயிருப்பர்களாயிற்று.

१२. नचाग्निजं भयं किंचित् नाप्सु मज्जन्ति जन्तवः ।

நசாக்நிஜம் பயம் கிஞ்சித் நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவஃ, 90. 12

(ராமன் ராஜ்யமாளும்பொழுது) நெருப்பினுல் ஏற்படும் பீதி கொஞ்சங்கூட, இல்லை. பிராணிகள் ஜலத்தில் முழுகிப்போகிறதில்லை.

ஈடு—(தி—வாய். 7-3-1) அக்னியும் சோறு வேவிக்கவேண்டும் ஔஷ்ண்யத்துக்கு மேற்பட உடைத்தாவதில்லை. கொண்டாழக்கடவ ஜலந்தானே கொண்டுமிதக்கப் புக்கது ராமசரத்துக்கு அஞ்சி. பண்டே கைகண்டிருப்பதொன்றே ஜலந்தான். 'வேலைவேவ வில்வளைத்தவ' னிறே.

१३. स चापि रामः परिषद्गतः शनैर्बुभूषया सक्तमना बभूव ह ।

ஸ சாபி ராமঃ பரிஷத்கதঃசனைঃ புபூஷயாஸக்தமநா பபூவஹ. 4-36. 13

*அந்த ராமனும் மெதுவாக ஸபையை அடைந்தவனாய். (கூடவிருந்து) அனு பவிக்கவேண்டும் என்னும் விருப்பத்தால் அல்லது தான் உயிரோடிருக்கவேண்டும் என்னும் விருப்பத்தால் (குசலவர்களின் கானத்தைக் கேட்பதில்) மனப்பற்றுள்ளவனாய் இருந்தான்.*

ஈடு—(திரு—வாய். 6-2-5) பெருமதிப்பராய்ப் பாட்டறிந்து கொண்டாடுகைக்குப் போரும்படி பேரறிவாளரான வித்வஜ்ஜநங்களும் தாமுமாகப் பேரோலக்கமிருந்து பிள்ளைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸநஸ்த்தராயிருந்தார். இவர்கள் தாழவிருக்கத் தாமுயரவிருந்த இடம் தமக்கு அநபிமதமாகையாலே ஸிம்ஹாஸநத்தினின்றும் மெள்ள இழிந்து. தெரியாதபடி இவர்கள் நடுவே புகுந்திருந்தார். அதுவென்னென்னில்—ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் கிளம்புமிறே. தாமெழுந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக் கருதி. மெள்ளப் புகுந்திருந்தாரென்கிறது. இங்ஙன் வேண்டுவானென்னென்னில்—அநுபுபூஷயா என்னுதல், பவிதும் இச்சயா என்னுதல்—இவர்களோடே கூடியிருந்து அனுபவிக்கைக்காக என்னுதல், தாமுளராகைக்காக என்னுதல்.

१४. द्रष्टुं शक्यमयोध्यायां नाविद्वान्न च नास्तिकः ।
सर्वे नराश्च नार्यश्च धर्मशीलाः सुसंयताः ॥

த்ரஷ்டும் சக்யமயோத்யாயாம் நாவித்வாந்நச நாஸ்திகঃ,
ஸர்வே நராச்ச நார்யச்ச தர்மசீலாஸ்ஸுஸம்யதாঃ. 6-8. 14

*அயோத்தியில். படிப்பில்லாதவன் காணப்பட முடியாது, நாஸ்திகனும் (காணப்பட) முடியாது. எல்லா புருஷர்களும் ஸ்த்ரீகளும் தர்மஸ்வபாவமுடையவர்கள், இந்த்ரியஜயமுடையவர்கள்.*

பெ—வ்யா. (பெரியதிரு. 8-1-1) அறுபதினாயிரம் ஆண்டு வன்னியமறுத்து நன்மைகளை உண்டாக்கிப் போந்த சக்ரவர்த்திக்கும் இரண்டு பொருள் உண்டாக்கப் போச்சுதில்லை. ஓர் அவித்வானையாதல், வைதிகமான அர்த்தங்களை இல்லையென்பானொரு நாஸ்திகனையாதல் உண்டாக்கப் போச்சுதில்லை. அப்படை வீட்டிலுள்ளார் 'ராஜபுத்ரர்களாரேனுமொருவர் முடிசூடவமையாதோ' என்றிருக்குமவர்களல்லர்; பெருமாளே முடிசூடாவிடில் "இஹைவ நிதநம் யாமோ மஹாப்ரஸ்த்தாநமேவச ராமேண ரஹிதாநாஞ்ச கிமர்த்தம் ஜீவிதம் ஹி நঃ" என்று பெருமாள் அபிஷேகம் பண்ணுத படைவீட்டிலிருப்பதில்லை, விழுந்தவிடமே சுடுகாடாகப் போகவமையும் என்றிருப்பர் புருஷர்கள். ஸ்த்ரீகளும் 'ராமமேவாநுகச்சத்வம் அச்ருதிம்வாபிகச்சத' என்று பெருமாள் வழிமாறிப்போனாரென்று திறக்க அழைத்த பர்த்தாக்கள் முகம்பிளக்கத் தள்ளிக் கதவடைத்துக்கொள்ளுவர்கள். [தர்மசீலாঃ]—ராமாநுவ்ருத்தியே பரமதர்மமென்றிருக்குமவர்களிறே. [ஸுஸம்யதாঃ]—ஸ்வப்ரயோஜநத்தில் நெஞ்சு செல்லாதவர்களாயிற்று.

१५. लक्ष्मणो लक्ष्मिसंपन्नः ।

லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நঃ. பாலகாண்டம்—18-31. 15

*ஸம்பத்தோடு கூடிய லக்ஷ்மணன் (ராமனுக்கு வெளியில் தோன்றும் மற்றொரு உயிரைப்போல் இருந்தான்.)*

திருவாய்மொழிப்பிள்ளையின் வ்யாக்யானம். (பெரியாழ்வார் திருமொழி. 4-4-8) பெருமாள் ராஜ்யத்தை இழந்தார். இவர் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றார். ஸம்பந்நः—' சுற்றமெல்லாம் பின்தொடர '' எல்லா அடிமையும் பெற்றார். ' ஸம்பந்நः' என்கையாலே பாகவத கைங்கர்யபர்யந்தமாகையிறே பூர்த்தி. பகவத்கைங்கர்யம் செய்தது தம்முடையஸத்தை பெறுகைக்காக. அந்த ஸத்தையை அழிய மாறியிறே பாகவத கைங்கர்யம் பண்ணிற்று.

१६ इयं सीता मम सुता सहधर्मचरी तव ।

प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृह्णीष्व पाणिना ।

இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீ தவ,

ப்ரதீச்சசைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா. 73-33. 16

இவள் ஸீதை. என்னுடைய பெண். உனக்கு கூடவிருந்து தர்மாநுஷ்டாநஞ்செய்பவள். இவளை பெற்றுக்கொள். உனக்கு மங்களம் (உண்டாவதாக) (இவளுடைய) கையை (உன்னுடைய) கையினால் பிடித்துக்கொள்.

பெரி—வ்யா. (நாச்சியார் 6 7) [இயம் ஸீதா]—பிறந்த உமக்குப் பிறவாமையால் வந்த ஏற்றமுடையார் தேட்டமே. [மம ஸுதா]—நீர் ஆர்த்த ரக்ஷணத்திலே தீக்ஷித்தால் உமக்கு முன்னேபோய்க் கைச்சிறையிருக்கவல்லவள். [ப்ரதீச்சசை நாம்] கரும்பு தின்னக்கூலியன்றே. இவளைக் கைக்கொள்ளுமென்றன்றே உம்மை நான் கால்பிடிக்கிறது. [பத்ரம் தே]—' வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ' என்கிறபடியே. ' ஐயரும் ஊரிலுள்ளாரும் வாராதிருக்க, நான் கைக்கொள்ளுகையாவது என் ' என்று தம்முடைய வைதக்த்யம் தோற்ற இருய்த்துநின்றார். அது வேண்டா காணும். உம்முடைய கையாலே இவள் கையைப் பிடியீர். 'ப்ரதீச்ச' என்னச் செய்தே ' பாணிம் க்ருஹ்ணீஷ்வ ' என்றானிறே.

१७ रामस्तु सीतया सार्धं विजहार बहूनृतून् ।

मनस्वी तद्गतस्तस्या नित्यं हृदि समर्पितः ॥

ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந்,

மநஸ்வீ தத்கத ஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பிதः. 77-32. 17

ராமனோ, ஸீதையோடு கூடி அனேக ருதுக்கள்வரையில் விளையாடினான். (ராமன்) நல்லமனமுடையவன். அவளை (ஸீதையை) அடைந்தவன். (ஸீதையினிடத்தில் எப்பொழுதும் அநுராகமுள்ளவன்) அவளுடைய (ஸீதையினுடைய) மனத்தில், எப்பொழுதும், வைக்கப்பட்டவன். (ஸீதையால் எப்போதும் அநுராகத்துடன் நினைக்கப்பட்டவன்)

ஈடு—(தி—வாய். 6-1-9) ருதூந்-காலம் கூறிட்டு அவ்வோகாலத்துக்கடைத்த உபகரணங்களைக்கொண்டு காணுமவன் அநுபவிக்கிறது ; இல்லையாகில் ' ருதூந் ' என்ன வேண்டாவிறே. ' வத்ஸராந் ' என்ன அமையுமிறே.

ஈடு—(தி—வாய். 2-3. ப்ரவேசம்) [ராமஸ்து]—பெருமாளும் பிராட்டியும் ' ஏகதத்வம் ' என்னலாம்படி கலந்த கலவியைச்சொல்லுகிறது. ' பித்ரு சுச்ரூஷணபரரானார், தர்மங்களை ப்ரவர்த்திப்பித்தார், தேவதாஸமாராதநம் பண்ணினார் ' என்றுயிற்று சொல்லிக்கொண்டுபோந்தது ; இப்படிப் போந்த இவர் இப்போது ' வாத்ஸ்யாயநம் கற்றுக் காமதந்த்ரமேயோ நடத்திப்போந்தது ' என்னும்படி வேறுபட்டார்.

[ஸீதயா ஸார்த்தம்]—பரமபதத்தில் செவ்வியோடே வந்தவளும் பிற்பாடையாம்படி போகஸ்ரோதஸ்ஸிலே முற்பாடரானார். [விஜஹார]—இப்படி பரிமாறச் செய்தேயும் போகோபோத்காதத்துக்கு அவ்வருந்துபட்டிலர். [பஹூந் ருதூந்]—பஹூந் ஸம்வத்ஸராந் என்னாதேயொழிந்தது—அவ்வோ காலவிசேஷங்களுக்கடுத்த போகோபகரணங்களைக்கொண்டு புஜித்தார் என்னுமிடந் தோற்றுகைக்காக. மநஸ்வீ—ஸம்ச்லேஷத்தில் பிராட்டி கோலினவளவுக்கு அவ்வருகுபட்டுப் பரிமாறினார். [தத்கத:] தஸ்யாம் கத:—ஜாதி குணங்கள் த்ரவ்யத்துக்கு ப்ரகாரமாய்ப் பிரிக்கவொண்ணாதபடியாயிருக்குமாபோலே. பிரிக்கவொண்ணாதபடி ஒரு நீராகக் கலந்தபடி. [தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:]—இவருயர்த்தியை அறிந்திருப்பாளொருத்தியாகையாலே 'அப்பெரியவன் இப்படித்தாழவிடுவதே' என்று அச்செயலிலே தன்னெஞ்சு துவக்குப்பட்டு 'அது அது' என்று கிடக்குமாயிற்று.

ஈடு—(தி—வாய். 7-10-1) [ராம:] ஸ்ரீபரசுராமாழ்வானைச் செருக்குவாட்டிப் படைவீட்டிலே வந்து புகுந்து சக்ரவர்த்தியையும், மஹர்ஷிகளையும் அநுவர்த்தித்து தர்மோத்தரமாக நடத்திப் போந்தவர். [து]—பித்ரு சுச்ரூஷணாதிகளைப் பண்ணின பின்பு பிராட்டியோட்டை ரஸதாரையிலே இழிந்தபின்பு 'இதுக்கு முன்பெல்லாம் வாத்ஸ்யாயநம் கற்றுக் காமதந்த்ரமே நடத்திப் போந்தாரித்தனையோ' என்னும்படி வேறுபட்டார். முன்பு போருகிற நாளில் "இவர் இதுக்குமுன்பு காமரஸம் புதியதுண்டறியாரோ' என்னும்படி வேறுபட்டார். [ஸீதயா ஸார்த்தம்] அயோநிஜையாய்ப் பரமபதத்தில் தானுமவனுமாயிருந்து கலந்தபோதைச் செவ்வியிலொன்றுங் குறையாமலிருந்தவளிறே பிராட்டி ; இப்படியிருக்கச் செய்தேயும், தம்மை அழியமாறி இதரஸஜாதீயராய் வந்தவதரித்தாரேயாகிலும், போகத்தில் வந்தால் அவளுங்கூட அப்ரதானையாம்படி அதில் தலைநின்றார். அதுக்கடி என்னென்னில்—ராஜபுத்ரரான ரஸிகத்வத்தால் வந்த ஏற்றத்தாலே. [விஜஹார]—பாரிப்பே ஒழிய போகத்திலிழியப்பெற்றிலர். உபக்ரமத்துக்கே பணிபோந்ததித்தனை. உபோத்காதத்துக்குக் காலம் போந்ததித்தனை. [பஹூந் ருதூந்] 'ஸமாத்வாதச தத்ராஹம்' என்கிறபடியே பன்னிரண்டாண்டு ஒருபடிப்பட அநுபவிக்கச்செய்தேயும், ருதுசப்தத்தாலே சொல்லுகிறதாயிற்று—அவ்வவ காலங்களுக்கடைத்த புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு காலாவயவங்கள்தோறும் அநுபவித்துப் போந்தமை தோற்ற. சீதகாலத்துக்கடைத்தவைகொண்டு பரிமாறியும் உஷ்ணகாலத்துக்கடைத்தவைகொண்டு பரிமாறியும், அநுபவித்தமை தோற்றச் சொல்லுகிறது. [மநஸ்வீ] ப்ரணயதாரையில் வந்தால், அவள் பாரித்த பாரிப்புக்கெல்லாம் ஆனைக்குக் குதிரைவைக்கைக்கீடான நெஞ்சில் அகலமுடையவராயிற்று. [தத்கத:]—த்ரவ்யம் த்ரவ்யத்தோடு சேர்ந்தாப்போலன்றிக்கே, ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தோடு சேருமாப்போலே சேர்ந்தார். 'அநந்யா ராகவேணாஹம்' என்றும் 'அநந்யா ஹி மயா ஸீதா' என்றுமிறே இருவர் வார்த்தையும். [தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:] இதிலிழிவதற்கு முன்பு இவரை அறிந்திருக்குமவளாகையாலே, 'அப்படி பெரியவர் இப்போது என்பக்கலிலே தாழ நிற்பதே யிப்படி! இதொரு நீர்மையே!' என்று எப்போதும் இவ்வநுஸந்தாநமே யாத்ரையாகையாலே வேறொன்றும் நெஞ்சிற்படாதே அவள்தன்னைத் தம்பக்கலிலே பொகடும்படியானார் 'தத்கத:' என்கையாலே, இவர்தம்மை அவள்பக்கலிலே ஓக்கினபடி சொல்லுகிறது. 'நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:' என்கையாலே, அவள் தன்னை இவர்பக்கலிலே ஓக்கிவைத்தபடி சொல்லுகிறது.

**பாலகாண்டம் முற்றிற்று.**

# அயோத்யாகாண்டம்

१. गच्छता मातुलकुलं भरतेन तदाऽनघः ।
शत्रुघ्नो नित्यशत्रुघ्नो नीतः प्रीतिपुरस्कृतः ॥
கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநகஃ,
சத்ருக்னோ நித்யசத்ருக்னோ நீதஃ ப்ரீதிபுரஸ்க்ருதஃ. 21-1. 1

மாமாவின் க்ருஹத்தைக் குறித்துச் செல்கின்ற பரதனால் அப்பொழுது பாபமில்லாதவனும், எப்போதும் சத்ருக்களான ஐம்புலன்களையும் அடக்கியிருப்பவனுமான சத்ருக்நன், ப்ரீதியினால் தூண்டப்பட்டவனாயிருக்க, அழைத்துக்கொண்டு போகப்பட்டான்.

பெரி—வ்யா. (கண்ணிநுண் சிறுத்தாம்பு—அவதாரிகை.) 'கச்சதா' என்கிற வர்த்தமாந நிர்தேசத்தாலே—போகிறவிடத்தில் தனக்கொரு ப்ரயோஜநமுண்டாயாதல், இங்கே மாதா பிதாக்களைக் கேள்வி கொள்ளுதல், பூர்வஜரான பெருமாளைக் கேள்விகொள்ளுமிவ்வளவுமின்றிக்கே, அவனை ஒழிய ஜீவிக்கமாட்டாதபடியாலே போனானென்கை. [மாதுலகுலம்] யுதாஜித்து அழைத்தது அவனையாகையாலே, போக்கில் உத்தேச்யதையும் அவனுக்கு; இவனுக்கு அவன் உத்தேச்யனாய் போனானென்கை. [பரதேந] சக்ரவர்த்தியும் துஞ்சி, பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப் போய், இளைய பெருமாளும் தொடாந்தடிமை செய்யவேணுமென்று போய், சத்ருக்னாழ்வானும் நின்னை யல்லதறியேன் என்றிருக்கும் தசையிலும் ராஜ்யத்தை பரிக்கக்கடவனென்றாயிற்று ஸ்ரீவஸிஷ்டபகவான் திருநாமஞ் சாற்றிற்று. 'பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்' என்றானிறே ஸ்ரீசதாநீகன். [ததா] இருவர்களும் ராஜபுத்ரர்களாய் நக்ஷத்ரபேத முண்டானால் பிரித்து முஹூர்த்தமிட்டுப் போக ப்ராப்தமாயிருக்க, அவன் போனதுவே முஹூர்த்தமாகப் போனானென்கை. 'கச்சதா' என்றதில் அர்த்தஸித்தமன்றோ; 'ததா' என்றதென்னென்னில்— அங்கு மமதாநிவ்ருத்தியைச் சொல்லிற்று, இங்கு அதுக்கு ஆச்ரயமான அஹங்காரநிவ்ருத்தி சொல்லுகிறது. ஆகையாலே புநருக்திதோஷமில்லை சேஷத்வவிரோதியிறே இரண்டும். [அநகஃ] அகமில்லாதது இவனுக்கேயிறே. அகமாவது—உத்தேச்யவிரோதியிறே. இவ்விடத்தில் அகமாவது ராமபக்தி. இத்தைப் பாபமென்னப்போமோவென்னில்—பாபத்தில் புண்யம் நன்றாயிருக்க மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும் 'அச்ச இவ ரோமாணி விதூய பாபம்' என்று பாபசப்தவாச்யமாயிற்றிறே. ஆகையாலே பரதாநுவ்ருத்தியாகிற உத்தேச்யத்துக்கு விரோதியாகில் ராமஸௌந்தர்யத்தில் கால்தாழுமதுவும் பாபமாமித்தனையிறே 'ராமே ப்ரமாதம் மாகார்ஷீஃ' என்று ராமாநுவ்ருத்திக்கும் இடைசுவராகச் சொல்லிற்றிறே ராமஸௌந்தர்யத்தை. பரதாநுவ்ருத்திக்கு இடைச் சுவரென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. [சத்ருக்நஃ]—பிள்ளைகளுடைய ஸந்நிவேசங்களைப் பார்த்துத் திருநாமஞ்சாற்றுகிற ஸ்ரீவஸிஷ்டபகவான், பெருமாள் கண்டாரை அழகாலே துவக்கவல்லராகத் தோற்றுகையாலே 'ராமன்' என்றும் இளையபெருமாளுக்குக் கைங்கர்யமே நிரூபகமாகத் தோற்றுகையாலே 'லக்ஷ்மணன்' என்றும் திருநாமஞ்சாற்றினாப்போலே இவருடைய ஸந்நிவேசத்தைக்காணவே சத்ருக்கள் மண்ணுண்ணும்படியிருக்கையாலே 'சத்ருக்நன்' என்று திருநாமம் சாற்றினார். [நித்யசத்ருக்நஃ]—பாஹ்ய சத்ருக்களையன்றிக்கே ஆந்தரசத்ருக்களான இந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்கை. அவ்விந்த்ரியஜயத்தின் எல்லை எவ்வளவென்னில்—'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்கொண்ணாதொழிகை. அதாகிறது—பெருமாளைப் பற்றும்போதும் தன்னுகப்பாலேயாதல்

அவருடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே, 'தனக்கு உத்தேச்யனான இவனுகந்த விஷயம்' என்று பற்றுகை. [நீதః]—ராஜாக்கள் போம்போது உடைவாள் மற்றொன்று கொண்டுபோமோபாதி அவன் கொண்டுபோகப் போனான். த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்டமாயிருக்குமிறே. அது போலன்றிக்கே ஜாதிகுணங்களோபாதி போனான். [ப்ரீதிபுரஸ்க்ருதః]—ஜ்யேஷ்டானுவ்ருத்தி கர்த்தவ்யம்' என்று போனானல்லன். 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று போன இளையபெருமாளைப்போலே, 'போனவிடத்திலே ஸர்வசேஷவ்ருத்தியும் பண்ணலாம்' என்று பாரித்துக்கொண்டு ப்ரீதி ப்ரேரிக்கப் போனான். படைவீட்டிலிருந்தால் பலருமுண்டாகையாலே விழுக்காட்டோபாதியிறே ஸித்திப்பது. 'நீதః' என்கையாலே சேஷத்வத்தில் அசித்கல்பனாயிருக்கக்கடவன். 'ப்ரீதிபுரஸ்க்ருதః' என்கையாலே ஸ்வரூபானுரூபமான வ்ருத்தியிலே சைதந்யப்ரயுக்தமான தர்மங்களுண்டாயிருக்கை. *படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே* என்றிறே அபியுக்தர்வார்த்தை. 'அநகః' 'நித்ய சத்ருக்நः' என்று பாவநத்வத்தாலும் போக்யதையாலும் அவனையே பற்றினானென்னவுமாம். 'அநகః, நித்ய சத்ருக்நः' என்றதுக்கு ப்ரயோஜநமென்னென்னில்—'ஸ்ரீசத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி, அவனையல்லதறியாத ஸ்ரீபரதாழ்வானை யல்லது வேறொன்றறியாதபடியானான்' என்று எம்பெருமானார் அருளிச்செய்தார். இதுவே ப்ரயோஜநமானால் சொன்னமிகையெல்லாம் பொறுக்குமிறே.

௩௫. (தி—வாய். 3. 7. ப்ரவேசம்) [கச்சதா] இதுக்கு எம்பெருமானார் 'பயிலுஞ் சுடரொளியிலும் நெடுமாற்கடிமையிலும் சொல்லுகிற அர்த்தத்தை ஸ்ரீசத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக்காட்டினான்' என்று அருளிச்செய்வர். இவ்வர்த்தத்துக்கடி திருமந்த்ரமாயிற்றே. அதுமூலமாக அநுஷ்டிக்கவே இதிற் சொன்னதைச் செய்ததாமிறே. ஆசாரப்ரதாநமான அவதாரமாய் அதில் பெருமாள் 'பிதாசொல்லிற்று புத்ரன் செய்யக்கடவன்' என்கிற மர்யாதை குலையாதே அத்தை நிலைநிறுத்துகைக்காக பித்ருவசநபரிபாலநாதிரூபமான ஸாமாந்யதர்மத்தை அநுஷ்டித்தார். 'இதுதான் ப்ராப்தவிஷயத்திலே செய்யக்கடவது' என்னுமிடத்தை அநுஷ்டித்துக் காட்டினார் இளையபெருமாள். 'அது செய்யுமிடத்தில் அவனுகந்த அடிமை செய்யக்கடவது' என்னுமிடத்தை ஸ்ரீபரதாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினான். 'அதுதான் பாகவதசேஷத்வபர்யந்தமாயிருக்கும்' என்னுமிடத்தை ஸ்ரீசத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினான். பெருமாள் பிதா சொல்லிற்றுச் செய்யக்கடவது என்னுமிடத்தை அநுஷ்டித்தார். அதுதன்னிலும் நேரே பிதாவை அநுவர்த்திக்கக் கடவது என்னுமிடத்தை இளையபெருமாள் அநுஷ்டித்தார். அதுதன்னிலும் 'குருஷ்வ' என்று நிர்ப்பந்திக்கக் கடவரல்லர்; 'ராஜ்யத்திலே இரும்' என்னில், அது இன்னாதாகிலும் அதிலிருந்து அடிமை செய்யக்கடவது என்னுமிடத்தை அநுஷ்டித்தான் ஸ்ரீ பரதாழ்வான். அதின் எல்லையை அநுஷ்டித்தான் ஸ்ரீ சத்ருக்நாழ்வான். அவன்படி சொல்லுகிறது இச்லோகம். மாதுலகுலம் கச்சதா பரதேந நீதः—மாதுலகுலம் உத்தேச்யமாய்ப்போனான் அவன். அவன்தான் உத்தேச்யமாய்ப்போனானிவன். யுதாஜித்து அழைத்தது ஸ்ரீபரதாழ்வானையிறே [கச்சதா]—இவ்வர்த்தமாநநிர்தேசத்தால், பூர்வக்ஷணத்திலும் தன்னெஞ்சிலுமில்லை; பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்தமையுமில்லை; சக்ரவர்த்தியைக் கேள்விகொண்டமையுமில்லையென்கை. [பரதேந]—பெருமாளும் பொகட்டுப்போய், இளையபெருமாளும் அவரை அநுவர்த்தித்துப்போய், சக்ரவர்த்தியும் துஞ்சி, ஸ்ரீசத்ருக்நாழ்வானும் தன்னையல்லதறியாதேயிருக்க, பெருமாளதான ராஜ்யத்தை பரித்துக்கொண்டிருக்கையாலே 'பரதன்' என்கிறது. 'பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்.' [ததா]—தானும் ராஜபுத்ரனாய் நாளும் வேறுபட்டிருந்தால், பிரித்துத் தனக்குப் பொருந்தும் முஹூர்த்தத்திலே போக ப்ராப்தமிறே; அது செய்யாதே, அவன் புறப்பட்டதே தனக்கு முஹூர்த்தமாகப்போனான். [அநகః] அபாபः—அப்படைவீட்டில் அல்லாதாரதெல்லாம் பாப

*மிச்ரஜீவனம் போலே காணும். அதாவது—ராமபக்தி கலந்திருக்குமே. அத்தைப் பாபமென்னலாமோ வென்னில்—பாபத்திற்காட்டில் புண்யம் உத்தேச்யமாயிருக்கச் செய்தேயும் இரண்டும் த்யாஜ்யமாகாநின்றதிறே, மோக்ஷவிரோதித்வாத். இங்கும் உத்தேச்யவிரோதியாகையாலே சொல்லலாமிறே. இது பின்னை உத்தேச்யவிரோதியோ வென்னில்—ப்ரதமாவதியில் நிலை விரோதியிறே சரமாவதியைப்பற்ற. (ப்ராப்யத்தில் ப்ரதமாவதி—பகவச்சேஷத்வத்தளவிலே நிற்கை; சரமாவதி—பாகவதசேஷத்வத்தளவிலேவருகை.) [சத்ருக்நঃ]—பிறந்தபோதே 'எதிரிகள் மண்ணுண்ணும்படிவளரும்' என்று தோற்றியிருக்கையாலே இப்படித் திருநாமஞ் சாற்றினன் வஸிஷ்டன். நித்ய சத்ருக்நঃ—பாஹ்ய சத்ருக்களை வெல்லுகையன்றிக்கே ஆந்தரசத்ருக்களான இந்த்ரியங்களை வென்றிருக்கும். அதாவது 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்கிற விஷ ...ல் கண்வையாமை. அங்கும் 'இவனுக்கு இனிது' என்று இவ்வழியாலே புகுமித் ...ஹயை. 'அநகঃ' என்கிறவிதுக்கும் 'நித்ய சத்ருக்நঃ' என்கிறவிதுக்கும் ... என் னென்னில்—பாவநத்வத்தில் ஸ்ரீபரதாழ்வானை ஒவ்வார் பெருமாள் என்கிறது—'அநகঃ' என்கிறவித்தால்; 'நித்யசத்ருக்நঃ' என்கிறவித்தால்—போக்யதைக்கு ஸ்ரீபரதாழ்வானை ஒவ்வார் பெருமாள் என்கிறது. [நீதঃ]—ஒரு குற்றுடைவாள் சாயையுள்ளிட்டவையோ பாதியாய்ப் போனான். த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரஸம்யோகம் உபயநிஷ்டமாயிறே யிருப்பது. த்ரவ்யமாயிருக்கச்செய்தேயும் ஜாதிகுணங்களோபாதி பரதந்த்ரனாய்ப் போனான். [ப்ரீதிபுரஸ்க்ருதঃ]—'தமயன் பின்னே தம்பி போகக்கடவன்' என்னும் முறையாலே தேவைபோலேயிருக்குமோவென்னில்—அங்ஙனன்று. 'படைவீட்டிலே யிருந்தால் ஒருவன் சோற்றைப் பகுந்துண்ணுமாப்போலே படைவீடு ஆகப் பெருமாளுக்கு அடிமை செய்வார்கள். ஏகாந்தஸ்தலத்திலே நமக்கு எல்லா அடிமையும் செய்யலாம்' என்று 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று இளையபெருமாள் காடேறப் போனாற்போலே, இவனும் 'நமக்கு எல்லாவடிமையுஞ் செய்யலாம்' என்கிற ப்ரீதி பிடரி தள்ளத்தள்ளப் போனான். எம்பெருமானார் இச் ச்லோகத்துக்கு வாக்யார்த்தமாக 'ஸ்ரீசத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி—பெருமாளை காற்கடைக் கொண்டு பெருமாளுக்கு நல்லனான ஸ்ரீபரதாழ்வானையல்லதறியாதபடியானான்' என்றருளிச்செய்தார். இது ப்ரயோஜகமானபின்பு சொன்னமிகையெல்லாம் பொறுக்குமிறே. அல்லது, ஒரு சேதநனுக்கு ஒருசேதநன் உத்தேச்யனாகையாவது ஓட்டையோடத்தோடு ஒழுகலோடமிறே. 'அநந்யாঃ' என்கிறநிலை இவர்களுக்குண்டானால் இவர்களை அநுவர்த்திக்குமது அவனை அநுவர்த்தித்ததாமிறே.***

२. स हि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः ।

अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुः सनातनः ॥

ஸஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபிঃ,

அர்த்திதோ மாநுஷேலோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதநঃ. 1-7. 2

*திமிர்த்துத்திரிகின்ற ராவணனுடைய வதத்தை விரும்புகின்ற தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட நித்யனான விஷ்ணுவன்றோ அவனாகப் (ராமனாக) பிறந்தான்.*

பெரி—வ்யா. *(திருநெடுந்தாண்டகம்—9) ஸঃ—தச்சப்தம் ப்ரக்ருதபராமர்சியிறே. 'பஹூவ குணவத்தரঃ' என்றிறே கீழ்ச்சொல்லிற்று. அப்படிப்பட்ட குணாதிகனாகையாலே பிறந்தான் என்கிறார். அநந்யப்ரயோஜநர்க்காகப் பிறக்கை குணமன்றிறே. [ஹி]—ஹிசப்தம் ஹேதுவிலே. [தேவைঃ]—வந்துபிறந்தது—திருவடி திருவநந்தாழ்*

**(கண்ணிநுண்சிருத்தாம்புக்கு நம்பிள்ளை அருளிச்செய்த ஈட்டிலும், தம்பிரான் படியிலும், இப்படியே சப்தார்த்தவிஷயங்கள் காணப்படுகின்றன)*

வான் அர்த்திக்கவோ? ப்ரயோஜநாந்தரபரராய் 'ஈச்வரோஹம்' என்றிருக்கிற துர்மாநிகள் அர்த்தித்த கார்யஞ்செய்யக்கிடீர். கார்யங்கொண்ட ஸமநந்தரம் எதிரம்பு கோக்குமவர்களிறே. [உதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:]—தன்னுடைய செருக்காலே லோகத்தையடைய அழித்துக்கொண்டு திரியும் ராவணநிரஸநார்த்தமாக. ஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாயிருக்க, அர்த்திக்கிறவர்கள் ப்ரயோஜநாந்தரபரராயிருக்க, அவர்களை அழியச்செய்கைக்காகக் கிடீர் வந்து பிறந்தது. [அர்த்தித:]—இது கிடீர் அவர்கள் பண்ணின தபஸ்ஸு. [மாநுஷேலோகே]-தேவதைகளுமகப்படக் கீழ் நோக்கி முகம் காட்டாத தேசத்திலே கிடீர் வந்து பிறக்கிறது. [ஜஜ்ஞே]—நாட்டார் பத்து மாஸம் கர்ப்பவாஸம் பண்ணுவாராகில் பன்னிரண்டு மாஸம் கர்ப்பவாஸம் பண்ணிக் கிடீர் பிறந்தது. [விஷ்ணு:]—வ்யாபகவஸ்து கிடீர் வ்யாப்யைகதேசத்துக்கு சேஷமாய்ப்பிறந்தது. [ஸநாதந:]—நித்யவஸ்து கிடீர் பிறந்தானென்னும்படி ஒருத்தனுக்குப் புத்ரனாய் வந்து பிறந்தது.

ஈடு. (தி—வாய். 7-5-2) [ஸ: ஜஜ்ஞே ஹி]—'கர்மநிபந்தநமான ஜன்மமில்லை' என்று ப்ரமாணப்ரஸித்தனானவன் கிடீர் கர்மவச்யர்க்கும் இவ்வருகாய் வந்து பிறந்தானென்றபடி. இப்படி பிறக்கைக்கு அடி என்னென்னில்—'அர்த்தித:' என்கிறது. அவர்கள் இரப்புக்காகவென்றபடி. இரப்புத்தான் இச்சையையும் பிறப்பிக்குமாகாதே! *இச்சாக்ருஹீதவிறே. [தேவை:]—தங்கள் கார்யத்துக்காக இரந்து பிறக்கப்பண்ணிக் கார்யம் தலைக்கட்டினவாறே எதிரிட்டு, 'ஈச்வரோஹம்' என்றிருப்பார்க்காகக் கிடீர் 'நீணகர் நீளெரி வைத்தருளாய்' என்பார்கள்—லங்கையைச் சுட்டுத்தரவேணுமென்பார்கள். [உதீர்ணஸ்ய ராவணஸ்ய]—பயாவஹனான பையல், தானே, வரபலத்தாலே அழியச்செய்ய வேண்டும்படி விஞ்சினபடி. [வதார்த்திபி:]—தாங்கள் பட்டநலிவாலே திருவுள்ளத்துக்குப் பொருந்தாதவற்றையும் விண்ணப்பஞ்செய்தார்கள் "ஒருவனை அழியச்செய்ய ஒருநாடு ஆகப் பிழைக்குமாகிலாகாதோ" என்றழியச்செய்தானத்தனை. அர்த்தித:—தன்னுடைச்சோதிக்கெழுந்தருளுந்தனையும் திருவுள்ளத்திற்பட்டுக்கிடந்ததிதுவே. அர்த்தித:—உபாஸித்தவர்களல்ல. [மாநுஷே லோகே]—ஆக்கரான தேவர்கள்; மநுஷ்யகந்தத்துக்குச் சர்தி பண்ணி பூமியிலிழிய அருவருத்து ஒன்றரை யோஜனைக்கு அவ்வருகே நின்று ஹவிஸ்ஸுக்கொள்வார்கள்; அவர்கள் மநுஷ்யஸ்தானத்திலேயாம்படியான தத்வம் கிடீர் இங்கே வந்து பிறந்ததென்றபடி, மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குந்தேவனிறே. [ஜஜ்ஞே]—ஆவிர்பூதமான மாத்ரமன்று; நாட்டார் பத்துமாஸம் கர்ப்பவாஸமநுபவிக்கில் பன்னிரண்டு மாஸமிறே இவனநுபவித்தது; 'ததச்ச த்வாதசே மாஸே' என்றும், 'ஜாதோஹம் யத்தவோதராத்' என்றும்.

## ३. गुणदशरथोपम: ।

குணைர்தசரதோபம:. 1-9. 3

(ஸ்ரீராமன்) குணங்களாலே, தசரதருக்கொப்பானவன்.

பெரி—வ்யா. (நாச்சியார். 9-3) நஞ்ஜீயர் ஸுந்தரபாண்டிய தேவரைக் கண்டிராநிற்கச்செய்தே 'குணைர்தசரதோபம:' என்றவிடத்துக்கு 'பிறந்து படைத்த குணங்களும் ஸ்வாபாவிக குணங்களுமெல்லாம் கூடினாலும் அரைமட்டமாய் சக்ரவாத்தித் திருமகன் என்னப் போருமித்தனை' என்றருளிச்செய்ய, அத்தைக்கேட்டு, 'பரமபுருஷனுக்கு ஒருவன் வயிற்றிலே பிறந்து ஓரேற்றமுண்டாகவேணுமோ? அவன் பிறக்கையாலே அக்குடிதனக்கும் ஏற்றமாமித்தனையன்றோ' என்றானும். 'நாம்போன ஸமாதி இவன் அறிந்திலன்' என்று பார்த்து, அதெல்லாம் கிடக்கச்செய்தே பரமபுருஷன் என்னும்படி என்னென்றாராம்.

பெரி—வ்யா. (பெரியதிரு 10-4-1) 'பரமபதத்திலுள்ள ஸ்வாபாவிககுணங்களும், அவதரித்து ஆர்ஜித்தகுணங்களும் கூடினால், சக்ரவர்த்தியோடு உபமாநம் மாத்ரமட்டமாய் நிற்குமித்தனை' என்று இத்தை ஜீயர் அருளிச்செய்ய, "பரம்புருஷனுக்கு ஓரிடத்தே பிறந்து ஒரு குணம் தேடவேணுமோ" என்றார் சுந்தரபாண்டியதேவர். 'நாமோடுகிற நரம்பு இவன் அறிந்திலன்' என்று அத்தை விட்டு 'பரமபுருஷன் என்ற போதை அழகு இருந்தபடி என்' என்றாராம். எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே அந்வயமில்லாதார் பகவத்விஷயத்தில்சொன்ன ஏற்றமெல்லாம் அர்த்தவாதம் என்றிருப்பர்கள். அதுடையவர்கள் பகவத்ப்ரபாவத்துக்கு அவதி இல்லாமையாலே, 'சொன்னவை சில சொன்னவித்தனை; சொல்லாததுவே பெரிது' என்றிருப்பர்கள்.

४. अभियाता प्रहर्ता च सेनानयविशारदः ।

அபியாதா ப்ரஹர்த்தாச ஸேநாநயவிஶாரதஃ. 1-29 4

(ஸ்ரீராமன்) யுத்தத்தில் தானாகவே எதிர்த்துச் செல்லுகிறவன், எதிரிகளைக் கொல்லுகிறவன், ஸேனையை நடத்துவதில் ஸமர்த்தன்.

ஈடு. (தி—வாய். 5-4-3.) [அபியாதா]—எதிரிகள் வரப்பொரவிருக்கை யன்றிக்கே, எடுத்து விட்டுப் பொருகையும் தமக்கே பணியாயிருக்கும். [ப்ரஹர்த்தாச]—தாசித்தலையில் நின்று 'முதல் வெட்டு ஆரது' என்றால், அதில் முற்பாடும் தம்மதாயிருக்கும். [ஸேநாநயவிஶாரதஃ]—தாம் போகாதே, தாசியுமணியும் பேரணியுமாக வகுத்து விட்டால், ஒக்கநின்று பொருவித்தாற்போலே வென்று மீளும்படி படை கோக்கவல்லவர்.

५. त्रैलोक्यमपि नाथेन येन स्यान्नाथवत्तरम् ।

த்ரைலோக்யமபி நாதேந யேந ஸ்யாந்நாதவத்தரம். 2-13. 5

மூன்று உலகமும், எந்த நாதனால் (எந்த ராமன் நாதனாயிருந்தால்) மிகவும் நல்ல நாதனையுடையதாக, இருக்குமோ.

ஈடு. (தி—வாய். 8-4-10) த்ரைலோக்யத்தையும் பெருமாளுக்குக் கையடப்பாக்கினாலும், பின்னையும் ரக்ஷ்யம் சுருங்கி ரக்ஷகத்வத்துடிப்பே விஞ்சியிருக்கும். யேந நாதேந நாதவத்தரம் ஸ்யாத்.

६. बहवो नृप ! कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते ।

பஹவோ ந்ருப! கல்யாணகுணாஃ புத்ரஸ்ய ஸந்தி தே. 2-26. 6

ஓ அரசனே, உம்முடைய பிள்ளைக்கு (ஸ்ரீராமனுக்கு) பல மங்களகுணங்கள் இருக்கின்றன.

ஈடு. (தி—வாய். 7. 6 ப்ரவேசம்) சக்ரவர்த்தி, 'பெருமாளைத் திருவபிஷேகம் பண்ணுவிக்க' என்று கோலி, 'அறுபதினாயிரம் ஆண்டு ஒரு தலைமிதிக்க ஒருதலை கிளம்பும்படியான ராஜ்யத்தை வருந்தி ஒருபடியடிப்படுத்தினோம். இத்தை ஒரு சிறுபிள்ளை தலையிலே வைத்தால் பொறுக்குமோ, பொறாதோ' என்று விசாரித்து 'இதுதன்னை நாட்டோடே கூட்டிப்பார்ப்போம்' என்று கோலி, ராஜலோகத்தையடையத் திரட்டி 'நான் இங்ஙனே பெருமாளைத் திருவபிஷேகம் பண்ணுவிக்கப் பாராநின்றேன். உங்களுக்கிஷ்டமோ அன்றோ' என்று கேட்க; அநந்தரம் 'கிழவா! போகாய்' என்ன, 'கதம் நு மயி தர்மேண ப்ருதிவீமநுசாஸதி, பவந்தோத்ரஷ்டுமிச்சந்தி யுவராஜம் மமாத்மஜம்' 'நாம் ஒருப்பட்ட கார்யம் நன்றாய் விழுந்தது. ராஜலோகம் இப்படி த்வரிக்கப்

பெறுவதே' என்று அதிலே போர ஹ்ருஷ்டனாய், அந்த ஹர்ஷத்தை நெஞ்சிலே இட்டு வைத்து. 'அதுதன்னை இவர்கள் வாயாலே சொல்லக் கேட்கலாகாதோ' என்று, "வாரி கோள். அறுபதினாயிரமாண்டு ராஜ்யம் பண்ணுகிறவிடத்து இற்றைவரை எனக்கு என்றொரு ஸுகம் கோலாதே உங்கள் ரக்ஷணத்துக்காமவையே தேடிக்கொடு போந்த நான் ஒரு வார்த்தை சொன்னால், 'இப்போது நீ இருந்தாயாகில் வீகமென்? க்ரமத்திலே செய்து கொள்ளுகிறோம்' என்னுதல். அன்றாகில் 'உனக்கு ப்ரியமாகில் அப்படிச் செய்யலாகாதோ' என்று ஒரு வார்த்தை சொல்லி ஆறியிருத்தல் செய்கையொழிய, படுகொலைக்காரர்கையிலே அகப்பட்டார் 'தப்பவேணும்' என்று பார்க்குமாபோலே நீங்கள் இங்ஙனே கூப்பிடுகைக்கு நான் பண்ணின அபராதமென்' என்ன—[பஹவோ ந்ருப கல்யாணகுணாঃ புத்ரஸ்ய ஸந்திதே]—'எதிரிகளம்பால் அழியப்பெற்றதில்லை உன்னுடைய விஷயம். உன்மகனுடைய குணத்தாலே நாட்டைப் படுகொலைக்குத்தினாய் காண் நீ' என்றார்களாயிற்று. நாங்கள் குணஜிதராய் இவ்வார்த்தை சொன்னோமித்தனையல்லது ஒரு கார்யபுத்த்யா சொன்னோமல்லோம் காண். 'தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந். தாதுக்களானவை 'இன்ன மலையிற்பொன்' என்று விலைபோமாப்போலே, புறம்பே சில குணங்கள் கண்டால் 'பெருமாள் பக்கல் குணம்' என்றிட்டாயிற்று அங்கு விலைபோவது. 'இவ்வ்யக்தியில் குணம்' என்றாயிற்றுப் புறம்பு விலைபோவது.

௬௫. (தி—வாய். 9-6. ப்ரவேசம்) சக்ரவர்த்தி, 'பெருமாளைத் திருவபிஷேகம் பண்ணவேணும்' என்று கோலி, 'நாம் அறுபதினாயிரமாண்டு கூட ஒருதலை மிதிக்க ஒருதலை கிளர இப்படி வருந்தி அடிப்படுத்தின ராஜ்யத்தை இன்று சிறியவன் தலையில் வைத்தால் இது பொறுக்குமோ' என்று பார்த்து, 'இதுதன்னை நாட்டோடே சேர விசாரித்துச் செய்வோம்' என்று ராஜலோகத்தோடே கூட்டினவிடத்து 'ஜநௌகோத்குஷ்டஸம்நாதோ விமாநம் கம்பயந்நிவ' என்று சக்ரவர்த்திமாளிகை அழித்துச் செய்ய வேண்டும்படி ஆர்த்துக்கொள்ள, அத்தைக் கேட்டு, 'நாம் நினைத்த கார்யம் வாய்க்கப் போய்த்து. ஆனாலும் இவர்கள் நினைவுதன்னை இவர்கள் வாக்காலே சொல்லக் கேட்டாலாகாதோ' என்னுமத்தைப் பற்ற 'வாரிகோள், 'கதம் நுமயி தர்மேண' என்று அறுபதினாயிரமாண்டு சிறியத்தைப் பெரியது நெலியாதபடியாக பூமிப்பரப்படைய நோக்கிக்கொண்டு, 'பாண்டரஸ்யாதபத்ரஸ்ய சாயாயாம் ஜரிதம் மயா' என்று முத்துக்குடைநிழலிலே திரிந்து எனக்கென்ன ஒருஸுகம் கோலாதே உங்களுடைய ரக்ஷண தர்மத்தையே செய்துகொண்டு போந்தேன். நான் ஒரு வார்த்தை கேட்டவிடத்து 'இப்போது நீ இருக்கச்செய்தே வேணுமோ? க்ரமத்திலே செய்துகொள்ளுகிறோம்' என்னுதல், அன்றியே 'கார்யமாகில் செய்யலாகாதோ' என்று வார்த்தை சொல்லுகையன்றிக்கே, படுகுலையடித்தவனைத் தப்ப ஒருதார்மிகன்கீழே ஒதுங்க நினைப்பாரைப் போலே என்னை விட்டு என்மகனே அமையும் என்று நீங்கள் விரும்புகைக்கு நான் உங்களுக்குப் பண்ணின அபராதமென்' என்ன, 'நீ எங்களுக்குப் பண்ணிற்றோரபராதமில்லை. உன் மகனுடைய குணபராதங்கள் இதுக்கடி நீ நோக்கிக் கொண்டு போந்த படிகளில் ஒரு குறையில்லை. குணவானாயிருப்பானொரு புத்ரனைப் பெற்று நாட்டைப் படுகுலைபடித்தாய் காண்.—[பஹவঃ]—உன்னளவல்ல காண் ரக்ஷணதர்மத்தில் அவர்க்குண்டான பாரிப்பு. தாதூநாமிவ—நாட்டிலே சிலரை குணஹீநரென்று நிந்திக்கிறதும் சிலரை குணவான்களென்று கொண்டாடுகிறதும் 'இன்ன ஆகரத்திற்பொன்' என்று விலைபெறுமாப்போலே 'இவ்வாச்ரயத்திலே கிடக்கிற குணம்' என்றாய்த்து புறம்பு விலை போவது. 'ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்ய குணவத்தயா.'

௭. प्रियवादी च भूतानां सत्यवादी च राघवः ।

ப்ரியவாதீச பூதாநாம் ஸத்யவாதீ ச ராகவঃ. 2-33. 7

ராமன் ப்ராணிகளுக்கு ப்ரியமானதைப் பேசுபவன், உண்மையானதைச் சொல்லுபவன்.

ஈடு. (தி—வாய். 7- -1.) [ப்ரியவாதீச]—பெருமாள் ஒன்றை அருளிச் செய்தால் அது செவிப்படாதொழியில் செய்யலாவதில்லை; செவிப்படில் இனிதாயன்றியிராது. ஆர்க்குத்தானென்னில்—[பூதாநாம்]—ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களுக்கும். அஸத்வ்யாவ்ருத்திமாத்ரமே வேண்டுவது. அப்போது ப்ரியமாய் விபாகத்தில் வேறொன்றை பலிப்பிக்குமோ என்னில்—ஸத்யவாதீச—அருளிச் செய்யுமதுதான் பூத ஹிதமாயன்றியிராதென்கிறது ஓர் உக்தியே இரண்டுமாகாநின்றால், அல்லாததுக்குச் சொல்லவேண்டாவிறே.

௮. व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः ।

வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவம் துஃக்கிதஃ. 2-41 8

(ஸ்ரீராமன்) மனிதர்களுடைய வ்யஸநங்களில் மிகவும் துக்கமுள்ளவனாக ஆகிறான்.

ஈடு. (தி—வாய். 7-9-7.) திவ்யாந்தப்புரத்திலுள்ளார்க்காதல் திருத்தாய்மார்க்காதல் ஒரு வ்யஸநம் வந்தாலோ துக்கிதராவதென்னில்—[மநுஷ்யாணாம் ப்ருசம் துஃக்கிதோ பவதி]—துக்கிதனானவனளவிலன்றிக்கே, ஆனை அளறுபட்டாப்போலே நோவுபடுவராயிற்று துக்கிதோ பவதி—இன்று ஒருபடியாய், பிற்றைநாள் ஒருபடியாய், அநந்தரம் ஆறிப்போமிவர்களுக்கு; இவர்கள் க்லேசத்தில் நாள்தோறும் புதியராயிருப்பர். வ்யஸநம் இவனதானால் துக்கமும் இவனதாக வேண்டியிருக்க, இவர் துக்கிதராகைக்கு ஹேது என்னென்னில்—'இவன் படுகிற க்லேசம் இவன்காவற்சோர்வால் வந்ததொன்றன்றே. நம் காவற்சோர்வால் வந்ததொன்றன்றோ' என்று ரக்ஷகராகையாலே நாள்தோறும் புதியராயிருப்பர். 'ஹ்ரீரேஷாஹி மமாதுலா' என்னக்கடவதிறே. இவனளவல்லவாயிற்று பிற்பாட்டுக்கு அவன் லஜ்ஜிக்கும்படி.

௯. चैत्रः श्रीमानयं मासः पुण्यः पुष्पितकाननः ।

சைத்ரஃ ச்ரீமாநயம் மாஸஃ புண்யஃ புஷ்பிதகாநநஃ 3-4 9

இந்த சித்திரை மாஸம் ஸம்ருத்தியுள்ளது புனிதமானது பூத்தகாடுகளையுடையது.

பெரி—வ்யா. (திருப்பாவை 1.) ஒரு ஸம்ருத்தியைப் பற்ற காலத்தைக் கொண்டாடிற்றிறே. [சைத்ரஃ]—அல்லாதாரிற் காட்டில் பெருமாளுக்குள்ள ப்ராதாந்யம்போலே மாஸங்களெல்லாவற்றுக்கும் முதலான மாஸம். [ஸ்ரீமாந்]-அவர் எல்லாருக்கும் ராஜாவாக ப்ராப்தரானாப்போலே, சைத்ரமாஸம் ஸர்வர்க்கும் ஸுககரமாகையாலே மாஸங்களுக்கெல்லாம் ராஜாவென்கிறது. [அயம் மாஸஃ]—அபிஷேகமநோரத ஸமயத்திலே ஸந்நிஹிதமான தன்னேற்றம். அங்கு, சேஷியை சேஷபூதர் லபிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். இங்கு, சேஷபூதரை சேஷி லபிப்பிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். [புண்யஃ புஷ்பிதகாநநஃ]—'பாவநஃ ஸர்வலோகாநாம் த்வமேவ' என்றும், 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்றும் அவர்க்கு இரண்டாகாரமுண்டானாப்போலே, இக்காலமும் பாவநமுமாய் போக்யமுமாயிருக்கை. [புஷ்பிதகாநநஃ]—படைவீடுபோலே நாம் அலங்கரிக்கவேண்டாதே தானே அலங்கரிக்கை. புஷ்பிதகாநநஃ—பெருமாள் பொன்முடி சூட, காடு பூமுடி சூடிற்று.

௧௦. रूपौदार्यगुणैः पुंसां दृष्टिचित्तापहारिणम् ।

ரூபௌதார்யகுணைஃ பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம். 3-28. 10

*அழகு தானம் சீலம் ஆகிய இவைகளால் புருஷர்களுடைய கண்ணையும் மனத்தையும்பறிக்கின்ற (ஸ்ரீராமனைக் கண்டு தசரதன், பார்த்தது போருமென்று த்ருப்தி அடையவில்லை).*

ஈடு. *(தி—வாய். 5-3 6) [ரூபௌதார்யகுணை:]—ரூபமென்கிறது—வடிவழகை. ஔதார்யமென்கிறது—அத்தை எல்லார்க்கும் அநுபவிக்கலாம்படி ஸர்வஸ்வதானம் பண்ணிக்கொண்டிருக்கை. குணமாவது—கொள்ளுகிறவனிலும் தாம் தாழநின்று கொடுக்கும் சீலம். தன் மேன்மை தோற்ற இருந்துகொடுக்குமன்று ஆள் பற்றுதிறே. அதுக்காகத் தாழநின்றுயிற்றுத் தன்னைக் கொடுப்பது. [பும்ஸாம்]—அந்த ஸௌந்தர்யமும் ஔதார்யமும் சீலமும் வயிரவுருக்காயிற்று. அபலைகள் படுமத்தை வன்னெஞ்சரையும் படுத்தவற்றுயிற்று. அன்றியே, 'ப்ரக்ருதிபுருஷர்கள்' என்றுப்போலேயாய், அசித்விலக்ஷணரெல்லாரையும் ஈடுபடுத்தவற்றென்னவுமாம். த்ருஷ்டிசித்தாபஹாரிணம்—கண்ணுக்கு மநஸ்ஸஹகாரம் வேண்டாதே, கண்ணைப் பின்செல்லுமத்தனை நெஞ்சு. தாய் வேறு கன்று வேறுக்கும் விஷயமிறே.*

११. सह पत्न्या विशालाक्ष्या नारायणमुपागमत् ।

ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத். 6-1. 11

*(ஸ்ரீராமன்) விசாலமான கண்ணையுடைய பத்நியோடுகூட நாராயணனை (ஸ்ரீரங்கநாதனை) அடைந்தான்.*

ஈடு. *(தி—வாய். 5-8-1) [ஸஹ பத்ந்யா]—ஆழங்காலிலே இழிவார் ஒரு கொம்பைக்கொடியைப் பிடித்திழியுமாப்போலே. பத்ந்யா ஸஹ—கிண்ணகத்தில் இழிவார் தேசிகரைக் கைப்பிடித்துக்கொண்டு இழியுமாப்போலே, பெருமாள் பெரிய பெருமாளை அநுபவிக்கும்போது பிராட்டியைக் கூடக்கொண்டாயிற்று இழிவது. [விசாலாக்ஷ்யா]—இவர்க்குப் பெரியபெருமாள் பக்கலுண்டான ப்ரேமாதிசயத்தைக் கண்டு, தன்னை அணைக்கும் போதையிற்காட்டிலும் உடம்பெல்லாம் கண்ணானபடி. [நாராயணமுபாகமத்]—இவர் நியதி இருக்கிறபடி. இக்கண்ணுக்கு இலக்காய் ஆழங்காற்படாதே அவ்வருகு பட்டார். இத்தால் சொல்லிற்றுயிற்று - தான் தன்னை அநுபவிக்கும்போதும் கூட்டுத்தேடவேண்டும்படியாயிற்று ஆராமை இருக்கும்படியென்கிறது.*

१२. ज्ञातिदासी यतो जाता ।

ஜ்ஞாதிதாஸீ யதோ ஜாதா. 7-1. 12

*(கைகேயினுடைய) பந்துவின் வேலைக்காரியும் எங்கேயோ பிறந்தவளுமாகிய (மந்தரை என்பாள், அகஸ்மாத்தாய் கைகேயினுடைய அழகிய மாளிகைமேலே ஏறினள்).*

ஈடு. *(தி—வாய். 7-5-1) [யதோ ஜாதா]—இத்தேசத்திலே பிறந்தாளாகில் பெருமாளுக்கு விரோதம் செய்யாளாகையாலே, எங்கேனுமோரிடத்தில் பிறந்தாள். ஒரு விழுந்தான் கிடக்கை என்கிறது. 'யதஃகுதச்சிஜ்ஜாதா' என்று வ்யாக்யானம் பண்ணினன் உடாலி. இன்னிலத்திற் பிறவாமை இவளுக்குக் கொடுமை விளைந்ததென்கிறனிறே. தேசந்தானே எல்லா நன்மைகளையும் பிறப்பிக்கவற்றுயிருக்கும் காணும்.*

१३. अहं पुनर्देवकुमाररूपमलंकृतं तं सुतमाव्रजन्तम् ।
नन्दामि पश्यन्नपि दर्शनेन भवामि दृष्ट्वा च पुनर्युवेव ॥

அஹம் புநர்தேவகுமாரரூபமலங்க்ருதம் தம் ஸுதமாவ்ரஜந்தம்,
நந்தாமி பச்யந்நபி தர்சநேந பவாமி த்ருஷ்ட்வாச புநர்யுவேவ. 12-106. 13

நாஞே மன்மதனுடைய அல்லது ஸௌப்ரஹ்மண்யனுடைய ரூபம்போன்ற ரூபத்தையுடையவனும் அலங்கரிக்கப்பட்டவனுமான அந்தப் பிள்ளையை (ராமனை) எனது ஸமீபத்திற்கு வருகிறவனுக அகக்கண்ணுல் கண்டுகொண்டும் (என்ஸமீபம் வருகிறவனுக மனோரதித்தவனுயிருந்தும்) ஸந்தோஷப்படுகிறேன். நேரில் பார்த்து விட்டோ வாலிபனைப்போல ஆகின்றேன்.

என்கிறது. ' இவர்க்குமவவளவேயோ ' என்று [illegible]
லாம் என்று தரம்போராதாரை ஒப்பாகச் சொல்லி ரிஷி கரிபூசுகிருன் ' என்ருர். [அலங்க்ருதம்]--அத்தாலும் வெறும்புறங்கிடூரொரு போலி சொல்லலாவது, ஒப்பித்தால் ஒக்கச் சொல்லலாவாரில்லை. [தம் ஸௌதம்]—இவனுக்கு இரண்டுபடியும் உத்தேசயமாயிருக்கிறபடி. [ஆவ்ரஜந்தம்]—புஷ்பம் அலரும்போது எங்கும் ஒக்கப்பிறக்கும் விகாஸம்போலே. அதுவும் வண்டை நோக்கியிறே; இவரும் போக்தாக்களைக் குறித்திறே. [நந்தாமீத்யாதி]—கண்டபடியே இருக்கச்செய்தே காணுது கண்டாரைப்போலே ஆயிற்று நாள்தோறும் நாள்தோறும் க்ஷணம்தோறும் க்ஷணம்தோறும் உகக்கும்படி. [தர்சநே]-அணைத்தல், வார்த்தைசொல்லுதல் செய்யவேண்டா; காட்சியே அமையும். கரைபுரண்டு அநுபவமுள்ளவிடத்திற்போலே காணும் ப்ரயோஜநம். ஸதா பச்யந்தியிறே. [பவாமித்ருஷ்ட்வாச புநர்யுவேவ]—அறுபதிணுயிரம் ஸம்வத்ஸரம் வயஸ்ஸைப் புக்கு வ்ருத்தனுன சக்ரவர்த்தி. பெருமாளைக் கண்டபின்பு பெருமாளுக்கும் தனக்கும் வாசி தெரியாதபடியாஞன் ; * காமனைப்பயந்தகாளை * என்னுமாப்போலே. தன்னை அநுபவிப்பாரையும் தன்னைப்போலே யாக்கி உஜ்ஜீவிப்பிக்கும் விஷயம்போலே காணும். ' யுவேவ வஸுதேவோபூத் விஹாயாப்யாகதாம் ஜராம் ' என்னும்படியாணுரிறே வஸுதேவரும்.

१४. तत्र काषायिणो वृद्धान् वेत्रपाणीन् स्वलंकृतान् ।
दद‍र्श विष्ठितान् द्वारि स्त्र्यध्यक्षान् सुसमाहितान् ॥

தத்ர காஷாயிணோ வ்ருத்தாங் வேத்ரபாணீங் ஸ்வலங்க்ருதாங்,
ததர்ச விஷ்டிதாங் த்வாரி ஸ்த்ரயத்யக்ஷாங் ஸுஸமாஹிதாங்.16-3. 14

(ஸ்ரீராமன்) அங்கே (தசரதரந்தப்புரத்தில்) காஷாயவஸ்த்ரங்களை தரிக்கின்றவர்களும் பிரம்பு கையிலுள்ளவர்களும் நன்ருக அலங்கரிக்கப்பட்டவர்களும், வாயிலில் இருக்கின்றவர்களும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களுமான கிழக்கஞ்சுகிகளைக் கண்டான்.

ஈடு. (தி—வாய். 5-9-3) [தத்ர காஷாயிணஃ]—தந்தாமைப் பேணுமவர்களல்லாமையாலே அழுக்குச் சட்டையும் தாங்களுமாயிறேயிருப்பது. [வ்ருத்தாங்]—தொண்ணூற்றஞ்சு வயஸ்ஸுக்கு மேலாய் வீதராகராயிருப்பாரையிறே அந்தப்புரங்களுக்கு வைப்பது. [வேத்ரபாணீங்]—பெருமாள் விற்பிடித்தாப்போலே அவர்கள் பிரம்பு பிடித்தபடி. விற்பிடித்து ரக்ஷகராயிருப்பாரும் பிரம்பு பிடித்து ரக்ஷகராயிருப்பாரும் காணும். [ஸ்வலங்க்ருதாங்]—பேணுத பரிவட்டங்களை உடையராய் வ்ருத்தருமாயிருந்தார்களாகில் இவர்களுக்கு அலங்காரமாவதென்னென்னில்—பெருமாள் சக்ரவர்த்தி மாளிகையிலே போய் திருமஞ்சனம் பண்ணி அமுதுசெய்து மீண்டு திவ்யாந்தப்புரத்திலே எழுந்தருளும்போது, சக்ரவர்த்தியோபாதி, பழையராகையாலும் தங்கள் பரிவாலுமாக இவரை மடியிலே வைத்தணைத்து உச்சியை மோந்து விடுவார்கள். அத்தாலே குங்குமக்குழம்பும் கோயிற்சாந்துமாயிருப்பர்கள். பெருமாளுடையவும் பிராட்டியுடையவுமொப்பனைபோலன்று இவர்களொப்பனை.

१५. पतिसंमानिता सीता भर्तारमसितेक्षणा ।
आद्वारमनुवव्राज मङ्गलान्यभिदध्युषी ॥

பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா,
ஆத்வாரமநுவவ்ராஜ மங்கலாந்யபிதத்யுஷீ. 16-21. 15

அழகிய கருவிழியுள்ள ஸீதை பர்த்தாவினுல் வெகுமானிக்கப்பட்டவளாய் மங்களங்களை ப்ரார்த்தனை செய்பவளாய்க்கொண்டு கணவனை வாயில்வரையில் பின் தொடர்ந்து வந்தாள்.

பெரி—வ்யா. (திருவிருத்தம், 24) [பதிஸம்மாநிதா]—பெருமாள் சக்ரவர்த்தி பாடு ஸுமந்த்ரனழைக்க எழுந்தருளுகிறபோது, தொடர்ந்து பின்னே புறப்பட்ட பிராட்டிக்குத் திருத்தோளில் மாலையை வாங்கியிட்டு 'நாம் வருமளவும்' வ்ருத்தகீர்த்த நம் பண்ணியிரு' என்று எழுந்தருளினர் என்று பழையவர்கள் நிர்வாஹம். 'மாலையை யிட்டுத் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு எழுந்தருளினர்' என்று பட்டர். [அஸிதேக்ஷணா]—இவர் தோளில் மாலையிட்டதுக்கு இவள் கண்ணாலே மாலையிட்டபடி.

१६. दीक्षितं व्रतसंपन्नं वराजिनधरं शुचिम् ।
कुरङ्गशृङ्गपाणिं च पश्यन्ती त्वा भजाम्यहम् ॥

தீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் வராஜிநதரம் சுசிம்,
குரங்கச்ருங்கபாணிஞ்ச பச்யந்தீ த்வா பஜாம்யஹம். 16-28. 16

நான் தீக்ஷையுள்ளவரும் நன்றாக வ்ரதமுடையவரும் நல்ல மான்தோலை தரிக்கின்றவரும் பரிசுத்தரும் மான் கொம்பு கையிலுள்ளவருமாகிய உம்மைப் பார்க்கின்றவளாய் (பார்ப்பதற்காக) பஜிக்கின்றேன்.

பெரி—வ்யா. (நாச்சியார் திருமொழி. 14-2.) [தீக்ஷிதம்]—திருமேனியிலே பூசின வெண்ணெயும், போர்த்த உறுப்புத் தோலும், யஜமாநவேஷம் தோற்றும்படியாக விருக்கும்படி. [வ்ரதஸம்பந்நம்]—ரிஷிசொன்னவளவன்றிக்கே, அவன் ஒரு பட்டினி விடச்சொல்லுமாகில் தாம் இரண்டுபட்டினிவிடுவர். [வராஜிநதரம்]—நல்லபரிவட்டங்கள் சாற்றுமதின்றிக்கே, வராஜிநதரராயிருப்பர். [சுசிம்]—ஒருவரையும் ஸ்பர்சிக்க வாகாது; பிராட்டியொருத்தியையும் செய்யலாவதில்லையிறே என்றால், அவள் தன்னை ஸ்பர்சிக்கிலும் அடுத்தடுத்து முழுகாநிற்பர்.

ஈடு. (தி—வாய். 4-8-4) [தீக்ஷிதமித்யாதி.]—பிராட்டி ஆசாரப்ரதாநமான ஜநக குலத்தில் பிறப்பாலே அவ்வடிவை விரும்பினள். [தீக்ஷிதம்]-உறுப்புத்தோலும் வெண்ணெய் பூசின உடம்புமான யஜமாநவேஷத்தோடே நின்ற நிலையைக் காண ஆசைப் படா நின்றேனென்கிறள். [வ்ரதஸம்பந்நம்]—ரிஷி ஒரு பட்டினிவிடச்சொன்னுனுகில் 'இவன் நம்முடைய ஸௌகுமார்யத்துக்கு 'பொறுது' என்று சொன்னுனித்தனை' என்று நாலுபட்டினி விட ஒருப்படுவராயிற்று தர்மச்ரத்தையாலே. [வராஜிநதரம்]—கூறையுடையையும் காற்கடைக் கொள்ளவேண்டும்படியாயிருக்கை. [சுசிம்]—'ஒரு ஸ்த்ரீகளையும் தீண்டலாகாது. தர்மபத்நியாகையாலே பிராட்டியைத் தீண்டினல் வருவதொரு சேதமில்லையிறே; ஆனபின்பு அதொழிய பரிஹரிப்பது' என்றால் அது தன்னிலும் அதிசங்கைபண்ணி, பிராட்டியுடைய திருப்பரிவட்டம் தாக்கினுலும் முழுகத் தேடாநிர்பர். [குரங்கச்ருங்கபாணிஞ்ச]—'ஏகவஸ்த்ரதரோ தந்வீ' என்னுமதிற் காட்டிலும், கையும் கலைக் கொம்புமாயிருக்குமதுதானே போந்திருக்கை. [பச்யந்தீ த்வா பஜாம்யஹம்]—'மேல்வரும் பலத்தை அபேக்ஷிக்கவே நடுவுள்ளது ஆநுஷங்கிகமாய் வருமிறே' என்னுமத்தைப் பற்றச் சொல்லுகிறள். பச்யந்தீ த்வா பஜாம்யஹம்—பகவத்பஜநம் பண்ணுவார் பண்ணுவதெல்லாம் த்ருஷ்டத்துக்கிறே. ஆகை

யாலே த்ருஷ்டத்துக்காக பஜிக்கிறாள் காணும். ஸதா பச்யந்தியிறே அங்கும். 'வழிப் போக்கில் கண்ணெச்சில் வாராதொழியவேணும்' என்றிறே மங்களாசாஸநம் பண்ணுகிறது. அது தன்னடையே வருமிறே மேல் வரும் பலத்தை அபேக்ஷிக்கவே. ஸாவித்ரி தன் பர்த்தாவைக் காட்டி 'இவனுக்கு நான் அநேகம் பிள்ளைகளைப் பெற வேணும்' என்று வேண்டிக்கொண்டாளிறே.

१७. यश्च रामं न पश्येत्तु यं च रामो न पश्यति ।
निन्दितः स वसेल्लोके स्वात्माऽप्येनं विगर्हते ॥

யச்ச ராமம் ந பச்யேத்து யம் ச ராமோ ந பச்யதி,
நிந்திதஃ ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே. 17-14. 17

விசேஷமுள்ளவனானாலும் யாவனொருவன் ராமனையும் பார்க்கிறதில்லையோ; ராமனும் எவனொருவனைப் பார்க்கிறதில்லையோ; அவன் உலகத்தில் நிந்திக்கப்பட்டவனாய் வஸிக்கவேண்டும். தன்மனதும் இந்த மனிதனை நிந்திக்கிறது.

பே—வ்யா. (பெரிய திருமொழி, 1-1-1) [யச்ச ராமம் ந பச்யேத்து]—'ராமம்' என்கிறது கண்ணுக்கு வகுத்த விஷயத்தை. [யஃ]—காணாதிருக்கிறான் யாவனொருவன். [து]—எத்தனையேனும் உயர்ந்தவனாகவுமாம். இது தப்பினாலும், தப்பாதது தப்பினால் வருமது இவ்வளவன்று என்கைக்காக விசேஷிக்கிறது—[யம் ச ராமோ நபச்யதி]—எத்தனையேனும் சிறியாரும் இவர் கண்பார்வைக்கு இலக்காகாதாரில்லை. [யம்]—எத்தனையேனும் சிறியவனென்கிறது. எத்தனையேனும் சிறியாரிறே இவர் கண்ணிற் பார்வைக்கு இலக்காவார். 'யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான் யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்.' ப்ரஹ்மாதிகளுடைய ஞானத்துக்கும் அவிஷயமாயிருக்கும்; ஓரிடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்திருக்கும். எத்தனையேனும் உயர்ந்தவனாகிலும் பெருமாளுடைய ஒருநாளைப் புறப்பாடு காணானாகில், அவன் பெரியவனல்லன். எத்தனையேனும் சிறியனானவன் பக்கலிலும் தப்பாது அவருடைய பார்வை. தப்புகிறான் யாவனொருவன், அவன் அவஸ்துக்களோடும் எண்ணப்படான். எண்ணப்படாமையிலே எண்ணப்படும். எல்லாரும் நிந்தித்து 'சீ, சீ' என்னப்படும். இவனை நிந்திப்பார் வஸிஷ்டாதிகள் தொடக்கமானார் நால்வரிருவரோ வென்னில்—[நிந்திதஃ ஸ வஸேல்லோகே.] லோகே நிந்திதஃ—இவனை நிந்திக்கைக்குரியரல்லாதாரில்லை. விஷயப்ரவணனானவன் இப்போது பழியாய் மேல் நரகமாயிருக்கச்செய்தே, தான் 'நல்லது செய்கிறோம்' என்றிருக்குமிறே, அப்படி தான் 'நல்லது செய்கிறோம்' என்றிருக்குமோவென்னில்—[ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே]—தானும் தன்னை நிந்தித்துக்கொள்ளும். திருக்கைத்தலம் இழந்தவன் 'இற்றைப் புறப்பாடு காணப் பெறாத நாம் கர்ப்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில் முடிந்து பிழைக்கலாயிற்று' என்றிருக்குமிறே.

१८. न नूनं मयि कैकेयि ! किंचिदाशंससे गुणम् ।
यद्राजानमवोचस्त्वं ममेश्वरतरा सती ॥

நநூநம் மயி கைகேயி ! கிஞ்சிதாசம்ஸஸே குணம்,
யத்ராஜாநமவோசஸ்த்வம் மமேச்வரதராஸதீ. 19-21. 18

ஓ கைகேயி ! என்னிடத்தில் குணத்தை கொஞ்சம்கூட (நீர்) அறியவில்லை. (இருக்கிறதாக நினைக்கவில்லை) நிச்சயம். யாதொரு காரணத்தால் நீர் எனக்கு (என்னை) நியமிக்க மிக்க பாத்தியதையுள்ளவராயிருந்தும் அரசரை (தசரதரோடு) சொன்னீரோ.

பே—வ்யா. (பெரிய திருமொழி. 2-3-1) [நநாநம் மயி கைகேயி]—‘சக்ரவர்த்தி வார்த்தை சொல்லமாட்டாமை இருக்கிறனத்தனை. உம்முடைய தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான். உம்மைக் காடேறப்போகக்காணுமவன் நினைத்திருப்பது’ என்று சக்ரவர்த்தி கருத்தைச் சொல்ல, அதைக்கேட்டு ‘நடுவிலாய்ச்சி திருவடிகளிலே அழகிதாக சுச்ருஷித்தோமென்றிருந்தோம். நம் பக்கல் ஒருகுணமுண்டாக நினைத்திராமையிறே தாம் போகச்சொல்லாமே ஐயர் கருத்தாக அருளிச்செய்தது’ என்று ‘ஐயரோபாதியாகவோ உம்மை நினைத்திருப்பது? அவரை ஈச்வரராகவும் உம்மை ஈச்வரதரையாகவுமிறே நினைத்திருப்பது’ என்றாரிறே.

१९. राज्यं च तव रक्षेयमहं वेलेव सागरम् ।
प्रतिजानामि ते वीर ! मा भूवं वीरलोकभाक् ॥

ராஜ்யஞ்ச தவ ரக்ஷேயமஹம் வேலேவ ஸாகரம்,
ப்ரதிஜாநாமி தே வீர! மாபூவம் வீரலோகபாக். 23-28. 19

நான் தேவரீருடைய ராஜ்யத்தையும் கரை ஸமுத்திரத்தைப்போலே காப்பாற்றுவேன். ஓ சூரா! தேவரீரின் பொருட்டு (தேவரீரிடத்தில்) ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன். (இல்லாவிடில்) வீரர்களுக்குரிய லோகத்தை அடைபவனாய் (நான்) ஆகக்கடவனல்லன்.

பே—வ்யா. (கண்ணிநுண்சிறுத்தாம்பு ப்ரவேசம்) [ராஜ்யஞ்ச தவ ரக்ஷேயம்]—‘ரரக்ஷ தர்மேண பலேந’ என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகையன்றிக்கே, உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன். எனக்கு தாதர்த்த்யம் ஸ்வரூபமானாலும் உம்மால் என்னை மீறவொண்ணாது காணும். [அஹம் வேலேவ ஸாகரம்]—கடலுக்குக் கரை சேஷமாயிருக்கச் செய்தேயும், கரையை அதிக்ரமிக்க மாட்டாதிறே கடல். அப்படியே ‘நீர் பெரியீர்’ என்னா, உம்மாலென்னை விஞ்சவொண்ணாது காணும். [ப்ரதிஜாநாமி]—நானிப்படி ப்ரதிஜ்ஞையைப்பண்ணுகிறேன். தே வீர—ஒரு கோழை முன்னேயோ நான் ப்ரதிஜ்ஞைபண்ணிற்று; ப்ரதிஜ்ஞை பண்ணினால் அத்தைத் தலைக்கட்டித்தரவல்ல ஆண்பிள்ளைத்தனமுடைய உம்முடைய முன்னேயன்றோ. [மா பூவம்]—இப்படிச்செய்திலேனாகில், உம்முடைய ஸன்னிதியில் வர்த்திக்கப்பெறாதொழிகையுமன்றிக்கே, உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப்பெறாதவனாகிறேன். [வீரலோகபாக்]—உம்மை முடிசூடி அநுபவிக்கப் பாரித்து அதுபெறாதே போன சக்ரவர்த்தி புக்க லோகம் புகுகிறேன்.

२०. ईर्ष्यारोषौ बहिष्कृत्य भुक्तशेषमिवोदकम् ।
नय मां वीर विस्रब्धः पापं मयि न विद्यते ॥

ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய புக்தசேஷ மிவோதகம்,
நய மாம் வீர விஸ்ரப்தஃ பாபம் மயி நவித்யதே. 27-8. 20

ஓ வீர! அஸூயை கோபம் ஆகிய இவைகளை, குடித்து மிச்சமுள்ள ஜலத்தைப்போல தள்ளிவிட்டு நம்பிக்கையுள்ளவராய் என்னை அழைத்துக்கொண்டுபோம். என்னிடத்தில் பாபம் கிடையாது.

பே—வ்யா. (பெரியதிருவந்தாதி. 9) [ஈர்ஷ்யாரோஷாவித்யாதி] “அதிலே துஷ்டஸத்வங்களும் ராக்ஷஸருமுண்டு; ஸுகுமாரையாயிருக்கிற உன்னைக் கொடுபோகவொண்ணாது” என்று பெருமாள் அருளிச்செய்ய, ப்ரணயரோஷத்தாலே பிராட்டி விண்ணப்பம் செய்கிறாள்—உம்முடைய பின்னே போந்தேனென்று எனக்கொரு உயர்த்தி உண்டாங்காட்டில் உமக்கு இத்தனை பொறாமையும் சீற்றமும் வேணுமோ?

'பிதாவினுடைய வசநத்தை அநுவர்த்தித்துக் காடேறப் போனார்' என்று உமக்கு ஒரு உயர்த்தி தேடுகிறவோபாதி உம்முடைய பின் போந்தேனென்று எனக்கொரு உயர்த்தி உண்டானலாகாதோ? [ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய புக்தசேஷமிவோதகம்]—வஸிஷ்ட்ட சிஷ்யராய் ஜ்ஞாநவான்களானால், த்யஜிக்கப்படுமவை த்யஜிக்கவேணும் காணும். [நய மாம்]—அஸூயையும் கோபமும் போனால் பரஸம்ருத்தியேயிறேயுள்ளது; ஆனபின்பு என்னைக் கொடுபோகீர். [வீர]—பரஸம்ருத்தி உண்டானால் கொடுபோகாதொழிகைக்கடி வீர்யத்தில் கொத்தையிறே; அதில்லையிறே உமக்கு. [விஸ்ரப்த꞉]—உம்மை நீரறியீர். என்னை விச்வஸித்துக் கொடுபோம். [பாபம் மயி ந வித்யதே]—உம்மைப் பிரிந்து ஜீவிக்கைக்கடியான பாபமெனக்கில்லை காணும். பாபமாவது க்லேசஹேதுவிறே. உம்மைப் பிரிந்து க்லேசப்படுமதில்லை காணுமெனக்கு.

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய]—பிறருயர்த்தி கண்டால் பொறுக்கவேண்டாவோ. நான் 'உம்மோடேகூடப்போர' என்று புறப்பட்டு நாலடியிட்டால், எனக்கு அத்தால் வரும் ஏற்றம் கண்டு பொறுக்க மாட்டாமையால் உண்டான கோபாஸூயைகளைப் போகடும். [புக்தசேஷமிவோதகம்]—இதுவுமப்படியாகாதே தான். ப்ரணயிகள் கோஷ்டியில் இங்ஙனே காணும் பரிமாற்றம். ப்ரணயிநிக்குண்டான தன்னேற்றம் தன்னதாயிருக்க வேண்டாவோ. [நய மாம் வீர]—என்னை அறியாதாப்போலே உம்மையும் அறிந்திலீராகில், நான் சொல்லக் கேளும். உமக்கு ஒரு குறைகளுமில்லை காணும்; என்னைக் கொடுபோகப் பாரும். [விஸ்ரப்த꞉]—நந்தாமை அறியாவிட்டால் ஆப்தர்வாயிலே கேட்டறிய வேணும் காணும். [பாபம் மயி ந வித்யதே]—போகடும்; இங்ஙனன்றாகில், நீர் என்னை இங்கே நிறுத்திப்போனால், நீர் மீண்டும் வருந்தனையும் தரித்திருக்கைக்கு வேண்டும் ஹேது எனக்கில்லை காணும். இப்படியிறே ப்ரணயரோஷம் தலையெடுத்தாலிருக்கும்படி.

२१. किं त्वाऽमन्यत वैदेहः पिता मे मिथिलाधिपः ।

राम ! जामातरं प्राप्य स्त्रियं पुरुषविग्रहम् ॥

கிந்த்வாமந்யத வைதேஹ꞉ பிதா மே மிதிலாதிப꞉,
ராம! ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம். 30-3. 21

ஓ ராமா! விதேஹ குலத்தில் பிறந்த மிதிலாநகரிக்கு அதிபதியான என் தகப்பனார் (ஜநகமஹாராஜன்) பெண்ணாய் (பெண்போல தைரியமில்லாத) புருஷசரீரமுள்ள உம்மை மணவாளனாக (மாப்பிள்ளையாக) அடைந்து என்ன நினைப்பர்.

திருவாய்மொழிப்பிள்ளை வ்யாக்யானம். (பெரியாழ்வார் திருமொழி. 2-1-2) [ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்]—"எங்கள் ஐயர் கேட்கில் 'பெண்ணுக்குப் பெண்ணைக் கொடுத்தோம்' என்று என்னை நிறுத்திப் போகில் போர வெறுத்துச் சொல்லுவர். அது என்னால் கேட்கப் போகாதென்று கிடீர் எனக்கு க்லேசம். நீர் நிறுத்திப்போனால் நிற்கும் பாபம் எனக்குமில்லை; நீர் தாமும் நிறுத்திப் போகிறவருமல்ல. ஆயிருக்க இந்த நெஞ்சொழிந்த பலவார்த்தை சொல்லி அலவலையாகவேணுமோ" என்றருளிறே. (அலவலை என்பது—அர்த்தகௌரவமும் அதிகாரி குணாகுணமும் பாராதே தன்னெஞ்சில் ப்ரதிபந்நமானவற்றைச் சொல்லுமவனிறே)

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிக்ஷேப ராகவம்] அவரோடுண்டான சிரபரிசயத்தாலும் கலவியாலும் 'என்னுடையவரன்றோ' என்கிற வேண்டப்பாட்டாலும் பெருமாளை மேலிட்டு வார்த்தை சொன்னாள். என் சொன்னாளென்னில்—[கிந்த்வாமந்யத வைதேஹ꞉ பிதா மே மிதிலாதிப꞉, ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்]—வாரீர், ஒருவனுக்காற்றவொருத்தி உண்டோ? என்னை

ஒருத்தியையும் நோக்கமாட்டாமையே வைத்துப் போகப் புகுகிறது. இதுதன்னை எங்கள் ஐயர் கேட்கில் போரவெறுப்பர். ஒரு பெண் பெண்டாட்டி ஆணுடை உடுத்து என் மகளைக் கைப்பிடித்துக் கொண்டு போனவித்தனையாகாதே என்றிராமே கடுகக் கொண்டு போகப் பாரும்.

२२. यस्त्वया सह स स्वर्गो निरयो यस्त्वया विना ।
इति जानन् परां प्रीतिं गच्छ राम मया सह ॥

யஸ்த்வயா ஸஹ ஸஸ்வர்கோ நிரயோ யஸ்த்வயாவிநா,
இதிஜாநந் பராம் ப்ரீதிம் கச்ச ராம ! மயாஸஹ. 30-18. 22

ஓ ராம ! உம்மோடுகூடி யாதொரு (வாஸம் உண்டோ) அது ஸ்வர்க்கம். உம்மைப் பிரிந்து யாதொரு (வாஸமுண்டோ) அது நரகம். என்கிற சிரேஷ்டமான ப்ரீதியை அறிந்தவரான நீர் என்னோடு கூடிப்போம் (புறப்படும்).

ஈடு. (தி—வாய். 2-10-7.) [யஸ்த்வயாஸஹஸஸ்வர்கঃ]—“காட்டிலே போமது துக்கம், படைவீட்டிலே இருக்குமது ஸுகம்” என்றுயிற்று பெருமாள் அருளிச்செய்தது. அங்ஙனல்ல—ஸுகதுக்கங்கள் வ்யக்திதோறும் வ்யவஸ்த்திதமாய் காணும் பது. யாதொன்று உம்மோடே பொருந்துகிறது; அது ஸுகமாகிறது. உம்மை ஒழிய படைவீட்டிலிருக்கு மிருப்பு துக்கமாகிறது. [இதிஜாநந்]—தந்தாமுக்கில்லாதவை, பிறர் பக்கலிலே கற்றறியவேணும் காணும். [பராம் ப்ரீதிம்]—உம்மைப்போலே நிறுத்தல்ல காணும் என் ப்ரீதியிருப்பது. நம்மில் உனக்கு ப்ரீதி பரையாகச் சொன்ணுய்; அதுக்கு நம்மைச் சொல்லுகிறதென்னென்ன—[கச்ச ராம மயாஸஹ]—அக்ரதஸ்தே கமிஷ்யாமி” என்று நான் புறப்பட்டபடியே என்னை முன்னே போக விட்டுப் பின்னே வரப் பாரும்.

२३. न देवलोकाक्रमणं नामरत्वमहं वृणे ।
ऐश्वर्यं वाऽपि लोकानां कामये न त्वया विना ॥

நதேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே,
ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே நத்வயாவிநா. 31-5. 23

உம்மை விட்டு பரமபதப்ராப்தியையும் கைவல்யத்தையும் உலகங்களுக்கெல்லாம் அதிபதியாயிருப்பதையும் விரும்பமாட்டேன்.

பெரி—வ்யா. (பெரிய திருவந்தாதி. 79) [நதேவலோகாக்ரமணம்]—பறைச்சேரியிலடியிடுமாபோலே ஸ்வர்க்கத்திலடியிடுகை வேண்டேனென்கிறுர். தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம் பதம்.—பகவத்விஷயத்திலே கைவைத்தவனுக்கு அந்தராயமாவது இந்த்ரனுயிருக்குமிருப்பிறே.

ஈடு. (தி—வாய். மஹாப்ரவேசம்) ‘வானவர்நாடு’ என்கிற பரமபதம், ஆத்மலாபம், லோகாநாம் ஐச்வர்யம் இவையித்தனையும் உமக்குப் புறம்பாய் வருமன்று வேண்டேன்.

२४. कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते ।

குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹவித்யதே. 31-24. 24

என்னை வேலைக்காரனுகச் செய்துகொள்ளும். இந்த விஷயத்தில் எதிரிடையானது இல்லை.

ஈடு. (தி—வாய். 2-9. ப்ரவேசம்) இளைய பெருமாள், ‘நில்’ என்ன [குருஷ்வ] என்றுரிறே. அந்வயத்தாலே தரிக்கக் கடவ வஸ்துவை வ்யதிரேகித்து நிற்கச் சொல்

லுகையாவது அழிக்கையிறே. 'குரு' என்னாதே 'குருஷ்வ' என்றாரிறே. ஆநண்டைய் ப்ரயோஜநத்துக்கு ஆர்தான் இருக்கிறார். உம்முடைய இழவுக்கு நீர் பதறுகிறுக்கிற தென்! [அநுசரம்]—பண்ணும் ப்ரகாரத்தை விதிக்கிறார். நீர்தாம் 'நில்' என்று அருளிச்செய்தது—நான் நிற்கச் சொல்லுகைக்கு யோக்யனும்படியிருக்கையிறே. உம்முடைய சாயையை 'நில்' என்று சொல்லிற்றிலீரே. சாயையோபாதி உம்மைப் பின்

२५. सृष्टस्त्वं वनवासाय स्वनुरक्तः सुहृज्जने ।
रामे प्रमादं मा कार्षीः पुत्र ! भ्रातरि गच्छति ॥

ஸ்ருஷ்டஸ்தவம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ்ஸுஹ்ருஜ்ஜநே,
ராமே ப்ரமாதம் மாகார்ஷீ: புத்ர! ப்ராதரி கச்சதி. 25

ஓ புத்ர! நீ மித்திரர்களிடத்தில் விசேஷமாகப்ரீதியுள்ளவன். காட்டில் வஸிப்பதற்காக உண்டுபண்ணப்பட்டாய். ஸஹோதரனை, ராமன் போகும்பொழுது தவறுதலைச் செய்துவிடாதே.

ஈடு. (தி—வாய். 3-3-10) [ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய]—ஐயர் சொல்லிற்றுச் செய்யவேண்டுகையாலே பெருமாள் காடேற எழுந்தருளாநின்றார். நானும் கூட சேவித்துப்போவேனென்ன, அவர் காட்டிலே எழுந்தருளாநிற்கப் படைவீட்டிலே இருக்கைக்கோ நாம் உம்மைப்பெற்றது? நீர் இப்படிச்செய்தீராகில் நான் உம்மைப் பெற்ற ப்ரயோஜனம் பெற்றேனாகிறேன். அவர்க்கு யாதொருபோது துணைவேண்டிற்று, அப்போது நீர் துணையாகைக்காகவன்றோ நானும்மைப்பெற்றது. [ஸ்வநுரக்தஸ் ஸுஹ்ருஜ்ஜநே]—நீர் ஸுஹ்ருஜ்ஜநத்தின் பக்கல் ஸ்வநுரக்தரல்லீரோ. ஆகையாலே எல்லார்க்கும் வேர்ப்பற்றான பெருமாளை நோக்கித் தாரீர். அன்றிக்கே, [ஸுஹ்ருஜ்ஜநே ராமே]—என்றாய் பெருமாள் பக்கல் பண்டே ஸ்நேஹித்தன்றோ நீர் இருப்பது. இப்போது 'போம்' என்று நான் உமக்குச் சொல்லவேண்டியிருந்ததோ. [ராமே ப்ரமாதம் மாகார்ஷீ:]—இப்படி யிருக்கிற உம்மை நியமிக்கவேண்டுவதொன்றுண்டு—ப்ரமாதத்தைப் பண்ணாதே கொள்ளும். ஏன்றான், ப்ரமாதம் என்னென்னில்—[புத்ர ப்ராதரி கச்சதி]—உங்கள் தமயனார் நடப்பர்கிடீர். அவர் நடையிலே நடை கொள்வர். அவர் நடையழகிலே கண்வைத்துக் காவற் சோர்வு படவிடாதே கொள்ளும்.

ஈடு. (தி—வாய். 3-9-9) [ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய]—"ஐயரையும் ஆய்ச்சியையும் அநுவர்த்தித்துப் பெருமாள் காடேற எழுந்தருளாநின்றார். நானும் அவரை அநுவர்த்தித்துப் போகிறேன்" என்று இளையபெருமாள் அறிவிக்க, உமக்கு முடிவேணுமென்று அபேக்ஷை உண்டாகில், முடி சூடுகைக்கு யோக்யனாயிருப்பானொருவன் வேணுமென்றதுக்கிடாக நோன்பு நோலேனோ, அவரை அநுவர்த்திக்கைக்காகவன்றோ நான் உம்மைப்பெற்றது. [ஸுஹ்ருஜ்ஜநே ராமே ஸ்வநுரக்த:]—உபதேசநிரபேக்ஷமாகப் பெருமாள் திருவடிகளுக்கு நீரே பரிவரிறே, நான் இன்றிருந்து சொல்லவேண்டுவதொன்றுண்டோ, அடிமையிலுண்டான ருசி செவிகண்ணுகக்கண்டடிமை செய்யுமவரிறே, அன்றிக்கே, ஸ்வநுரக்தஸ்ஸுஹ்ருஜ்ஜநே—'கருமுகை மாலையை வெய்யிலிலே இட்டாற்போலே, பெருமாள் தம் ஸௌகுமார்யம் பாராதே பித்ரநுவர்த்தநம் பண்ணிக் காட்டிலே போகாநின்றார். 'என்புகுகிறதோ' என்று வயிறெரிந்திருக்கிற ஸுஹ்ருஜ்ஜனங்களுக்கு நல்லீரிறே. ஸுஹ்ருஜ்ஜநமென்கிறது—திருத்தாயார் தொடக்கமான படை வீட்டிலுள்ளாரை. அவர்களுக்கு வேர்ப்பற்றான இவரை நோக்கித் தாரீரென்றும். ராமே—நடக்கை மிகையாம்படி, வெறுமனேயிருந்தாலும் ஆகர்ஷகமான வடிவழகையுடையவர். [ராமே ப்ரமாதம் மாகார்ஷீ:]—'பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:' என்று அவதாரகாலமே தொடங்கி அங்வயத்தில் தரித்து

வ்யதிரேகத்தில் தரியாதவர்க்கு இன்றாக ஒரு ப்ரமாதம் புகுருகைக்கு சங்கையில்லை யிறே. ஸம்பாவிதமானதொன்றைச் சொல்லுகிறாளாகவேணுமே ; [ப்ராதரி கச்சதி]— அவர் உம்முடைய முன்னே நடப்பர் கிடீர். அவ்வழகிலே கண்வைத்து, நீர் அதிகரித்ததுக்குச் சோர்வு பிறவாதபடி குறிக்கொள்ளும். அக்ரதஃ ப்ரயயௌ—நடைச் சக்ரவத்துப் பிடிக்கலாம்படி.

२६. रामं दशरथं विद्धि मां विद्धि जनकात्मजाम् ।
अयोध्यामटवीं विद्धि गच्छ तात यथासुखम् ॥

ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்,
அயோத்யாமடவீம் வித்தி கச்ச தாத ! யதாஸுகம். 40-9. 26

அப்பனே ! ராமனை தசரதனாக அறிந்துகொள். (நினைந்து நடந்துகொள்) ஸீதையை நானாக அறிந்துகொள். காட்டை அயோத்தியாக அறிந்துகொள். ஸுக மாக போ.

பே—வ்யா. (நான்முகன் திருவந்தாதி. 47) ரக்ஷணத்துக்கு உறுப்பாகையாலே திருவயோத்யையிலும் காட்டை விரும்பினாரிறே பெருமாள். அவர் விரும்பின காட்டை விரும்பிப்போகிற இளையபெருமாளை அக்காட்டோபாதி இப்படைவீட்டையும் நினையுங் கிடீரென்றாரிறே திருத்தாயார்—[ராமம் தசரதம் வித்தி]—'வத்த்யதாம் பத்த்யதாம்' என்று அருவராதே உங்கள் தமயனாரோபாதியாக உங்களையரையும் நினையுங்கிடீர். [மாம் வித்தி ஜநகாத்மஜாம்]—உங்கள் தமையனாருகந்த பிராட்டியோபாதி என்னையும் நினையுங்கிடீர் என்கிறார்.

२७. ये तु रामस्य सुहृदः सर्वे ते मूढचेतसः ।
शोकभारेण चाक्रान्ताः शयनं न जहुस्तदा ॥

யேது ராமஸ்ய ஸுஹ்ருதஃ ஸர்வே தே மூடசேதஸஃ,
சோகபாரேண சாக்ராந்தாஃ சயநம் நஜஹுஸ்ததா. 27

ராமனுக்கு ஸ்நேஹிதர்கள் எவர்களோ ; அவர்களெல்லாரும் அறிவழிந்த மனமுடையவர்களாய் அதிகதுக்கத்தால் ஆக்ரமிக்கப் பட்டவர்களாய் அப்பொழுது படுக்கையை விடவில்லை. (விட்டெழுந்திருக்கவில்லை)

பே—வ்யா. (நாச்சியார் திருமொழி. 3-1.) [யே து]—சக்ரவர்த்தி போக்கை அநுமதிபண்ணினான். ஸ்ரீ கௌஸல்யார் மங்களாசாஸநம் பண்ணிவிட்டார். அவ்வளவன்றிக்கே, பத்தொன்பதாம் பாஷையாய்த்து தோழன்மார்படி. [ராமஸ்ய ஸுஹ்ருதஃ]—தாய்தகப்பனுக்கு மறைத்தவையும் வெளியிடும்படி உட்புக்கவர்களிறே தோழன்மாராகிறார். தங்களைப் பேணாதே அவனுக்கே நன்மை எண்ணிப் போந்தவர்கள் படுகுலைப்பட்டார்களென்கிறது. [ஸர்வே தே]—ஒரு விபூதியாக ஸாம்யாபத்தி பெற்றிருக்குமாபோலே. [மூடசேதஸஃ]—ஸுஹ்ருத்துக்களாகில் எழுந்திருந்து காலைக்கட்டி மீளாதொழிவானென்னென்னில்—அறிவு கலந்தால் செய்யுமத்தை நெஞ்சில் வெளிச்செறிப்பில்லாதபோதும் செய்யப்போகாதிறே. அறிவு கெடுகைக்கு ஹேதுவென்னென்னில்—[சோகபாரேண சாக்ராந்தாஃ]—மலை அமுக்கினாப்போலே சோகம் அமுக்காநிற்கச் செய்வதென் ? [சயநம் நஜஹுஸ்ததா]—படுக்கையை விட்டெழுந்திருந்தார்களாகில் மீட்டுக் கொடு புகுந்த வாசியன்றோ. தாந்தாமே படுக்கையில் கிடந்து போந்தவர்களன்றே.

२८. पुत्रद्वयविहीनं तत् स्नुषया च विवर्जितम् ।
अपश्यद्भवनं राजा नष्टचन्द्रमिवाम्बरम् ॥

புத்ரத்வயவிஹீநம் தத் ஸ்நுஷயா ச விவர்ஜிதம்,
அபச்யத் பவநம் ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம். 42-30. 28

*அரசன் (தசரதன்) இரண்டு பிள்ளைகளுமில்லாததும் நாட்டுப் பெண்ணுமில்லாததுமான அந்த கிருஹத்தை சந்த்ரனில்லாத ஆகாசத்தைப்போலே கண்டான்.*

ஈடு. *(தி--வாய். 6-7. ப்ரவேசம்) [புத்ரத்வயவிஹீநம் தத்]—சக்ரவர்த்தி பிள்ளைகளிருவரையும் தேடிப் போர நொந்தான். [ஸ்நுஷயாச விவர்ஜிதம்]—'மீண்டு மிவ்விடத்தை விரும்புவர்கள்' என்று நினையாதபடி குழைசரக்கறுத்துக்கொண்டு போனபடி. [அபச்யத் பவநம் ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம்]—நிலவோடும் நக்ஷத்ர தாராகணங்களோடுங்கூட சந்த்ரன் குடிவாங்கின ஆகாசம்போலே கிடந்தது.*

२९. रामं मेऽनुगता दृष्टिरद्यापि न निवर्तते ।
न त्वा पश्यामि कौसल्ये साधु मा पाणिना स्पृश ॥

ராமம் மேநுகதா த்ருஷ்டிரத்யாபி ந நிவர்த்ததே,
ந த்வா பச்யாமி கௌஸல்யே ஸாது மா பாணிநா ஸ்ப்ருச. 42-34. 29

*ராமனைப் பின்தொடர்ந்து சென்ற என்கண் இன்னமும் திரும்பவில்லை. ஓ கௌஸலை! உன்னைக் காணுகிறேனில்லை. (உனது) கையினால் என்னை நன்றாகத் தொடு.*

பெரி—வ்யா. *(திருமாலை 17) [ராமம் மேநுகதா த்ருஷ்டி:]—கர்த்தாவை ஒழியவே கரணங்களுக்கே அந்வயவ்யதிரேகங்களிலே சோகஹர்ஷங்களுண்டாம்படியிறே விஷயஸ்வபாவமிருப்பது.*

பெ—வ்யா. *(நாச்சியார். 10-7) [ராமம் மே இத்யாதி]—கொண்ட வஸ்து இனி மீளப் புகுகிறதோ? [மே]—அக்கடலிலே இழியாதிருக்கமாட்டாதார்க்கு ஏறப்போமோ? [அத்யாபி ந நிவர்த்தே]—அவரைக் காணப்பெறுவிட்டால் அவரைப் பெற்ற ஸௌபாக்யமுடைய உன்னைக்காண்கைக்கு நல்ல காலமிறே; இவ்வளவிலும் மீளுகிறதில்லை. [நத்வா பச்யாமி கௌஸல்யே]—பெருமாள் முகத்திலே விழிக்கப் பெறுதே. கைகேயிமுகத்திலே விழித்ததால் வந்த தாபமெல்லாம் ஆறும்படி உன்னைக் காணவேணுமென்று ஆசைப்படாநின்றேன்; அது செய்யப்பெறுகிறிலேன். [ஸாது மா பாணிநா ஸ்ப்ருச]—இந்த்ரியங்கள் தான் நித்யாதீந்த்ரியவஸ்துக்களாகையாலே கார்யகல்ப்யமிறே. ரூபக்ரஹணுபாவத்தாலே சக்ஷுரிந்த்ரியம் குடிபோய்த்ததென்றிருந்தேன்; த்வகிந்த்ரியம் கிடந்ததோ இல்லையோ என்று ஸ்பர்சித்துப் பார்க்க வல்லையோ? ஸாது ஸ்ப்ருச—"கைகேயியோடே க்ருதஸங்கேதனுய்ப் பெருமானைக் காடேறப் போகவிட்டான். அவர் கை கழியப்போனுர்; இனி மீளார்' என்றறிந்த வாறே, பொய்யே கூத்தடிக்கிறுன்" என்றிராதே, 'இவனுக்கு இது ஸம்ஸர்க்கத்தாலே வந்தது. ஐயோ என் செய்வான். பாவி அகப்பட்டான்' என்னும் நெஞ்சோடேகூட என்னை ஸ்பர்சிக்க வல்லையே.*

பெ—வ்யா. *(திருநெடுந்தாண்டகம். 9) [மே த்ருஷ்டி: ராமம் அநுகதா]—என்னுடைய கண்ணானது அபிராமதையைப் பற்றிப் பெருமாள்பின்னே போயிற்று. ஆச்ரயத்தை விட்டு விஷயத்தின் பின்னே போயிற்றது. பிறந்தகத்தில் ஸம்பந்தம் விஷயம் பெறுமளவும்போலே காணும். மே த்ருஷ்டி: என்று கண்ணைக் கொண்டாடுகிறுன். நான் விச்லேஷத்தாலே தளர்ந்து தரைப்பட்டுக் கிடந்தேன்; கண் கூடப்*

போகப் பெற்றதிறே. கர்த்தாவாயிராதே கரணமாகப் பெற்றிலேனென்கிறுன். [அத்யாபி ந நிவர்த்ததே]—இவ்வளவிலும் மீண்டதில்லை; உன்னுடைய தர்சநத்தாலே ஆச்வஸிப்பிக்க யோக்யதை உண்டானதசையிலும் மீண்டதில்லை. [நத்வா பச்யாமி]—ஆச்ரயமான நீர் இங்கே யிருக்கக் கண் அவர்பின்னே போகையாவதெனனென்னில்—கார்யத்தைக்கொண்டு காரணத்தைக் கல்பித்தேனென்கிறுன். வந்து நிற்க உன்னைக் காணப்பெற்றிலேனே; அத்தாலே சொல்லுகிறேன். நித்யாநுமேயமாயிறே இந்த்ரியங்களிருப்பது. [கௌஸல்யே]—கைகேயியாயிட்டுக் காணுதொழிகிறேனன்றே. [ஸாது மா பாணிநா ஸ்ப்ருச]—என்னுடைய அதிக்ரமத்தை நினையாதே துர்க்கதியைப் பார்த்து 'ஐயோ' என்றிரங்கி ஸ்பர்சியாயென்கிறுன். "கண்ணுனது அவன் பின்னே போயிற்று. த்வகிந்த்ரியம் போயிற்ரே இல்லையோ என்று அறியும்படி உன் கையாலே தடவிப் பாராயென்கிறுன்" என்று அருளிச்செய்வர் பட்டர்.

ஈடு. (தி-வாய். 3-8-3) [ராமமித்யாதி]—கடல்கொண்ட வஸ்து மீளுமோ? அறுபதினுயிரமாண்டு மலடு நின்று பட்டினி விட்ட என்கண்கள் மீளுமோ? நல்லது கண்டு கால் தாழ்ந்தத்தை இனி 'நம்மது' என்று வழக்குப் பேசினுல் பசையுண்டோ? [அத்யாபி]—தன்னைக்கொண்டு கார்யங் கொள்ளவேண்டு மிற்றைக்கும் உதவுகிறதில்லை. அவரைக் காணுவிட்டால், அவரைப் பெற்ற ஸௌபாக்யமுடைய உன்னைக் கண்டு தரிக்க வேண்டு மிவ்வளவிலும் மீளுகிறதில்லை.

३०. कथं दाशरथौ भूमौ शयाने सह सीतया ।
शक्या निद्रा मया लब्धुं जीवितं वा सुखानि वा

கதம் தாசரதௌ பூமௌ சயாநே ஸஹஸீதயா,
சக்யா நித்ரா மயா லப்தும் ஜீவிதம் வா ஸுகாநி வா. 51-9. 30

தசரத புத்ரனுகிய ஸ்ரீராமன் ஸீதையோடு கூட தரையில் படுத்திருக்கும்போது என்னுல் தூக்கம் அடையப்பட எப்படி முடியும்? ஜீவிதமாவது ஸுகங்களாவது எப்படி அடையப்பட முடியும்?

பெ—வ்யா. (திருவிருத்தம். 30.) "நிசாமதிஷ்டத் பரிதோஸ்ய கேவலாம்" என்று பெருமாள் ஸ்ரீகுஹப்பெருமாள் பரிஸரத்தே கண் வளர்ந்தருளுகிற விடத்திலே ஜங்கமமான மதிள்போலே கையும் வில்லுமாய் இளையபெருமாள் திரிகிறபடியைக் கண்டு ஸ்ரீகுஹப்பெருமாள் "இயம் தாத ஸுகா சய்யா த்வதர்த்தமுபகல்பிதா" என்று உமக்குத் தகுதியாம்படி பெருமாள் திருவடிகளிலே தளிராலே படுக்கை படுத்தேன். கண்வளரீரென்ன—[கதம் தாசரதௌ பூமௌ சயாநே]—என்று அறுபதினுயிரம் ஸம்வத்ஸரம் மலடு நின்று பெற்ற பிள்ளை ஸுகுமாரமான வடிவைக்கொண்டு தரைக்கிடை கிடக்கக் கண் உறங்குமோ? [சயாநே ஸஹ ஸீதயா]—இவர் வஸிஷ்டசிஷ்யராகையாலே இக்கிடை கிடக்கவும் பொறுக்கும். படி நடந்து புறப்பட்டறியாத செல்வப் பெண்பிள்ளை தரைக்கிடை கிடப்பதே! [சக்யா நித்ரா மயா லப்தும்]—என் கண்தன்னில் நித்ரை குடி புகுகிறதில்லை காணும்.

ஈடு. (தி—வாய். 5-9-4) பெருமாளும் இளையபெருமாளும் பிராட்டியும் ச்ருங்கிபேரபுரத்திலே விட்டருளினவன்று ஸ்ரீகுஹப்பெருமாள் இளையபெருமாளைப் பார்த்து, "பெருமாளும் பிராட்டியும் கண்வளரா நின்றூர்கள். உமக்கீடாம்படி திருவடிகளிலே தலையாம்படி படுக்கை படுத்தேன். நாங்கள் காடராய் அங்கேயிங்கே திரிகையாலே எங்களுக்கு உறக்கம் வாராது. நீர் ராஜபுத்ரராகையால் ஸுகுமாரர். 'பரதாதிகள் வருவர்கள்' என்று அஞ்சவேண்டா. நானும் என் பரிகரங்களுமுண்டு. நீர் கண் வளர்ந்தருளும்" என்ன—[கதம் தாசரதௌ பூமௌ சயாநே ஸஹ ஸீதயா]—வாரீர்,

மஹாராஜனான சக்ரவர்த்தி அறுபதினாயிரமாண்டு அநபத்யனாய் வருந்திப் பெற்ற ஸுகுமாரனான பெருமாள் தரைக்கிடை கிடக்க, எனக்குக் கண்ணுறங்குமோ? அவர் தாம் வஸிஷ்டாதிகள் கீழே தரையிலே யிருந்துமறிவர். அதுவுமின்றிக்கேயிருக்கிற பிராட்டியோடே கூடக் கிடக்கிற கிடை பாரீர். ஆனபின்பு, எனக்கு உறக்கமுண்டாய் அது போகைக்கு அபிஸந்தி பண்ணியிருக்கிறேனல்லேன் காணும். உறக்கம் தேட்டமாய்க் கிடையாமையாலே யிருக்கிறேன்.

३१. न च सीता त्वया हीना न चाहमपि राघव ।
मुहूर्तमपि जीवावो जलान्मत्स्याविवोद्धृतौ ॥

ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ,
முகூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ. 53-31. 31

ஓ ராமா! ஸீதை உம்மோடு பிரிந்தவளாய் உயிருடனிருக்கமாட்டாள். நானும் (உம்மை விட்டுப் பிரிந்தவனாய்) ஜீவிக்கமாட்டேன். ஜீவிப்போமேயானால் ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட இருமீன்களைப்போலே கொஞ்சகாலந்தான் பிழைத்திருப்போம்.

பெ—வ்யா. (பெரியதிருமொழி. 4-9-1) [நசஸீதேத்யாதி]—தேவரை ஒழிந்தவன்று பிராட்டியும் உளளாகாள், அடியேனும் உளனாகேன். தேவரை ஒழிந்தவன்று முதலிலே ஜீவிக்குமதுதானில்லை. [அபிஜீவாவஃயதி ஜீவாவ:— முகூர்த்தம்]—ஒரு க்ஷணகாலம். [ஜலாந்மதஸ்யாவிவ]—ஜலத்தைப் பிரிந்த மத்ஸ்யம் ஜீவிப்பது அந்நீர் நசை அறுமளவுமிறே. அப்படியே நில் என்று சொன்ன வார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலேயும் உண்டென்று அறியுமளவும் காணும் நாங்கள் ஜீவிப்பது. இவருடைய ஸத்தை உண்டு உண்மை. அது நிலா தென்றல் சந்தனம் தண்ணீர்போலே பரார்த்தமாயாய்த்து இருப்பது. சேஷிக்கு அதிசயத்தைப் பண்ணியாய்த்து இவர்க்கு ஸ்வரூபஸித்தி.

ஈடு. (திருவாய்மொழி ப்ரவேசம்) [நசேத்யாதி]—உம்மை ஒழிந்தவன்று பிராட்டியுமில்லை, அடியேனுமில்லை. ஜீவித்தோமோ, முஹூர்த்தம். என்போலே என்றால்—ஜலாத் உத்த்ருதமான மத்ஸ்யம் நீர்நசை அறுமளவும் ஜீவிக்குமாப்போலே. நீர் நிறுத்திப் போகிறோமென்கிற வார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலே உண்டென்றறியுமளவும் காணும் நாங்கள் ஜீவிப்பதென்றாரிறே. அத்தலையில் நினைவாலே யிறே இத்தலை ஜீவிப்பது. 'எத்தேவர் வாலாட்டுமெவ்வாறு செய்கையுமப்போதொழியும்' என்கிறபடியே அவன் நினைவல்லாதவன்று இவையுமில்லையிறே.

३२. दानयज्ञविवाहेषु समाजेषु महत्सु च ।
न द्रक्ष्यामः पुनर्जातु धार्मिकं राममन्तरा ॥

தாநயஜ்ஞவிவாஹேஷு ஸமாஜேஷு மஹத்ஸு ச,
ந த்ரக்ஷ்யாமஃ புநர்ஜாது தார்மிகம் ராமமந்தரா. 5-13· 32

தானம் யாகம் விவாஹம் ஆகிய இவைகளிலும் பெரிய கூட்டங்களிலும் நடுவில் தர்மபுத்தியுள்ள ராமனை மறுபடியும் ஒருநாளும் காணப்போகிறோமல்லோம்.

ஈடு. (தி—வாய். 6-1-2) [தாநயஜ்ஞவிவாஹேஷு]—தானங்கள் பண்ணுமிடத்தே எழுந்தருளியிருப்பராயிற்று தேசத்திலே காலத்திலே ப்ராப்தவிஷயங்களிலே இடுவிக்கைக்காக. யாகங்களிலே எழுந்தருளியிருப்பராயிற்று, ந்யாயார்ஜிததநங்கொண்டு செய்விக்கைக்காகவும், சடங்குகளில் தப்பினவை உண்டாகில் அவை யெடுத்துக்கொடுக்கைக்காகவும். [விவாஹேஷு]—இரண்டு தலையையும் பொருந்தவிட்டு பொருந்தாதார்க்கு வேண்டுவன செய்து ஹோமம் பண்ணுவித்துத் தலைக் கட்டிக் கொடுக்கைக்காக, விவாஹம் பண்ணுமிடங்களிலெழுந்தருளி யிருப்பர். [ஸமாஜேஷு

மஹாத்ஸ॰]—தீர்க்க ஸத்ரங்களிலேயாதல், உத்ஸவங்களிலேயாதல். [ச]—யாவனொருவன் ஓரிடத்தே அத்ருஷ்ட கார்யங்கள்செய்யும், அங்கேயிருப்பரென்கிறது. [நத்ரக்ஷ்யாம: புநர்ஜாது]—அவரை அவ்வோ இடங்களிலே இருக்கக்காண்கிறிலோம். [தார்மிகம் ராமமந்தரா]—என்றுன் இவரிவ்விடங்களிலிருக்கிறதென்னில்—தர்மஸம்சயம் அறுத்துக் கொடுக்கைக்கும், அவை தப்பாமே அநுஷ்டிப்பிக்கைக்குமாக. இப்படியே யிறே அவன் படிகள்.

३३. मम त्वश्वा निवृत्तस्य न प्रावर्तन्त वर्त्मनि ।

उष्णमश्रु विमुञ्चन्तो रामे संप्रस्थिते वनम् ॥

மம த்வச்வா நிவ்ருத்தஸ்ய ந ப்ராவர்த்தந்த வர்த்மநி,

உஷ்ணமச்ரு விமுஞ்சந்தோ ராமே ஸம்ப்ரஸ்திதே வநம். 59-7. 33

ராமன் காட்டைக்குறித்து புறப்பட்டுப்போனபோது திரும்பின என்னுடைய வழியிலே குதிரைகள் செல்லவில்லை.

பெ. வ்யா. (நாச்சியார் 12-4) [மம]—அச்வஹ்ருதயம் அறிகைக்குத் தன்னைத் தான் மதித்தபடியாலே 'மம' என்கிறுன். [து]—இற்றைக்கு முன்பின்றிக்கே, இற்றைக்கு உள்ளதொரு விசேஷமாய்த்து இது. [அச்வா:]—என் கருத்தாலே நடந்து போனவை. [நிவ்ருத்தஸ்ய]—பெருமாளை எழுந்தருளிவித்துக்கொடுபோகிறபோது போய்த்தின. [நப்ராவர்த்தந்த வர்த்மநி]—வழிசெய்து கிடக்கிற பெருவழியை விட்டுக் காடுபோகத் தொடங்கிற்றின.

३४. गुहेन सार्धं तत्रैव स्थितोऽस्मि दिवसान् बहून् ।

आशया यदि मां रामः पुनः शब्दापयेदिति ॥

குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்திதோஸ்மி திவஸாந் பஹூந்,

ஆசயா யதி மாம் ராம: புநச்சப்தாபயேதிதி. 59-7. 34

ராமன் என்னை மறுபடியும் கூப்பிட்டாலோ என்கிற ஆசையால் அங்கேயே குஹனோடுகூட வெகு நாள் வரையில் வஸித்துக்கொண்டிருந்தேன்.

ஈடு. (தி—வாய். 3-8 ப்ரவேசம்) [குஹேநஸார்த்தமித்யாதி]—ஸ்ரீகுஹப்பெருமாளோடேகூட பெருமாளைப் பிரிந்தவிடத்தினின்றும் கால் வாங்கமாட்டாதே நின்றுனயிற்று ஸு॰மந்த்ரன். அங்கு நின்றது ஒன்றிரண்டுநாளாயிருக்கச் செய்தே [பஹூந்] என்னு நின்றதாயிற்று பிரிவாலே காலம் நெடுகினபடி. 'ஸ்ரீகுஹப்பெருமாளேடே நிற்க, காலம் நெடுகவானென்' என்று மிளகாழ்வானைக் கேட்க 'ஸ்மாரகஸந்நிதியில் ஆற்றுமை இரட்டிக்குமிறே' என்றருளிச்செய்தாராம். 'மேகக்குழாங்கள்காள் காட்டேன்மின்னும் முருவென்னுயிர்க்கது காலன்' என்றுரிறே.

३५. विषये ते महाराज रामव्यसनकर्शिताः ।

अपि वृक्षाः परिम्लानाः सपुष्पाङ्कुरकोरकाः ।

उपतप्तोदका नद्यः पल्वलानि सरांसि च ।

परिशुष्कपलाशानि वनान्युपवनानि च ॥

விஷயே தே மஹாராஜ ராமவ்யஸநகர்சிதா:,
அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குரகோரகா:.
உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸிச,
பரிசுஷ்கபலாசாநி வநாந்யுபவநாநி ச. 59-8, 9. 35

ஓ மஹாராஜரே! உம்முடைய தேசத்தில் ராமனைப் பிரிந்த துக்கத்தால் இலைத் தலைகளான மரங்களும் பூ இளந்தளிர் மொட்டு ஆகிய இவைகளுடன் கூடி வாடி விட்டன. ஆறுகள் கொதிக்கின்ற ஜலமுடையவைகளாக (ஆயின.) சிறுகுட்டைகளும் பெரியகுளங்களும் (கொதிக்கின்ற நீருடையவைகளாய் ஆயின) காடுகளும் தோட்டங் களும் உலர்ந்த இலையுள்ளவைகளாக (ஆயின).

ஈடு. (தி—வாய். 2-1-1) [உபதப்தோதகா இத்யாதி]—ஆறுகளோடு சிறு குழிகளோடு பெருங்குழிகளோடு வாசியற, கரையருகும் சென்று கிட்டவொண்ணாத படி ராம விரஹத்தாலே கொதித்ததிறே. [பரிசுஷ்கபலாசாநீத்யாதி]—சிறுகாட்டோடு பெருங்காட்டோடு வாசியற, விரஹாக்நி கொளுத்திற்று.

ஈடு. (தி—வாய். 6-1-10) [உபதப்தோதகா நத்ய:]—'தாபார்த்தனுக்கு நீரிலே விழுந்தால் தாபமாறும்' என்னுமிவ்வாஸனையைக்கொண்டு 'ராமவிச்லேஷத் துக்கும் இது பரிஹாரமோ' என்று ஜலத்திலே விழுவதாகக் கொண்டு செல்ல, கரை யிலுங்கூடக் கிட்டவரிதாயிருந்தது. 'நிலைநீர்கள் தான் குளிரவற்றோ' என்று பார்த் தார்கள்; அவையுமப்படியேயாயிருந்தன. [பல்வலாநி ஸராம்ஸிச]—வ்ருக்ஷங்களோடு வஸிஷ்டாதிகளோடு வாசியற அழியுமாப்போலே.

ஈடு. (தி—வாய். 7-5-1) சேதநரெல்லாம் கண்ணநீர் விழவிட்டு நிற்கக் கழுத்து மட்டு நீரிலே நிற்கிற மரங்களிறே வாடிநின்றது—[அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: உபதப் தோதகா நத்ய:]—நீரோடு, அந்நீரில் விழுகிற ஆறோடு வாசியற்றபடி. உபதப்தமாகை யாவது—கரையருகும் கிட்ட வொண்ணாதபடியாயிருக்கை. [பல்வலாநி ஸராம்ஸிச] இதில், சிறுமை பெருமை என்றொரு வாசியில்லை, 'வநாந்யுபவநாநி ச' போலே.

३६. अतो नु किं दुःखतरं सोऽहमिक्ष्वाकुनन्दनम् ।
इमामवस्थामापन्नो नेह पश्यामि राघवम् ॥

அதோநு கிம் து:க்கதரம் ஸோஹமிக்ஷ்வாகுநந்தநம்,
இமாமவஸ்த்தாமாபந்நோ நேஹ பச்யாமி ராகவம். 59-30. 36

இந்த தசையை அடைந்த அந்த நான் இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்த ராமனை இங்கு காண்கிறேனில்லை. இதனைக்காட்டிலும் மிக்க துக்ககரமான விஷயம் (வேறு) ஏது?

ஈடு. (தி—வாய். 9-7-9) [இமாமவஸ்த்தாமித்யாதி]—ஆற்றாமை எல்லாம் சொல்லுவிக்குமிறே. "எனக்கு ஓராற்றாமைகள் உண்டானவளவில் கிட்டிநின்று முகங் காட்டி ஈரக்கையாலே தடவி நோக்குகைக்கன்றோ தம்மைப் பெற்றது. தம்மைப் பிரிந்து நோவுபடுகிற இற்றைக்கு மேற்பட ஆற்றாமை இல்லையிறே எனக்கு. இவ்வள வில் நான் பெருமானைக் காண்கிறிலேன்" என்றானிறே.

ஈடு. (தி—வாய். 6-7-6) [அதோநு கிமித்யாதி]—"நான் நெடுங்காலங்கூடி வருந்தித் தம்மைப் பெற்றது, தம்மைப் பிரிந்து நான் இவ்வவஸ்த்தையை ப்ராபித்த இற்றைக்கு அன்றோ. இன்று தம்மை நான் காணுதொழிவதே" என்றானிறே.

३७. गजं वा वीक्ष्य सिंहं वा व्याघ्रं वा वनमाश्रिता ।
नाहारयति संत्रासं बाहू रामस्य संश्रिता ॥

கஜம்வா வீக்ஷ்ய ஸிம்ஹம்வா வ்யாக்ரம் வா வநமாச்ரிதா,
நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா. 60-20. 37

வருமே யன்றிக்கே, பலர் கண்ணநீர் கண்டால் மீளாரோ ' என்றுமத்தைப்பற்ற, வினை செய்யப் போவாரைப்போலே, ஆனைகுதிரைகளையகப்படத் திரட்டிக்கொடுபோனு ளுயிற்று. பிரிவாற்றுமைக்குத தன்னிற்குறைந்தாரொருவருமில்லையாயிற்று பரிகரத் தில். [சிரஸாயாசிதோ மயா]—நான் தலையாலே இரந்த கார்யத்தையும் மறுப்பரோ. ' சிரஸாயாசத ஸ்தஸ்ய வசநம் நக்ருதம்மயா ' என்றுரிறே அவரும். ' அவனும் தனக் கடுக்கும்படி செய்தான். நாமும் நமக்கடுக்கும்படி செய்தோம் ' என்றுரிறே. ' அவன் தலையாலே இரந்த கார்யத்தை மறுத்துப் போந்தோம் ' என்றிறே அவர் திருவுள்ளம் புண்பட்டது. [ப்ராதுஃ]—' ப்ராதா ஸ்வாமூர்த்திராத்மநஃ ' என்கிறபடியே அவர் தம் திருமேனியாகவன்றே என்னை நினைத்திருப்பது.

५१. नन्दन्त्युदित आदित्ये नन्दन्त्यस्तमिते रवौ ।

आत्मनो नावबुध्यन्ते मनुष्या जीवितक्षयम् ॥

நந்தந்த்யுத ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ,

ஆத்மநோ நாவபுத்த்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம். 105-24. 51

மனிதர் ஸூர்யன் உதித்தபோது ஸந்தோஷிக்கிருர்கள். ஸூர்யன் அஸ்த மித்தபோது கொண்டாடுகிருர்கள். தங்களுடைய ஆயுஸ்ஸு குறைவதை அறிகிருர்க ளில்லை.

பே—வ்யா. (பெரியதிருமொழி 6-2-5) அஸ்தமித்தவாறே போகோபகரணங் களைக்கொண்டு அபிமதவிஷயங்களைப் பிறர்காணுதபடி புஜிக்கைக்குக் காலம் வந்த தென்று உகவாநிற்பர்கள். உதித்தவாறே, அதுக்கு த்ரவ்யார்ஜநகாலம் வந்ததென்று ஹ்ருஷ்டராகாநிற்பர்கள். சாலிலெடுத்த நீர்போலே தங்கள் ஆயுஸ்ஸு கழிகிறபடியை அறிந்து நடுவுபட்ட நாளிலே அவ்வருகில் எளிவரவு வாராதபடி பரிஹரித்துக்கொள்ள வேணுமென்றிருப்பார் ஒருவருமில்லை.

५२. पतिसंयोगसुलभं वयो दृष्ट्वा च मे पिता ।

चिन्तामभ्यगमद्दीनो वित्तनाशादिवाधनः ॥

பதிஸம்யோகஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா,

சிந்தாமப்யகமத் தீநோ வித்தநாசாதிவாதநஃ. 118-34. 52

என்னுடைய தகப்பனுர் பர்த்தாவுடன் கூடத்தகுதியான பிராயத்தைக் கண்டும் பணத்தை இழந்தமையால் தரித்திரன்போல மங்கினவராய் கவலையை அடைந்தார்.

ஈடு. 2-1-1. ஒரு உபக்நத்திலே கொண்டுபோய்ச் சேர்த்து நோக்கில் நோக்கலாய், இல்லையாகில் கிடையாதபடியான பருவமாயிராநின்றது. இவளுக்கீடாயிருப்பானெருவனைப்பெற்று அவன் கையில் காட்டிக்கொடுத்தோமாகவல்லோமே என்று எங்கள் ஐயர் சிந்தார்ணவகதராணுரென்றுளிறே பிராட்டி.

அயோத்யாகாண்டம் முற்றிற்று.

ஸ்ரீ:

# ஆரண்யகாண்டம்

१. रूपसंहननं लक्ष्मीं सौकुमार्यं सुवेषताम् ।
दद्दृशुर्विस्मिताकारा रामस्य वनवासिनः ॥

ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம்,
தத்ருசுர்விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிநः. 1-12. 1

*காட்டில் வஸிக்கின்ற ரிஷிகள், ஆச்சர்யபட்டவர்களாய் ராமனுடைய உருவத்தின் அமைப்பையும் சோபையையும் மிருதுத்தன்மையையும் அழகிய வேஷத்தையும் பார்த்தார்கள்.*

பே—வ்யா. *(திருவிருத்தம். 43) [ரூபஸம்ஹநநம்]—ஸம்ஸ்தானத்தை. [லக்ஷ்மீம்]—ஸமுதாயசோபை இருந்தபடி. [ஸௌகுமார்யம்]—பிராட்டியும் இளைய பெருமாளும் அடுத்துப் பார்க்கவும் பொறுதிருக்கை. [ஸுவேஷதாம்]—தாபஸவேஷமிருந்தபடி. [தத்ருசுர்விஸ்மிதாகாராஃ]—விஸ்மிதாந்தஃகரணராய்க் கொண்டு கண்டார்கள். [ராமஸ்ய வநவாஸிநஃ]—அயோத்யாவாஸிகளுக்குக் கிடையாதது கிடீர் நெடுங்காலம் சரகிலை தின்றுகிடந்தபலம் பெற்றார்களென்றான் ரிஷி.*

*[ஈடு 8-1-2-லும் இப்படியே இருக்கிறது.]*

२. ते वयं भवता रक्ष्या भवद्विषयवासिनः ।

தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிநः. 1-19. 2

*உம்முடைய தேசத்தில் வஸிக்கின்ற அந்த நாங்கள் உம்மால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள்.*

ஈடு. *(தி—வாய். 3-5-2) [தே வயம் பவதா ரக்ஷ்யாஃ]—ஆர்த்தரான நாங்கள் ஆர்த்தரக்ஷணத்திலே அதிகரித்த தேவர்க்கு ரக்ஷ்யர். உங்களை நமக்கு ரக்ஷிக்கவேண்டுகிறதென்? பண்ணின உபாஸனங்கொண்டு வளைக்கிறீகளோ என்ன, அது சொல்லில் தேவர்க்குக் கண்ணழிவு சொல்லிவிடலாம். [பவத்விஷயவாஸிநஃ]—தேவருடைய விஷயத்திலே நாங்கள் கிடக்கிறமையுண்டே, இதில்சொல்லலாம் கண்ணழிவில்லையிறே. 'நாம் காக்கிற எல்லைக்குப் புறம்பு காண்' என்று சொல்லலாமாகில் சொல்லிக்காணும். 'இவற்றின் புறத்தாளென்றெண்ணோ' என்னக்கடவதிறே.*

३. रक्षितव्यास्त्वया शश्वद्गर्भभूतास्तपोधनाः ।

ரக்ஷிதவ்யாஸ்த்வயா சச்வத் கர்ப்பபூதாஸ்தபோதநாஃ. 1-20. 3

*குழந்தைகளான ரிஷிகள் உம்மால் எப்போதும் காப்பாற்றப்படவேண்டியவர்கள்.*

பே—வ்யா. *(பெரி—திரு. 11-5-1) எங்களுடைய ரக்ஷணம் உமக்குத் தவிரவொண்ணாதது. உமக்குத்தலையோட்டில் பொறி. உங்கள் தபஸ்ஸும் பிரபாவமும் கிடக்க நான் ரக்ஷிக்கவேண்டுவதென் என்ன—[கர்ப்பபூதாஃ]—எங்களுக்குக்கை முதலுண்டானாலும் ரக்ஷணத்தில் ப்ராப்தியில்லை காணும், ராஜமஹிஷியானவள் சக்தியுண்டென்று, அவகாதம் பண்ணாளிறே. ஜநநி தானே கைச்சதும் புளித்ததும் தவிர்ந்து நோக்குமித்தனையன்றோ. இவ்வாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்ந்தாலும் உம்மைக் குறித்து நித்யஸ்தநந்தயமாய காணுமிருப்பது. இப்படிச்சொன்ன வார்த்தைக்கு ஒரு மறுமாற்றமில்லாமையிறே—'ப்ரஸீதந்து' என்றது.*

४. प्रसीदन्तु भवन्तो मे ह्रीरेषा हि ममातुला ।
यदीदृशैरहं विप्रैरुपस्थेयैरुपस्थित: ॥

ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா,
யதீத்ருசைரஹம் விப்ரைருபஸ்த்தேயைருபஸ்த்திதஃ. 10-9. 4

*நீங்கள் என்பொருட்டு கிருபைபண்ணுவீர்களாக. நான்போய் அணுகவேண்டிய இப்படிப்பட்ட பிராமணர்களால் (நான்) அணுகப்பட்டேனென்பது யாதொன்றுண்டோ இந்த வெட்கமே எனக்கு நிகரற்றது.*

பே—வ்யா. *(பெரியதிருமொழி. 11-5-1)* '*பூர்ணராயிருக்கிற நீங்கள் குறைவாளரளவில் இரங்குமத்தனையன்றோ. நாங்களும் பிறர் கையிலே நோவுபட்டு நிற்கையாலே குறைவாளரன்றோ' என்ன, உங்களுக்கு நோவு வந்தது உங்களாலன்றே. நோவு பட்ட உங்களளவல்ல நோவுக்கு ஹேதுபூதரான நம்முடைய லஜ்ஜை. [யதீத்ருசை ரஹம் விப்ரைஃ]—ஈத்ருசமான விலக்ஷணபுத்தியையுடையவர்களாலே. 'நெருப்பைக்குளிருக' என்ற வாயைக்கொண்டு ராவணனை 'நஷ்டமாவாய்' என்று சொல்ல மாட்டாமையன்றிறே இருந்தது. நம்முடைய ரக்ஷணத்திலே நமக்கு ப்ராப்தியில்லை. 'தத்தஸ்ய' என்றிருந்தவனைப்போலேயிறே இவர்களும் சிலர். நோவுபட்டால் அங்கே வந்து அவர்கள் குறைதீர்க்கை ரக்ஷணத்துக்கு ஸ்வரூபமாயிருக்க, நோவுபடுகிறோளும் நீங்களாய் பட்டகுறை அறிவிப்பிகோளும் நீங்களாம்படி நாம் பிற்பாடராளேமென்பது யாதென்று.*

५. एवमुक्तस्तु रामेण लक्ष्मण: संयताञ्जलि: । सीतासमक्षं काकुत्स्थमिदं वचनमब्रवीत् ॥
परवानस्मि काकुत्स्थ त्वयि वर्षशतं स्थिते । स्वयं तु रुचिरे देशे क्रियतामिति मां वद ॥

ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஃ ஸம்யதாஞ்ஜலிஃ,
ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தமிதம் வசநமப்ரவீத்,
பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்த்திதே,
ஸ்வயம்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத. 15-6, 7. 5

*ராமனுல் இப்படி சொல்லப்பட்ட லக்ஷ்மணனே கைகூப்பினவனுய், ஸீதையின் முன்னிலையில் ராமனை (குறித்து) இந்தவார்த்தையைச் சொன்னுன். ஓ ராமா! தேவரீர் நூறுவருஷகாலம் இங்குவஸித்தபோதிலும் தேவரீருக்கு அடியனுக இருக்கிறேன். பிடித்த இடத்தில் (பர்ணசாலை) கட்டப்படட்டும் என்று தாமாகவே என்னை சொல்லுவீராக.*

ஈடு. *(2-9. ப்ரவேசம்.) 'நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச் சமையும்' என்ன, 'நம் தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக்கைவிட்டார்' என்று வேறுபட்டார். [ஏவமுக்தஸ்து ராமேண]—'இதுக்கு முன்பெல்லாம் நம்குறையாலே இழந்தோம் என்றிருந்தோம்; இவர்தாமே நம் ஸ்வரூபமழியக்காரியம் பார்த்தார்; இனி நம் ஸ்வரூபம் என்ளுென்றுண்டோ' என்று வேறுபட்டார். [லக்ஷ்மணஃ]—பாரதந்த்ர்யத்தை நிரூபகமாகவுடையவர். [ஸம்யதாஞ்ஜலிஃ]—நாம் நம்ஸ்வரூபத்தை அழித்துக்கொண்டவன்று நோக்குகையன்றிக்கே, சேஷிதானே அழித்தவன்றும் ஸ்வரூபத்தைத் தரவற்றுயிற்று அஞ்ஜலி; ஸர்வாபிமதஸாதநமாயிற்று. [ஸீதாஸமக்ஷம்]—பண்ணின அஞ்ஜலிக்கு அங்யபரதை பாவிக்கவொண்ணுதவள் ஸன்னிதியிலே. [காகுத்ஸ்த்தம்]—பிராட்டிஸந்நிதியும் மிகையாம்படியான குடியிற்பிறப்பையுடையவரை. [இதம் வசந*

மப்ரவீத்]—'இவ்வார்த்தையைச் சொல்லுவானே' என்று கொண்டாடுகிறார் ரிஷி. [பரவாநஸ்மி]—உம்முடைய அஸ்மிதை போலல்ல காணும் என்னுடைய அஸ்மிதை.

६. इह वत्स्यामि सौमित्रे सार्धमेतेन पक्षिणा ।

இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா. 15-18. 6

ஓ லக்ஷ்மணா இந்த விடத்தில் இந்த ஜடாயுவோடு கூட வஸிக்கப்போகிறேன்.

ஈடு. (தி. வாய் 9-4-6.) ஐயர் கண்வட்டத்திலே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம். நடுவிலாய்ச்சிக்கு ப்ரியஞ்செய்யவேண்டுகையாலே அது செய்யப் பெற்றிலோம். இனி இவர் சிறகின்கீழேயாகிலும் வர்த்திக்கப் பாராநின்றோமென்றாரிறே.

ஈடு. (தி-வாய். 10 8-6) ஐயர் கோற்கீழே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம். நடுவிலாய்ச்சிக்கு ப்ரியமில்லாமையாலே போந்தோம். இனிமேலுள்ள நாள் இவர் சிறகின் கீழே வர்த்திக்கப் பாராநின்றோமென்றானிறே.

७. भावज्ञेन कृतज्ञेन धर्मज्ञेन च लक्ष्मण ।

त्वया पुत्रेण धर्मात्मा न संवृत्तः पिता मम ॥

பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந ச லக்ஷ்மண !
த்வயா புத்ரேண தர்மாத்மா நஸம்வ்ருத்தஃ பிதா மம. 15-28. 7

ஓ லக்ஷ்மணா! குறிப்பறிபவனும் நன்றியுள்ளவனும் தர்மம் தெரிந்தவனுமான பிள்ளையாகிய உன்னால் (நீ பிள்ளையாயிருப்பதால்) தர்ம புத்தியுள்ள என் தகப்பனார் இறக்கவில்லை.

பெ—வ்யா. (பெரிய திருமொழி. 1-2-6) [பாவஜ்ஞேந]—'க்ரியதாம்' என்று சொல்லுகிறவரிறே இளையபெருமாள். இப்படிச் செய்யவல்ல நீர் நம்மைக்கேட்டதென்னென்கிறார். பர்ணசாலையைச் சமைத்தவநந்தரம் சொல்லுகிற வார்த்தையிறே. [பாவஜ்ஞேந]—அல்லாதவை சொன்னாலும், தாமும் பிராட்டியுமாய் ஏகாந்தமாயிருக்குமிடங்கள் சமைக்கும்படி இளையபெருமாளுக்குப் பெருமாள் அருளிச்செய்யாரிறே. நெஞ்சாலே நினைக்குமித்தனையிறே. இந்நினைவறிந்து செய்தார். [க்ருதஜ்ஞேந]—அறுபதினாயிரமாண்டு ஜீவித்த சக்ரவர்த்தி நெடுநாள் மலடுநின்று பிள்ளை பெற்றவனாகையாலே, 'இவர் என் நினைத்திருக்கிறாரோ' என்று நினைவை ஆராய்ந்தும், 'இவர்க்கு எத்தாலே என்ன குறை வருகிறதோ' என்று பொருந்துமிடங்கள் பார்த்தும் அவன் செய்து போருமடைவு அறிவராயிற்று. [தர்மஜ்ஞேந]—நினைவறிந்தாதாலும், செய்து போருமடைவு அறிந்தாலும், தானும் ராஜபுத்திரனானபின்பு 'எனக்கும் ஓரிருப்பிடம் வேண்டாவோ' என்றிருக்குமவனுக்கு இது செய்யவொண்ணாதிறே. அங்ஙனன்றிக்கே 'அத்தலையில் தாதர்த்த்யமே நமக்கு ஸ்வரூபமானபின்பு பின்னை அத்தலைக்குறுப்பாகச் செய்து போருமதே நமக்கு வகுத்தது' என்று அத்தலைக்காகச் செய்யுமதனையே தமக்கு கர்த்தவ்ய மென்றிருப்பர். [த்வயேத்யாதி]—தாமுள்ளவன்று தாமுளராய், தாம் போனவன்றைக்கும் உம்மை வைத்துப் போனாரே என்கிறார். [புத்ரேண]—'புத்' என்று ஒரு நரக விசேஷமாய், அதில் புகாதபடி நோக்கும் என்றாயிற்று புத்ரனென்று பேராகிறது. ஐயர்க்கு நம்முடைய அபிமத ஸித்தியின்றிக்கே யொழிகைதனக்கு மேற்பட நிரயமில்லையிறே. அவர்க்கு அது வராதபடி நோக்குகிறீர் நீரிறே. [தர்மாத்மா]—சக்ரவர்த்தி ப்ரஸ்துதனானவாறே நம் ஐயரை ஒப்பாருண்டோ. அவருமொருவரே! தாமிருந்தநாள் தாம் வேண்டுவன எனக்குச் செய்து

தாம் போனவன்று நமக்கு வேண்டுவன செய்கைக்கு உம்மைப் பெற்றுத் தண்ணீர்ப்பந்தல் வைத்துப்போவதே! [மம]—இருவருக்கும் பிதாவானமை ஒத்திருக்கச் செய்தே 'மம' என்கிருராயிற்று. அவர் நமக்குச் செய்யுமவை நீரிருந்து செய்கையாலே நாம் அவரை இழந்திலோம். நீரிழந்தீராகிலித்தனையிறே. 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்கிறவிடத்திலே சேஷியுடைய வ்யாபாரமும் புகாதாகில் 'ஸர்வம்' என்னவொண்ணு

ஈடு. (தி—வாய். 5-4-8) [பாவஜ்ஞேந]—ஸ்ரீபர்ணசாலை சமைக்கும்போது இளையபெருமாள், ரிஷிகளுக்கு ஓலக்கம் கொடுத்திருக்குமிடம் பண்ணும்படியும், அக்நிசாலை சமைக்குமிடமும் இவையிறே பெருமாளருளிச் செய்வது. பிராட்டியும் தானும் ஏகாந்தமாக விருக்கும்படிகள் இவருடன் தாம் அருளிச்செய்யாரே. அவையடையக் கருத்தறிந்து செய்வாராயிற்று. அவர் தூது செய் கண்கள் கொண்டு ஒன்று பேசினுல், இவரும் செவிக் கண்ணுகக்கேட்டுச் சமைக்குமித்தனை. [க்ருதஜ்ஞேந]—வருந்தி இவர் நினைவைப் பின் சென்றமாத்ரமன்றிக்கே, அறுபதினுயிரமாண்டு மலடுநின்று பிள்ளைபெற்ற சக்ரவர்த்தி பெருமாளுக்குப் பொருந்துமிடம் பார்த்து மாளிகை சமைத்து முன்பு செய்துபோந்த கட்டளைகளறிந்து அப்படியே செய்தாராயிற்று. [தர்மஜ்ஞேந]— இதுதான் தம்பியாயிருந்து இப்படிச்செய்தார் என்று குணமாகையன்றிக்கே, இது கர்த்தவ்யம் என்று செய்தார்; 'உஜ்ஜீவந ஹேதுவான அநுஷ்டேய தர்மமிது' என்று செய்தார். [த்வயா புத்ரேண]—போன ஐயர்க்கு நிரயநிஸ்தாரகர் நீரேயிறே. 'நாமுள்ளதனையும் இவருடைய ரக்ஷணமிப்படி செல்லுகிறது. நமக்குப் பின்பு இவர்க்கு ரக்ஷகர் ஆர், என் செய்யக்கடவது' என்று இதுவேயாயிற்று அவர்க்கு எப்போதும நெஞ்சாரல். அவர் செய்யுமவற்றை நீர் செய்கையாலே அவர்க்கு துக்க நிவர்த்தகர் நீரேயிறே. [தர்மாத்மா]—ஐயருமொருவரே! தான் பரமதார்மிகர் கிடீர். தாமிருந்த நாளும் நமக்கு வேண்டும் ரக்ஷணங்கள் பண்ணி, தாம்போன நாளைக்கும் தண்ணீர்ப்பந்தல் வைப்பாரோபாதியும் வைத்துப்போவதே! [நஸம்வ்ருத்தஃ பிதா மம]—நாம் ஐயரை இழந்திலோமிறே, நீரிழந்தீராகிலித்தனையிறே.

८. अत्यन्तसुखसंवृद्धः सुकुमारः सुखोचितः ।
कथं न्वपररात्रेषु सरयूमवगाहते ॥

அத்யந்தஸுகஸம்வ்ருத்தஃ ஸுகுமாரஃ ஸுகோசிதஃ,
கதம் ந்வபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே. 16-30. 8

மிக்க ஸுகத்துடன் வளர்ந்தவரும் மெல்லிய சரீரமுடையவரும் ஸுகத்திற்கே தகுதியுள்ளவருமான (பரதர்) ராத்திரியின் பிற்பகுதிகளில் எப்படி ஸரயூ நதியை (நதியில்) ஸ்நானம் பண்ணுகிருரோ?

பெ—வ்யா. (திருவிருத்தம். 24) [அத்யந்த ஸுகஸம்வ்ருத்தஃ]—சக்ரவர்த்தி அறுபதினுயிரம் ஸம்வத்ஸரம் மலடு நின்று பெற்றவனுகையாலே அவன் கொண்டாடின ஸுகமிறே உம்முடைய ஸுகம். நீர் கொண்டாடப்பட்ட ஸுகமிறே இவனுடைய ஸுகம். [ஸுகுமாரஃ]—உம்முடைய கண்ணுலேபார்க்கவும் பொருத ஸௌகுமார்யம். [ஸுகோசிதஃ]—உம்மோடு கலவிக்கு உசிதனத்தனை யல்லது பிரிவுக்கு உசிதன்றிறே. [கதம்நு]—தன்படியே என்று நினைக்கிருர். பிரிவில்லாமையாலே தமக்கு நீர் குளிருகிறபடியாலே சுடுமென்றறியாதே குளிருமென்றஞ்சுகிருர். [அபரராத்ரேஷு]—அகாலத்திலே போவானென்னென்னில், புதிசாக வைதவ்யம் வந்தவர்கள் ஆள்கிளம்புவதுக்கு முன்னே மனிதர் முகத்திலே விழியாமே போமாபோலே 'கைகேயி மகன்' என்றும், 'இவனுலேயிறே இப்படி புகுந்தது' என்றும் சொல்லுமதற்கஞ்சி. [ஸரயூமவகாஹதே]—நீரிலே முழுகினுல் தடவி எடுக்கவேண்டும்படி.

९. न तेऽम्बा मध्यमा तात गर्हितव्या कथञ्चन ।
तामेवेक्ष्वाकुनाथस्य भरतस्य कथां कुरु ॥

நதேம்பா மத்யமா தாத! கர்ஹிதவ்யா கதஞ்சந,
தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு. 16-37. 9

*அப்பனே உன்னால் நடுத்தாயார் (கைகேயி) ஒரு விதத்திலும் நிந்திக்கத்தக்கவளல்ல. இக்ஷ்வாகு வம்சத்திற்கு பதியாகிய பரதனுடைய அந்த வார்த்தையையே பண்ணு (சொல்லு).*

ஈடு. *(தி—வாய். 9-1-4) இளையபெருமாள், கைகேயியுடைய படிகளை அநுஸந்தித்து 'ஆத்மகாமா ஸதா சண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞமாநிநீ' என்றாப்போலே சிலவற்றைச் சொல்ல, வாராய் பிள்ளாய், நீதானிவையெல்லாம் சொல்லுகிறது நடுவிலாய்ச்சியையே; [நதேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந]—ஒருபடியாலும் நீ அவளை இவ்வார்த்தை சொல்லக்கடவையல்லை. [தாமேவ]—வேணுமாகில் கைகண்ட மருந்தைச் செய்யப்பாராய். [இக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய]—ஐயரோ பொகட்டுமுடிந்துபோனார். நாம் பொகட்டுப் போந்த ராஜ்யத்தை இக்குடியில் மர்யாதை குலையாதபடியாக நோக்கிக்கொண்டு கிடந்த பிள்ளை பரதனன்றோ இக்குடிக்கு நாதன். [பரதஸ்ய கதாம் குரு]—நாநீர் வரும்படியான வார்த்தை சொல்லப் பாராய்.*

१०. कदा न्वहं समेष्यामि भरतेन महात्मना ।
शत्रुघ्नेन च वीरेण त्वया च रघुनन्दन ॥

கதாந்வஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா,
சத்ருக்நேந ச வீரேண த்வயாச ரகுநந்தந. 16-40. 10

*ரகுகுலபுத்ரனாகிய லக்ஷ்மணா! மஹாத்மாவான பரதனோடும் சத்ருக்நனோடும் சூரனான உன்னோடும் எப்பொழுது கூடப்போகிறேனோ?*

ஈடு. *(தி—வாய். 2-4-1) ஸ்ரீபரதாழ்வானோடும் ஸ்ரீசத்ருக்நாழ்வானோடும் கூடப்பெறாத கிழிக்குறையாலே, கூடநிற்கிற இளையபெருமாளோடும் கூடிற்றாய்த் தோற்றிற்றில்லையிறே பெருமாளுக்கு.*

११. विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः ।

விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டிதஃ. 17-24. 11

*விபீஷணனோ தர்மபுத்தியுள்ளவன், ராக்ஷஸவ்யாபாரமுள்ளவனல்ல.*

நடு. *(தி—வாய். 5-3-4) [விபீஷணஸ்து தர்மாத்மா]—இவன் இக்குடியிலுள்ளார்படியல்லன்; இவனுக்கு வாசியுண்டு; அந்த வாசிதன்னைச்சொல்லுகிறது—'தர்மாத்மா' என்று. 'மறக்குடியறஞ் செய்யக்கெடும்' என்றதிறே. [நது ராக்ஷஸசேஷ்டிதஃ]—ஜாதி மாத்ரமே இவன் பக்கலுபஜீவிக்கலாவது.*

१२. तं दृष्ट्वा शत्रुहन्तारं महर्षीणां सुखावहम् ।
बभूव हृष्टा वैदेही भर्तारं परिषस्वजे ॥

தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்,
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே. 30-31. 12

சத்ருக்களைக் கொன்றவரும் மஹர்ஷிகளுக்கு ஸுகத்தை உண்டுபண்ணினவரு மான அந்த ராமனைப் பார்த்து ஸந்தோஷமுள்ளவளாக பர்த்தாவாகிய ராமனை ஆலிங்கநம் செய்துகொண்டாள்.

ஸ்ரீபட்டர் வ்யாக்யாநம். (திருநெடுந்தாண்டகம். 21-பாட்டு) ராக்ஷஸ வேட்டையாடின பெருமாளுடைய யுத்தாயாஸச்ரம பரிக்லிந்நமான திருமேனியிலே ராக்ஷஸ சரவ்ராத வ்ரணரோப திவ்யௌஷதமான காடாலிங்கநத்தைப் பண்ணி பிராட்டி ஸத்தை பெற்றாளென்கிறது. [தம்]—ராக்ஷஸபூயிஷ்டமான தேசத்தில் உன்னைக் கொடுபோக அஞ்சுவேனென்றவரை. [தம்]—'ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்' என்று பிராட்டியாலே ஆண்கள் முன்பாக ஏவுண்டவன்று தொடங்கி திருவுள்ளத்திலே கறுவியிருந்து பதினாலாயிரம் ராக்ஷஸரையும் ஆழிமூழையாகத் தறித்து ரக்தவெள்ளத்தே மிதக்கவிட்டுப் பிராட்டியைப் பிடித்துக்கொண்டு சேவகத்தை மூதலித்துக்காட்டியருளினவரை. [தம்]—'ஆதித்ய இவ தேஜஸ்வீ' இத்யாதியாலே வீரப்பாட்டுக்குச் சிறுவிரல் முடக்கும்படி அவதீர்ணரானவரை. [தம்]—படுக்கைத்தலையிலே விடுபூ விழுந்து திருமேனி சிவக்கும்படியான ஸௌகுமார்யத்தையுடையவரை. [தம்]—உகப்பாலே அடுத்துப்பார்க்கில் ராகமான தேஜஸ்ஸு கொலையும்படியான திருமேனியுடையவரை. [தம்]—வீரஸ்ரீபரிணயமான மணக்கோலத்தோடே தர்சநீயமான ஸௌகுமார்யாதிசயத்தையுடையவரை. [தம்]—ரிஷிகளுக்குப்பண்ணின ப்ரதிஜ்ஞை கடலோசையாகாதபடி அது செய்து தலைக்கட்டுகையாலே பூர்ண மநோரதரானவரை. [சத்ருஹந்தாரம்]—ரத்நகசிதமான பொன்னரி மாலைபோலே சத்ருசரவ்ராதவ்ரணாங்கிதமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவராயுள்ளவரை. [த்ருஷ்ட்வா]—ஆதபாபிபூதருடைய சீதளதடாக ப்ரவேசம்போலே ராக்ஷஸநிகராபிபூதமான திருமேனியைத் தன் பூர்ணகடாக்ஷமாகிற ஹிமஜலத்தாலே வழிய வார்த்து. 'சத்ருஹந்தாரம்' என்றது ப்ரதிபக்ஷநிரஸநத்தால் வந்த புகருடைமை. ஸர்வபூதஸுஹ்ருத்தான ஸர்வேச்வரனுக்கு ப்ரதிபக்ஷமுண்டோவென்னில், 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' 'மம ப்ராணாஹி' 'பத்தர்' இத்யாதிப்ரக்ரியையாலே ஆச்ரித விரோதிகளே தனக்கு விரோதிகளாமித்தனையிறே. [மஹர்ஷீணாம் ஸுகாவஹம்]—யுத்தாரம்பம் தொடங்கி 'கிம் பவிஷ்யதி' என்று வயிறு பிடித்து துக்கிதராயிருந்த மஹர்ஷிகளுடைய பயம் தீர சத்ருக்களைக் கட்டடங்கக் கொன்றுவிட்டு அவர்களுக்கு ஸுகாவஹராயுள்ளவரை. [மஹர்ஷீணாம் ஸுகாவஹம்]—தம்முடைய போஷ்யகுடும்பத்துக்கு ஸுகத்தைப்பண்ணி, தம்முடைய ஸத்தைக்கு ஆபாதகமானவரை. [பபூவ]—மாலையும் மணமும்போலே அத்யந்தஸுகுமாரமான விக்ரஹத்தையும் ஸ்வபாவத்தையுமுடையவராயிருக்கிற பெருமாள், கடிநமான காத்ரங்களையும் ஸ்வபாவங்களையுமுடைய முரட்டு ராக்ஷஸரோடே யுத்தம் ப்ராரம்பித்த போதே தொடங்கி ப்ரேமாதிசயத்தாலே ஸத்தை மாண்டு கிடந்த பிராட்டி, திருமேனியிலே ஒரு தீங்கின்றியிலே நின்ற பெருமாளைக் கண்டு ஸத்தை பெற்றாளென்கிறது. [ஹ்ருஷ்டா]—தர்மியுண்டானால் தர்மம் பிறக்கக் கடவதிறே. ராமஸௌந்தர்யத்தை முழுக்கக் கண்டு திருவுள்ளத்தில் பிறந்த களிப்புப் புறவெள்ளமிட்டபடி. [வைதேஹீ]—ஐயர் வயிற்றிலே பிறந்திலேனாகில் நமக்கு இந்தப் பேறில்லையிறே. [வைதேஹீ]—இக்குடியில் பிறந்திலேனாகில் பெருமாள் என்னைக் கைப்பிடியாரே. [வைதேஹீ]—இந்நிலத்தில் பிறந்திலேனாகில் எனக்கு இவ்வில்லோட்டை ஸௌப்ராத்ரம் கிடையாதே; அவ்வில்லோட்டை ஸௌப்ராத்ரம் இல்லையாகில் வீர்ய சுல்கமான இவ்வாகாரம் கூடாதே. [வைதேஹீ]—தனுர்பங்கமாத்திரத்திலே என்னையும் தம்முடைய வம்சத்தையும் பெருமாளுக்கு அடிமையாக எழுதிக்கொடுத்த ஐயர், இற்றை நாளை ஆகாரம் கண்டால் என்படுகிறாரோ! [வைதேஹீ]—'பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்' என்கிறபடியே ஸர்வலோகாகர்ஷகமான இந்நிலையை ஐயரை ஒழிய நான் காண்பதே என்று பித்ருஸ்ம்ருதி பண்ணுகிறாள். [பர்த்தாரம்]—பாணிக்ரஹணவேளை தொடங்கி பதித்வப்ரதிபத்தி பண்ணிப்போந்தேன்; இப்போ

திறே தாத்வர்த்தம் ஜீவித்தது. [பரிஷஸ்வஜே]—ஸஸ்வஜே—ஆலிங்கனம் பண்ணினாள், [பரிஷஸ்வஜே]—பூர்ணமாகத்தழுவினாள். [பரிஷஸ்வஜே]—பர்யாப்தமாகத் தழுவினாள். [பரிஷஸ்வஜே]—திருமேனியில் தழும்புமாறுமளவும் தழுவினாள். [பரிஷஸ்வஜே]—சரவ்ரணங்களால் வந்த தழும்பு மாறுமளவும் திருமுலைத்தடத்தாலே வேது கொண்டாள். தான் கைகண்ட மருந்திறே சரவ்ரணங்களுக்கு ஆலிங்கனம். ஔஷதமாமிடத்தில் இந்துடன் ஐந்நூரோடு வாசியில்லையே. அந்தரங்கர் உள்ளூற எய்த புண்ணுக்கு மருந்தான இது தோல்புரையே எய்தபுண்ணுக்கும் மருந்தாகச் சொல்லவேணுமோ என்றிருந்தாள். ஒரு கொடியாகில் ஒரு கொள்கொம்பைத் தழுவியல்லது நில்லாதிறே. [பரிஷஸ்வஜே]—நித்யஸம்யோகஸ்திதிரூபமான பர்த்ருத்வாகாரம் ஒரு கொள்கொம்புக்கு உண்டானால் ததாதாரமாகப்படர்ந்து அத்தை மூடி அக்கொள்கொம்பைச் சிரப்பித்துக் கொண்டாலல்லது கொடிக்கு ஸ்வரூபமில்லையிறே. [பர்த்தாரம் பரிஷஸ்வஜே]—'பர்த்தாரமவலம்ப்யைவ பார்யாயாஃ ஸ்திதிரிஷ்யதே, அவலம்ப்ய த்ருமம் வல்லீ த்வேதநேத நவிநா த்ருமம்' என்னுமாபோலே.

'தம்' என்கிற பதம் பெருமாளுடைய ஸர்வாதாரத்வத்தைக் காட்டுகிறது 'த்ருஷ்ட்வா' என்கிற பதத்தாலே பெருமாளுடைய ஆகாரங்களையெல்லாம் நேராகக் காணவல்லாள் பிராட்டி என்கிறது. 'சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்' என்கிறவற்றால் தன்னோடு குடல்துடக்குண்டான சேதநர்க்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பண்ணினபோதல்லது அவரைக் காணக் கண்ணில்லை என்கிறது. 'பபூவ' என்கிறவித்தால் அவரைக் கண்டு ஸத்தை பெற்றாளென்கிறது. 'ஹ்ருஷ்டா' என்கிற பதத்தாலே தர்மி உண்டானவாறே தர்மம் குடிபுகுந்ததென்கிறது. 'வைதேஹீ' என்ற பதத்தாலே ஹேதுபூதர்பக்கல் உபகாரஸ்ம்ருதி சொல்லுகிறது. 'பர்த்தாரம்' என்று 'பிதுர்தசகுணம் மாதா' என்று புத்ரரக்ஷணத்தில் உகப்பாலே புருஷகாரத்வம் சொல்லுகிறது. 'பரிஷஸ்வஜே' என்று ஆச்ரிதரக்ஷணத்தால் வந்த உகப்புக்குப் போக்குவீடு ஆலிங்கனமாய், அதுதான் பரமப்ரயோஜநமென்கிறது. இத்தால் வீரபத்நி அகப்பட்ட வீரக்கோலம் சொல்லிற்று.

ஈடு. (தி—வாய். 3-5-4) [தம் த்ருஷ்ட்வா]—ப்ரணயதாரையில் ரஸிகத்வமேயாயிற்று முன்பு கண்டு போந்தது; அந்த போகத்துக்கு விரோதிகளானவற்றைப் போக்கவல்லர் என்று கண்டது இன்றாயிற்று. வேட்டைக்குப் போனால் இன்ன துஷ்டம்ருகத்தைக் கொன்றார். இன்ன ராக்ஷஸனைக் கொன்றார் என்று கூடப் போனவர்கள் சொல்லக் கேட்குமத்தனை முன்பு; அவ்வளவன்றிக்கே கண்ணாலே கண்டது இன்றாயிற்று. [சத்ருஹந்தாரம்]—தம் திருமேனியில் ஒரு வாட்டம் வாராமே எதிரிகளை நோவுபடும்படியாக, அம்போடே வெட்டோடே போகாமே எதிரிகளை முதலறமாய்த்து வந்தவரை. [மஹர்ஷீணாம் ஸுகாவஹம்]—பார்யைபக்கல் முகம் பெருகைக்கு ப்ரஜையை எடுத்துக்கொண்டு போவாரைப்போலே ரிஷிகளுக்கு விரோதிகளான ராக்ஷஸர்களைக் கொன்று, பிராட்டியை அணைக்கைக்கு அது பச்சையாக வந்தார். [பபூவ]—ராக்ஷஸருடைய க்ரௌர்யத்தையும் அநுஸந்தித்து 'என்புகுருகிறதோ என்று 'ஸத்தையில்லை' என்னும்படியிருந்தவள் வெற்றியோடே கண்டு உளளானாள். [ஹ்ருஷ்டா]—தர்மியுண்டானால் தர்மங்களும் உண்டாமிறே. [வைதேஹீ]—வீரவாசி அறியுங்குடியிலே பிறந்தவளென்னுதல்; அன்றிக்கே ஒரு வில்லை முறிக்க என்னைக் கொடுத்த எங்கள் ஐயர் தனியே நின்று பதினாலாயிரம் ராக்ஷஸரைக் கொன்ற வீரவாசியைக் கண்டாராகில் என்படுவரோ என்று அவரை நினைத்தாளாகவுமாம். [பர்த்தாரம்]—'தாராஃ பித்ருக்ருதாஃ' போலே 'ஐயர் நீர்வார்த்துக் கொடுத்தவர்' என்று விரும்பிப் போந்தாள் முன்பு; இப்போதாயிற்று ஆண்பிள்ளை என்று அணைத்தது. 'ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்' என்றவளிறே. [பரிஷஸ்வஜே]—யுத்தவடுவுள்ள விடமெங்கும் திருமுலைத்தடத்தாலே வேதுகொண்டாள்.

ஈடு. (தி—வாய். 6-10-4) [தம் த்ருஷ்ட்வா]—வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியான அழகையுடையவரை, எதிரிகளைவென்ற வீரக்கோலத்தோடே கண்டாள். [சத்ருஹந்தாரம்]—தம் திருமேனியிலே ஒருவாட்டம் வாராமே, அவர்களைக் குற்றுயிராக்கிவிடுவதும் செய்யாதே, துண்டித்து அடுக்கினவரை. முன்பு திருவயோத்யையிலிருந்த நாள், இவர் வேட்டைக்குப் போனவிடத்தே இன்னபடியு மின்னபடியும் பொருதார் இன்னபுலியைக் குத்தினர் இன்ன ஸிம்மத்தைக் குத்தினர் என்றாப்போலே பந்துக்கள் சொல்லக்கேட்குமத்தனையிறே. இங்கு பூசலுக்குப் புகுகிற போதே பிடித்து மேலுள்ள வ்யாபாரங்களடங்கலும் கண்டாள். [மஹர்ஷீணாம் ஸுகாவஹம்]—ரிஷிகளுடைய விரோதிகளைப் போக்கி அவர்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்தவரை. தங்கள் தபோபலத்தாலே வெல்லலாயிருக்க, தங்கள் பரத்தைப் பெருமாள் தலையிலே பொகட்டு முறையுணர்ந்துகொண்டிருக்குமவர்களுக்கு, 'கர்ப்பபூதாஸ்தபோதநாஃ' தந்தாம் கைம்முதலழிய மாறுதேயிருக்குமவர்கள். தபோதநராயிருக்கச் செய்தே கர்ப்பபூதராயிருப்பர்கள் தந்தாமுக்கென்ன இயற்றி உண்டாயிருக்கச்செய்தே; கர்ப்பாவஸ்தையில் ஜநநி அறிந்து ரக்ஷிக்குமத்தனையிறே. அப்படியே அவனே அறிந்து ரக்ஷிக்கவிருக்குமவர்கள். அநுகூலரக்ஷணமும் ப்ரதிகூல நிரஸநமும் இவளுக்கு ப்ரியமாகச் செய்யுமவையிறே. [பபூவ]—பதினாலாயிரம் முரட்டு ராக்ஷஸரோடே தனியே நின்று பொருகிற வித்தைக் கண்டஞ்சி 'இதென்னை விளையுமோ' என்று ஸத்தை அழிந்துகிடந்தாள்; இப்போதுளளானாள். 'பூ ஸத்தாயாம்'. [ஹ்ருஷ்டா]—ஸத்தை உண்டானால் உண்டாமதுவுமுண்டாயிற்று. [வைதேஹீ]—உபாத்யாயர்கள் பெண்பிள்ளைகளுக்குச் செவியேற்றாலே ஓத்துப் போயிருக்குமாபோலே. வீரவாசியறியுங்குடியிலே பிறந்தவளிறே. ஒரு வில்லு முறித்த விதுக்கு உகந்து என்னைக்கொடுத்த எங்களையர், பதினாலாயிரம் பேரைத் தனியே நின்று முடித்தவித்தைக்கண்டாலென்படுகிறார் தான். [பர்த்தாரம்]—முன்பு இவர் ஸுகுமாரராகையாலே 'குழை சரக்கு' என்றும் 'ஐயர் நம்மை இவர்க்கு நீர்வார்த்துக் கொடுக்கையாலே நாம் இவர்க்கு சேஷம்' என்றும் அணைத்தாளத்தனை. ஆண்பிள்ளை என்று அணைத்தது இப்போது. [பரிஷஸ்வஜே]—ராவணஸமராய், அவன் மதித்த வீரத்தையுடையராயிருப்பார் பதினாலாயிரம் பேரும் விட்ட அம்புகளடங்கலுமிவர் மேலேபட்டு, கண்டவிடமெல்லாம் யுத்தவடுவாயிறே திருமேனி கிடக்கிறது. அவ்வோ விடங்கள் தோறும் திருமுலைத்தடத்தாலே வேதுகொண்டாள்.

१३. तौ वनानि गिरींश्चैव सरितश्च सरांसि च ।
निखिलेन विचिन्वानौ सीतां दशरथात्मजौ ॥

தௌ வநாநி கிரீம்சைவ ஸரிதச்ச ஸராம்ஸி ச,
நிகிலேந விசிந்வாநௌ ஸீதாம் தசரதாத்மஜௌ. 61-21. 13

அந்த தசரதபுத்ரர்களான ராமலக்ஷ்மணர்கள் ஸீதையைக் குறித்து காடுகளையும் மலைகளையும் ஆறுகளையும் தடாகங்களையும் முழுமையும் தேடுகிறவர்களாகக் கொண்டு (அந்த ஸீதையை அடையவேயில்லை.)

ஈடு. (தி—வாய். 2-1-4) [ஸீதாம்]—'தேடிக்கண்டிலோம்' என்று ஆறியிருக்கலாம் விஷயமன்று. [தசரதாத்மஜௌ]—தேடப்பிறந்தவர்களல்லர்.

१४. अस्मिन्मया सार्धमुदारशीला शिलातले पूर्वमुपोपविष्टा ।
कान्तस्मिता लक्ष्मण जातहासा त्वामाह सीता बहुवाक्यजातम् ॥

அஸ்மிந்மயா ஸார்த்தமுதாரசீலா சிலாதலே பூர்வமுபோபவிஷ்டா,
காந்தஸ்மிதா லக்ஷ்மண ஜாதஹாஸா த்வாமாஹ ஸீதா பஹுவாக்யஜாதம். 63.12.

*ஓ லக்ஷ்மணா! கம்பீரமான ஸ்வபாவமுடையவளும் அழகிய புன்சிரிப்புள்ளவளு மான ஸீதையானவள் முன் என்னோடுகூட இந்த கற்பாறையில் நெருங்கி உட்கார்ந்து கொண்டவளாய் பரிஹாஸச் சிரிப்பு உண்டானவளாய் உன்னை (உன்னோடு) அனேக வார்த்தைகளை பலவிதமாக சொன்னாள்.*

பே—வ்யா. *(பெரிய திருமொழி. 2-7-7) முன்பு தாமும் பிராட்டியுமாய் ஜலக்ரீ டாதிகள் பண்ணி ஸரஸமாகப் பரிமாறிற்றோரிடத்திலே, பிராட்டியைப் பிரிந்து தாமும் இளையபெருமாளுமாய்த் தேடிக்கொண்டு வாரா நிற்கச்செய்தே அவ்விடத்தைக் கண்டு இளையபெருமாளைப் பார்த்தருளிச்செய்கிறார்—[அஸ்மிந்]—இப்படி வெறுந் தரையா யிருக்கிற விடத்திலே காண் அன்றும் நாம் எடுப்பு எடுத்தது. [மயா ஸார்த்தம்]— ப்ரணயதாரையில் தம்மைத் தாம் சால மதித்திறேயிருப்பது. நாமும் கூடக் காணவந்த சோழரோபாதியாகக் கடக்க நிற்கும்படி அவளுடைய அளவுடைமையும் விதக்தமாகப் பரிமாறினபடியும் காண். [உதாரசீலா]—படைவீட்டிலிருந்த நாள் மாமனார் மாமி யார்க்குக் கூசிச் சிறிது படிவிடுவாரோபாதி அளவுபடவாயிற்று போகம் செல்லுவது; இப்போது அவ்வளவன்றிக்கே ஏகாந்தஸ்தலமாகையாலே தன்னை முற்றூட்டாக ஸர்வ ஸ்வதானம் பண்ணிக்கொண்டிருந்தாளாயிற்று. [சிலாதலே பூர்வம்]—ஜலக்ரீடை பண்ணுகிறதோரிடத்திலே சிலாதலமாய், இளைத்தவிடத்திலே அதிலே ஏறுவதாகப் பெருமாள் முற்கோலிக் கணிசிக்க, 'ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலாः' என்கிற அதிலே யும் ஒரு ஸம்பந்தமுண்டிறே இவளுக்கு; அத்தை இவருடைய இங்கிதாதிகளைக் கொண் டறிந்து இவரை இளைப்பிக்க வேணு மென்று பார்த்து, பெருமாளேறுவதாகக் கணி சித்த துறையை அடைத்துக் கொண்டிருந்தாள். [உபோபவிஷ்டா]—அப்படியா யிருக்குமிறே எங்கும். [காந்தஸ்மிதா]—வெறும்புறத்திலே தானே துவக்கவல்லவள்; முறுவலைச் சேர்ந்தாற்போலேயாயிற்று முகந்தானிருப்பது. அதுக்கு மேலே அப் போது பிறந்த வெற்றியாலே ஜாதஹாஸையானாளாயிற்று. [த்வாமாஹ]—இதுக்கு முன்பு தொடங்கின கார்யத்தில் தலைக்காட்டாதே மீளுமதில்லையிறே பெருமாள்; இதொன்றும் தலைக்கட்டப் பெற்றதில்லை; அத்தாலே லஜ்ஜித்துக் கவிழ்த்தலையிட்டார் பெருமாள். அவரைவிடா, இவரைப் போரப்பொலிய சொல்லிக்கொண்டாடும் இளைய பெருமாள் முகத்தைப் பார்த்தாள்; 'பாரீரோ தம்பியீர், நீங்கள் நினைத்ததெல்லாம் தலைக்கட்டினிகோளிறே. நீங்கள் வல்லவலிய ஆண்பிள்ளைகள். நாங்கள் பெண் பெண்டுகள். நீங்கள் வேட்டைக்கும் வினைக்கும்போய் வ்யாபரிக்குமவர்கள். நாங்கள் வீடுவிட்டுப் புறப்பட்டறியோம். உங்களுக்கு நினைத்தவகைகளெல்லாம் தலைக் கட்டலாமிறே. உங்கள் தமையனார் வென்றாரிறே' என்று பஹுமுகமாகக்கொண்டு வார்த்தை அருளிச்செய்தாளாயிற்று.*

१५. पुरेव मे चारुदतीमनिन्दितां दिशन्ति सीतां यदि नाद्य मैथिलीम् ।
सदेवगन्धर्वमनुष्यपन्नगं जगत्सशैलं परिवर्तयाम्यहम् ॥ 64-76.

புரேவ மே சாருததீமநிந்திதாம் திசந்தி ஸீதாம் யதி நாத்ய மைதிலீம்,
ஸதேவகந்தர்வமநுஷ்யபந்நகம் ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்.

*அழகிய பற்களையுடையவளும் குற்றமற்றவளும் ஜநகமஹாராஜரின் புத்ரியு மாகிய ஸீதையை இப்போது என்பொருட்டு முன்போல கொடுக்கமாட்டார்களே யாகில் நான் தேவர்கள், கந்தர்வர்கள், மனிதர்கள், ஸர்ப்பங்கள் ஆகிய இவர்களோடு கூடியதும் மலைகளோடு கூடியதுமான உலகத்தை அழித்துவிடுகிறேன், அல்லது மாற்றிவிடுகிறேன்.*

பே—வ்யா. *(பெரிய திருமொழி. 3-1-7.) [புரேவ மே சாருத்தீமநிந்திதாம்]— மாயாம்ருகத்தின் பின்னே போவதுக்கு முன்பு இம்மானைப் பிடித்துத் தரவேணும்'*

என்ற முறுவலோடே கொடுவந்து காட்டிற்றிலர்களாகில். [அநிந்திதாம்]—அவளைப் பெருமையாலே ஜகதுபஸம்ஹாரம் பண்ணிறுரென்ருல், அவளுக்காக இது செய்த விடம் தப்பச்செய்தார் என்னவல்லாருமுண்டோ. 'யுக்தமித்யேவ மேமதிः' என்னுமித் தனையாகாதே. பிராட்டியை உள்ளபடியெல்லாமறியாத எனக்கும் இருந்தபடி இது. இனி இவளை உள்ளபடி அறிவார் என் நினைந்திருப்பார்களோ.

१६. 'राज्याद्भ्रंशो वने वासः सीता नष्टा हतो द्विजः ।
ईदृशीयं ममालक्ष्मीर्निर्दहेदपि पावकम् ॥

ராஜ்யாத் ப்ரம்சோ வநேவாஸः ஸீதா நஷ்டா ஹதோ த்விஜः,
ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீர்நிர்தஹேதபி பாவகம். 67-25. 16

ராஜ்யத்தினின்றும் நழுவுதல், காட்டில் இருப்பு; ஸீதை காணப்படவில்லை; ஜடாயுபக்ஷி கொல்லப்பட்டது; இவ்விதமுள்ள என்னுடைய இந்த துர்ப்பாக்கிய நிலைமை அக்நியைக்கூட கொளுத்திவிடும்.

ஈடு. (தி—வாய். 4 9-1) இவர்கள் படுகிற க்லேசத்தைக் கண்டு தன் க்ருபை யாலே அவனெடுக்கக் கைநீட்டினவிடத்திலே படுகிறபாடிறே இது. திருவபிஷேகம் பண்ண நாளிட்டவாறே, 'ராஜ்யமெனக்கு வேணும்' என்ருர்கள் சிலர். அத்தை இழந்தால் படைவீட்டிலே இருக்கப் பெற்றதாகிலுமாமிறே. 'என்மகன் ராஜ்யம் பண்ணவேண்டா, பிக்ஷைப் புக்காகிலும் என் கண்வட்டத்திலே இருக்கவமையும்' என்ருளிறே ஸ்ரீகௌஸல்யையார். [ஸீதா நஷ்டா]—'பிராட்டியும் தாமுமாய் ஏகாந்த மாக புஜிக்கலாம்' என்று போர, இருவரும் இரண்டிடத்திலேயாம்படியாய் விழுந்தது. [ஹதோ த்விஜः]—பிராட்டிக்குத் தனியிடத்திலே உதவப்புக்க பெரிய உடையாரையு மிழந்தது. 'ராஜ்யநாசோ பகர்ஷதி, வநவாஸோ மஹோதயः' என்றும் சொல்லிப் போந்தவற்றை இப்போது அநர்த்தமாகச் சொல்லுகிறதென்னென்னில்—'ஆச்ரித ஸம்ச்லேஷத்துக்கும், ரிஷிகளை எடுக்கைக்கும்' என்றிறே போந்தது, அத்தோடே விரோதிக்கையாலே சொல்லுகிருர். பிராட்டியைப் பிரிகையாலும் பெரிய வுடையாரிழவு பலிக்கையாலும் இவற்றுக்கு அடியானவையும் இப்போது அநர்த்தமாகத் தோற்றுகை யாலே சொல்லுகிருர். இவ்விரண்டாலும் வரும் துக்கங்களையடைய நினைக்கிறது. [நிர்தஹேதபி பாவகம்]—பிரியாத இளையபெருமாளையும் பிரிக்கவும் வற்ருயிறே இருப்பது.

ஆரண்யகாண்டம் முற்றிற்று.

---

ஸ்ரீः

# கிஷ்கிந்தாகாண்டம்

---

१. स तां पुष्करिणीं गत्वा पद्मोत्पलझषाकुलाम् ।
रामः सौमित्रिसहितो विललापाकुलेन्द्रियः ॥

ஸ தாம் புஷ்கரிணீம் கத்வா பத்மோத்பலஜஷாகுலாம்,
ராமஸ்ஸௌமித்ரிஸஹிதோ விலலாபாகுலேந்த்ரியः. 1-1 1

அந்த ராமன் தாமரைப் பூக்களும் கருங்குவளைப் பூக்களும் மீன்களும் நிறைந்த அந்த ஸரஸ்ஸை லக்ஷ்மணனோடு கூடியவனுய் அடைந்து பொறிகள் கலங்கியவனு யிருந்துகொண்டு பிரலாபித்தான்.

ஈடு. (தி—வாய். 9-9-1) [ஸः]—பிராட்டியைப் பிரிந்து நடுவே கபந்தன் கையி லகப்பட்டு நோவுபட்டு நிற்கிற நிலையைச் சொல்லுகிறது. [தாம்]—இப்பிரிவும் ஆற் ருமையும் இல்லாதாரையும் அழிக்கவற்ருய்த்து. [புஷ்கரிணீம்]—பரப்பு மாறப் பூத்த பொய்கைகளும் சோலைகளுமாய் ஜலக்ரீடைக்கு யோக்யமான தேசமாய்த்து. பிரிந்து தனியிருப்பார்க்குக் கண்கொண்டு காணப்போகாது. [கத்வா]—நினைவின் றிக்கே யிருக்கச் செய்தே, ம்ருத்யுவினுடைய ஆஸ்யத்திற் புகுவாரைப்போல வந்து கிட்டிக்கொடுநின்ருர். ம்ருத்யுவாகிற புடைதானே தென்ருல், [பத்மோத்பலஜஷாகு லாம்]—முகத்துக்கும் கண்ணுக்கும் போலியானவற்றை உடைத்தாயிருந்தது. 'உயர் தாமரை செங்கழுநீர் மாதர்கள் வாண்முகமும் கண்ணுமேந்தும்' என்னக்கடவதிறே. [ராமः]—பிறர்கூப்பீடு தவிர்த்துப் போந்தவராய்த்து. [ஸௌமித்ரிஸஹிதः] 'ரரக்ஷ தர்பேண' என்று ஏதேனுமளவிலும் கூட நின்று நோக்கிக்கொண்டு போந்தவரும் முன்னுக; ஆறு இழியுமவன்தெப்பம் முன்னுக இழியுமாபோலே. [விலலாபாகு லேந்த்ரியः]—அநேகலக்ஷணங்களோடேயாய்த்துக் கூப்பிட்டது.

२. मयूरस्य वने नूनं रक्षसा न हृता प्रिया ।
तस्मान्नृत्यति रम्येषु वनेषु सह कान्तया ॥

மயூரஸய வநே நூநம் ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா,
தஸ்மாந்ந்ருத்யதி ரம்யேஷு வநேஷு ஸஹ காந்தயா. 1-40 2

காட்டில் மயிலின் ப்ரியையான ஸ்த்ரீ ராக்ஷஸனுல் (ராவணனுல்) அபஹரிக்கப் படவில்லை. திண்ணம். ஆகையால் அழகிய காடுகளில் ஸ்திரீயோடுகூடி ஆடுகிறது.

பே—வ்யா. (பெரிய திருமொழி. 3-6-1) இந்த மயில்களிருந்தவிடத்தில் வந்தி லனே அப்பையல் என்கிருர். இருவராயிருப்பாரெல்லாரையும் தனியாக்கினுனென்றே யாயிற்று இருப்பது.

ஈடு. (தி—வாய். 10-3-1) [மயூரஸ்ய]—இருவராயிருப்பாரெல்லாரையும் பிரித் தானென்றேயிருக்கிருர். மயிலினுடைய பெண்டாட்டியை ராவணன் கொண்டுபோய்த் திலனே! [வநே]—திருவயோத்தியிலே வந்து பிரித்தானல்லனே, போகத்துக்கு ஏகாந் தமான காட்டிலேயிறே. [ரக்ஷஸா நஹ்ருதா ப்ரியா]—நீர்மைகேடனுன அப்படுகுலைக் காரனுல் பிரிக்கப்படாததிது ஒன்றுமேயாகாதே.

३. पद्मकेसरसंसृष्टो वृक्षान्तरविनिस्सृतः ।
निश्वास इव सीताया वाति वायुर्मनोहरः ॥

பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்டோ வ்ருக்ஷாந்தர விநிஸ்ஸ்ருதः,
நிச்ச்வாஸ இவ ஸீதாயா வாதி வாயுர்மநோஹரः. 1-71. 3

தாமரைப்பூக்களின் தாதுகளோடு சேர்ந்ததும் மரங்களின் நடுவிலிருந்து புறப் பட்டதும் ஸீதையின் மூச்சுக்காற்றைப்போலே மனதைக்கவருகின்றதுமான காற்று

பே—வ்யா. (பெரிய திருமொழி. 5-3-1) துராலான அம்சத்தைக் கழித்து பூத்தன்னிலும் ஸம்ஸர்க்கத்துக்கு மேற்பட ஆழ இழியுமதன் றிக்கேயிருக்கை. [வ்ரு க்ஷாந்தரவிநிஸ்ஸ்ருதः]—வெய்யிற்படப்பொருத செல்வாலே சோலைக்குள்ளிட்டாய்த்து வழி போந்தது.

४. पद्मसौगन्धिकवहं शिवं शोकविनाशनम् ।
धन्या लक्ष्मण सेवन्ते पम्पोपवनमारुतम् ॥

பத்மஸௌகந்திகவஹம் சிவம் சோகவிநாசநம்,
தந்யா லக்ஷ்மண! ஸேவந்தே பம்போபவநமாருதம். 1-105 4

ஓ லக்ஷ்மணா தாமரைப் பூக்களுடையவும் செங்கழுநீர் பூக்களுடையவும் வாஸனையைக் கொண்டுவருகிறதும் மங்களகரமாயும் துக்கத்தை நீக்குவதாயுமிருக்கிற பம்பா ஸரஸ்ஸின் கரையிலுள்ள பூங்காவுகளினின்றுவரும் காற்றை பாக்கியவான்கள் அநுபவிக்கிறார்கள்.

பே—வ்யா. (நாச்சியார் திருமொழி. 8-2) [பத்மஸௌகந்திகவஹம்]—கலம் பகஞ்சூடுவாரைப்போலே. [சிவம்]—இதின்தனை நன்மையுடையாரொருவருமில்லை. இதுக்கு நன்மை என்னென்னில்—[சோகவிநாசநம்]—நம்மை சித்ரவதம் பண்ணுது; சோகம் மறுவலிடாதபடி பண்ணும்போலேயிராநின்றது. [தன்யாः]—தனமுடையராயிருப்பார் க்ஷாமத்துக்கு அஞ்சார்களிறே. [ஸேவந்தே]—அஞ்சாமையே யன்றிக்கே, இத்தை அநுபவிக்கைக்கு ஏகாந்தமான ஸ்தலம் தேடாநிற்பர்கள். [பம்போபவநமாருதம்]—'ஆகரத்தில் நெருப்பு' என்னுமாபோலே.

ஈடு. (தி—வாய். 1-4-7) [பத்மஸௌகந்திகவஹம்]—கலம்பகம் சூடுவாரைப் போலே, தாமரையோடை செங்கழுநீரோடைகளிலே சென்று புக்கு, பூவிலிழியில் அதில் வெக்கைதட்டும். என்று மேலெழநின்று அரிமிதியான பரிமளத்தைக்கொய்துகொண்டு வாராநின்றது. [சிவம்]—கலப்பற்றுப்பசுந்தென்றலாயிராநின்றது. அதாவது—புறம்பே சிலர்க்கு உடம்புகொடுத்துச் சுணங்கழியாதே தாய்த்தலைத்தென்றலாயிருக்கை. [சோகவிநாசநம்]—நம்மை இனி ப்ராணனோடே வைத்து நலியாதுபோலேஇருந்தது. [தன்யாः]—காற்று வாரா நின்றதென்றால், ஏகாந்தஸ்தலம் தேடிப்படுக்கை படுக்கிறவர்களும் சிலரே. [லக்ஷ்மண ஸேவந்தே]—இது எப்போதோ வருவதென்றிருப்பர்கள். [பம்போபவநமாருதம்]—'ஆகரத்தில் நெருப்பு' என்னுமாபோலே.

५. शक्रचापनिभे चापे गृहीत्वा शत्रुसूदने ।

சக்ரசாபநிபே சாபே க்ருஹீத்வா சத்ருஸூதநே. 3-9 5

இந்திரன் வில்லுக்கொப்பானவைகளும் சத்துருக்களைக் கொல்லுபவைகளுமான வில்லுகளை பிடித்துக்கொண்டு (நிற்கின்ற நீங்கள் யாவர்?)

பே—வ்யா. (பெரிய திருமொழி. 1-2-1) உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற இரண்டுதிறத்தாரையும் அழிக்குமாயிற்று. [சக்ரசாபநிபே இத்யாதி]—இந்த்ர தனுஸ்ஸுபோலே அநுகூலர்க்கு வைத்த கண்மாறுதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படி தர்சநீயமாயிருக்கும். [க்ருஹீத்வா]=விற்பிடித்த பிடியிலே ப்ரதிகூலர் முடிந்து போம்படியாயிருக்கும். அநுகூலரை அழகாலே அழியச்செய்யும்; ப்ரதிகூலரை அம்பாலே அழியச்செய்யும்.

பே—வ்யா. (பெரிய திருமொழி. 8-1-1) இந்த்ரதனுஸ்ஸுபோலே எங்களுக்கு சத்ருவான வாலியை நிரஸிக்கைக்குப் பரிகரமுமாயிருந்தது. அநுகூலர்க்கு வைத்தகண் வாங்காதே கண்டு கொண்டிருக்கவேண்டும்படியாய், ப்ரதிகூலர்பிடித்த பிடியிலே மண்ணுண்ணும்படியாயிருக்கும். அதன்றிக்கே, [சாபே]—வில்வலிக்கும்படியை நினைத்தால் ['ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே'] என்னும்படியாயிருக்கும். அழகுக்கு உறுப்பாயிருக்கும் அநுகூலர்க்கு.

६. आयताश्च सुवृत्ताश्च बाहवः परिघोपमाः ।
सर्वभूषणभूषार्हाः किमर्थं न विभूषिताः ॥

ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவஃ பரிகோபமாஃ,
ஸர்வபூஷண பூஷார்ஹாஃ கிமர்த்தம் நவிபூஷிதாஃ. 3-15 6

*நீண்டவைகளும் உருண்டவைகளும் இரும்புலக்கைகளுக்கு ஒப்பானவைகளும் ஸகலஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படத்தக்கவைகளுமான கைகள் ஏன் அலங்கரிக்கப்படவில்லை.*

பே—வ்யா. *(திருவிருத்தம். 44) [ஆயதாஃ]—திருவடி வந்த கார்யத்தை மறந்து கவிபாடத்தொடங்கினான்; வந்த கார்யம் முடிந்ததென்று அறிந்தான் அத்தோள்களைக் கண்டபோதே. [ஆயதாஃ]—ஆஜாநுபாஹு, திருமுழந்தாளளவும் நீண்டு பின்னையும் முடியாதிருக்கை [பாஹவஃ]—'ராமஸ்ய தக்ஷிணோபாஹுஃ'] என்கிறபடியே. [ஸர்வபூஷணபூஷார்ஹாஃ]—அழகிழந்து கிடக்கிற ஆபரணங்களை அலங்கரியாதொழிகிறதென்? [கிமர்த்தம் நவிபூஷிதாஃ]—இவ்வாபரணங்களின் எழிலைக் கழற்றியிட்டு வைக்கிறதென்? ராஜாக்கள் வெற்றிலை விலக்குதல் பால்குடியோமென்னுதல் செய்வார்கள், 'இன்ன கோட்டையழித்தாலன்றி' என்று திரிவாரைப்போலே. ஒன்றுமறியாதே காட்டிலே திரியக்கடவ குரங்குகளுக்கும் அனுபவிக்கும்படி பெருக்காறுபோலே இவ்வெறும் புறத்திலழகைக் கொள்ளையூட்டிக் கொள்ளுகிறதென்?*

७. नानृग्वेदविनीतस्य नायजुर्वेदधारिणः ।
नासामवेदविदुषः शक्यमेवं प्रभाषितुम् ॥

நாந்ருக்வேதவிநீதஸ்ய நாயஜுர்வேததாரிணஃ,
நாஸாமவேதவிதுஷஃ சக்யமேவம் ப்ரபாஷிதும். 3-29 7

*ரிக்வேதத்தில் பயிற்சி பெறாதவனுக்கு இம்மாதிரி அழகாய்ப்பேச முடியாது. யஜுர்வேதத்தை நெஞ்சுள் நிறுத்தாதவனுக்கு, இவ்வாறு அழகாகப் பேச முடியாது. ஸாமவேதமறியாதவனுக்கு இவ்வண்ணம் அழகாய்ப் பேச முடியாது.*

பே—வ்யா. *(பெரிய திருமொழி. 8-1-1) [நாந்ருக்வேதவிநீதஸ்ய]—அநுஷ்டேயார்த்தப்ரகாசகமான ரிக்வேதம் சிக்ஷிதனானவனுக்கல்லது இப்படி வார்த்தை சொல்லவொண்ணாது. [நாயஜுர்வேததாரிணஃ]—யஜுர்வேதம் பாடதாரணந்தானே அரிது; அத்தைத்தரித்தவனுக்கல்லது இவ்வார்த்தை சொல்லவொண்ணாது. [நாஸாமவேதவிதுஷஃ]—ஸாமவேதம் காந விசேஷங்களறிய அரிது; அதறிந்தவனுக்கல்லது இப்படி வார்த்தை சொல்ல முடியாது. [சக்யமேவம் ப்ரபாஷிதும்]—இத்தை எல்லாவற்றையும் அதிகரித்தவனுக்கல்லது நம்முன்னே இப்படி வார்த்தை சொல்லலாமோ?*

८. अहमस्यावरो भ्राता गुणैर्दास्यमुपागतः ॥

அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகதஃ 4-11, 8

*நான் இவருக்கு பின்பிறந்த ஸஹோதரன், குணங்களாலே (குணங்களுக்கிட்டு) தாஸனாயிருக்குகையை அடைந்தவன்.*

ஈடு. *(தி—வாய். 1-1-1) இளையபெருமாளை 'நீர் இவர்க்கு என்ன ஆவீர்' என்ன, 'பெருமாளுமொருபடி நினைத்திருப்பர், நானுமொருபடி நினைத்திருப்பேன்' என்றார். 'அவர் நினைத்திருக்கும்படி என்? நீர் நினைத்திருக்கும்படி என்? என்ன, 'அவர் தன் பின் பிறந்தவனென்றிருப்பர்; நான் அவர்குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்' என்றாரிறே.*

९. लोकनाथः पुरा भूत्वा सुग्रीवं नाथमिच्छति ।

லோகநாதః புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி. 4-18. 9

முன்பு உலகத்திற்கு நாதனாய் இருந்துவிட்டு (இப்பொழுது) ஸுக்ரீவனை நாதனாக விரும்புகிறார்.

பே—வ்யா. (நாச்சியார் திருமொழி. 11-6) [லோகநாதః புரா பூத்வா]—லோகநாதனை விது மஹாராஜர் பக்கல் பாரதந்த்ர்யத்துக்கு குருகுலவாஸம்பண்ணினபடி. இப்பாரதந்த்ர்யம் குணமாகைக்கு வேண்டும ஸ்வாதந்த்ர்யமேயாய்த்து உள்ளது. எளியவன் தாழநின்றால் அது குணமாகாதிறே. [இச்சதி]—எல்லாரும் தந்தாமுக்கு இல்லாதத்தை ஆசைப்படுமித்தனையிறே.

१०. निवासवृक्षः साधूनामापन्नानां परा गतिः ।

आर्तानां संश्रयश्चैव यशसश्चैकभाजनम् ॥

நிவாஸவ்ருக்ஷః ஸாதூநாமாபந்நாநாம் பரா கதிః,

ஆர்த்தாநாம் ஸம்ச்ரயச்சைவ யசஸச்சைகபாஜநம். 15-19. 10

(ராமன்) ஸாதுக்களுக்கு தங்கும் மரம்; தன்னை சரணமாக அடைந்தவர்களுக்கு மேலான அடையவேண்டிய இடம்; அல்லது காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கிறவர்; கஷ்டப்படுவோருக்கு புகலிடமாயுமிருப்பவர்; கீர்த்திக்கு ஒரே இருப்பிடமாயுமிருப்பவர்.

பே—வ்யா. (திருவிருத்தம். 58) வாலிக்கு 'ஸுக்ரீவனோடு நீ விரோதிக்கை கார்யமல்ல காண். அங்கதப்பெருமாள் காட்டிலே விளையாடப்போனவிடத்திலே, அவனுக்கு ஓர் அபாச்ரயமுண்டாகக் கேட்டுவந்து சொன்னான் காண்' என்ன, 'அபாச்ரயமாகிறவர்தாம் ஆர்?' என்ன, பெருமாள் என்றாள். 'ஆனால் அவர் தன்னை நமக்கு அபாச்ரயமாகமாட்டாரோ' என்ன, சொல்லுகிறாள்—[நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாம்]—இந்நிழலிலே ஒதுங்குவோமென்பார்க்கு நிழலாய் காண் இருப்பது. பூவாயும் பழமாயும் நிழலாயும் தான் வெய்யிலைச் சுமந்தும் பிறர்க்கு இடம் கொடுத்தும் தன்கீழே இருந்து தன்னை அழியச்செய்ய நினைப்பார்க்கு பலப்ரதமாயும் இவையெல்லாம் உண்டிறே அதுக்கு. 'நான் தான் அவர்க்கு ஏதேனுமநிஷ்டமுண்டோ செய்தது? நமக்கு ஒதுங்க நிழலாகத் தட்டென்? என்ன—[ஆபந்நாநாம் பராகதிః]—ஒதுங்கோமென்னுமை போராது காண். ஆபந்நராகவும் வேணும் காண். 'நான்தான் ஆபந்நனன்றோ, உடன்பிறந்தவன் சத்ருவாம்படியன்றோ நம்முடைய நிலை' என்ன—[ஆர்த்தாநாம்]—ஆபந்நராயிருக்கவே அமையாது காண்; ஆபத்தை இசையவும் வேணும் காண். நமக்கு ஒரு ரக்ஷகன் வேணுமென்றிருக்கவேணும் காண் என்ன, 'இவர் அவனுக்கே புகலாய் நின்றாராகில் நமக்குமிப்படியிருப்பான் ஒரு அபாச்ரயத்தைத் தேடிக் கொள்ளுகிறோம்' என்ன, [யசஸச்சைகபாஜநம்]—இனி இங்ஙனிருப்பதொரு நிழலில்லைகாண் ஒதுங்க. நாலுவகையாலே மூன்று அதிகாரிகளை ஸ்ரீகீதையிலே சொல்லிற்றிறே. அவர்களைச் சொல்லுகிறது இதில். ஒரு ஸ்த்ரீவசனமாயிருக்க, இதுக்கு இத்தனை கருத்து உண்டாகவற்றோவென்னில், வேதோபப்ருஂஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தமாகையாலே கோல்விழுக்காட்டாலே அவையும் ஸம்பவிக்குமிறே. ['ஏகபக்திர்விசிஷ்யதே'] என்கிற ஜ்ஞாநியைச்சொல்லுகிறதாய், முந்துற ஸம்ஸாரத்திலே நொந்து ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ளவேணுமென்றிருக்கிற ஆத்மப்ராப்திகாமனையாய், அநந்தரம் ப்ரஷ்டைச்வர்ய காமனையாய், இது ப்ரதமமாக ஐச்வர்யத்தைப் பெறவிருக்குமவனுக்கும் உபலக்ஷணமாயிருக்கிறது.

११. अवष्टभ्य च तिष्ठन्तं ददर्श धनुरूर्जितम् ।
रामं रामानुजं चैव भर्तुश्चैवानुजं शुभा ॥

அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ததர்ச தநுரூர்ஜிதம்,
ராமம் ராமாநுஜம் சைவ பர்த்துச்சைவாநுஜம் சுபா. 19-26. 11

கம்பீரமான வில்லைப் பிடித்துக்கொண்டு (வில்லை ஊன்றி அதில் சாய்ந்து கொண்டு) நிற்கின்ற ராமனையும் லக்ஷ்மணனையும் தன்பர்த்தாவின் தம்பியாகிய ஸுக்ரீவனையும் நல்லெண்ணமுள்ள தாரை கண்டாள்.

ஈடு. (தி—வாய். 5-10-6) வாலிவதம்பண்ணிக் கையும் வில்லுமாய்க் கொண்டு வென்றிபுனைந்து நின்ற பெருமானையும், அவரை இடுவித்துக் கொல்லுவித்த தம்பியாரையும்; இருவரையும் அநுவர்த்தித்து முடிசூடவிருக்கிற மஹாராஜரையும் கண்ட இவள், நமக்கு சத்ருக்கள் என்றிருதே சுபஹ்ருதயை ஆனாள் அவர் பக்கல் சாங்கத்தாலே. இனித்தான் தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே கல்லைக் கட்டிக்கொண்டு விழுந்து முடிந்துபோவாரைப்போலே ஆஸுர ப்ரக்ருதியானவாறே முடிந்துபோனான் வாலி. இவர் செய்த குற்றமுண்டோ வென்றிருந்தாள். அவர் தம்முயிர்நிலையிலே நலிந்தாரை விட்டு வைப்பாரோ.

ஈடு. (தி—வாய். 6-9-3) தன்பர்த்தாவைக்கொன்ற பெருமானை 'தப்பச்செய்தீரே' என்கையன்றிக்கே, இவரது குற்றமுண்டோ! தமக்கு ஆச்ரயித்தவர்கள் விரோதி போக்கத்தவிர்வர்களோ. இவனும் அநுகூலித்தானாகில் ரக்ஷியாரோ. தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழதாக விழுந்து சாவாரைப்போலே தன்குற்றத்தாலே கெட்டானத்தனை கிடீரென்றாளிறே.

१२. निस्स्वनं चक्रवाकाणां निशम्य सहचारिणाम् ।
पुण्डरीकपलाशाक्षी कथमेषा भविष्यति ॥

நிஸ்ஸ்வநம் சக்ரவாகாணாம் நிசம்ய ஸஹசாரிணாம்,
புண்டரீகபலாசாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி. 30-10. 12

தாமரை யிதழ்போன்ற கண்ணையுடைய இந்த ஸீதைகூட ஸஞ்சரிக்கின்ற (பிரியாத) சக்ரவாகப்பறவைகளுடைய (ஆண்பெண்களுடைய) தொனியைக் கேட்டு எப்படியிருக்கப்போகிறாளோ.

பெ—வ்யா. (திருவிருத்தம் 51) [நிஸ்வநம் சச்ரவாகாணாம்]—பிரிவிலேயாகையாலே அவற்றின்பேச்சு அஸஹ்யமானபடி. [ஸஹசாரிணாம்]—பூர்வாவஸ்த்தையில் அவற்றைப்போலே அஃதேதாமும். [புண்டரீகபலாசாக்ஷீ]—வேல்போலே அவற்றின் சப்தம் செவிவழியே குளிக்கப் புக்கவாறே வெளுக்கவிழித்த விழியிருந்தபடி.

१३. कृतापराधस्य हि ते नान्यत्पश्याम्यहं क्षमम् ।
अन्तरेणाञ्जलिं बध्वा लक्ष्मणस्य प्रसादनात् ॥

க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம்,
அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத். 32-17. 13

குற்றம் செய்த உனக்கோ கைகூப்பிக்கொண்டு லக்ஷ்மணனை நன்மைப்படுத்திக் கொள்வதைத்தவிர்த்து வேறொன்றை யுக்தமாக நான் காணவில்லை (நினைக்கவில்லை.)

ஈடு. (தி—வாய். 1-1-5) இளையபெருமாளுடைய ஜ்யாகோஷத்தைக் கேட்டு மஹாராஜர் கழுத்தில் மாலையை அறுத்துப் பொகட்டுக் காபேயமாய்ச் சில வ்யாபாரங்களைப்பண்ணி அருகேநின்ற திருவடியைப்பார்த்து 'இவ்வளவில் நமக்குச் செய்யப்படுவது என்?' என்ன, 'அபராதகாலத்திலே அநுதாபம் பிறந்து மீண்டோமாய் எளியன சில செய்கிறோமல்லோம். தீரக்கழிய அபராதம் பண்ணினபின்பு இனி ஓரஞ்ஜலி நேராமல் போகாது' என்றானிறே.

१४. सा प्रस्खलन्ती मदविह्वलाक्षी प्रलम्बकाञ्चीगुणहेमसूत्रा ।
सलक्षणा लक्ष्मणसंनिधानं जगाम तारा नमिताङ्गयष्टिः ॥

ஸா ப்ரஸ்கலந்தீ மதவிஹ்வாக்ஷீ ப்ரலம்பகாஞ்சீகுணஹேமஸூத்ரா,
ஸலக்ஷணா லக்ஷ்மணஸந்நிதாநம் ஜகாம தாரா நமிதாங்கயஷ்டி:. 33-38

அந்த தாரையானவள் கால் தடுமாறினவளாய் மதத்தால் சுழல்கின்ற கண்ணையுடையவளாய் நழுவித் தொங்குகின்ற அரைநூன்மாலையின் தங்க வடங்களையுடையவளாய் லக்ஷணமுள்ளவளாய் சரிந்த அவயவங்களையுடையவளாய் லக்ஷ்மணனின் ஸமீபத்தை அடைந்தாள்.

ஈடு. (தி—வாய். 1-4-3) [ஸா]—ஒரு கலவியும் பிரிவும் வேண்டாதபடியான நடையழகையுடையவள். [ப்ரஸ்கலந்தீ]—ஸம்ச்லேஷத்தாலுண்டான துவட்சியாலே தடுமாறிஅடிமேலடியாக இட்டுவந்தாள். [மதவிஹ்வலாக்ஷீ]—மதுபானாதிகளாலே தழுதழுத்த நோக்கையுடையவளாயிருந்தாள். [ப்ரம்பகாஞ்சீகுணஹேமஸூத்ரா]—அரைநூல்வடம் இழுப்புண்டு வரும்படி படுக்கையில் கிடந்தபடியே பேணாதேவந்தாள். [ஸலக்ஷணா]—ஸம்போகசிஹ்னங்கள் காணலாம்படி வந்தாள். [லக்ஷ்மணஸந்நிதாநம் ஜகாம]—'தாய்க்கு ஒளிப்பதுண்டோ' என்று புறப்பட்டு வந்தாள். [தாரா]—தாரையானவள். 'இளையபெருமாள் சீவிட்டு எத்தாலேயாற்றலாம்' என்று மஹாராஜரும் திருவடியுமாக விசாரித்து, 'வேறொன்றாலாற்றுமதல்ல; தாரையை விட்டாற்றவேணும்' என்று தாரையை வரவிட்டார்கள். [நமிதாங்கயஷ்டி:]—உருகுபதத்திலே வளைந்தவை நிமிர்க்கவொண்ணாதாப்போலே இத்துவட்சி நிரூபகமிவளுக்கென்று தோற்றும்படியிருந்தாள்.

१५. किं कोपमूलं मनुजेन्द्रपुत्र कस्ते न संतिष्ठति वाङ्निदेशे ।

கிம் கோபமூலம் மநுஜேந்த்ரபுத்ர கஸ்தே ந ஸந்திஷ்டதி வாங்நிதேசே. 33-41

ராஜகுமாரனாகிய லக்ஷ்மணா உமக்கு கோபம் வரக்காரணம என்ன? உம்முடைய வாயுத்தரவில் எவன் நிற்கிறதில்லை?

ஈடு. (தி—வாய். 1-4-7) [கிம் கோபமூலம்]—ராஜபுத்ரர்களை நாலுமாஸம் மின்னுக்கும் இடிக்கும் இரையாக்கி தாங்கள் போகப்ரவணராயிருந்தவற்றை யொன்றையும் புத்தி பண்ணாதே, உம்முடைய கோபத்துக்கு அடியென்ன என்றாளிறே அவர்கள் பொறையை நினைத்திருந்த கனத்தாலே. [மநுஜேந்த்ரபுத்ர]—அறுபதினாயிரமாண்டு, செய்தார் செய்த குற்றங்களையும் பொறுத்துச் சேரவிட்டு ஆண்டுகொண்டு போந்தான் உங்கள் தமப்பனார். அவன் வயிற்றிலே பிறந்து குற்றம் செய்தோமென்று தலையறுக்க வந்து நின்றீர் நீர். அழகியதாயிருந்தது உம்முடைய போக்கு. [கஸ்தே நஸந்திஷ்டதி வாங்நிதேசே]—சாஸ்த்ரவச்யமன்றிக்கே கண்டதிலே கடுக சாபலத்தைப் பண்ணி மீளமாட்டாத திர்யக்குகளை நீரே 'இழந்த போகங்களை புஜிப்பது' என்று சேர்த்துவிட்டு, நீர் சொல்லிற்று செய்தனவென்று தலையறுக்கவந்து நின்றீர். இப்படி சொல்லலாம்படியிறே இவர் பொறை இருப்பது.

கிஷ்கிந்தாகாண்டம் முற்றிற்று

---

ஸ்ரீ:

# ஸு ந் த ர கா ண் ட ம்

१. अव्यक्तरेखामिव चन्द्ररेखां पांसुप्रदिग्धामिव हेमरेखाम् ।
क्षतप्ररूढामिव बाणरेखां वायुप्रभिन्नामिव मेघरेखाम् ॥

அவ்யக்தரேகாமிவ சந்த்ரரேகாம் பாம்ஸுப்ரதிக்தாமிவ ஹேமரேகாம்,
க்ஷதப்ரரூடாமிவ பாணரேகாம் வாயுப்ரபிந்நாமிவ மேகரேகாம். 5-26. 1

ஒளிமங்கியிருக்கிற சந்திரக்கலையைப் போன்றவளும் புழுதிபடிந்த தங்கசலாகையைப் போன்றவளும் காயம்பட்டவிடத்தில் சதைவளர்ந்து மேல்புறம் மூடிப்போன அம்பு பாய்ந்து கிறியவழியைப்போன்றவளும் காற்றினால் துண்டாடப்பட்ட மேகவரிசையைப்போன்றவளுமான ஸீதையை ஹநுமான் கண்டான்.

ஈடு. (தி—வாய். 2-1-6) [அவ்யக்தரேகாமிவ சந்த்ரலேகாம்]—போய்த் தேய்ந் தற்றபடிக்கும் வைவர்ண்யத்துக்கும் நிதர்சநமாகச் சொல்லுகிறது. [பாம்ஸுப்ரதிக் தாமிவ ஹேமரேகாம்]—'நற்சரக்குக்கு வந்த அழுக்கு' என்று தோற்றவிருந்தாள். [க்ஷதப்ரரூடாமிவ பாணரேகாம்]—அம்புவாய் உள்ளே கிடக்கப் புறம்பே ஸமாதாநம் பண்ணினாப் போலே 'அகவாயில் இழவு பெரிது' என்று தோற்றவிருந்தாள். [வாயு ப்ரபிந்நாமிவ மேகரேகாம்]—பெருங்காற்றாலே சிதறஅடியுண்ட மேகசகலம்போலே இருந்தாள்.

२. बभूव बुद्धिस्तु हरीश्वरस्य यदीदृशी राघवधर्मपत्नी ।
इमा यथा राक्षसराजभार्याः सुजातमस्येति हि साधुबुद्धेः ॥

பபூவ புத்திஸ்து ஹரீச்வரஸ்ய யதீத்ருசீ ராகவதர்மபத்நீ,
இமா யதா ராக்ஷஸராஜபார்யாः ஸுஜாதமஸ்யேதி ஹி ஸாதுபுத்தேः. 9-13. 2

ராவணனுடைய பத்நிகள் எப்படி (இருக்கிறார்களோ) இப்படிப்பட்டவளாக ஸீதை இருந்தால் இந்த ராவணனுக்கு க்ஷேமமன்றோ என்று நற்புத்தியுள்ள ஹநுமானுக்கு எண்ணமும் உண்டாயிற்று.

ஈடு. (தி—வாய். 2 9-10) [பபூவ புத்திஸ்து ஹரீச்வரஸ்ய]—ராவணனும் ஸ்த்ரீகளுமாயிருக்கிற இருப்பைக் கண்டவாறே, தானுமொரு ஸமுதாயத்துக்குக் கடவனாகையாலே இங்ஙனேயிருப்பதொரு புத்தி பிறந்தது. [யதீத்ருசீத்யாதி]—பையல், தானும் ஸ்த்ரீகளுமாயிருக்கிற இருப்பைப் பெருமாளும் பிராட்டியுமாயிருக்க ஸம்வதித்தானாகில், இந்த ஐச்வர்யம் குலையாதிருக்கலாயிற்று கிடீர். [ஸாதுபுத்தேः]—சத்ருக்களுக்கும் நன்மை வேணும் என்றிருக்கும் புத்தியையுடையவனுக்கு.

३. सपङ्कामनलङ्कारां विपद्मामिव पद्मिनीम् ॥

ஸபங்காமநலங்காராம் விபங்காமிவ பத்மிநீம், 15-20. 3

அழுக்குப்படிந்தவளும் அலங்காரமற்றவளும் தாமரைப்பூக்களில்லாத தாமரைப் பொய்கையைப்போன்றவளுமாகிய (ஸீதையை ஹநுமான் கண்டான்.)

ஈடு. (தி—வாய். 2-1-6) [ஸபங்காம்]—பூமியில் நின்றும் தோற்றினபோது போலேயிருந்தாள். [அநலங்காராம்]—அத்தை அழித்து ஒப்பிக்குமவர் அஸந்நிதியாலே

ஒப்பனையழிந்திருந்தாள். [விபத்மாமிவ பத்மிநீம்]—'பெருமாள் வந்தாலும் இவ்வாச்ரயத்தை உண்டாக்கவொண்ணாது' என்னும்படி முதலிலே தாமரை குடிபோன பொய்கைபோலே இருந்தாள்.

४. दुष्करं कृतवान् रामो हीनो यदनया प्रभुः ।
धारयत्यात्मनो देहं न दुःखेनावसीदति ॥

துஷ்கரம் க்ருதவாந் ராமோ ஹீநோ யதநயா ப்ரபுஃ,
தாரயத்யாத்மநோ தேஹம் நதுஃக்கேநாவஸீததி. 15-52. 4

ராமன் செய்யமுடியாத (செய்யத்தகாத) காரியத்தை செய்தவராகிறார். யாதொருகாரணத்தால் (ஏனெனில்) ப்ரபுவாகிய ராமன் இவளைவிட்டுப் பிரிந்தவரா யிருந்தும் தன்னுடைய சரீரத்தை தரித்துக்கொண்டிருக்கிறாரோ துயரத்தால் இளைத்து முடியவில்லையோ!

ஈடு. (தி—வாய். 2-4-2) [துஷ்கரம் க்ருதவாந் ராமஃ]—இவளைப்பிரிந்து ஸமாதாநம்பண்ணியிருந்த பெருமாள் சால அரிதாகச் செய்தார். [ஹீநோ யதநயா]—இவளைப் பிரிந்து தேஹத்தைத் தரித்திருந்தாரென்பது யாதொன்று, அது சால வரிதாகச் செய்தார். [ப்ரபுஃ]—ஆனை குதிரை ஏறவும் நாடாளவும் கற்றாரித்தனை. ப்ரணயதாரையில் புதியதுண்டிலர். மால்யவானில் பெருமாளிருந்தபோது மேகதர்சநத்திலே பட்ட பாட்டைக்கண்டு 'வஸிஷ்டசிஷ்யன் ஒரு ஸ்த்ரீநிமித்தமாக இப்படி படுவதே!' என்று கர்ஹித்துச் சிரித்திருந்தான் விரக்தனுகையாலே, இப்போது இவளைப் பிரிந்து தேஹத்தைத் தரித்துக்கொண்டிருப்பதே' என்கிறுனயிற்று விசேஷஜ்ஞனுகையாலே. [தாரயத்யாத்மநோ தேஹம்]—இத்தேனும் இரவலுடம்போ சுமந்துகொண்டிருக்கைக்கு. போகாயதநமன்றே, துக்காயதனமோ இது. பிரிந்தால் 'க்ரமத்திலே கூடுகிறோம்' என்று தரித்திருக்கவல்லளல்லளே.

५. एवं सीतां तदा दृष्ट्वा हृष्टः पवनसंभवः ।
जगाम मनसा रामं प्रशशंस च तं प्रभुम् ॥

ஏவம் ஸீதாம் ததா த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டஃ பவநஸம்பவஃ,
ஜகாம மநஸா ராமம் ப்ரசசம்ஸ ச தம் ப்ரபும். 15-53. 5

இப்படி ஸீதையை அப்போது கண்டு ஸந்தோஷித்த வாயுபுத்ரனுன ஹநுமான் ராமனை மனத்தால் அடைந்தான் (நினைத்தான்) ப்ரபுவாகிய அந்த ராமனை புகழ்ந்தும் கொண்டான்.

ஜீயர் அரும்பதம். (தி—வாய். 2-4-2) இப்படி நிந்தித்தவன்தானே அநந்தரத்'ல கொண்டாடத்துடங்கினுன்—ஏவமித்யாதி. [ஏவம்]—க்ஷணகாலவிச்லேஷாயோக்யமான வஸ்துவாக. [ஹ்ருஷ்டோ ராமம் மநஸா ஜகாம]—இப்படி அவளைப் பிரிந்த பெருமாள் ப்ராணனை தரித்திருந்தது நம்முடைய பாக்யபலமிறே என்று ஹ்ருஷ்டனுனுனென்றபடி [ராமம்]—இப்படிப்பட்ட தசையிலும் தம்மை நோக்கி வைத்து நம்முடைய மநஸ்ஸை ரஞ்ஜிப்பிப்பதே என்று புத்தி பண்ணினுனென்றபடி. [பவநஸம்பவஃ]—தம்முடைய தமப்பன் பண்ணின உபகாரத்தை ஸ்மரித்தானுயிற்று. ப்ராணவாயுமுநோக விடாமலிருந்தவனிறே உபகாரகன். [ப்ரசசம்ஸச தம் ப்ரபும்]—இப்படி அவன் தரித்திருந்ததுக்கு நிபந்தநம் ப்ரபுத்வமிறே என்று ப்ரபுத்வத்தைக் கொண்டாடத் தொடங்கினுன். [தம்]—ப்ரபுத்வத்தின் பெருமை இருந்தபடி என்றுனென்றதாயிற்று.

६. त्रैलोक्यराज्यं सकलं सीताया नाप्नुयात्कलाम् ।

த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம். 16-14 6

*ஸமஸ்தமான மூன்றுலகராஜ்யமும், ஸீதையினுடைய ஒரு அம்சத்தை அடைய மாட்டாது (ஒரு அம்சத்துக்கு ஒப்பாகாது)*

ஈடு. *(தி—வாய். 6-2-6) மூன்றுலோகத்தையும், அத்தோடே விச்வசப்தவாச்யனைவன் தன்னையுங் கூட ஒரு தட்டாக்கினுல் பிராட்டியுடைய ஒரு கலாமாத்ரத்துக்கு இடைநிற்கமாட்டாது.*

७. सर्वान्भोगान्परित्यज्य भर्तृस्नेहबलात्कृता ।
अचिन्तयित्वा दुःखानि प्रविष्टा निर्जनं वनम् ॥

ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா,
அசிந்தயித்வா துஃக்காநி ப்ரவிஷ்டா நிர்ஜநம் வநம். 16-19 7

*(ஸீதை) பர்த்தாவினிடத்திலுள்ள ப்ரீதியால் பலமாகத் தூண்டப்பட்டவளாய் எல்லாபோகங்களையும் விட்டுவிட்டு துக்கங்களை நினையாமல் ஏகாந்தமான காட்டை அடைந்தாள்.*

ஈடு. *(தி—வாய். 6-7 ப்ரவேசம்) [ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய]—தான் பண்டு விரும்பியிருக்குமவற்றோடு பெற்றவர்களோடு வாசியறப் பொகட்டுப்போனுள். [பரித்யஜ்ய]—மீண்டுமிவற்றிலே நசை பண்ணுமென்று தோற்றுதபடி விட்டாள். [பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா]—ஒரு விஷயத்தில் ஸ்நேஹமானது எல்லாவற்றையும் விடப் பண்ணுமாகாதே. ஸ்வவசத்தாலே போனுளன்று கிடீர். [அசிந்தயித்வா துஃக்காநி]—விட்டவற்றை நினையாவிட்டால், போய்ப் புகுகிறவிடத்தில் மிறுக்கைத் தான் நினையா நின்ருளோ. இவள் பெருமானையொழியத் தன்னைக் காணிலிறே துக்காநுஸந்தாநம் பண்ணவல்லளாவது. [ப்ரவிஷ்டா நிர்ஜநம் வநம்]—போகத்துக்கு ஏகாந்தஸ்தலம் என்னுமதுவே கிடீரிவள் நெஞ்சில் பட்டது.*

८. नैषा पश्यति राक्षस्यो नेमान्पुष्पफलद्रुमान् ।
एकस्थहृदया नूनं राममेवानुपश्यति ॥

நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந்,
ஏகஸ்த்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி. 16-25 8

*இந்த ஸீதை ராக்ஷஸிகளைக் காணுகிறதில்லை. இந்த பூவும் பழமுமுள்ள மரங்களையும் காணுகிறதில்லை. ஓரேவிடத்தில் நிறுத்திய மனத்தையுடையவளாய் ராமனையே நிச்சயமாய் காண்கிருள்.*

ஈடு. *(தி—வாய். 5-5-5.) [நைஷா பச்யதீத்யாதி]—ராக்ஷஸீ தர்சநத்தோடு புஷ்பபலத்ரும தர்சநத்தோடு வாசியற்றிருக்கிறது காணுமிவளுக்கு. [ஏகஸ்த்தேத்யாதி]—அருகிருந்தவர்களையும் பாராளாயிற்று.*

९. इमामसितकेशान्तां शतपत्रनिभेक्षणाम् ।
सुखार्हां दुःखितां दृष्ट्वा ममापि व्यथितं मनः ॥

இமாமஸித கேசாந்தாம் சதபத்ரநிபேக்ஷணும்,
ஸுகார்ஹாம் துஃக்கிதாம் த்ருஷ்ட்வா மமாபி வ்யதிதம் மநஃ. 16-23 9

கருத்த கூந்தல் நுனியுள்ளவளும், தாமரைப்பூபோன்ற கண்ணுடையவளும் ஸுகத்திற்குரியவளுமாகிய இந்த ஸீதையை துக்கப்படுகிறவளாகக் கண்டு என்னுடையவும் மனம் வருந்துகிறது.

ஈடு. (தி—வாய். 5-9-1.) [இமாமஸிதகேசாந்தாம்]—மைவண்ணநறுங்குஞ்சியையுடையவர்க்கும் பேணத்தகும் குழலையுடையவள் கிடீர். [சதபத்ரநிபேக்ஷணும்]—'கமலபத்ராக்ஷ:' என்கிற கண்களாலே கண்டுகொண்டிருக்கத் தக்க கருங்கண்ணையுடையவள் கிடீர். [ஸுகார்ஹாம்]—அவர் மடியிலே இருக்கத்தகுமவள். [து:க்கிதாம் த்ருஷ்ட்வா]—இவ்விருப்பு இருக்கத்தகாதவளைக்கண்டு [மமாபிவ்யதிதம் மந:]—சோகஹர்ஷங்களுக்கு அழியாத என்னுடைய நெஞ்சையும் வருத்திற்றுக் கிடீர்.

१०. हिमहतनलिनीव नष्टशोभा व्यसनपरम्परयाऽतिपीड्यमाना ।
सहचररहितेव चक्रवाकी जनकसुता कृपणां दशां प्रपन्ना ॥

ஹிமஹதநலிநீவ நஷ்டசோபா வ்யஸநபரம்பரயாதிபீட்யமாநா,
ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதாக்ருபணும் தசாம் ப்ரபந்நா. 16-30

ஸீதை பனியால் தாக்கப்பட்ட தாமரைப் பொய்கையைப்போல சோபை இழந்தவளாய் துக்க பரம்பரையால் மிகவும் பீடிக்கப்பட்டவளாய் கணவனைப் பிரிந்த பெண்சக்ரவாகப்பக்ஷியைப்போலே வருந்தத்தக்க நிலைமையை அடைந்தாள்.

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [ஹிமஹதநலிநீவ நஷ்டசோபா]—பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக் கலந்துபோந்த இவளுக்கு வந்தேறியான பிரிவிறே, அத்தாலே அழகழிந்திருந்தாள். [வ்யஸநபரம்பரயா]—பிரிவோபாதி கலவியும் வந்து கழியப் பெற்றதில்லை. [அதிபீட்யமாநா]—ஆச்ரயத்தினளவல்லாதபடியாயிருக்கை. [ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ]—வருமளவும் உணர்ந்து பொறுத்திருக்க மாட்டாதிருக்கை. அவற்றின்படி அங்ஙனேயிறே. [ஜநகஸுதா]—'இவை வரும்' என்று வளரப்பெற்றதில்லை. [க்ருபணும் தசாம் ப்ரபந்நா]—கீழ்ச்சொன்ன இவை யொன்றும் ஒப்பாகமாட்டாது; சில சொல்லிற்றுமித்தனை.

११. दहन्तीमिव निश्वासैर्वृक्षान्पल्लवधारिणः ।
தஹந்தீமிவ நிச்வாஸைர்வ்ருக்ஷாந் பல்லவதாரிண:. 17-29 11

தளிர்களைத் தாங்கிநிற்கின்ற மரங்களை பெருமூச்சுகளால் கொளுத்துகிறவள் போலிருக்கிற (ஸீதையைக்கண்டு ஹநுமான் ஸந்தோஷத்தை அடைந்தான்).

பே—வ்யா. (திருநெடுந்தாண்டகம். 12.) திருவடி லௌகிகாக்நியாலே ஊரைச் சுட்டான், இவள் விரஹாக்நியாலே அசோகவநிகையைச் சுட்டாள்.

ஈடு. (தி—வாய். 7-2-2) நெடுமூச்சாலே தன்பகை அறுக்கப் பாராநின்றாள். பல்லவதாரிகளாயிருக்கை அப்போதிவளுக்குப் பகையிறே. ஒருபடிப்பட நின்று நலிகிறபடியிறே அவை. ராக்ஷஸிகள் உறங்கும்போதும் உண்டிறே, உருவ இப்படியே நிற்கிறவித்தனை அவை.

१२. मित्रमौपयिकं कर्तुं रामः स्थानं परीप्सता ।
वधं चानिच्छता घोरं त्वयाऽसौ पुरुषर्षभः ॥

மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா,
வதம் சாநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப:. 21-19 12

ஸ்திதியை விரும்புகிறவனும் கொடுமையான வதத்தை விரும்பாதவனுமான உன்னால் புருஷ சிரேஷ்டரான இந்த ராமன் நண்பனாகச் செய்துகொள்ளத் யானவர்.

பே—வ்யா. (பெருமாள் திருமொழி. 5-5) அன்று கண்டாப்போலே கையும் வில்லுமாய் நிற்பர். அவனுக்கு அச்சத்தாலே, தமக்கு உருவு வெளிப்பாட்டாலே முன்னே நிற்பர். தீரக்கழிய அபராதம் செய்த எனக்கு அவர் க்ருபை பண்ணுவரோ என்று அவனுக்கு நினைவாகக் கொண்டு, [புருஷர்ஷப:]—நீ அனுகூலனாய் ஓரடி வர நின்றால் அத்தையே நினைத்து நீ பண்ணின அபராதமெல்லாம் புத்தி பண்ணுவரோ; அவர் புருஷோத்தமர்காண்.

(ஈடு. தி—வாய். 3-6. ப்ரவேசம்) [மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம:]—'பெருமானை நீ சரணம் புகு' என்றால் அப்பையல் அது தனக்கு எளிவரவாக நினைத்திருக்குமே; அதுக்காகத் தோழமை கொள் என்கிறாள். தங்களைச் சரணம் புக்காரை தங்களிற்காட்டில் குறைய நினைப்பதில்லையே இவர்கள். 'மித்ரபாவேந' என்றும், 'மித்ர மௌபயிகம் கர்த்தும்' என்னுமிறே இருவர் படியும். [ஸ்தாநம் பரீப்ஸதா]—வழியடிப்பார்க்கும் தரையிலே கால் பாவி நின்று வழியடிக்கவேணுமே. உனக்கு ஓரிருப்பிடம் வேண்டியிருந்ததாகிலும் அவரைப் பற்றவேணுங்காண். எளிமையாக எதிரிகாலிலே குனிந்து இவ்விருப்பு இருப்பதில் பட்டுப்போக அமையுமென்றிருந்தாயோ—[வதம்சாநிச்சதா கோரம்]—அப்படி உன்னை நற்குலைப்பட விடுவரோ. உன்னை வைத்து உன் முன்னே உன் ஸந்தானஜாதரை ஹிம்ஸித்துப் பின்னை உன்னை சித்ரவதம் பண்ணுகையாகிற இவ்வதத்தை இச்சித்திலையே யாகிலும் அவரைப் பற்றவேணும் காண். [த்வயா]—உன்னிலை இருந்தபடியால் விசேஷித்து உனக்கு அவரைப் பற்றவேணும். [அஸௌ]—உருவெளிப்பாட்டாலே முன்னிலையாயிருக்குமிறே இவளுக்கு. அவனுக்குந்தானே மாயாம்ருகத்தின் பின்னே போகிறபோது கண்டகாட்சியாலே அச்சத்தாலே எப்போதும் முன்னிலையாயிருப்பரிறே. [புருஷர்ஷப:]—'நான் பண்ணின அபகாரத்துக்கு என்னை அவர் கைக்கொள்ளுவரோ' என்றிருக்கவேண்டா, இவற்றை ஒன்றாக நினைத்திரார் காண். அவர் புருஷோத்தமர் காண். அஸௌ புருஷர்ஷப: ராம: த்வயா மித்ரம் கர்த்தும் ஔபயிகம்.

ஈடு. (தி—வாய். 8-1-1) [மித்ரமௌபயிகம்]—ராவணன் பிராட்டி முன்பே நின்று சிலவற்றை ஜல்பிக்கப் புக்கவாறே, ப்ரஜை நலிந்ததென்னத் தாய் சீறுளிறே ஜநநியான முறையாலே, அவன் அநர்த்தங் கண்டு ஹிதமருளிச் செய்கிறாள். 'அவர் திருவடிகளிலே சரணம் புகு' என்றால் அவன் தாழ்வாக நினைத்து இசையானென்னுமத்தாலே தோழமை கொள்ளென்கிறாள். அவர் 'மித்ரபாவேந' என்பர். இவள் 'மித்ர மௌபயிகம்' என்னும். அவ்வருகு போனாலும் பரமஸாம்யாபத்தியிறே கொடுப்பது. எனக்கு சத்ருவாயிருப்பாரோடு உறவு பண்ணவேண்டுகிறதென்னென்னுமே—[ஸ்தாநம் பரீப்ஸதா]—கெடுவாய் 'வழிபறிப்பார்க்கும் தறையிலே கால் பாவிநின்று கொள்ளவேணுமே. உன் குடியிருப்பை ஆசைப் பட்டாயாகில் இத்தனையும் செய்யவேணும். எனக்கு ஒரு குடியிருப்பு வேணுமோ? ஆகாச சாரிகளாயன்றோ நாங்களிருப்பது என்று அவனுக்கு நினைவாக-[வதம்சாநிச்சதா]—அவரம்புகள் ஆகாசத்திலே நடவாதோ. [கோரம்]—உன்னைச் சிங்கவிளக்கெரித்துக் கொல்லாதே நற்குலையாகக் கொல்லும்போதும் அவரைப் பற்றவேணும் காண். [த்வயா]—பல சொல்லி என்? உனக்கு அவர் வேணும். [அஸௌ]—அவர்படி உனக்குத் தோற்றுகிறதில்லையோ? உருவு வெளிப்பாட்டாலே முன்னிலை இவளுக்கு; அச்சத்தாலே முன்னிலையாகத் தோற்றுமவனுக்கு. தீரக்கழிய அபராதம் பண்ணி நிற்கிற என்னைக் கைக்கொள்ளுவரோ என்ன—[புருஷர்ஷப:]—நீ செய்தவற்றை ஒன்றாக நினைத்திருப்பாரொருவரல்லர், புருஷோத்தமர் காண்.

१३· ख्यातः प्राज्ञः कृतज्ञश्च सानुक्रोशश्च राघवः ।

सद्वृत्तो निरनुक्रोशः शङ्के मद्भाग्यसङ्क्षयात् ॥

க்யாதஃ ப்ராஜ்ஞஃ க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவஃ,

ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசஃ சங்கே மத்பாக்யஸம்க்ஷயாத். 26-13 13

புத்திமானுகவும் நன்றி அறிவுள்ளவராகவும் தயையுள்ளவராகவும் நன்னடத்தை யுள்ளவராகவும் பிரஸித்தி பெற்ற ராமன் எனது பாக்கியக் குறைவினுல் கிருபை யில்லாதவராக (இருக்கிருரென்று) ஸந்தேஹிக்கிறேன்.

ஈடு. (தி—வாய். 8-1. ப்ரவேசம்) [ப்ராஜ்ஞஃ]—தம்மாலே அபிமதம் பெற இருப்பார் அறிவிற்குறைவால் இழக்கவேண்டாதபடி தம்மளவையும் அவர்களளவையும் அறிகைக்கீடான அறிவுடையவர். [க்ருதஜ்ஞஃ]—கிட்டுமவன் தன் பக்கல் வைமுக்யம் பண்ணுமது தவிர்ந்து ஓரடிவர நின்ற வெல்லேயுமறிவர். [ஸாநுக்ரோசச்ச]—அறிவுகொண்டு காரியம் கொள்ளவுமறியாதே யிருக்குமவர்களுக்கு அவர்களிழவை அநுஸந்தித்து ஐயோ என்றிரங்குமவராயிருப்பர். [ராகவஃ]—இது இவர் தம்மைத் தோற்றிவந்ததல்ல, குடிப்பிறப்பாலே. [ஸத்வ்ருத்தஃ]—பரஸம்ருத்த்யேகப்ரயோஜநராயிருப்பர். [க்யாதஃ]—இப்படி எதிரிகள் கோஷ்டியிலும் ப்ரஸித்தர். [நிரநுக்ரோசஃ சங்கே]—இக்குணங்களையுடைய பெருமாளை இத்தசையில் எனக்கு முகங்காட்டக் காணுமையாலே, இக்குணங்களொன்றுமில்லாத ந்ருசம்ஸரோபாதியாக சங்கியா நின்றேன். அவர்க்கு இக்குணங்களுண்டாகாதொழியாதிறே. [மத்பாக்யஸம்க்ஷயாத்]—என்னுடைய பாக்யஹாநியாலேயாமித்தனையிறே.

१४. पक्षी च शाखानिलयः प्रहृष्टः पुनःपुनश्चोत्तमसान्त्ववादी ।

सुस्वागतां वाचमुदीरयानः पुनःपुनश्चोदयतीव हृष्टः ॥

பக்ஷீச சாகாநிலயஃ ப்ரஹ்ருஷ்டஃ புநஃபுநச்சோத்தமஸாந்த்வவாதீ,

ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாநஃ புநஃபுநச்சோதயதீவ ஹ்ருஷ்டஃ. 27-51 14

கிளையிலிருக்கின்ற பக்ஷியும் மிக்க ஸந்தோஷமுள்ளதாய் மறுபடியும் மறுபடியும் சிறந்த நல்லவார்த்தைகளைப் பேசுகிறதாய் அழகியநல்வரவைத்தெரிவிக்கின்ற வார்த்தையைக் கூறுகிறதாய் மயிர்க்கூச்சலெடுத்ததாய் இருந்துகொண்டு அடிக்கடி தூண்டுகிறதுபோலும்.

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [பக்ஷீச]—பக்ஷியானது சிறகை விரித்தது. [சாகாநிலயஃ]—உலர்ந்த கொம்பிலன்றிக்கே, பசுமையையுடைத்தான பணையிலே இருந்தது. வ்ருக்ஷத்தை வலமாக வந்து, தழைத்த பணையிலே நற்றரிக்கவிருந்தது. [ப்ரஹ்ருஷ்டஃ]—அங்குள்ள பலாதிகளை புஜிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படியிருந்தது. [புநஃபுநச்சோத்தம ஸாந்த்வவாதீ]—மேன்மேலான நல்வார்த்தைகள் சொல்லத் தொடங்கிற்று. அதுக்குமேலே, [ஸுஸ்வாகதாம்வாசமுதீரயாநஃ]—இவ்வளவல்ல கிடாய் அத்தலை பட்டது என்று சொல்லுமாபோலேயிருந்தது. [புநஃபுநச்சோதயதீவ]—வரவு நிச்சிதமானபின்பு, குளித்தல் ஒப்பித்தல் செய்யாதிருக்கிறது என்னென்று சொல்லுமாபோலேயிருந்தது. [ஹ்ருஷ்டஃ]—வந்தால் பிறக்கும் வேறுபாடு தோற்ற உடம்பு மயிரெறிந்திருந்தது.

१५. हा राम हा लक्ष्मण हा सुमित्रे हा राममातः सह मे जनन्या ।

एषा विपद्याम्यहमल्पभाग्या महार्णवे नौरिव मूढवाता ॥

ஹாராம! ஹாலக்ஷ்மண! ஹாஸுமித்ரே ஹாராமமாதஃ ஸஹமேஜநந்யா,

ஏஷா விபத்யாம்யஹமல்பபாக்யா மஹார்ணவே நௌரிவ மூடவாதா. 28-8

ஹா ராமா ஹா லக்ஷ்மணா ஹா ஸுமித்ரே என் தாயோடுகூட ஹா ராமனைப் பெற்ற தாயாகிய கௌஸல்யையாரே பாக்கியம் குறைந்த இந்த நான் பெருங்கடலில் சுழற்காற்றில்பட்ட ஓடம்போல நசிக்கின்றேன்.

பே—வ்யா. (திருநெடுந்தாண்டகம். 16) ஹா ராம என்று போக்யவஸ்துவை நினையா, ஹா லக்ஷ்மண என்று புஜிப்பாரை நினையா, ஹா ஸுமித்ரே என்று நிமித்த பூதரை நினையாக் கூப்பிட்டாளிறே.

१६. अनन्यदैवत्वमियं क्षमा च भूमौ च शय्या नियमश्च धर्मे ।
पतिव्रतात्वं विफलं ममेदं कृतं कृतघ्नेष्विव मानुषाणाम् ॥ 28-12

அநந்யதைவத்வமியம் க்ஷமாச பூமௌச சய்யா நியமச்ச தர்மே,
பதிவ்ரதாத்வம் விபலம் மமேதம் க்ருதம் க்ருதக்நேஷ்விவமாநுஷாணாம்.

என்னுடைய இந்த இவரையே தெய்வமாக நினைத்திருத்தலும் இந்த பொறுமையும் இந்த தரையில் படுக்கையும் தர்மத்தில் உறுதியும் இந்த பதிவ்ரதத்தன்மையும் மனிதர்களுக்குள் நன்றியறிவில்லாதவர்கள் விஷயத்தில் செய்யப்பட்ட காரியம் போல பயனற்றது.

ஈடு. (தி—வாய். 4-6-10) [அநந்யதைவத்வம்]—'வேறே ஒரு ஆச்ரயதேவதை உண்டு அது ரக்ஷிக்கிறது' என்று நினைக்க விரகில்லை கிடீரெனக்கு. 'ஸஹபத்ந்யா' என்று பெரிய பெருமாள் திருவடிகளில் இவர் புகும்போதும் இவர்க்கு எடுத்துக்கை நீட்டப் புகுமத்தனை போக்கி, பெரியபெருமாள் தாமுத்தேச்யமாகப் புக்கறியேன். [இயம் க்ஷமாச]—ராவணனுடைய ஜல்பங்களையும் ராக்ஷஸிகளுடைய தர்ஜநபர்த்ஸநங்களையும் பொறுத்திருந்ததும் 'அவரது ஒரு இன்சொல் கேட்கலாம்' என்று கிடீர். [பூமௌசசய்யா]—இத்தரைக்கிடை கிடந்ததும் 'தவாங்கே ஸமுபாவிசம்' என்கிற படியே 'அவர்மடியிலிருப்பு ஒருகால் ஸித்திக்குமோ' என்னுமத்தாலே கிடீர். [நியமச்சதர்மே]—'ரக்ஷகத்வதர்மம் அவர் தலையிலே' என்னுமத்தாலே கிடீர் நானிருந்தது' 'நத்வாகுர்மிதசக்ரீவ பஸ்மபஸ்மார்ஹ தேஜஸா' என்றதும் அவரைப் பார்த்து. [பதிவ்ரதாத்வம்]—'ஏதத்வ்ரதம் மம' என்று அவருடைய வ்ரதமொழிய, எனக்கு என்ன ஒரு ஸங்கல்பத்தை உண்டாக்கி இவற்றை அழிக்க நினைத்திலேன்கிடீர். [விபலம் மமேதம்]—தப்பாதவையும் தப்பிற்றன. ஆர்க்குப்போலே என்னில், [மாநுஷாணாம் க்ருதக்நேஷுக்ருதமிவ]—'ஆத்மாநம்மாநுஷம்மந்யே' என்று அவர்க்கு முண்டிறே மனிச்சு; அவரை ஒழிந்தார்திறத்துச் செய்தவற்றுப்போலே நிஷ்பலமாய் விழுந்தது. தப்பாதது தப்பிற்று. அதுக்கு அடி என்னென்னில், [மமேதம்]—அவர்பக்கல் குறையில்லை; அதுக்கு இலக்கு நானுகையாலே.

१७. विषस्य दाता नहि मेऽस्ति कश्चिच्छस्त्रस्य वा वेश्मनि राक्षसस्य ॥ 28-16

விஷஸ்ய தாதா நஹி மேஸ்தி கச்சித் சஸ்த்ரஸ்யவா, வேச்மநி ராக்ஷஸஸ்ய.

ராவணனுடைய வீட்டில் எனக்கு விஷத்தையாவது ஆயுதத்தையாவது கொடுக்கின்றவனாக யாதொருவனும் இல்லையே.

ஈடு. (தி—வாய். 5-4 ப்ரவேசம்) [விஷஸ்யதாதா]—இத்தனை நற்சரக்குத் தரும் உதாரரை இவ்வூரில் கிடைக்குமோ. [மே]—உண்டானால்தான் எனக்கு இது ஸம்பவிக்குமோ? [சஸ்த்ரஸ்ய வா]—விஷம்போலே சிறிது நின்று கொல்லுமதின்றியே கடுக முடிக்கும் சஸ்த்ரத்தைத்தான் தருவாருண்டோ. [வேச்மநி ராக்ஷஸஸ்ய]—பிரித்து வைத்து உயிர்க்கொலையாக நலிகிறவனுடைய ஊரிலே, நற்குலைக்குப் பரிகரமானத்தைத் தான் தருவாருண்டோ.

२८. नगोत्तमं पुष्पितमाससाद ।

நகோத்தமம் புஷ்பிதமாஸஸாத. 28-17

*(ஸீதை) பூத்திருக்கிற சிறந்த விருக்ஷத்தை அடைந்தாள்.*

பெ—வ்யா. *(பெரியதிருமொழி. 3-6-1) எரிகிற நெருப்பைச் சென்று கிட்டு வாரைப்போலே; ஓங்கிப் பரப்படங்கலும் புஷ்பமேயாய்க் கிடக்கை. [ஆஸஸாத]— தன் ஜீவநத்திலே நைராச்யம் விளைந்தமை தோற்றியிருக்கிறது.*

பெ—வ்யா. *(நாச்சியார் திருமொழி 9-5) [நகோத்தமம் புஷ்பிதமாஸஸாத]— ஆற்றாமை கரைபுரண்டால் தீப்பாய ஒருப்படுமாபோலே. 'நேமாங் புஷ்பபலத்ருமாங்' என்னும்படியிறே இவளுக்கு இருக்கிறது.*

२९. तथागतां तां व्यथितामनिन्दितां व्यपेतहर्षां परिदीनमानसाम् ।
शुभां निमित्तानि शुभानि भेजिरे नरं श्रिया जुष्टमिवोपजीविनः ॥

ததாகதாம்தாம் வ்யதிதாமநிந்திதாம் வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம்,
சுபாம் நிமித்தாநி சுபாநி பேஜிரே நரம் ச்ரியா ஜுஷ்டமிவோபஜீவிநః. 29-1

*அவ்வித நிலைமைக்கு வந்தவளும் வருத்தப்படுகிறவளும் குற்றமற்றவளும் ஸந்தோஷம் நீங்கியவளும் மனத்தளர்ச்சி யடைந்தவளும் மங்களமானவளுமான அந்த ஸீதையை லக்ஷ்மியால் அடையப்பட்ட மனிதனை அண்டிநிற்பவர்கள்போல மங்களங்களான சகுனங்கள் அடைந்தன.*

ஈடு. *(தி—வாய். 6-2 ப்ரவேசம்) [ததாகதாம்]—'ரஹஸ்யம்ச ப்ரகாசம்ச' என்று கொண்டு ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே உள்ளபடியெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையனை ரிஷிக்குப் பாசுரமிட்டுச்சொல்லவொண்ணுதபடியிருக்கிறபடி. [தாம்]—தர்மிக்கு மேற்பட அவ்வருகொன்றின்றிக்கேயிருக்கை. [வ்யதிதாம்]— கீழ்ச்சொன்னவை ப்ரக்ருதியாய், வ்யஸனமுள்ளது மேலே என்று தோற்றும்படியாயிருந்தாள். 'ஸமா த்வாதச தத்ராஹம்' என்று பன்னிரண்டாண்டுகலந்து பிரிந்த இவளுக்கு அதொன்றும் தோற்றுதே, துக்கத்தையிட்டு நிரூபிக்கவேண்டும்படியாயிருந்தாள். [அநிந்திதாம்]—அத்தலையைப் பிரிந்தாலிருக்கக்கடவபடியேயிருந்தாள். இப்படியிராதவன்று நிந்திதையேயாகாதே. [வ்யபேதஹர்ஷாம்]—'ஹர்ஷம் குடிபுகுந்து போயிற்று' என்று தெரியாதாயிருக்கை. [பரிதீநமாநஸாம்]—ஹர்ஷம் வந்தாலும் ஆச்ரயமின்றிக்கேயிருக்கை. [சுபாம்]—மண்தின்றுவந்த நகடுபோலன்றிறே குணாதிக விஷயத்தைப் பிரிந்தாலிருக்கும்படி. கடலேறிவடிந்தாப்போலேயிருக்கிற அவ்விருப்பு தனக்கே ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கை. [நிமித்தாநிசுபாநிபேஜிரே]—நிமித்தங்களானவை இத்தலைக்கு நன்மை சொல்லித் தந்தாம் ஸ்வரூபம் பெற்றன. [நரம் ச்ரியாஜுஷ்டமிவோபஜீவிநஃ]—ஸாக்ஷாத் லக்ஷ்மிக்குக் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெற்றன. என்போல வென்னில், அர்த்திகளாயிருப்பார் உதாரர்பக்கலிலே சென்று தந்தாம் ப்ரயோஜநம் பெற்று ஹ்ருஷ்டராமாபோலே. இப்படியாயிருந்தன நிமித்தங்களினளவு.*

३०. सा तिर्यगूर्ध्वं च तथाप्यधस्तान्निरीक्षमाणा तमचिन्त्यबुद्धिम् ।
ददर्श पिङ्गाधिपतेरमात्यं वातात्मजं सूर्यमिवोदयस्थम् ॥

ஸா திர்யகூர்த்வஞ்ச ததாப்யதஸ்தாத் நிரீக்ஷமாணு தமசிந்த்யபுத்திம்,
ததர்ச பிங்காதிபதேரமாத்யம் வாதாத்மஜம் ஸூர்யமிவோதயஸ்தம். 31-19

அந்த ஸீதை குறுக்காகவும் உயரத்திலும் அவ்வாறு கீழிலும் பார்த்தவளாய் அறியமுடியாதபடி புத்தியின் ஆழமுள்ளவனும் வானரராஜனுகிய ஸுக்ரீவனுக்கு மந்திரியும் வாயுபுத்ரனுமாகிய அந்த ஹனுமானை உதயகிரியிலுள்ள ஸூரியனைப்போல் கண்டாள்.

ஈடு. (தி—வாய். 2-4-1) [ஸா திர்யகூர்த்வஞ்ச ததாப்யதஸ்தாத்]—நினைவின்றிக்கேயிருக்கச்செய்தே வாராத்திருநாமம் செவிப்பட்டவாறே, விலங்கப் பார்ப்பது, மேலே பார்ப்பது, கீழே பார்ப்பதாளுள். கீழ்ப் பார்த்ததுக்குக் கருத்தென்னென்னில், 'பூமியைப் பிளந்துகொண்டு புறப்பட்டு ஒருவன் திருநாமம் சொல்ல ஸம்பாவனை உண்டாகில், அல்லாத திக்குகளிலுமுள்ளது' என்று பார்த்தாள். அன்றிக்கே, மாஸோபவாஸிகள் 'சோறு' என்றவாறே அலமாக்குமாபோலே பார்த்தாளென்னுதல். அங்ஙனன்றிக்கே, சிம்சுபாவ்ருக்ஷத்தை எங்குமொக்கப் பார்த்தாளென்னுதல். [ததர்சிந்த்ய புத்திம் ததர்ச]—அவன் வடிவு காண்பதற்கு முன்னே அகவாயை ஆயிற்று பரிச்சேதித்தது—'இந்நிலத்திலே புகுந்து இடங்கொண்டு நாமிருந்தவிடம் துருவி நிலைகுத்தவல்ல நெஞ்சையுடையவனன்றோ' என்று. [பிங்காதிபதேரமாத்யம்]—'இவன் ஸ்வதந்த்ரனல்லன், ராஜகார்யமிவன் கையிலே உண்டு என்றறிந்தாள். [வாதாத்மஜம்]—பெருமாளுக்கு ப்ராணங்களைக் கொடுக்கையாலே 'இவன் ஸர்வர்க்கும் பிராணஹேதுவான வாயுபுத்ரன்' என்று தோற்றவிருந்தான். [ஸூர்யமிவோதயஸ்த்தம்]—லங்கையிலும் கிழக்கு வெளுக்க அடியிட்டது. 'பெருமாளாகிற ஆதித்யோதயத்துக்கு அருணோதயம்' என்னலாம்படி இருந்தான். ஆகையிறே லங்கை நாலுமதிலுக்கு நடுவு 'ஹரி ஹரி' என்றபடியே இருக்கிறது.

२१. किमर्थं तव नेत्राभ्यां वारि स्रवति शोकजम् ।
पुण्डरीकपलाशाभ्यां विप्रकीर्णमिवोदकम् ॥

கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி சோகஜம்,
புண்டரீகபலாசாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம். 33-4. 21

தாமரையிதழ்களிலிருந்து உதிருகிற ஜலத்தைப்போல உம்முடைய கண்களிலிருந்து துக்கத்தாலுண்டான ஜலம் எதற்காக பெருகுகிறது.

ஈடு. (தி—வாய். 2-4-1) [கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி சோகஜம்]—'ஆநந்தாச்ருவுக்கு யோக்யமான கண்களாலே சோகாச்ரு ப்ரவஹிக்கிறது ஆர்குடிவேரற' என்று பட்டரருளிச்செய்யும்படி. அன்றிக்கே, பிள்ளான் 'ஆரை சேதநராகக்கொண்டு' என்று பணிக்கும். [புண்டரீகபலாசாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம்]—பாவியேன், இவ்வரவு உடைய பெருமாள் வரவாய்க் காணப் பெற்றதில்லை.

२२. स्नुषा दशरथस्याहं शत्रुसैन्यप्रतापिनः ॥

ஸ்னுஷா தசரதஸ்யாஹம் சத்ருஸைந்ய ப்ரதாபிந:. 33-16. 22

நான் பகைவர்களின் ஸைந்யத்தைத் தவிக்கச்செய்கின்ற தசரதருக்கு நாட்டுப் பெண்.

ஈடு. (தி—வாய். 5-3-6) [ஸ்நுஷாதசரதஸ்யாஹம்]—பிராட்டி தனக்குப் பேற்றுக்குடலாக நினைத்திருப்பது 'சக்ரவர்த்தி மருமகள்' என்னுமித்தையே காணும். [சத்ருஸைந்யப்ரதாபிநஃ]—எங்கள் மாமனார் உண்டாகில் எனக்கு இவ்விருப்பு இருக்கவேணுமோ? சத்ருக்களும் ஜீவிக்க, ஜீவித்தவரோ அவர்.

२३. समा द्वादश तत्राहं राघवस्य निवेशने ।
भुञ्जाना मानुषान् भोगान् सर्वकामसमृद्धिनी ॥

ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே,
புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ. 33-18. 23

*நான் அங்கு ராமனுடைய க்ருஹத்தில் பன்னிரண்டு வருஷங்கள்முடிய மனிதர்களுக்குரிய போகங்களை அநுபவித்தவளாய்க்கொண்டு எல்லாவிதவிருப்பமும் பூர்த்தியடையப் பெற்றவளாய் ஆயிருந்தேன்.*

*ஈடு. (தி—வாய். 7-3 ப்ரவேசம்) [ஸமா த்வாதச தத்ராஹம்]—இப்போது காதாசித்கதர்சநங்கூட அரிதாம்படியிருக்கிற நான், முன்பு சிரகாலம் அவரோடே அநுபவிக்கப்பெற்றேன் காண். [ராகவஸ்ய நிவேசநே]—எங்கள் மாமனாருடைய மாளிகையிலே அவர் தண்ணீர்த் துரும்பு அறுத்துத்தர நெடுங்காலம் அநுபவித்தேன். [புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ]—'ஸர்வாந் காமாந்' என்கிறபடியே எல்லாமநுபவிக்கப் பெற்றேன். அப்படியுமன்றிறேயிங்கு. 'பஹவோ ந்ருப கல்யாணகுணாঃ' என்று குணங்கள் இரட்டித்தவிடமிறே இது.*

२४. प्रागेव तु महाभाग: सौमित्रिर्मित्रनन्दन: ।
पूर्वजस्यानुयात्रार्थे द्रुमचीरैरलंकृत: ॥

ப்ராகேவது மஹாபாகঃ ஸௌமித்ரிர் மித்ரநந்தநঃ,
பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருதঃ. 33-29. 24

*மஹாபாக்கியவானும் நண்பர்களை மகிழ்விப்பவருமான லக்ஷ்மணரோ தமையனுடைய பின்னோடு செல்வதற்காக முன்னதாகவே மரவுரிகளாலே அலங்கரிக்கப்பட்டார்.*

பே—வ்யா. *(பெரிய திருவந்தாதி. 1) [ப்ராகேவது மஹாபாகঃ]—பெருமாளுக்கு மரவுரி கொடுத்தன்றோ இளையபெருமாளுக்குக் கொடுத்தது; இவரை 'ப்ராகேவ' என்பானென்னென்னில், 'தீப்தமக்நிமரண்யம் வா யதிராமঃ ப்ரவேக்ஷ்யதி ப்ரவிஷ்டம் தத்ரமாம்தேவி' என்று இளையபெருமாளுக்கிருக்கும் படியாலே சொல்லிற்று. பெருமாள் 'பித்ருவசநபரிபாலநம் பண்ணவேணும்' என்று மரவுரி சாத்தினார்; அவர் உடுக்கப் புகுகிறாரென்று உடுத்தவர்படி; அது வேறொன்றன்றோவென்கிறது. [மஹாபாகঃ]—'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று ப்ரதிஜ்ஞைபண்ணினபடியே எல்லாவடிமையுஞ்செய்யலாம்படி திருவபிஷேகவிக்நம் பிறக்க பாக்யம் பண்ணினவர். [ஸௌமித்ரிঃ]—'ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய' என்று சொன்னவள் வயிற்றிலே பிறந்தவர். [மித்ரநந்தநঃ]—'பெருமாளைப் பிரியாதே அடிமைசெய்யவேணும்' என்ற அநுகூலவர்க்கமெல்லாம் 'நாம் செய்யப் பெற்றிலோமேயாகிலும் இளையபெருமாள் எல்லாவடிமையுஞ்செய்யப்பெற்றாரிறே' என்று அநுகூலவர்க்கத்தை உகப்பிக்குமவர். [பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருதঃ]—பெருமாள் பின்னே ஸேவித்துப் போகைக்காக மரவுரி சாத்தி அத்தாலே அலங்க்ருதரானவர். பெருமாள் அபிஷேகம் தவிருகைக்கு மரவுரி சாத்தினார். இவர் கைங்கர்யஸாம்ராஜ்யத்துக்கு முடிசூடுகைக்கு மரவுரி சாத்தினார்.*

२५. स्वप्नेऽपि यद्यहं वीरं राघवं सहलक्ष्मणम् ।
पश्येयं यदि जीवेयं स्वप्नोऽपि मम मत्सरी ॥

ஸ்வப்நேபி யத்யஹம் வீரம் ராகவம் ஸஹலக்ஷ்மணம்,
பச்யேயம் யதி ஜீவேயம் ஸ்வப்நோபி மம மத்ஸரீ. 34-21. 25

நான் சூரனான லக்ஷ்மணனோடு கூடிய ராமனை ஸ்வப்நத்திலாவது பார்ப்பேனாகில் பிழைப்பேன், ஸ்வப்நமும் எனக்கு விரோதி.

பே—வ்யா. (நாச்சியார் திருமொழி. 6—1. ப்ரவேசம்) [ஸ்வப்நேபியத்யஹம் வீரம்]—ஸ்வப்நத்திலே கண்டாலும் துக்கநிவர்த்தகராக்கவல்லராய்த்து. [ராகவம் ஸஹலக்ஷ்மணம்]—பிரிகிறபோது இருவரையும் கூடப்பிரிகையாலே, காணுமிடத்திலும் இருவரையுங்கூடக் காணவேணுமென்றிறே ஆசைப்படுவது. அப்போது இருவரும் பிரிகையாலே, தங்களில் கூடினார்களோ இல்லையோ என்னும் அதிசங்கை பண்ணியிருக்குமே. [பச்யேயம் யதி ஜீவேயம் ஸ்வப்நோபி மம மத்ஸரீ]—என்னவஸ்தை அறிந்தும் முகம் காட்டாமைக்கு அவரேயன்றிக்கே இதுவும் என்னை நலியவேணுமோ.

२६. रामः कमलपत्राक्षः सर्वसत्त्वमनोहरः ।
रूपदाक्षिण्यसंपन्नः प्रसूतो जनकात्मजे ॥

ராமः கமலபத்ராக்ஷः ஸர்வஸத்த்வமநோஹரः,
ரூபதாக்ஷிண்யஸம்பந்நः ப்ரஸூதோ ஜநகாத்மஜே. 35-8. 26

ஓ ஸீதாய் ராமன் தாமரையிதழ்போன்ற கண்களையுடையவராய் எல்லா ப்ராணிகளுடைய மனதுக்கும் இனியராய் ரூபம் தாக்ஷிண்யம் இவைகள் நிரம்பியவராய் பிறந்தவர்.

ஈடு. (தி—வாய். 2-2-5) [ராமः]—ஸர்வாங்கஸுந்தரராயிருக்கை. [கமலபத்ராக்ஷः]—அதிலே ஒரு சுழியாயிற்று அமிழ்ந்துவார்க்கு வேண்டுவது. அக்கண்ணழகுக்கு எல்லை என்னென்னில், [ஸர்வஸத்த்வமநோஹரः]—திர்யக்ஜாதீயனாய்ப் பணையோடு பணை தத்தித் திரிகிற என்னெஞ்சையும் அபஹரித்ததன்றே. [ரூபதாக்ஷிண்ய ஸம்பந்நः ப்ரஸூதः]—தேஹகுணங்களாலும் ஆத்மகுணங்களாலும் குறையற்று, அதுதான் ஔத்பத்திகமாயிருக்கும். [ஜநகாத்மஜே]—'அற விஞ்சச் சொன்னாய், இனி இங்ஙன் சொல்லலாவாருண்டோ இல்லையோ' என்று பிராட்டிக்குக் கருத்தாக—[ஜநகாத்மஜே]—பின்னை உம்மைச்சொல்லலாம், நீருமுண்டு.

२७. स श्रुत्वा वानरेन्द्रस्तु लक्ष्मणेनेरितं वचः ।
तदासीन्निष्प्रभोऽत्यर्थं राहुग्रस्त इवांशुमान् ॥

ஸ ச்ருத்வா வாநரேந்த்ரஸ்து லக்ஷ்மணேநேரிதம் வசः,
ததாஸீந்நிஷ்ப்ரபோத்யர்த்தம் ராஹுக்ரஸ்த இவாம்சுமாந். 35-36. 27

அந்த ஸுக்ரீவனே லக்ஷ்மணனால் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு ராகு விழுங்கிய ஸூர்யனைப்போலே அப்போது மிகவும் ஒளியிழந்தவனாய் ஆனான்.

ஈடு. (தி—வாய். 5-3-2) [ததாஸீதித்யாதி]—'பெருமாளும் பிராட்டியுமான இருப்பிலே பிரிவு விளைந்தது' என்று இளையபெருமாள் மஹாராஜர்க்கு அறிவிக்க, அவ்வார்த்தை செவிப்பட, பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் இவருடம்பிலே மாறிற்றாயிற்று. [அத்யர்த்தம் நிஷ்ப்ரபः]—பிராட்டியைப் பிரிகையாலுண்டான ஆற்றாமையிறே பெருமாளுக்குள்ளது. இவர் தம்முடைய ஆற்றாமையைக் காண்கையாலும், பிராட்டியும் தாமுமாகச் சேரவிருக்கக் காணப் பெறாமையாலும் இவர்க்கவ்வளவன்றிக்கே மிக்கிருக்குமிறே. அபிதேயவசநமாயிற்று அர்த்தசப்தம். அத்யர்த்தமாவது—அபிதேயமல்லவென்கிறது.

२८. रामसुग्रीवयोरैक्यं देव्येवं समजायत ।

ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத. 35-52. 28

*ஸீதாதேவியாரே ! ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் ஒற்றுமை இம்மாதிரி உண்டாயிற்று.*

ஈடு. *(தி—வாய் 5-9-5) 'வானராணாம் நராணாம்ச கதமாஸீத் ஸமாகமஃ, குருகுலவாஸம் பண்ணுத திர்யக்குகளுக்கும் வஸிஷ்ட்டசிஷ்யர்களான ராஜபுத்ரர்களுக்கும் இதொரு சேர்த்தி உண்டானதெங்ஙனே ! சாஸ்தரவச்யரிறே குருகுலவாஸத்துக்கு யோக்யர். மேல் இதுக்கு அடிசொல்லுகிருன்—[ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத]—தங்களையுமறியாதே எங்களையுமறியாதே இங்ஙனே விழுந்து கொடுநிற்கக் கண்டோமித்தனை. அதாவது—இளையபெருமாள் கையும் வில்லுமாய் உணர்ந்துகொண்டு நின்று நோக்கக் கடவ அந்தப்புர கார்யத்துக்கு அடியேன் வரும்படியன்றோ அவர்கள் ஸங்கதரானபடி. இளையபெருமாள் அடிமையில்தப்பி நின்றவளவுக்கும் திருவடியைக் கொண்டு இழையிடவேண்டும்படியாகவிறே அவர் நிலவரானபடி. இளையபெருமாள் பேரநிற்கையிறே பிரியவேண்டிற்று. [ஏவம் ஸமஜாயத]—தங்களளவிலும் பெருக்கப் பார்த்தார்கள். ஐச்வர்யம் அவனுக்குக் காடுபடும்படியிறே பார்த்தது.*

२९. गृहीत्वा प्रेक्षमाणा सा भर्तुः करविभूषणम् ।
भर्तारमिव संप्राप्ता जानकी मुदिताऽभवत् ॥

க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்துஃ ணம்
பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதாபவத். 36-4. 29

*அந்த ஸீதை பர்த்தாவினுடைய மோதிரத்தை வாங்கி பார்த்தவளாய்க்கொண்டு பர்த்தாவை அடைந்தவள்போல ஸந்தோஷமுள்ளவளாக ஆனாள்.*

பெ—வ்யா. *(திருநெடுந்தாண்டகம். 15) பிராட்டி பெருமாளை ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷரூபத்தாலே அநுபவித்தாளிறே. [க்ருஹீத்வா]—தேசாந்தரம்போன பந்துக்களைக் கண்டாற்போலே மேல் விழுந்தாள். [ப்ரேக்ஷமாணா]—வைத்த கண் மாறாதே பார்த்துக்கொண்டிருந்தாள். [ஸா]—இவன் வரவை ராவணன் வரவாக சங்கித்தவள் கிடீர் இப்படி மேல் விழுந்தாளென்கிருன். [பர்த்துஃ கரவிபூஷணம்]—அடியில் தன்னைக் கைப்பிடிக்கிறபோது 'தன்கையிலுறுத்தின மோதிரத்தை. அங்ஙனன்றியே, தானும் அவரும் ஸம்ச்லேஷிக்கும்போது போகத்தின் மிகுதியாலே ப்ரணயரோஷம் தலையெடுத்து ஒருவரையொருவர் முகம் பாராதே ஊடியிருப்பார்கள். அப்போது இருவரையும்சேர்த்த மோதிரமென்னுதல். அதாவது—அப்போது நேர்முகம் பார்க்கையும் வார்த்தை சொல்லுகையும் இருவருக்கும் அபேக்ஷிதமாயிருக்கும்; வேறு சேர்ப்பாரில்லையாகையாலே கையில் திருவாழிமோதிரத்தைக் கழற்றி பெருமாள் தரையிலே விழவிடுவர். அப்போது தான் 'அம்மோதிரத்தை விழவிட்டீர்காணும்' என்னும் வார்த்தையை உண்டாக்கின மோதிரமாகையாலே கடகமான மோதிரமென்கிறது. [பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா]—திருவாழி மோதிரத்தைக் கண்டவாறே பெருமாள் கையை நினைத்தாள் அதுக்கு ஆச்ரயமான தோளையும் அதுக்காச்ரயமான வடிவையும் நினைத்தாள். ஸந்நிதியில் அவரைத் தழுவிக்கொள்ளுமாபோலே திருவாழிமோதிரத்தைத் தழுவிக் கொண்டாள். [பர்த்தாரமிவ]—அவள் பெருமாளாகவே தழுவிக்கொண்டாள். இவன் பர்த்தாவைப்போலே என்கிருன். [ஜாநகீ முதிதாபவத்]—ஸ்ரீ ஜநகராஜன்திருமகள் உகவா நின்ருள். உதர்க்கத்தில் என்னுய் விழப்புகுகிறதோ என்று பீதனுகிருன் ரிஷி.*

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா]—'ராவணன் மாயையாலே வந்ததோ' என்னும் பயத்தாலே முற்படக் கண்வைக்க மாட்டாதேயிருந்தாள்; 'அத்தலையாலே வந்தது' என்று தெளிந்தபின்பு கண்மாற வைக்கை அரிதாம்படியிருந்தாள். [ஸா ப்ரேக்ஷமாணா]—'பச்ய தேவி' என்று கொண்டு முன்பு பார்வைக்கு க்ருஷி பண்ணவேண்டும்படியிருந்தாள் தானே கண் மாறவைக்கைக்கு க்ருஷிபண்ணவேண்டும்படியாயிருந்தாள். [பர்த்துః கரவிபூஷணம்]—முதல் கைபிடிக்கிறபோது உறுத்தினபடியை நினைத்தாள். [கரவிபூஷணம்]—*அணி மிகு தாமரைக் கையிறே. ஆபரணத்துக்கு ஆபரணம் காணும். [பர்த்தாரமிவ]—இவன் இத்தைத் திருக்கையிலே கொடுத்தவாறே, இத்தோடேசேர்ந்த விரலையும் தோளையும் நினைத்தாள்; அந்நினைவு தான், தான் இக்கரையிலாளாகவும், அவர் அக்கரையிலாராகவும், கடல் இடையிலே கிடக்கிறதாகவும், அறிந்திலள்; ஒரு படுக்கையிலே கூடவிருந்ததாக நினைத்தாள். ஒரு சூது சதுரங்கங்களிலே தோற்றுத் தன் கையிலிருந்ததாக நினைத்தாள். 'இவ' என்கிறான் ரிஷி ஜநநீஸமாதியாலே. இவளுணர்ந்தால் என்படக்கடவளென்று. [ஜாநகீ]—சோகஹர்ஷங்களுக்கு இளையாத குடியிலே பிறந்தவள். [முதிதாபவத்]—ஹ்ருஷ்டையானாள்.

३०. ततः सा ह्रीमती बला भर्तुः संदेशहर्षिता ।
परितुष्टा विशालाक्षी (प्रियं कृत्वा) प्राशंसत महाकपिम् ॥

ததః ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்துஸ்ஸந்தேசஹர்ஷிதா,
பரிதுஷ்டா விசாலாக்ஷீ (ப்ரியம் க்ருத்வா) ப்ராசம்ஸத மஹாகபிம். 36-6.

பிறகு லஜ்ஜையுள்ளவளும் பாலையும் பர்த்தாவின் தூதுவார்த்தையால் மகிழ்விக்கப்பட்டவளுமான அந்த ஸீதை ப்ரியமான ஸம்மானத்தை செய்துவிட்டு ஸந்தோஷமுள்ளவளாய் பெரிய வாநரமான ஹநுமானை புகழ்ந்தாள்.

பேவ்யா. (பெரியதிருமொழி. 3-6-1) [ததః ஸா]—திருவடி ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லக் கேட்டவநந்தரம் உளளானாள். [ஹ்ரீமதீ]—'ஸதி தர்மிணி தர்மாச்சிந்த்யந்தே' இதி ந்யாயேந ஸத்தை உண்டாகா, உண்டாமது உண்டாயிற்று. [பாலா]—ஹர்ஷம் பொறுக்கவொண்ணாதவளாயிற்று. [பர்த்துః ஸந்தேசஹர்ஷிதா]—ரக்ஷகரான அவர்வார்த்தை கேட்டு ஹ்ருஷ்டையானாள். [பரிதுஷ்டா]—அந்த ஹர்ஷம் புறவெள்ளமிட்டபடி. [விசாலாக்ஷீ ப்ராசம்ஸத]—ஏத்தத் தொடங்கினாள். [மஹாகபிம்]—கடலைவற்ற இறைக்கக் கோலுவாரைப்போலே.

३१. कुशली यदि काकुत्स्थः किं नु सागरमेखलाम् ।
महीं दहति कोपेन युगान्ताग्निरिवोत्थितः ॥

குசலீ யதி காகுத்ஸ்த்தః கிம் நு ஸாகரமேகலாம்,
மஹீம் தஹதி கோபேந யுகாந்தாக்நிரிவோத்திதః. 36-13. 31

ககுத்ஸ்த வம்சத்தில்பிறந்த ராமன் க்ஷேமத்துடனிருப்பதாயிருந்தால் கோபத்தால் ப்ரளயகாலத்தீயைப் போல கிளம்பினவராய் ஸமுத்திரத்தை அரைநூன்மாலையாக உடைய பூமியைக் கொளுத்துகிறாரா (கொளுத்தவில்லையே).

ஈடு. (தி—வாய். 6-2. ப்ரவேசம்) [காகுத்ஸ்த்தః]—பரபரிபவம் பொறுத குடியிலன்றோ தாம் பிறந்தது. 'பிறர்க்கு வந்தவை பரிஹரிக்குமத்தனையல்லது, தமக்கு வந்தது பரிஹரிக்கலாகாது' என்றிருக்கிறாரோ. [கிம் நு ஸாகரமேகலாம் மஹீம் தஹதி]—'த்ரவத்ரவ்யத்துக்கு ஓரம்பும், கடினத்ரவ்யத்துக்கு ஓரம்பும் வேணும்' என்றிருக்கிறாரோ. கடலில் நீரே நெய்யாக எரிக்கவல்ல அம்புடையவரன்றோ. ஓக்கக்

கைபிடித்தவர்களாகிலும் பரிவட்டம் பேணியிருக்கும்படி வைத்தாரிறே, ராஜாக்களுக்கு பூமியும் ஸ்த்ரீபோலேயிறே. ஈச்வரர்கள் ஸ்ருஷ்டித்தபடி கிடப்பது இவர்கண் சிவக்குமளவுமாகாதே.

३२. न चास्य माता न पिता न चान्यः स्नेहाद्विशिष्टोऽस्ति मया समो वा ।
तावत्त्वहं दूत जिजीविषेयं यावत्प्रवृत्तिं शृणुयां प्रियस्य ॥ *36-30*

ந சாஸ்ய மாதா ந பிதா ந சாந்யஃ ஸ்நேஹாத் விசிஷ்டோஸ்தி மயா ஸமோவா,
தாவத்த்வஹம் தூத ஜிஜீவிஷேயம் யாவத் ப்ரவ்ருத்திம் ச்ருணுயாம் ப்ரியஸ்ய.

*இந்த ராமனுக்கு ஸ்நேஹத்தால் (என்னைவிட) மேற்பட்டவனாகவாவது என்னோடு துல்யனாகவாவது வேறொருவனும் இல்லை. தாயாரும் (இவ்வாறு) இல்லை. தகப்பனாரும் (இவ்விதம்) இல்லை. ஓ தூதனே எவ்வளவுக்குள் ப்ரியனான ராமனுடைய வார்த்தையைக் கேழ்ப்பேனோ, அவ்வளவுவரையிலுமே நான் உயிருடனிருக்க விரும்புகிறேன்.*

*ஈடு. (தி—வாய். 5-4-3) [நசாஸ்ய மாதா]—பிராட்டி திருவடியைக் கண்டவனந்தரம், பெருமாள்பக்கல் ப்ரணயரோஷத்தாலே 'இவன் அவர்வரவிட்ட ஆள்' என்று சீறிச் சிலவார்த்தை அருளிச் செய்ய, 'தேவரீரெழுந்தருளியிருந்தவிடமறியாமலிருந்தாரித்தனையல்லது, பாவபந்தத்திலூற்றம் போராமையோ, அறிந்தபின்பு இனித்தாழ்த்தாராகிலன்றோ குற்றமாவது' என்று அச்சீவிட்டு ஆறும்படி சில வார்த்தை விண்ணப்பம் செய்து, பின்னையுந்தான் 'அவரைப் பிரிந்து பத்துமாஸமுண்டே, இவ்வளவும் முடியாமல் தரித்திருந்ததன்றோ தேவரும்' என்று தனக்குக் கருத்தென்னுமிடம் தோற்றவிருந்தான். அதுவோ உனக்கு நினைவு. வாராய், நாட்டார்க்கு மாதாவென்றும் பிதாவென்றும் ப்ராதாவென்றும் பந்துக்களென்றும் பலதலைத்திருக்கையாலே ஸ்நேஹமானது எங்கும் பாலிபாய்ந்திருக்கும்; பெருமாள் அங்ஙனன்றிக்கே, எல்லார்பக்கல் பண்ணும் ஸ்நேஹத்தையும் என்பக்கலிலே ஒரு மடையாகச் செய்துவைக்கையாலே, எல்லாம் செய்தாலும் கடலை அணைசெய்து விரோதிவர்க்கத்தைக் கிழங்கெடுத்து 'தண்ணீர் தண்ணீர்' என்று வருகை தவிரார். தாபார்த்தன் விடாய்ப்பட்டுப் பந்தலேறவரக் கொண்டு தண்ணீர்ச்சாலுருட்டிக் கிடந்தால் பிழையாதாப்போலே, அவரிப்படிவரக் கொண்டு நானின்றிக்கே இருப்பனாகில் பின்னை அவரைக்கிடையாது என்று அவர்க்காக என்னை நோக்கிக்கொண்டிருந்தேன். அவரைக் கண்டபிற்றை நாள் நானிருந்தேனாகிற்காண் இவ்வார்த்தை சொல்லுவதென்றாளிறே. [தூத]—முன்பு 'வாநர' என்றாப் போலே சொல்லிப்போந்தவள், இப்போது அவர்பக்கலுண்டான சீவிட்டு இவ்வளவு மேறிப் பாய்ந்து, அவர் வரவிட வந்தவனன்றோ நீயுமென்றாளிறே.*

३३. इतीव देवी वचनं महार्थं तं वानरेन्द्रं मधुरार्थमुक्त्वा ।
श्रोतुं पुनस्तस्य वचोऽभिरामं रामार्थयुक्तं विरराम रामा ॥

இதீவ தேவீ வசநம் மஹார்த்தம் தம் வாநரேந்த்ரம் மதுரார்த்தமுக்த்வா,
ச்ரோதும் புநஸ்தஸ்ய வசோபிராமம் ராமார்த்தயுக்தம் விரராம ராமா. 36-31.

*அழகிய ஸீதாதேவி பெரும்பயனையுடையதும் இனிதான பொருளோடுகூடியதுமான வார்த்தையை இதுபோல அந்த வாநரச்ரேஷ்டனான ஹநுமானைக் குறித்து சொல்லிவிட்டு ராமப்ரயோஜனத்தோடுகூடியதும் இனிதுமான அந்த ஹநுமானுடைய வார்த்தையை மறுபடியும் கேழ்ப்பதற்காக ஓய்ந்தாள்.*

*ஈடு. (தி—வாய். 6-2-4) [இதீவ]—கீழே நெடும்போது சில பாசுரமிட்டுச் சொல்லிக்கொடு போந்தான்; ப்ரணயதாரையில் ஓடுமது ரிஷிகளாயிருப்பார்க்கு நில*

மன்றே; இப்புடைகளிலே என்றான். [தேவீ]—வல்லபைகளுடைய பரிமாற்றம் கடக்க நிற்பார்க்கே யன்று, தேசிகரானவர்கள் தங்களுக்கும் தெரியாதபடியாயிருக்கை. [தம் வாநரேந்த்ரம்]—இவனோடொக்கக்கடவார் ஒருத்தருமில்லை; சேஷத்வத்துக்கு முடிசூடினார் மஹாராஜரேயாகிலும், பாரதந்த்ர்யத்தின் எல்லையிலே நின்றான் இவனென்கை. இவ்வளவிலே இவள் முகம் பார்த்து வார்த்தை சொல்லப் பெற்றிலரிறே அவர். [மதுரார்த்தம்]—அபூமி என்னு, கைவாங்கவொண்ணாத படியாயிருக்கை. [உக்த்வா]—அவனும் அவனுடையவர்களும் வாழும்படி வார்த்தை சொன்னாள். [ச்ரோதும் புநஸ்தஸ்ய வசோபிராமம்]—'அழிந்தாரை ஆக்கவல்லன்' என்னுமிடம் கண்டாள்; தான் அழிச்ச தலை உண்டாம்படி வார்த்தை சொல்லவல்லமை கேட்க வேணுமென்றிருந்தாள். [ராமார்த்தயுக்தம்]—ராமப்ரயோஜனயுக்தம். தன் கார்யம் செய்து தலைக்கட்ட வல்லானொருத்தன். [விரராம]—நெடும்போது தான் வார்த்தை சொல்லுகையினாலும், ஸ்வாமி வார்த்தை சொல்லும்போது மேலிட்டு வார்த்தை சொல்ல வொண்ணாமையினாலும் பேசாதே யிருந்தவனுக்கு அவகாசப்ரதானம் பண்ணினாள். [ராமா]—இவ்விட்டு நீட்டுகையொழிய வார்த்தை சொல்லாதேயிருக்கிற போதை யழகை அவர்தாம் காணப்பெற்றிலோம்.

## ३४. न त्वामिहस्थां जानीते रामः कमललोचने ।

நத்வாமிஹஸ்த்தாம் ஜாநீதே ராமஃ கமலலோசநே. 36-33. 34

தாமரைபோன்ற கண்களையுடைய ஸீதாதேவியே ராமன் உம்மை இங்கு இருப்பவராக அறியவில்லை.

ஈடு. (தி—வாய். 10-8-9) [நத்வாமிஹஸ்த்தாம் ஜாநீதே]—நடுவே சிலர் சொல்லும்படியாய்த்து. எழுந்தருளியிருந்த இடமறியாமையாலே ஆறியிருந்தாரித்தனை போக்கி, அறிந்தால் ஒரு க்ஷணம் ஆறியிருப்பரோ. இது தான் என்வார்த்தை கொண்டறியவேணுமோ—[கமலலோசநே]—உம்முடைய கண்ணழகேயன்றோ இதில் ப்ரமாணம். [ராமஃ]—அவரை அறியாதொழிய வேணுமோ. *நஜீவேயம் க்ஷணமபி விநாதாமஸிதேக்ஷணாம்*—என்றிறே அவரிருப்பது. [ராமஃ கமலலோசநே]—அவரை அறியாமையுமில்லை உம்மை நீர் கண்ணாடிப்புறத்திலும் கண்டறியாமையுமில்லை. [கமலலோசநே]—அன்றிக்கே, ஆர் எதிராகத்தான் இக்கண் சிவப்பும் சீற்றமுமெல்லாமென்னுதல்.

## ३५. न मांसं राघवो भुङ्क्ते ।

நமாம்ஸம் ராகவோ புங்க்தே. 36-41. 35

ராமன் மாம்ஸத்தைச் சாப்பிடுகிறதில்லை.

பெ—வ்யா. (நாச்சியார் திருமொழி. 11-7) பார்த்துப் பரிந்தூட்டுமவள் போனால் இனி யார் அவனைப் பரிந்தூட்ட. மாமலர் மங்கை மணநோக்க முண்ணணிறே. அவள் போனால் இவனுக்கு ஊணில்லையிறே.

## ३६. अनिद्रः सततं रामः सुप्तोऽपि च नरोत्तमः ।
## सीतेति मधुरां वाणीं व्याहरन् प्रतिबुध्यते ॥

அநித்ரஸ்ஸததம் ராமஃ ஸுப்தோபிச நரோத்தமஃ,
ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்த்யதே. 36-44. 36

ராமன் எப்போதும் தூக்கமில்லாதவர். மனிதரில் சிரேஷ்டரான ராமன் தூங்கினாலும் ஸீதை என்று இனிதான வார்த்தையை சொல்லிக்கொண்டு உணருகிறார்.

பே—வ்யா. (நாச்சியார் திருமொழி. 5-4) [ராமః அநித்ரః]—செல்வப் பிள்ளைகளாயிருப்பார் பாதிப்போது நித்திரையோடேயாய்த்துப் போதுபோக்குவது. இப்படியிருக்கிற நித்ரை இல்லையாய்த்து. சிறிது போதுறங்கிச் சிறிது போதுணர்ந்து தானிருப்பரோ என்னில், [ஸததம் அநித்ரః ஸுப்தோபிச]—ஆனால் இதென் சொல்லிற்றாகிறதென்னில், உணர்ந்திருக்கச்செய்தே உணர்த்தி அற்றிருக்கும்படியைச்சொல்லிற்றாகிறது. பராகர்த்தானுஸந்தானபாவம் இருந்தபடி. [நரோத்தமః]—அபிமதவிஷயத்தைப் பிரிந்தால் இப்படி நித்ரையற்று நோவுபடுகையாலே காணும் புருஷோத்தமத்வமாவது. 'ந ச தேந விநா நித்ராம் லபதே புருஷோத்தமః'.

ஈடு. (தி—வாய். 2-4-5) [அநித்ரஸ்ஸததம் ராமః]—நித்ரையோடே காலக்ஷேபம் பண்ணவேண்டும்படி செல்வுடையவர், ஸததம் அநித்ரராயிருப்பர். 'ஸுப்தோபிச ஸததம் அநித்ரః' என்று வைத்து, 'ஸுப்தோபிச' என்கிறது பராகர்த்தானுஸந்தானபாவத்தைப்பற்றி. [நரோத்தமః]—அபிமதவிச்லேஷத்திலிங்ஙனேயிருக்கைபோலே புருஷோத்தமத்வமாவது.

३७. स मया बोधितः श्रीमान् सुखसुप्तः परंतपः ।

ஸ மயா போதிதః ஸ்ரீமாந் ஸுகஸுப்தః பரந்தபః. 38-24. 37

ஸுகமாக உறங்கியும் பகைவரைக் கொளுத்துகின்ற ஸ்ரீமானாகிய அவர் என்னால் உணர்த்தப்பட்டார்.

ஈடு. (தி—வாய். 5-8-1) [ஸமயா போதிதః ஸ்ரீமாந்]—என்று கிடந்த கிடைக்கு ஆலத்திவழிக்க வேண்டும்படியாயிருக்கை. 'இவர் உணரில் செய்வதென்' என்று வயிறுபிடிக்க வேண்டும்படியிருக்கை.

३८. कः क्रीडति सरोषेण पञ्चवक्त्रेण भोगिना ।

கః க்ரீடதி ஸரோஷேண பஞ்சவக்த்ரேண போகிநா. 38-26. 38

கோபங்கொண்ட ஐந்து முகமுள்ள பாம்போடு எவன் விளையாடுவன்.

பே—வ்யா. (பெரிய திருமொழி. 11-8-8) [கః க்ரீடதி]—ஆச்ரிதவிஷயத்திலுண்டான ஓரத்தாலே 'அவர்கள் விரோதியைப்போக்குகைக்கு நானிருந்தேனே' என்கிற போதைச் சீற்றம் தோற்றியாயிற்று வார்த்தை அருளிச்செய்யும் போதிருப்பது. [கః க்ரீடதி]—தோற்றரவிலே முடிக்கவல்லதொரு மஹாஸர்ப்பம் உறங்குகிறவற்றை எழுப்பி அத்தோடே போது போக்கிப் பிழைக்கப் புகுகிறவன் தான் ஆர்? [ஸரோஷேண]—அதுக்கு ஆற்றலுண்டாகப் பெற்றிடம் ஜீவிப்பாருடைய பாக்யத்தாலேயாயிற்று. [பஞ்சவக்த்ரேண]—கண்டவிடமெங்கும் முடிக்கைக்குப் பரிகரமாயாயிற்றிருப்பது. [போகிநா]—அதெல்லாம் வேணுமோ? வடிவைக்காண அமையாதோ முடிகைக்கு.

३९. स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः ।

त्रीँल्लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः ॥

ஸ பித்ராச பரித்யக்தః ஸுரைச்ச ஸமஹர்ஷிபிః,

த்ரீம்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கதః. 38-33. 39

அவன் (காகாஸுரன்) தகப்பனாலும் மஹர்ஷிகளோடுகூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய் மூன்று உலகங்களையும் ஓடித்திரிந்துவிட்டு அந்த ராமனையே சரணமாக அடைந்தான்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். (அமலனாதிபிரான் 6-ம் பாட்டு) [ஸ:]— பெருமாள் திருவுள்ளத்திலே தீரக்கழிய அபராதத்தைப் பண்ண, அவர் குபிதராய் ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட, அது பின் தொடர்ந்து கொடு திரிய 'ஆவாரார் துணை' என்கிறபடியே ரக்ஷகாபேக்ஷையுடைய காகமானது. [பித்ராச பரித்யக்த:]—பெற்ற வர்களுக்கு பரமன்றோ ரக்ஷிக்கை என்று பார்த்து, இந்த்ரன்பாடே சென்றான். 'இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா த்ராதும் நசக்தாயுதி ராமவத்யம்' என்கிற படியே எட்டுக்கதிரும் விட்டெரிகிற பெரியமதிப்பும் தானுமானாலும் ராமவத்யனை ரக்ஷிக்கை அரிதாகையாலே, 'பூதாநாம் யோவ்யய: பிதா' என்கிறபடியே நிருபாதி கரான தாய்க்கும் தமப்பனுக்குமாகாதே, ஸர்வபூதஸுஹ்ருத்தான அவரளவிலே ப்ராதிகூல்யம் பண்ணி அவர்க்கு வத்யனானவனன்றோ இவன். இங்குப்புகுருகையாவது என். 'ஸேந்த்ராய' என்னிலோவென்று பயப்பட்டு புத்ரமித்ரகளத்ரங்களோடே கூட எல்லாருங்காண நாற்சந்தியிலே குடநீர் வழித்துவிட்டான். [ஸுரைச்ச]—மாதா பிதாக்கள் கைவிட்டவளவிலும் இவர்களுக்கு ப்ரீத்யர்த்தமாக பந்துவர்க்கமான தேவதைகள் கொண்டுபோய்ச் சீராட்டக்கண்டு போருமே; அந்த வாஸனையாலே அவர் கள் பாடே சென்றான். 'கஸ்ய பிப்யதி தேவாச்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே' என்கிற படியே அபராதம் அதுவாகையாலும் பெருமாளுக்கு அஞ்சுகையாலும் மாதாபிதாக் கள் நேராகக் கைவிட்டார்களென்றறிகையாலும் அவர்களும் தள்ளிக் கதவடைத்தார் கள். [ஸமஹர்ஷிபி:]—இந்த்ரன் கைவிட்ட த்ரிசங்குவையும் அகப்படத் தங்கள் தபஸ்ஸை அழியமாறி ரக்ஷித்து, ஆந்ருசம்ஸய ப்ரதாநராயிருக்கும் ரிஷிகள்பாடே சென் றான். அவர்களும் வத்யஹிம்ஸையிலே பண்ணுவதோர் ஆந்ருசம்ஸ்ய முண்டோ வென்று கைவிட்டார்கள். [த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய]—தமப்பனுக்கும் செல்லும் தேசமாகை யாலே ஆரேனுமொருத்தர் ஒருகாலாகிலும் புத்திபேதம் பிறந்து பரிக்ரஹிக்கக்கூடுமோ வென்று த்ரைலோக்யத்திலும் தச்சன் கூட்டின வாசல்கள்தோறும் ஒருகால் புக்காப் போலே ஒம்பதின் கால் புகுந்து திரிந்தான். அங்கு ரக்ஷகராவாரைப்பெற்றிலன். [தமேவ சரணம் கத:]—கோபித்தாரேயாகிலும் நாராயணத்வப்ரயுக்தமான குடற்றொடக்கு உண்டாகையாலே, அவர்கள் முகத்திற்காட்டில் அம்பு விட்டவர் முகமே குளிர்ந்திருக கையாலும், 'ஸக்ருதேவ + ஏதத் வ்ரதம் மம' என்றருளிச் செய்துவைக்கையாலும், அந்தச் சீறின பெருமாளே அமையுமென்று அவரையே தனக்கு உபாயமாகப்பற்றி னான். 'ஸர்வபூதேப்ய:' என்கிறவிடத்திலே ஸர்வசப்தம் அஸங்குசிதோக்தியாலே, பிறரால் வரும் பயத்தையும் தன்னால்வரும் பயத்தையும் ரக்ஷகனை என்னால்வரும் பயத்தையும் போக்கி ரக்ஷிக்கக் கடவனென்றபடி.

௯௫. (தி—வாய். 3-7-8) [ஸபித்ராசேத்யாதி]—ஈச்வரன் தனக்குமாகாதவன் றும் தஞ்சமாவான் தானேயாயிற்று. பெருமாள்பக்கல் பண்ணின அபகாரத்தைக் கண்டு தமப்பன் கைவிட்டான். சகாரத்தாலே தாயும் கைவிட்டாளென்கிறது. அவள் பற்று முன்னாகப் பற்றுமிவன் விடும்போது அவளும் விட்டாளாகவேணுமிறே. வாத் ஸல்யமுறைத்தவிடத்திலே யிறே முந்தற விழுவது. ஆகையாலே அவள் காலிலே முந்தறவிழுந்தான். அவள் மையெழுதி மஞ்சள் பூசிப் புறப்பட்டு நின்றாள். இவனும் குடநீர் வழிந்து நின்றான். [பரித்யக்த:]—இவன் வ்ருத்தஹாநி கண்டு 'பண்டே விட்டிலோமோ' என்றார்கள். [ஸுரைச்ச]—மாதாபிதாக்கள் கைவிட்டாலும் ஸஜா தீயர் விடாதே கைக்கொள்ளுவார்களாயிற்று, 'இவர்கள் முடிய விடுகிறார்களோ' என்னுமத்தாலே 'அவர்களுக்கு ப்ரியம்' என்று நினைத்து. [ஸமஹர்ஷிபி:]—அவர் கள் விட்டாலும் விடாத ஆந்ருசம்ஸ்ய ப்ரதாநரான ரிஷிகளும் விட்டார்கள். ஆந்ரு சம்ஸ்யத்துக்கு விஷயவ்யவஸ்தை உண்டிறே. பெற்றவர்கள் கைவிட்டால் நாட்டார்க் குப் பணியன்றிறே காக்கை நோக்குகை. ஆகையாலே, [த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய] —லோகங்களில் திறந்து கிடந்த வாசலெல்லாம் ஒருகால் நுழைந்தாற்போலே ஒன்ப தின்கால் நுழைந்தானாயிற்று, 'ஒருகாலல்லா வொருகாலாகிலும் க்ருபை பிறக்கக்

கூடுமோ' என்று; இவன் புகப்புக, தள்ளிக்கதவை அடைத்தார்கள். [தமேவ சரணம் கதः]—தன்மேலே ப்ரஹ்மாஸ்த்ரத்தைத் தொடுத்துக் கொண்டு நிற்கிறவர் திருவடிகளிலே வந்து விழுந்தானாயிற்று. அதாவது—'அரிசினத்தாலீன்ற தாயகற்றிடினும் மற்றவள்தனருள் நினைந்தே யழுங்குழவி' என்கிறபடியே அவன் திருவடிகளை யொழியப் புகலில்லாமை. இப்படி எல்லா அவஸ்தைகளிலும் விச்வஸநீயன் ஸர்வேச்வரனே. ([ஸः]—நீரிலே புக்கழுந்துவாரைப் போலே தாரகரானவரே பாதகராய் அம்பு தொடுக்கும்படி சூழ்த்துக் கொடுநின்ற அவன். (9-1 ப்ரவேசம்.)

४०. स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम् ।

वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत् ॥

ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்யः சரணாகதம்,

வதார்ஹமபி காகுத்ஸ்த்தः க்ருபயா பர்யபாலயத். 38-34. 40

ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்த ரக்ஷகனான அந்த ராமன் பூமியில் விழுந்தவனும் சரணமடைந்தவனுமான அந்த காகாஸுரனை கொல்லத்தகுந்தவனாயிருந்தும் கருணையால் காப்பாற்றினார்.

ஈடு. (தி—வாய். 2-7-6) [காகுத்ஸ்த்தः]—தங்களிலும் க்ருபையே விஞ்சி ரக்ஷித்துக்கொண்டு போரும் குடியிலே பிறந்தவர். வதார்ஹமான காகத்துக்கு விட்ட அம்புக்குட்படக் கண்ணழிவு பண்ணுமவரிறே.

ஈடு. (தி—வாய். 4-5-7) [ஸः]—ரக்ஷணமே ஸ்வரூபமாயிருக்குமவர். [தம்]—ப்ராதிகூல்யத்திலே முதிற நின்றவனை. [நிபதிதம்பூமௌ]—தேவத்வத்தாலே தரையில் கால் பாவாதவன் போக்கற்றுத் தரையிலே வந்து விழுந்தான். ப்ரஜை தீம்பு செய்தால் பிதா சிக்ஷிக்கத்தொடர்ந்தால் மாதாவின் காலிலே விழுமாபோலே காணும் இவன் பூமியிலே விழுந்தது. [சரண்யः]—எதேனும் தசையிலும் சரணவரணார்ஹரானவர். [சரணாகதம்]—கண்வட்டத்திலே அநந்யகதிகத்வம் தோற்ற விழுந்துள்ளவனை. [வதார்ஹமபி]—பெருமாள்ஸித்தாந்தத்தாலும் வதார்ஹனே. [காகுத்ஸ்த்தः]—குடிப்பிறப்பால் வந்த நீர்மையாலே ரக்ஷித்தார். குடிப்பிறப்பு தண்ட்யரை தண்டிக்கைக்கும் உடலாயிராதோ என்னில், [க்ருபயா]—நாம் தொடங்கின கார்யம் ப்ரபலகர்மத்தால் தலைக்கட்ட வொண்ணாதாப்போலே, அவரும் க்ருபாபரதந்த்ரராகையாலே நினைத்தவை தலைக்கட்டமாட்டார். அவன் க்ருபை விளையும் பூகதனானான். அதுக்கு மேலே க்ருபை விளைந்தது. இனி அவர் எவ்வழியாலே தண்டிப்பர்.

४१. आनृशंस्यं परो धर्मस्त्वत्त एव मया श्रुतः ।

ஆந்ருசம்ஸ்யம் ப்ரோ தர்மः த்வத்த ஏவ மயா ச்ருதः. 38-41. 41.

பிறர்துக்கம் ஸஹியாமை சிரேஷ்டமான தர்மம் (என்று) உம்மிடமிருந்தே என்னால் கேழ்க்கப்பட்டது.

பெ—வ்யா. (பெரிய திருமொழி. 9-3-4) கலக்கிறபோது சொல்லிற்றொரு வார்த்தையுண்டு. அதாகிறது—'சிலரோடே சிலர் கலந்து பிரிந்தால் பின்னை அவர்கள் படும் வ்யஸநம் கண்டால் நான் பொறுக்கமாட்டேன் காண். இதுகாண் என் ப்ரக்ருதியிருக்கும்படி' என்றுகொண்டு சொல்லி வைத்தானாயிற்று, பிரிந்து இவள் நோவுபடும் போது 'இதுவன்றோ இவன் சொன்னது' என்றுகொண்டு ப்ரத்யபிஜ்ஞை பண்ணித் தரிக்கைக்காக. இதுதான் ஓராளின் வாயிலே இட்டுநீட்டுகையன்றிக்கே, அவர்தம் வாயாலே சொல்ல நான் என் செவியாலே கேட்டேனென்கிறாள்.

பெவ்—யா. (நாச்சியார் திருமொழி. 5-5) [ஆந்ருசம்ஸ்யம் பரோதர்மः]—நீரும் நானுமாய் ஓடமேற்றிக்கூலிக்கொள்ளுமளவாயிருக்கச்செய்தே, 'தர்மங்களில் நீர்

விரும்பியிருப்பதென் ?" என்று கேட்டேன். 'பிறர் நோவுபடப் பொறுக்கமாட்டாத விதுவே காண் நாம் வெளிறுகழிந்த தர்மமாக நினைத்திருப்பது' என்றருளிச் செய்தீர். [த்வத்தஏவ மயா ச்ருதஃ]—இதுதான் உம்முடைய ஆளான திருவடிவாயிலே இட்டு நீட்டுகையன்றிக்கே, உம்முடைய வாயாலே அருளிச்செய்ய, நான் செவியாலே கேட்டேன். 'இதுதான் பிறர்மேலே ஏறிட்டு, நீர் நம்மைப் பிரிந்து நோவுபடவிட் டீர். ஏங்காண்' என்று சொன்னுரானுர் அவர் பிரிந்து நோவுபடவிட்டிருந்தானென் னுமத்தைப்பற்ற.

४२. कौसल्या लोकभर्तारं सुषुवे यं मनस्विनी ।

तं ममार्थे सुखं पृच्छ शिरसा चाभिवादय ॥

கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ,

தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய. 83-56. 42

விசாலமநஸ்ஸையுடைய கௌஸல்யாதேவியார் உலகங்களுக்கு நாதனை எவரைப் பெற்ருரோ அவரை என்நிமித்தமாக ஸுகத்தைக் கேள்; தலையால் நமஸ்கார மும் பண்ணு.

ஈடு. (தி—வாய். 5-3-7) [கௌஸல்யேத்யாதி]—நாட்டில் ஸ்த்ரீகள் 'இங்கிருக் கும் நாளைக்கு நமக்கு ரக்ஷகனுய்ப் பின்பு நரகத்தில் புகாதபடி பரிஹரிக்கைக்கும் ஒரு பிள்ளை வேணும்' என்று நோன்பு நோற்றுப் பெறுவர்கள். அங்ஙனன்றிக்கே, எங்கள் மாமியார் தந்நெஞ்சிலுண்டான அகலத்தாலே 'லோகத்துக்காக ரக்ஷகனுக வல்லாஞெரு பிள்ளையைப் பெறவேணும்' என்று நோன்பு நோற்றுப் பெற்ருர். அவர் நினைவு தப் பவோ. அந்த லோகத்துக்குள் அந்தர்ப்பூதையல்லேனே நான். இனி, 'நாட்டில் ஸ்த்ரீகள் பர்த்தாக்கள் ஸமர்த்தரானபோது ஆதரித்தும், அஸமர்த்தரானபோது உபே க்ஷித்தும் போரக் கடவர்களாயிருப்பதொன்றுண்டு. நீர் எல்லா அவஸ்த்தையிலும் அவரை ஆதரித்துப் போரும்கிடீர்' என்று அவர் என்னைக் குறித்து சொல்லிவிட்டார். நானுமப்படியே செய்துபோரநிற்க, கிண்ணகத்தில் குமிழிக்கீழே சாவிபோமாபோலே, தாம் என்னுடைய ரக்ஷணத்தில் நெகிழ நின்றது அவர்நினைவு ஸங்குசிதமாகவோ என்று சொன்னேனென்று சொல்லு. [தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச]—எங்களு டைய ரக்ஷணத்துக்கு நாங்கள் ப்ரார்த்தித்துப் பெற வேண்டுவதொன்றில்லையிறே, அதுவுமவர்நினைவாலுண்டாகையாலே. இனி, க்ரமப்ராப்திபற்ருமையாலுள்ளதிறே இப்போது படுகிறது. தாம் உளராக எங்களுடைய ரக்ஷணம் தப்பாதிறே. ஆனபின்பு தம்முடைய உண்மையை ஆசாஸிக்கையிறே இனி எங்களுக்குள்ளது. அங்குத்தைக்கு ஒரு குறைகளில்லையே என்று கேட்டேனென்று சொல்லு. [சிரஸாசாபிவாதய]— நாட்டாரளவன்றிகேே, தாம் விசேஷித்து எங்களைக் கைப்பிடிக்கையாலுண்டான வாசி நாங்கள் பெறுதபின்பு, நாட்டாரோபாதியாகிலும் பெறக்குறையில்லையிறே. இனி நாட் டார் பெறுவது பெறப்பார்த்தால், அவர்கள்தம்பக்கல் செய்யுமத்தையும் செய்யவேணு மிறே. ஆனபின்பு, நாங்கள் எங்கள் தலையாலே தந்திருவடிகளிலே வணங்கினே மென்று நீ எனக்காக அவர் திருவடிகளிலே விழு என்றுமருளிச்செய்தார். 'இதுதான் ப்ரணயரோஷம் தலையெடுத்துச் சொல்லுகிற வார்த்தையோ, அபேக்ஷை தோற்றச் சொல்லுகிற வார்த்தையோ' என்ன, 'கீழ் திருவடி வந்தபோது ப்ரணயரோஷத்தாலே வந்த சிவிட்குத் தோற்றச் சொன்ன வார்த்தைகளடைய மாறும்படி குளிர அவன் வார்த்தை சொல்ல, அநந்தரம் திருவுள்ளத்திலே ஒரு ப்ரஸாதம் பிறந்து ப்ராப்தியில்லா மையால் வந்த அநவாப்தியுங்கிடக்க அருளிச்செய்த பாசுரம்' என்றருளிச்செய்தார்.

४३. जीवन्तीं मां यथा रामः संभावयति कीर्तिमान् ।
तत्तथा हनुमन्वाच्यो वाचा धर्ममवाप्नुहि ॥

ஜீவந்தீம் மாம் யதா ராமः ஸம்பாவயதி கீர்த்திமாந்,
தத்ததா ஹநுமந்/வாச்யः வாசா தர்ம மவாப்நுஹி. 39-10. 43.

*புகழ்படைத்த ராமன் பிழைத்திருக்கும் என்னை எப்படி கொண்டாடுவரோ அப்படி அந்தவிஷயத்தை ஓ ஹநுமானே! சொல்லத்தகுந்தவர். வாயினால் தர்மத்தை அடையக்கடவாய்.*

*ஈடு. (திருவாய். 6—8. ப்ரவேசம்) பரபரிபவம் பொறாத குடிப்பிறப்புடைய வரிறே. அதிலே தமக்கு வந்த அவத்யம் பரிஹரிக்கச் சொல்லவேண்டாவே. கடலை யணைசெய்து ராவணாதிகளை நிரஸித்துத் தாம் வரக்கொள்ள, இத்தலை வெறுந்தறை யாய்க் கிடவாமே செய்ய நினைத்தாராகில், ஏற்கனவே பரிஹரித்துத் தம்புகழை நோக்கிக் கொள்ளச் சொல்லென்று சொன்னாளிறே.*

४४. शरैस्तु संकुलां कृत्वा लङ्कां परपुरार्दनः ।
मां नयेद्यदि काकुत्स्थस्तत्तस्य सदृशं भवेत् ॥

சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபுரார்தநः,
மாம் நயேத் யதி காகுத்ஸ்த்தः தத்தஸ்ய ஸத்ருசம் பவேத். 39-40. 44.

*பகைவர் பட்டணத்தை அழிப்பவரான ராமன் லங்கையை பாணங்களாலேயே நிறைந்ததாக செய்துவிட்டு என்னை அழைத்துக்கொண்டுபோவாரேயாகில் அது அவருக்கு உசிதமாக ஆகும்.*

*ஈடு. (திருவாய். 5-4-7) [சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம்]—திருவடி பிராட்டியை 'பெருமாள் பாடேற இனி எழுந்தருள வமையாதோ' என்ன, ராக்ஷஸ ஸங்குலையான வித்தை ராமசரஸங்குலையாக்கிக் காண் நாம் போவது, வேற்று மனிசர் முகத்திலே விழித்துப் போகவோ. [பரபுரார்தநः]—அவரோடே விரோதித்து இதுக்கு முன்பு ஜீவித்துப் போந்ததுமொரு படைவீடுண்டோ. [மாம் நயேத்யதி]—'நயாமி பர மாம்கதிம்' என்கிறவர் இரண்டு வார்த்தை சொல்லுவரோ. [காகுத்ஸ்த்தः]—இந்த்ராதிகள் விரோதிகளையும் போக்குங்குடியிலே பிறந்தவர் ஸ்வகார்யத்தில் சோர நிற்பரோ. [தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்]—அவர்க்கு அநுரூபமானவற்றைச் செய்து போகக்கடவ நாம், நம்முடைய ஆற்றாமை பரிஹரிக்கைக்காக அவர்க்கு நிறக்கேடானவற்றைச் செய்யவோ. 'ராமமஹிஷியை ஒரு ராக்ஷஸன் பிரிக்க, அவள் சபித்துப் போனாள்' என்னுதல், 'ஒரு குரங்கு மீட்டது' என்னுதல் செய்கையாகிறவிது, அவர் வில்வலிக்கு வசையாம் காண்; அவர் வம்சத்துக்குக் கொத்தையாம் காண். அவர் விஷயத்தில் ராவணன் செய்தத்தை நாமும் செய்யவோ. ராமதநத்தை 'என்னது' என்றாரோடு ஒப்பர்களிறே அவருடைய ரக்ஷணத்தைத் தந்தலையிலே ஏறிட்டுக் கொள்ளுமவர்கள்.*

४५. यथा तं पुरुषव्याघ्रं गात्रैः शोकाभिकर्शितैः ।
संस्पृशेयं सकामाऽहं तथा कुरु दयां मयि ॥

யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரைச்சோகாபிகர்சிதைः,
ஸம்ஸ்ப்ருசேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி. 40-3. 45.

*ஆசையுள்ள நான் புருஷ ச்ரேஷ்டரான அந்த ராமனை துக்கத்தால் இளைத்த (எனது) அவயவங்களாலே எப்படி தொடுவேனோ அப்படி என்னிடத்தில் கருணையை பண்ணு.*

பே—வ்யா. (திருவிருத்தம். 54) [யதா தம் புருஷவ்யாக்ரம்]—பருவம் கழிந்த திறே, இனி இவர்க்குச் சொல்லித்தான் செய்வதென்னென்று இருக்கவேண்டா; நினைத்தபோதே நினைத்ததெல்லாம் செய்து தலைக்கட்டவல்ல ஆண் புலி. [காத்ரை:]— கண்டாயிறே ஒரு நீர்ச்சாவியாய் இவை உருவிக்கிடக்கிறபடி. சிலர் பட்டினிவிடச் சிலர் ஜீவித்தவோபாதி விடாய்த்த இக்கரணங்களைக் கொண்டு முடிந்துபோய், வேறொரு சரீரபரிக்ரஹம்பண்ணி இவரை அநுபவிக்க விருக்கையன்றிக்கே, விடாய்த்த இவற்றைக்கொண்டே ஸ்பர்சிக்கும்படி பண்ணவேணும். [ஸகாமாஹம்]—அவரைப் போலே 'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்றிருக்குமளவல்லேன் நான். [ததா குரு தயாம் மயி]—அவருடைய சக்தியால் குறையின்றிக்கேயிருக்கச் செய்தே, இவ்வள வில் கார்யகரமாகக் கண்டிலோம். உன் க்ருபையாலே அதுவும் பலிக்கும்படி பண்ணித் தரவேணும்.

४६. कार्ये कर्मणि निर्दिष्टे यो बहून्यपि साधयेत् ।
पूर्वकार्याविरोधेन स कार्यं कर्तुमर्हति ॥

கார்யே கர்மணி நிர்திஷ்டே யோ பஹூந்யபி ஸாதயேத்,
பூர்வகார்யாவிரோதேந ஸகார்யம் கர்த்துமர்ஹதி. 41-5. 46.

எவன் காரியம் குறிப்பிடப் பட்டபொழுது முன் காரியத்துக்கு விரோதமில்லா மல் வெகு காரியங்களையும் செய்து முடிப்பனோ அவன் காரியத்தை செய்யத் தகுதி யுள்ளவன்.

பே—வ்யா. (திருப்பல்லாண்டு 9) ஸ்வாமி ஏவின கார்யத்தைக் குறையச் செய்யு மவன் அதமன்; அத்தைக் குறையாமல் தலைக்கட்டுமவன் மத்யமன்; அதுக்குமேலே அதுக்கு அவிருத்தமான காரியங்களையும் விசாரித்துச் செய்து தலைக்கட்டுமவன் உத்த மன். [கார்யே கர்மணி]—என்கிற திருவடியிறே அவனுகிறான். 'பிராட்டியிருந்த இடம் அறிந்து வா' என்றுவிட, இருந்தவிடமுமறிந்து, 'அவன் பலமிருந்தபடி என்' என்று பெருமாள் கேட்டருளினால் 'அறிந்திலேன் என்னவொண்ணாது' என்று அத்தலையில் பல பரீக்ஷையும் பண்ணி ஊரில் அரணையும் தலையழித்து மூலையடியே போம்படி பண்ணி வந்தானிறே,

**ஸுந்தரகாண்டம் முற்றிற்று.**

---

ஸ்ரீ:

# யுத்தகாண்டம்

---

१. अहं च रघुवंशश्च लक्ष्मणश्च महाबलः ।
वैदेह्या दर्शनेनाद्य धर्मतः परिरक्षिताः ॥

அஹம்ச ரகுவம்சச்ச லக்ஷ்மணச்ச மஹாபல:,
வைதேஹ்யா தர்சநேநாத்ய தர்மத: பரிரக்ஷிதா:. 1-12. 1.

நானும் ரகுகுலமும் (பரதனும்) பலம் மிகுந்த லக்ஷ்மணனும் ஸீதையைக் கண்டதினால் இன்று தர்மத்தால் காப்பாற்றப்பட்டோம்.

ஈடு. (தி—வாய். 6-8-1.) [அஹம் ச ரகுவம்சச்சேத்யாதி]—'நஜீவேயம் க்ஷண மபி' என்றிருக்கிற நானும், என்னை ஒழிய ஜீவியாதபடியிருக்கிற பிள்ளை பரதனும்,

இருவர்க்கும் உஜ்ஜீவநஹேதுவான பிள்ளையும். [வைதேஹ்யா:]—இவையெல்லாம் தகுமென்கைக்காக. [தர்மத: பரிரக்ஷிதா:]—நீ செய்ததுக்கு ஒரு ப்ரத்யுபகாரம் பண்ணலாமோ. வெறும் அறவனுகையாலே செய்தாயத்தனை. 'உனக்கென் செய்கேன்' என்று காலதத்வமுள்ளதனையும் உழைக்கும்படியிறே நீ செய்தது!

२. एष सर्वस्वभूतस्तु परिष्वङ्गो हनूमतः ।

मया कालमिमं प्राप्य दत्तस्तस्य महात्मनः ॥

ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:,

மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ்தஸ்ய மஹாத்மந:. 1-14. 2.

என்னால் இந்த காலத்தை அடைந்து பெருந்தன்மையுடைய அந்த ஹநுமானுக்கு (எனது) கைமுதலான இந்த ஆலிங்கனமே கொடுக்கப்பட்டது.

பே—வ்யா. (பெரியதிருமொழி. 5-8-2.) ஏஷஸர்வஸ்வபூதஸ்து]- கல 'ல உண்பாரைப்போலே சேஷசேஷிகளிருவர்க்கும் அநுபாவ்யமிறே திருமேனி. [ஸர்வஸ்வபூத:]—ஸ்வரூபரூபகுணங்களிலும் பிராட்டிமாரிலும் அபிமதமாயிருக்கையாலே; அதாவது—ருசிஜநகமாயிருக்கையாலும், தானே ஸாதநமுமாயிருக்கையாலும், ஸதா தர்சநவிஷயமாயிருக்கையாலும். ரக்ஷகனுக்கு ரக்ஷணத்துக்கு ப்ரதாநபரிகரம் திருமேனியிறே. அவ்வுடம்போடே அணைந்த உடம்பென்றிறே தன்னுடம்பையும் அவன் விடமாட்டாதேயிருக்கிறது.

ஈடு. (தி—வாய். 4-1 5) [ஏஷ:]—தான் அநுபவித்து, தனக்கு என்று பிறர்க்குக் கொடுப்பாரைப்போலே; 'இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:' எனனக்கடவதிறே. இச்சாக்ருஹீதமென்கையாலே, கர்மநிபந்தனமல்லவென்று தோற்றுகிறது. அபிமதமென்கையாலே, தனக்கும் போக்யமென்று தோற்றுகிறது. [ஸர்வஸ்வபூத:]—இதொழிய மற்றொன்றைக் கொடுத்தாலும் இது கொடாதத்தால் வரும் குறை கிடக்குமே. திருமேனியைக் கொடுக்கவே எல்லாம் கொடுத்ததாமிறே. ஸர்வாபாச்ரயமாயிறே திருமேனிதானிருப்பது. மற்றுக்கொடுக்குமதிலும் இதுக்குண்டான வ்யாவ்ருத்தி தோற்றியிருக்கிறது. [பரிஷ்வங்கோ ஹநூமத:]—அம்ருதாசிக்குப் புல்லையிட வொண்ணுதே. 'ஸ்நேஹோமேபரம:' என்று இவ்வுடம்பை விரும்பினவனுக்கு இத்தையே கொடுக்கவேணும். [மயா காலமிமம் ப்ராப்ய தத்த:]—'இவன் ஒன்று கொள்வானொருவனல்லன்; நாம் இவனுக்கு ஒன்று கொடுக்கப்பெறுவது காண்' என்று குறைப்பட்டிருந்தவர், இவன் விலக்காததொரு ஸமயம் பெற்று இப்படிக் கொடுத்துகொண்டு நின்றார். [தஸ்ய மஹாத்மந:]—ஒருபடி கொடுத்தாராய் ஒன்று செய்தவித்தனைபோக்கி, இரண்டுடம்பு கொடுத்தவனுக்கு ஒருடம்பு தரமன்றிறே. வேண்யுத்க்ரதனத்திலே பிராட்டி ஒருப்பட்டவன்று அவளை உளளாக்கினன். 'அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே' என்ற பொருளைமீட்டு அவரை உளராக்கி இப்படி இவர்க்கு இரண்டுடம்பு கொடுத்தானிறே அவன். அவன் பலபடி உபகரிக்கையாலே இவர் ஒருபடி உபகரித்தார்.

३. न मे दुःखं प्रिया दूरे न मे दुःखं हृतेति वा ।

एतदेवानुशोचामि वयोऽस्या ह्यतिवर्तते ॥

நமே துக்கம் ப்ரியா தூரே நமே துக்கம் ஹ்ருதேதிவா,

ஏததேவாநுசோசாமி வயோஸ்யாஹ்யதிவர்த்ததே. 5-5. 3.

*பிரியையான ஸீதை தூரத்தில் (இருக்கிறாள் என்கிற) துக்கம் எனக்கு இல்லை; அபஹரிக்கப்பட்டாள் என்பதினாலாவது எனக்கு துக்கம் இல்லை; இந்த ஸீதைக்கு பிராயமன்றோ செல்லுகின்றது (என்கிற) இதைப்பற்றித்தான் வருந்துகிறேன்.*

பே—வ்யா. *(பெரிய திருமொழி 9-3-4.) 'மைதிலி நம்மைப் பிரிந்து தூரத்திலே வர்த்தியாநின்றாள்' என்றதுக்கு வெறுக்கிலேனுமல்லேன். இனி வலிய ரக்ஷஸ்ஸாலே பிரிவு பிறந்தது; இனி எங்ஙனே நாம் ஸாதிக்கும்படி' என்றதுக்கு வெறுக்கிறேனுமல்லேன். அதாகிறது—கடக்கவிருந்தாளாகில் கடலை அணைசெய்து நாலுபயணம் உள்ளே எடுத்துவிட்டுத்தீருகிறது. இனி பிரிவுக்கு ஹேதுபூதனை பையலைக் கிழங்கு கொடுத்துப் பொகடத் தீருகிறது அக்காரியம். நான் இதொழிந்த அல்லாதவற்றுக்கு வெறேன். இது ஒன்றுக்குமே நான் மோஹிப்பது. அது ஏதென்னில்—[வயோஸ்யா ஹ்யதிவர்த்ததே]—இவைபோலே காலம் என்னம்பால் மீளவிடலாவதொன்றன்றே. அணைக்குக் கிழக்குப்பட்ட நீரை மீட்கப்போகாதிறே.*

*(ஈடு 2-1-10 லும் இப்படியே)*

४. वाहि वात यतः कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश ।
त्वयि मे गात्रसंस्पर्शश्चन्द्रे दृष्टिसमागमः ॥

வாஹி வாத யதঃ காந்தா தாம் த்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருச,
த்வயி மே காத்ரஸம்ஸ்பர்சঃ சந்த்ரே த்ருஷ்டிஸமாகமঃ. 5-6. 4.

*ஓ காற்றே எங்கு ப்ரியையான ஸீதை இருக்கிறாளோ (அங்குசென்று) அந்த ஸீதையைத் தொட்டுவிட்டு என்னையும் தொடு. எனக்கு உன்னிடத்தில் சரீரத்தோடுள்ள சேர்க்கை சந்திரனிடத்தில் பார்வையோடுள்ள சேர்க்கை.*

ஈடு. *(தி-வாய். 6-8-3) [வாஹி வாத]—சாக்ஷாஷமல்லாமையாலே நீ பெற்ற பேறு என், [த்வயி மே காத்ரஸம்ஸ்பர்சঃ] நம்முடைய கரணங்களுக்கு ஸ்பர்சம் உன் பக்கலிலேயாயிற்றே. நமக்குத் தொட்டாயிற்றே. [சந்த்ரே த்ருஷ்டி ஸமாகமঃ] ஸ்பர்சத்தோடொத்ததிறே தர்சநமும்.*

५. उत्पपात गदापाणिश्चतुर्भिः सह राक्षसैः ।

உத்பபாத கதாபாணிச்சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸைঃ. 16-17. 5.

*(விபீஷணன்) கையில் கதையுள்ளவனாய் நான்கு ராக்ஷஸர்களோடு கூட உயரக் கிளம்பினான்.*

ஈடு. *(தி-வாய் 4-9. ப்ரவேசம்) [உத்பபாத]—ராவணனோடு பொருந்தாமை பிறந்தபின்பு, நெருப்புப்பட்ட தறையில் கால் பாவாதாப்போலே அவ்விடம் அடி கொதித்துப்போந்தானாயிற்று. [கதாபாணிঃ]—அங்குள்ளாரில் 'நநமேயம்' என்னாதது தடியொன்றுமே ஆயிற்று. [சதுர்ப்பிঃ]—அதுவுமெடுத்துத்தோளிலே வைக்க வேணுமே. அதுவும் வேண்டாதார் நால்வருமேயாயிற்று.*

६. दीप्तपावकसंकाशैः शितैः काञ्चनभूषणैः ।
न त्वामिच्छाम्यहं द्रष्टुं रामेण निहतं शरैः ॥

தீப்தபாவகஸங்காசைঃ சிதைঃ காஞ்சநபூஷணைঃ,
நத்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும் ராமேண நிஹதம் சரைঃ. 16-24. 6.

எரியும் நெருப்புக்கொப்பானவைகளும் கூர்மையுள்ளவைகளும் ஸுவர்ணலங்காரமுள்ளவைகளுமான பாணங்களால் ராமனால் கொல்லப்பட்டவனாக உன்னைக் காண நான் ... நம.

பெ—வ்யா. (பெரிய திருமொழி. 2-8-2.) [தீப்தபாவகஸங்காசை:]—கையிலிருக்கும்போது இருக்குமாபோலன்று கிடாய் விட்டாலிருக்கும்படி; எரித்துக்கொண்டாயிற்று வருவது. [சிதை:]—அல்லாத அம்புகளோபாதியாக நினைத்திராதே; பட்டால் எரித்தல் பொறுக்கவொண்ணாதபடியாய்க் கிடாயிருப்பது. [காஞ்சநபூஷணை:]—அநுகூலரான என்போல்வாரையும் தோற்பிக்கும் துறையுண்டு கிடாய். [நத்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும்]—ஸௌப்ராத்ரம் பின்னாட்டுகையாலே சொல்லுகிறேன். [ராமேண நிஹதம் சரை:]—புக்கு முடிகைக்கும் விடாய் தீருகைக்கும் உடலாயிருக்குமிறே மடு. அதுபோலே யிருக்கிற இவ்வழகை அநுபவிக்குமதொழிய அவ்வம்புக்கு இலக்காய் நீ முடிந்து போக நான் இச்சிக்கிறிலேன்.

ஈடு. (தி—வாய். 6-10-4.) [தீப்தபாவக ஸங்காசை:] படும்போதிருக்கும்படி. [சிதை:] பட்டமை தெரியாதே தொளையுருவி அவ்வருகே விழக்காணுமித்தனை. [காஞ்சநபூஷணை:] இவற்றுக்கு ஆகாரத்வயமுண்டாயிருக்கிறபடி. சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கன்றியென் மனந் தாழ்ந்து நில்லாது' என்கிறபடியே அநுகூலர்க்கு அகப்படுகைக்கும் அதுதானே யாயிருக்கிறபடி. [நத்வாமிச்சாமீத்யாதி]—இவ்வழகுக்கு இலக்காய் வாழ்ந்து போகலாயிருக்க எதிரிட்டு முடிந்துபோக நானிச்சிக்கிறிலேன். நீ எண்ணியிருக்கிறது நான் அறிகிறிலேனிறே. இருத்திப் பிடித்த வில்லும், தெரித்துப் பிடித்த பகழியுமாய்க் கொண்டு நிற்கும்போது அபிராமராயிறே இருப்பது. அவ்வழகைக் கண்டநுபவிக்கமாட்டாதே, தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழதாக விழுந்து முடிவாரைப்போலே, தயரதன்பெற்ற மரகதமணித் தடத்தை எதிரிட்டு முடிந்துபோக நான் காணமாட்டுகிறிலேன்.

௭. मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन ॥

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந, 18-3. 7.

மித்திரன் என்கிற எண்ணத்துடன் வந்தவனை எவ்விதத்திலும் கைவிடமாட்டேன்.

பெ—வ்யா. (திருவிருத்தம். 42.) [மித்ரபாவேந]—அவன் பக்கல் பாவமே அமையும். அவனை விடில் என்னை இழக்குமத்தனை என்றானிறே. அவன் பக்கல் கிடையாததொன்றை வேணுமென்றால் துராராதனுமித்தனையிறே. இவன் பக்கல் பெற்றது கொள்ளுமித்தனையிறே. இவனால் செய்யமுடியாததொன்றைச் சொல்லுகையாவது கைவிட நினைத்துச் சொல்லிற்றாமித்தனையிறே.

ஈடு. (தி—வாய். 5-1-1) [மித்ரபாவேந]—என்கிற ச்லோகத்திலே எம்பார், 'ஸர்வஜ்ஞனுக்கொரு அஜ்ஞாநமும் விஸ்ம்ருதியும் ஸர்வசக்திக்கு ஒரு அசக்தியுமுண்டு' என்றருளிச்செய்வர். ஒருவன் தன்னை ஆச்ரயித்தால் முன்பு புத்திபூர்வம் பண்ணின குற்றத்திலே விஸ்ம்ருதி பண்ணி, ஜ்ஞாநம் பிறந்தால் ப்ராமாதிகமாய் வருமவற்றில் அஜ்ஞாநம், அவனை விடவேண்டிவருமளவிலே அசக்தி. இப்படியிருக்கைக்கு அடி ஸ்வாபாவிகமான குடற்றொடக்கு.

௮. सुहृदो वा भवद्विधा:

ஸுஹ்ருதோ வா பவத்விதா: 18-15. 8.

நண்பர்கள்தாம் உம்மைப்போன்றவர்களாய் ஆகமாட்டார்கள்.

பே—வ்யா. *(திருவிருத்தம். 56.) [ஸுஹ்ருதோவா பவத்விதாঃ]—நம்மைக் கண்ட காக்ஷியிலே ஜ்யேஷ்டனை எதிரியாக்கி அவனிலும் நம்மை அந்தரங்கராக்கிக் கார்யங்கொள்ளுந்தனை ஸௌஹார்த்தமுள்ளது உமக்கே காணுமென்கிறார்.*

९. पिशाचान् दानवान् यक्षान् पृथिव्यां चैव राक्षसान् ।
अंगुल्यग्रेण तान्हन्यामिच्छन् हरिगणेश्वर ॥

பிசாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந்,
அங்குல்யக்ரேண தாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேச்வர. 18-23. 9.

*வாநரராஜனுகிய ஓ ஸுக்ரீவா பிசாசங்களாயும் அஸுரர்களாயும் யக்ஷர்களாயும் பூமியில் ராக்ஷஸர்களாயுமிருக்கின்ற அவர்களை விரல்நுனியாலே விரும்பினவனாய் (நான் இஷ்டப்பட்டால்) கொல்லுவேன்.*

பே—வ்யா. *(திருப்பல்லாண்டு. 1.) [பிசாசாந் தாநவாந் யக்ஷாந்]—கள்ளர், பள்ளிகள், வலையர் என்னுமாபோலே ஹிம்ஸகருடைய அவாந்தரபிதை இருக்கிறபடி. [ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந்] லங்கையிலுள்ள ராக்ஷஸரளவன்றிக்கே, பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணையான பூமியிலுள்ள ராக்ஷஸரெல்லாரும் எதிரிகளானாலும். [அங்குல் யக்ரேண தாந் ஹந்யாம்]—ஆக சத்ருவர்க்கங்களெல்லாம் ஒரு கலத்திலே உண்டு எதிரிட்டாலும் இவற்றினுடைய நிரஸநத்திற்கு அஸ்த்ரசஸ்த்ரங்கள் வேணுமோ. க்ஷுத்ர க்ரிமிகளை நிரஸிக்குமோபாதி அங்குல்யக்ரத்தாலே நிரஸிக்கவல்லோம் காணுமென்றார். ஆனால், நம்மை நலிந்த ப்ரதிபக்ஷம் நசியாதே கிடக்கிறதென்னென்னில், 'அழிப்போம்' என்னுமிச்சையில்லாமை. இச்சை உண்டானால் அழிக்கையில் அருமையில்லை. அது தனக்கு அடி என்னென்னில், 'உயிரோடே தலை சாய்க்குமானால் அழிக் என்னும் இரக்கத்தாலே. இவ்வார்த்தை ராமபாக்யத்தாலே மஹாராஜர் நெஞ்சில்பட்டு பயநிவ்ருத்திக்கு உடலாய்த்து.*

१०. किंपुनर्मद्विधो जनः ।

கிம் புநர்மத்விதோ ஜநঃ 18-25. 10.

*என்னைப் போன்ற மனிதன் சரணாகதனைக் கைக்கொள்ள வேணுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ.*

ஈடு. *(தி—வாய். 6-8-6.) [கிம்புநர்மத்விதோ ஜநঃ]—என்ற விடத்துக்குச் சொல்லுவதொரு வார்த்தை யுண்டிறே—அருளாளப் பெருமாள் எம்பெருமானுடைய அந்திம தசையிலே 'திருவுள்ளத்தில் ஓடுகிறது என்' என்ன, 'ஒரு பக்ஷி பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடி என் என்று கிடந்தேன்' என்றார் என்று. இதுக்குக் கருத்தாகப் பிள்ளை அருளிச்செய்யும் வார்த்தை—'நாம் பண்ணின சரணாகதியாகையாலே பலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது. இனி சரண்யன் நீர்மையினேற்றத்தாலே நமக்கு ஒரு குறையில்லை என்கிறது' என்று. (பெருமாளைப் புண்படுத்துகையாவது—ஸ்ரீவிபீஷணாழ்வானை சரணாகத்யநந்தரத்திலே கைக்கொள்ளாமல் 'வத்யதாம்' என்று அல்பம் தாமஸம் பிறக்கையாலே 'கபோதத்தோபாதி நாம் ரக்ஷிக்கப் பெற்றிலோம்' என்றிருக்கை.)*

११. आर्तो वा यदि वा दृप्तः परेषां शरणागतः ।
अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना ॥

ஆர்த்தோ வா யதிவா த்ருப்தঃ பரேஷாம் சரணாகதঃ,
அரிঃ ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்யঃ க்ருதாத்மநா. 18-23. 11.

வருந்துகிறவனுயிருந்தாலும் கர்வமுள்ளவனுயிருந்தாலும் பிறரைச் சரணமாக அடைந்த சத்ருவும் மனத்திருத்தமுள்ளவனுல் உயிரை விட்டு காப்பாற்றப் படவேண்டியவன். அந்நியர்களுக்குள் சரணமடைந்தவன் என்றும் சொல்வதுண்டு.

பெ—வ்யா. (திருவிருத்தம். 42.) [ஆர்த்தோவா யதிவா த்ருப்தஃ]—'ராகவம் சரணம் கதஃ' என்ற உக்தி திருச்செவிபட்டபோதே இவன் நெஞ்சில் தளர்த்தியைத் திருவுள்ளம்பற்றினர் பெருமாள். 'உக்தியே இவன் பக்கலுள்ளது, நினைவு வேறொரு படி' என்றறிந்த முதலிகள் ராமபக்தியாலே 'நினைவொன்றாய்ச் செயலொன்றாயிருக்கிறவன் வத்யன் என்றே இருந்தார்கள். ஆர்த்தனுகையாவது—இத்தலையைப் பெறில் ஜீவித்தும், பெறுவிடில் முடியும்படியுமாயிருக்கை. த்ருப்தனுகையாவது—நெஞ்சின்றிக்கே யிருக்கச்செய்தே, நம்முடைய அநுகூலபாஷணங்களைப் பிறர் அநுகரிக்குமாபோலே நெஞ்சிலின்றிக்கேயிருக்கச் செருக்காலே சொல்லுகை. ஆர்த்தனுகவுமாம், த்ருப்தனுகவுமாம். ஆர்த்தியோபாதி த்ருப்திக்கும் பலைக்யமுண்டாம்படி எங்ஙனே என்னில்—இவனைப்பார்க்குமன்றிது விசாரிக்கவேணுமே; சரண்யனுக்கு வேண்டுவது சொல்லுகிறதிறே இதில். ஆர்த்தியோபாதி த்ருப்தியும் இதுக்குப் பரிகாரமாம்படி எங்ஙனே என்னில்—ஆர்த்தி பரிகரமானவிடத்திலே, இதுவும் பலவ்யாப்தமாகக் கண்டு போருகிறது. ஆகையாலே ஆகிஞ்சந்யமேயாயிற்று அதுக்குப் பரிகரம். த்ருப்தனுக்கு இதுக்குப் பரிகரமான ஆர்த்தியுங்கூடவில்லையா யிருந்தது. இனி நாமேயாகாதேயுளோம் என்று அதுக்கும் அவனிரங்குமென்று பரிகரமாகத் தட்டில்லை. [பரேஷாம் சரணுகதஃ அரிஃ]—சத்ருக்களிலே வைத்துக்கொண்டு சரணுகதனை சத்ரு. அதாவது—உக்திமாத்ரமேயாய் கார்யத்தில் சாத்ரவமே முடிய நடவாநிற்கை. அன்றிக்கே, 'கொன்றேன் அன்றேவந்தடைந்தேன்' என்னுமாபோலே கொன்றகரை கழுவாதே வந்து புகுருகை. 'ப்ராணுந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ'—அவர்கள் பக்கலிலே வாசி உண்டாகிலும் ரக்ஷிக்குமிடத்தில் இருவரையும் ஒக்க ப்ராணன்களை அழியமாறி ரக்ஷிக்கப்படும். 'ப்ராணுநபி பரித்யஜ்ய'—என்னுதொழிந்தது—அவன் செய்ததுக்கு ப்ராணனை அழியமாறி ரக்ஷிக்குமதுவும் போராதென்று நினைத்திருந்தபடியாலே. [க்ருதாத்மநா]-இவனுடைய ரக்ஷணத்துக்காகச் செய்ததொன்றன்று. தன்னுடைய ஸ்வரூபஸித்திக்காக ஒருவனோடே ஒன்றை அப்யஸித்து சிக்ஷிதமனுவாயிருக்குமவனுக்கு இத்தனை செய்யவேண்டிவரும்.

ஈ௬. (தி—வாய். 6-2. ப்ரவேசம்.) [ஆர்த்தோவா யதிவா த்ருப்தஃ]—ஆர்த்தனய் சரணம் புகவுமாம். அன்றிக்கே, நாம் திருநாமங்களைச் சொன்னல் சேவகர் நம்மை ஆக்ஷேபித்துச் சொல்லுமாபோலே செருக்காலே சொல்லவுமாம். இங்ஙன் விகல்பிப்பான் என்? ஆர்த்தனுக்கன்றே பலப்ராப்தியுள்ளது, மற்றையவனுக்கு உண்டாகச் சொல்லுகிறவிடம் ப்ரஸித்தமன்றிறே என்னில்—இச்சலோகத்தால் சரணுகத லக்ஷணம் சொல்லுகிறதல்ல; சரண்ய லக்ஷணம் சொல்லுகிறது. இவனுடைய ஆர்த்திதானும் உபாயத்தில் அந்வயியாதிறே. ஆன பின்பு அவனோடு இவனோடு வாசியில்லை. "தன் தசையை அறிந்து 'நமக்கொரு கைம்முதல் இல்லையாயிருந்தது' என்று தன் குறையை அறிவிக்கவும் மாட்டாதபடியா யிருந்தான். ஆனபின்பு, இவனுக்கு நாமே ஆகாதேயுளோம்" என்று திருவுள்ளம் இவன் பக்கல் ஊன்றியிருக்கும். [பரேஷாம் சரணுகதஃ அரிஃ]—சத்ருக்களில் வைத்துக் கொண்டு சரணுகதனை சத்ருவாயிற்றிவன். அதென்னென்னில்—'சரணம்' என்கிற உக்தியைச் சொல்லுகையாலே சரணுகதன் என்னவுமாய் அகவாயிலில்லாமையாலே சத்ருவென்னவுமாயிருக்கை. அன்றிக்கே, பூர்வ வ்ருத்தத்துக்கு அநுதாபமில்லாமையாலும் இப்போது 'சரணம்' என்கிற சப்தத்தைச் சொல்லுகையாலும் இரண்டும் சொல்லலாயிருக்கை, 'கொன்றேன் அன்றே வந்தடைந்தேன்' என்னுமாபோலே. [ப்ராணுந் பரித்யஜ்ய]—ப்ராணங்களை ஒரு தலையாக விட்டு. 'ப்ராணுநபி' என்ன வேண்டாவோ என்னில்—அவன் சொன்ன சொலவுக்கு இதொன்றும் போராமையாலே அது வேண்டாவாயிற்று. [ரக்ஷிதவ்யஃ க்ருதாத்

மா]—சிக்ஷிதமனுவாயிருக்குமவனால் இத்தனையும் செய்யப்படும். அறிவுடையார்க்கு இத்தனையும் செய்தல்லது நிற்கவொண்ணாது.

१२· यदिवा रावण: स्वयम् ।

யதிவா ராவணஃ ஸ்வயம். 18-19. 12.

*அல்லது ராவணன் தானாகவே (இருந்தாலும் இவனை அழைத்து வாரும்.)*

ஈடு. (தி—வாய். 10-2-2.) [யதி வா ராவணஃ ஸ்வயம்]—என்னுமவனிறே விபீஷணனென்று பேராய், ராவணனாயிருந்தானென்று மீளாதே கிடீர், அது என்? அங்குநின்றும் வந்தானொருவனைக் கைக்கொண்டதாக அமையாதோ வென்ன வேண்டா, குறைவாளர்க்கிறே நம்மால் அபேக்ஷையுள்ளது, அதுள்ளது ராவணனுக் கிறே. [விபீஷணஸ்து தர்மாத்மா]—என்று தனக்கென்ன ஒரு கைமுதலுமுண்டா கையாலே நாளை வரவுமாம். அரை க்ஷணம் கிட்டாவிடில் நாசமாயிருக்கிறது அவனுக் கேயன்றோ. ஆனபின்பு அவனையன்றோ முற்படக் கைக்கொள்ள வேண்டுவது. இனித் தானிவனைக் கைக்கொண்டால், இவனும் இவன் தன்னோடே நால்வருமாய்ப் போம். ராவணனைக் கைக்கொண்டால் துறப்புக்கூடாகக் கைக்கொண்டதாகலாம். மஹாராஜ ரொருவரையுமங்கீகரிக்க வாநரஜாதியாக வாழ்ந்து போனாப்போலே.

१३· राघवेणाभये दत्ते संनतो रावणानुज: ।

ராகவேணாபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜஃ. 19-1. 13.

*ராமனால் அபயம் கொடுக்கப் பட்டபோது ராவணன் தம்பியான விபீஷணன் வணங்கினான்.*

ஈடு. (தி—வாய். 8-7-1.) [ராகவேணாபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜஃ]—என்று ராவணன் பின் பிறந்த நாம் ரகுகுலத்திலுள்ளார்க்கு ஆளாகப் புகாநின்றோமோ என்றிருந்தவன், பெருமாள்பாடுநின்றும் அருளப்பாடிட்டு வந்தவாறே, 'என்னையே இப்படி கைக்கொண்டருளுவது. அவன்பின் பிறந்த தண்மை எங்கே போயிற்று' என்று வேரற்ற மரம்போலே, கூடவந்த நால்வரோடும் திருவடிகளிலே விழுந்து தறைப் பட்டாப்போலவும்.

१४· समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति ।

ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்து மர்ஹதி. 19-321. 14.

*அரசராகிய ராமன் கடலை சரணமாக அடைய தகுதியுடையவர்.*

பெ—வ்யா. (திருவிருத்தம். 42.) 'இதொருகடல் இடைச்சுவராய்க் கிடாநின்றது. இத்தைக் கடந்து அவ்வருகு பட்டோமாம் விரகென்' என்று பெருமாள் முதலிகளையடையக் கேட்க ஸ்ரீவிபீஷணாழ்வான் தான் அணித்தாகக் கைக்கண்ட உபாயமாகையாலும், ஸர்வஹிதங்களுக்கும் ஸாதநம் சரணாகதி என்று அத்யவஸித்திருக்கையாலும், பலவ்யாப்தியுள்ளது இதுக்கேயாகையாலும், பெருமாளுக்கு இந்தக் கடலைச் சரணம்புக அடுக்கும் என்றான். [ஸமுத்ரம்]—பெரியவர்களை வசீகரிக்குமுபாயம் இது வல்லதில்லை. [ராகவோ ராஜா]—ஒருகுடிப்பிறப்புமின்றிக்கே அளவுடையாருமன்றிக்கே இருப்பார்க்கும் இது பலிக்குமானால், இவையுடையார்க்குச் சொல்லவேணுமோ? [சரணம் கந்துமர்ஹதி]—வஸிஷ்டசிஷ்யர்கள் பக்கலிலே இது பலிக்கக் கண்டபடியாலே அறிவில்லாத கடலின் பக்கலிலேயும் இது பலிக்குமென்றிருக்கிறான். 'ஸா தேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்'—எருது கெடுத்தார்க்கும் ஏழேகடுக்காய் என்று.

१५. ततः सागरवेलायां दर्भानास्तीर्य राघवः ।
अञ्जलिं प्राङ्मुखः कृत्वा प्रतिशिश्ये महोदधेः ॥
बाहुं भुजगभोगाभमुपधायारिसूदनः ।

ததஃ ஸாகரவேலாயாம் தர்ப்பாநாஸ்தீர்ய ராகவஃ,
அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததேஃ.
பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதநஃ. 21-1. 15.

*பிறகு, சத்ருக்களை அழிக்கின்ற ராமன் கடற்கரையில் தர்ப்பங்களைப் பரப்பி ஸர்ப்பத்தின் உடல்போன்ற கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு கைகூப்பிக் கொண்டு கிழக்குமுகமாகப் படுத்தார்.*

ஈடு. *(தி—வாய். 2-8-7.) [பாஹும் புஜகபோகாபம்]—திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தாற்போலேயாயிற்று திருக்கையை மடித்துச் சாய்ந்திருக்கும்படி. [அரிஸூதநஃ]—கிடந்த கிடையிலே லங்கை குடிவாங்கவேண்டும்படியிருக்கை. [ப்ரதிசிச்யே மஹோததேஃ]—ஒருகடலோடே ஒருகடல் ஸ்பர்த்தித்துச் சாய்ந்தாற்போலேயிருக்கை.*

ஈடு. *(தி—வாய். 6-9-3.) [ப்ரதிசிச்யே] என்கிறதாயிற்று—கடல் தன்னைப்போர அளவுடைத்தாக நினைத்திருக்குமாயிற்று, அதுக்காக ஒருகடல் ஒருகடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாப்போலேயிருக்கை, "கருணையங்கடல் கருங்கடல் நோக்கிக் கிடந்தது" என்னும்படியிறே.*

१६. क्षमया हि समायुक्तं मामयं मकरालयः ।
असमर्थं विजानाति धिक् क्षमामीदृशे जने ॥

க்ஷமயா ஹி ஸமாயுக்தம் மாமயம் மகராலயஃ,
அஸமர்த்தம் விஜாநாதி திக் க்ஷமாமீத்ருசே ஜநே. 21-21. 16.

*இந்த கடல் பொறுமையோடு கூடிய என்னை சக்தியில்லாதவனாகவன்றோ நினைக்கின்றது. இவ்விதமான ஜனத்தினிடத்தில் பொறுமையை நிந்திக்கவேண்டும். (பொறுமை காட்டக்கூடாது.)*

ஈடு. *(தி—வாய். 6-10. ப்ரவேசம்.) [க்ஷமயாஹி ஸமாயுக்தம்]—'ஒரு பெண் பெண்டாட்டி எனக்கு என்றத்தை ஸ்வீகரிக்கையாவது என்? என்று ராஜ்யத்தைப் பொகட்டுப் பொறுத்துப் போந்தார்; இங்கே வருணனை வழி வேண்டி அவன் முகங் காட்டிற்றிலனென்னு, சீறிக் காலைக் கையைக் கட்டாநின்றார். இதிருந்தபடி என்?' என்றாப்போலேயிருந்தார்கள் முதலிகள். (க்ஷமைக்கு விஷயமுண்டு. சத்ருசஜநத்தில் க்ஷமையொண்ணாதென்கிறார்.) 'இவன் வந்திலன்' என்று நாம் சீறவொண்ணாதபடி, வாலி புறப்படுகிறபோது தாரைவந்து கால்கட்டினவோபாதி க்ஷமைவந்து நம்மைக்கால் கட்டாநின்றதென்றார். [மாம்]—"ஸுப்தமத்தகுபிதாநாம் ஸ்வபாவஜ்ஞாநம் த்ருஷ்டம்" என்று கோபம் விளைந்தவநந்தரம் ஜன்மத்தை யுணர்ந்தார். 'பிறர் கை பார்த்திருக்கும் குடிப்பிறப்பன்று' என்றிருக்கிறதில்லை. நம்மை 'ஐயர் மகன்' என்றறிகிறதில்லை. [ஸுப்தேத்யாதி]—தந்தாம் ஸ்வபாவத்தை மறைத்து வர்த்தித்தவர்கள், ஸ்வப்நாதிதசையிலே ஸ்வஸ்வபாவாநுகுணம் பாஷிப்பர்களிறே. அப்படி இவரும் க்ஷத்ரியத்வத்தை உணர்ந்தார். [அயம்]—மஹோததி என்கிற பெருமையை நினைத்திராநின்றது; தன்னைச் சிறுங்கித்திருக்கிற நம்மை அறிகிறதில்லை. [மகராலயஃ]—ஒரு அயோத்யாதிபதி கோஸலாதிபதிகளோடொக்கக் காணும் தன்னை நினைத்திருக்*

கிறது. தன்னை மீன்படு குட்டமாக அறிகிறதில்லை. [அஸமர்த்தம் விஜாநாதி]—செவ்வை கெடப் பரிமாறினுரையுமொக்கவிட்டுக் காரியங்கொள்ளவல்லோமென்றறிகிறதில்லை. இவ்வளவில் செய்யப்படுவது என்னென்னில், [திக் க்ஷமாம்]—இப்போது க்ஷமையை வேண்டோம். விநியோகமுள்ள விடத்தேயன்றோ கார்யங்கொள்வது. கோபத்தோபாதி கார்யகாலத்தே அழைத்துக் கார்யங்கொள்ளப் பார்த்தோம்; அது என்? இக்ஷ்வாகுவம்சயராயிருப்பார்க்கு க்ஷமைகொண்டு கார்யங்கொள்ள வேண்டாவோ என்னில், [ஈத்ருசேஜநே]—அத்தால் பெற்றதென், அதிங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே பலியாநின்றதே.

२७. रामलक्ष्मणगुप्ता सा सुग्रीवेण च वाहिनी ।
बभूव दुर्धर्षतरा सर्वैरपि सुरासुरैः ॥

ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ,
பபூவ துர்த்தர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை:. 25-32. 17.

ராமனாலும் லக்ஷ்மணனாலும் ஸுக்ரீவனாலும் ரக்ஷிக்கப்பட்ட அந்தஸேனை எல்லாத் தேவர்களாலும் அஸுரர்களாலும் ஆக்ரமிக்கமுடியாததாக இருந்தது.

ஈடு. (தி—வாய். 6-9-2) கடற்கரையிலே விட்டபோது பெருமாளை நோக்குகைக்கு, தம்பியார் மஹாராஜர் மைந்தத்விவிதர்களுள்ளிட்ட முதலிகளெல்லாரும் லங்கையிலே கிட்ட, ஆகாசமெல்லாம் வெளிக்காவலடைத்து, நிதி நோக்குவாரைப்போலே பெருமாளை நோக்கிக்கொண்டு கிடக்க, இவர்களித்தனைவரும் கண் சோர்ந்தவளவிலே பெருமாள் தாம் கையும் வில்லுமாய்க்கொண்டு இவர்களுக்குப் புறம்பே நின்றுலாவினாரிறே. அவன் நோக்குகைக்கு இத்தலை கண் செம்பளிக்குமத்தனையிறே வேண்டுவது. நாம் அவனுக்கு ரக்ஷகராக நினைத்திருக்குமது ப்ரமமிறே. உணர்ந்து பார்த்தால் ரக்ஷகனாகவல்லான் அவனேயிறே.

१८. श्रीमता राजराजेन लङ्कायामभिषेचितः ।

ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபிஷேசித:. 2:-2. 18.

ஸ்ரீமானாகிய ராஜாதிராஜனான ராமனால், (விபீஷணன்) லங்காராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்யப்பட்டான்.

பே—வ்யா. (பெரிய திருமொழி. 4-6-3) [ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபிஷேசித:]—என்றார்களிறே அவன்றன் பரிகரமான சுகஸாரணர்கள் தாங்களே. [ஸ்ரீமதா]—உனக்கு முடிதந்த ப்ரஹ்மாதிகளுடைய ஐச்வர்யம்போலன்றிக்கே, ஊற்றுமாறாத ஸம்பத்துடையவனாலே காண் அவன் முடிபெற்றது. [ராஜராஜேந]—உனக்கு முடிதந்தவர்களுக்கு முடிகொடுக்கப் பிறந்தவனாலே காண். [லங்காயாமபிஷேசித:]—இனி உனக்கு ஒரு குடியிருப்புத் தேடிக்கொள்ளாய். அவன் பரிகரமாயிருந்து வைத்து அவன் மிடுக்கையும் ஐச்வர்யத்தையும் காணாநிற்கச் செய்தே இப்படி சொல்லுகைக்கு அடி—அவர் கையும் வில்லும் கண்டுபோந்த நாளனுமையாலே 'இக்கொசுகு நம்மை என் செய்யப் புகாநின்றதோ' என்று இவன் மதிப்பற நினைத்திருந்தபடியாலே.

१९. अथ हरिवरनाथः प्राप्य संग्रामकीर्तिम् निशिचरपतिमाजौ योजयित्वा श्रमेण ।
गगनमतिविशालं लङ्घयित्वाऽर्कसूनुर्हरिवरगणमध्ये रामपार्श्वं जगाम ॥

அத ஹரிவரநாத: ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம்
நிசிசரபதிமாஜௌ யோஜயித்வா ச்ரமேண,
ககநமதிவிசாலம் லங்கயித்வார்க்கஸூநு:
ஹரிவரகணமத்யே ராமபார்ச்வம் ஜகாம. 40-29. 19.

பிறகு வாநரசிரேஷ்டர்களுக்கு நாதனான ஸூரியபுத்ரனாகிய ஸுக்ரீவன் யுத்தப் புகழை அடைந்து, ராக்ஷஸராஜனாகிய ராவணனை யுத்தத்தில் சிரமத்தோடு சேர்த்து விட்டு மிகவும் பரந்ததான ஆகாசத்தைத் தாண்டி வாநரசிரேஷ்டர்களுடைய கூட்டத்தின் நடுவில் ராமன்பக்கத்தை அடைந்தான்.

ஈடு. (தி—வாய். 7-4-1) பரிகரம் நிற்க மஹாராஜர் ராவணன்மேலே பாய்ந்தாப்போலே. ‘பையல் முடியும் தானுமாய்ப் பெருமாள் திருமுன்பே நிற்பதே. ஈரரசாயிற்றே’ என்று பொறாமையாலே மேல் விழுந்தாரிறே. [அத ஹரி வரநாதஃ]—தம்மோடொக்க வினைசெய்யவல்லபேர் தனித்தனியே அநேகரிறே [ப்ராப்ய ஸங்க்ராம கீர்த்திம்]—இவர்களோடுகூடி நின்று ஒத்த போராகவொண்ணாது. தூசித்தலையிலே ஒரேற்றம் செய்து தரம் பெறவேணுமென்றிருந்தார். பூசல் தலையிலே பெருமாளுக்குண்டான கீர்த்தியையும் தந்தலையிலே ஏறிட்டுக்கொண்டார். [நிசிசரபதிம்]—அத்தலையிலும் அவனோடொக்க வினைசெய்யவல்லார் அநேகரிறே. ‘அவன் கீழ்த்திரியுமவர்கள் தரம் போரார்’ என்று அவன்றன்னோடே பொருதபடி. [ஆஜௌ]—அவர்களைப் போலே வழியல்லாவழியே இளைப்பிக்கையன்றிக்கே, செவ்வைப்பூசல் செய்து இளைப்பித்தபடி. [யோஜயித்வா ச்ரமேண]—இதுக்கு முன்பு கூடாததொன்றோடே கூட்டினார். [ககநமதிவிசாலம் லங்கயித்வா]—பரப்பையுடைத்தான ஆகாசத்தைத் திறலாலே வருத்தமறக் கடந்தார். [அர்க்க ஸூநுஃ]—மீட்சியில் தம் வரவு தெரியாதபடி மீண்டார். பிறப்புக்கீடாகச் செய்தார். தன்னிலமிறே. ஆதித்யன் ஓரிடத்தினின்றும் ஓரிடத்தேறப் போம்போது தெரியாதிறே. [ஹரிவரகணமத்யே]—‘இவர்களில் ஒரு வ்யாவ்ருத்தி தோற்றவொண்ணாது’ என்று இவர்கள் நடுவே நின்றார். [ராமபார்ச்வம் ஜகாம]—தூசித்தலையிலே மதிக்க ஒரு வினை செய்தாரன்றோ முன்னிற்கப்பெறுவார் என்று பெருமாள் பார்ச்வத்திலே வந்து நின்றார்.

ஈடு. (தி—வாய். 10-6-8) [அத ஹரிவரநாதஃ]—ஒரு முத்தின் குடை நிழலிலே பையல் பெருமாளுக்கெதிராக வந்து தோன்றினவாறே, பொறுக்கமாட்டாமை மேல் விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயாப்ரயோகத்திலே கைவைக்குமளவானவாறே, ‘இனி நமக்கும் அது வேண்டிவரும். அது நமக்கீடல்ல. பெருமாள் பண்ணின ப்ரதிஞ்ஜையை நாம் அழிக்கவொண்ணாது’ என்று மீண்டார். [ராமேண ஹி ப்ரதிஜ்ஞாதம்]—ஸத்யஸங்கல்பரான பெருமாள் ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார். [ஹர்யக்ஷகணஸந்நிதௌ]—வீரர்கள் திரள் நடுவே ப்ரதிஜ்ஞை பண்ணுகிறது. ஆனபின்பு இவர்க்கு நிர்விஷயமாக்கவொண்ணாதென்றுபார்த்தார். [ஹரிவரநாதஃ]—தாம் செய்த இக்கார்யம் தம் பரிகரத்தில் செய்வாரில்லாமல் செய்தாரல்லர், பொறாமையாலே செய்தாரித்தனை. [ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம்]—பூசல்பாக்யமென்று தனியே ஒன்றுண்டிறே, அத்தால் வந்த புகழைத் தாம் படைத்தார். [நிசிசரபதிம்]—களவு பூசல் செய்வார்க்கு ஒதுங்க நிழலான பையலை. ராஜபுத்ரர்களை அகற்றித் தனியிடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலிறே. [ஆஜௌ]—அவர்களுக்கு அபூமியான செவ்வைப் பூசலிலே. [யோஜயித்வா ச்ரமேண]—அவனை இளைப்போடே கூட்டினார். [ககநமதிவிசாலம் லங்கயித்வா]—நடுவிடைவெளி பெருத்திருக்கிற ஆகாசத்தை வருத்தமறக் கடந்தார். [அர்க்கஸூநுஃ]—அதுசெய்தபடி ஆதித்யபுத்ரனென்று தோன்றும்படியாயிருந்தது. உதயகிரியிலே தோற்றினால் பின்பு அஸ்தமித்து நிற்கக் காணுமித்தனையிறே. [ராமபார்ச்வம் ஜகாம]—பெருமாளைப் பிரிந்தபடியாலே வந்து கிட்டுவதும் செய்தோம் என்று தோற்றும்படி மதிக்கவொன்று செய்துவாராமையாலே, நேர்கொடு நேர் முன் நிற்கமாட்டாதே பெருமாளருகே போய் நின்றார். பையல் தலையைப் பிடுங்கிக் கொண்டுவந்து திருவடிகளிலேயிடப் பெறாத நாம் என் சொல்லி முன்னே நிற்பதென்று பெருமாளருகே வந்து நின்றார்.

२०. त्वयि किञ्चित्समापन्ने किं कार्यं सीतया मम ।

த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம. 41-4. 20

நீர் கொஞ்சமாவது ஆபத்தை அடையும்போது (அடைவதாயிருந்தால்) எனக்கு ஸீதையால் ஆகவேண்டியது என்ன?

ஈடு. (தி—வாய். 1-2-6) 'த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம' என்னுமாப்போலே. இன்று ஆச்ரயித்ததொருதிர்யக்குக்கு ஒரு வாட்டம் வரில் நித்யா ச்ரிதையான பிராட்டியாலும் கார்யமில்லை, அன்றீன்றகன்றின்பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக்கன்றையும் கொம்பிலே கொள்ளுமாப்போலே.

ஈடு. (தி—வாய். 4-5-8) [த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம] பெருமாள் எழுந்தருளி நிற்கச்செய்தே ராவணன் கோபுரசிகரத்திலே வந்து தோற்றின வாறே, 'ராஜத்ரோஹியான பையல் திருமுன்பே நிற்கையாவதென்' என்று மஹா ராஜர் அவன்மேலே எழப்பாய்ந்து வென்றுவந்தபோது பெருமாள் அருளிச்செய்கிறார்— [ஏவம் ஸாஹஸயுக்தாநி நகுர்வந்தி ஜநேச்வராः]—சிலர் மேல் விழவேண்டினால், பரிகர பூதர் நிற்க ப்ரதாநரோ மேல் விழுவார்? 'லோகநாதः புராபூத்வா ஸுக்ரீவம் நாதமிச் சதி'—கிடைப்பது கிடையாதொழிவது, இச்சியாநின்றார். 'ஸுக்ரீவம் சரணம் கதः'— 'ஸ்ரீவிபீஷணாழ்வானைப் புகுரவொட்டேன்' என்கிறார் மஹாராஜர். 'இவன் புகுரா விடில் நாம் உளோமாகோம்' என்கிறார் பெருமாள். இப்படி இருவரும் விப்ரதிபத்தி பண்ணினவிதுக்குக் கருத்தென்' என்று ஜீயர் கேட்க, இருவரும் சரணாகதரானவர்களை விடோம் என்று விப்ரதிபத்தி பண்ணுகிறார்கள் காணும் என்று பட்டர் அருளிச் செய்தவார்த்தை. ஸுக்ரீவம் சரணம் கதः, என்றத்தை நடத்தப்பார்த்தார் மஹாராஜர், 'ராகவம் சரணம் கதः' என்றத்தை நடத்தப்பார்த்தார் பெருமாள். ஆகையிறே 'ஆநய' என்று அவரை யிடுவித்து அழைத்துக்கொள்ள வேண்டிற்று. [த்வயி கிஞ்சித் ஸமாபந்நே]—நீர் மஹாராஜரான தரம் குலைய அவன் ஒரு வார்த்தை சொல் லுமாகில், நீர் தேடிப்போகிற சரக்குத்தான் நமக்கு என் செய்ய என்றாரிறே.

२१. शाखामृगा रावणसायकार्ता जग्मुः शरण्यं शरणं स्म रामम् ।

சாகாம்ருகா ராவணஸாயகார்த்தா ஜக்முச்சரண்யம் சரணம் ஸ்ம ராமம்.

வாநரர்கள் ராவணனுடைய அம்புகளால் பீடிக்கப்பட்டவர்களாய் ரக்ஷகனை ராமனையே சரணமாக அடைந்தார்கள்.

ஈடு. (தி—வாய். 7-1. ப்ரவேசம்) [சாகாம்ருகாः]—பூசலிலே புக்கு அங்குண் டான வாஸனையின்றிக்கேயிருக்கை. பணையோடு பணை தத்தித்திரியுமவையிறே. [ராவணஸாயகார்த்தாः]—திக்பாலர்களையுங்கூட அச்சமுறுத்தி வளர்ந்தவன் கையிலம்பு கள். [ஜக்முः சரண்யம் சரணம் ஸ்ம ராமம்]—தங்களுடைய ஆபத்தை அறிந்து பரி ஹரிக்க வல்லவனையும் பார்த்துப் பற்றினார்கள்.

२२. शत्रूणामप्रकम्प्योऽपि लघुत्वमगमत्कपेः

சத்ருணாமப்ரகம்ப்யோபி லகுத்வமகமத் கபேः. 59-118. 22

(லக்ஷ்மணன்) சத்ருக்களுக்கு அசைக்கமுடியாதவனாயிருந்தும் ஹநுமானுக்கு லகுவாயிருக்குந் தன்மையை அடைந்தான்.

ஈடு. (தி—வாய். 1-3-1) ராவணன் ஸபரிகரனாய்க்கொண்டு எடுக்கப் புக்கவிடத் தில் நெஞ்சில் சாத்ரவத்தாலே எடுக்கமாட்டிற்றிலன். திருவடி தனியனாயிருக்கச் செய் தேயும் நெஞ்சில் செவ்வையாலே கருமுகைமாலைபோலே எடுத்தேறிட்டுக்கொண்டு

போனான். இங்ஙனன்றாகில், ராவணனுக்குக் கனக்கவேணும் என்றும், திருவடிக்கு நொய்தாகவேணும் என்றுமன்று. வஸ்துஸ்வபாவமிருக்கும்படியாயிற்று இது.

२३. स्मरन् राघवबाणानां विव्यथे राक्षसेश्वरः ।

ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வரः. 60-3. 23

*ராவணன் ராமபாணங்களை நினைத்துக்கொண்டு வருத்தப்பட்டான்.*

பே—வ்யா. (பெரிய திருமொழி 8-1-1) [ஸ்மரந் ராகவபாணாநாம்]—பெருமாள் திருநாமத்தால் எழுத்து வெட்டின அக்ஷரங்களையும், திருச்சரங்களையுடைய ஸந்நிவேசத்தையும் ஸ்மரியா நின்றுகொண்டு. [விவ்யதே]—அவர் ஒருகால் முன்னே நின்று போகச் செய்தேயும், எப்போதும் ஒக்க முன்னே நிற்கக்கண்டாப்போலே வ்யதித்தான். [ராக்ஷஸேச்வரः விவ்யதே]—இவன் ஆண்ட பரிகரமடங்கலும் வினைக்கு உடலாயிற்றில்லை. எடுத்தெடுத்துக் குலைக்கிறபோது சுளைப்பிடாமிட்டு அமுக்குக்கைக்கு உடலாமித்தனை.

२४. शत्रोः प्रख्यातवीर्यस्य रञ्जनीयस्य विक्रमैः ।

पश्यतो युद्धलुब्धोऽहं कृतः कापुरुषस्त्वया ॥

சத்ரோः ப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைः,

பச்யதோ யுத்தலுப்தோஹம் க்ருதः காபுருஷஸ்த்வயா. 106-6. 24

*ப்ரஸித்தமான வீரத்தன்மையுடையவனும் பராக்ரமங்களாலே மகிழ்விக்கத் தக்கவனுமான சத்ருவானவன் பார்த்துக்கொண்டிருக்கும்போது யுத்தத்தில் ஆசை கொண்ட உன்னால் தாழ்ந்த மனிதனைச் செய்யப்பட்டேன்.*

பே—வ்யா. (பெரியதிருமொழி. 2-8-2) [சத்ரோः]—கெடுவாய், என்னுடைய சத்ருவை ஆரென்று நினைத்துத் தேரை மீட்டுக்கொடு போந்தாய். [ப்ரக்யாதவீர்யஸ்ய]—எதிகளான நம்படைவீட்டிலும் ப்ரஸித்தமாயன்றோ அவருடைய ஆண்பிள்ளைத்தனமிருப்பது, நீகேட்டறியாயோ, அது ஏறிப்பாயாத மேடில்லைகாண். [ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைः]—கண்டு பராக்ரமிக்கவொண்ணாதபடி அளவற எதிரிமுடுகினால் அது நிலமாக்கிக்கொண்டு பராக்ரமிக்கும்படியைப் பார்த்தால், காந்தனைவிரும்புமாபோலே எதிரிகளுக்கு விரும்பவேண்டும்படி காண் அவர் ஆண்பிள்ளைத்தனமிருப்பது.

२५. उत्तिष्ठोत्तिष्ठ किं शेषे प्राप्ते परिभवे नवे ।

अद्य वै निर्भया लङ्कां प्रविष्टाः सूर्यरश्मयः ॥

உத்திஷ்டோத்திஷ்ட கிம் சேஷே ப்ராப்தே பரிபவே நவே,

அத்ய வை நிர்ப்பயா லங்காம் ப்ரவிஷ்டாஸ் ஸூர்யரச்மயः. 114-82. 25

*எழுந்திரும்; எழுந்திரும்: புதிய அவமானம் வந்திருக்கும்பொழுது தூங்கலாமா. இப்பொழுதே சூரியகிரணங்கள் பயமற்றவைகளாய் லங்கையுள் நுழைந்தன.*

பே—வ்யா. (பெரியதிருமொழி. 1-2 2) ராவணன் பட்டுக்கிடக்க அவன் பார்யை 'ஆதித்ய கிரணங்கள் இங்குப் புகுந்து ஸஞ்சரியாநின்றன கிடாய்' என்றாளிறே, அப்பரிபவம் பொறுமை பிணமெழுந்திருக்குமென்று. [ப்ராப்தே பரிபவே நவே, அத்யைவ நிர்ப்பயா லங்காம்]—இதுக்கு முன்பில்லாததொன்று இப்போது உண்டாயிற்று கிடாய். முன்பு நெல்லுலர்த்த வேண்டுவது ஸஞ்சரித்துப் போமித்தனையாயிற்று ராவணபயத்தாலே. இப்போது நிர்ப்பயமாய்க்கொண்டு உலாவாநின்றன.

२६. मरणान्तानि वैराणि निर्वृत्तं नः प्रयोजनम् ।
क्रियतामस्य संस्कारो ममाप्येष यथा तव ॥
மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் நஃ ப்ரயோஜநம்,
க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரஃ மமாப்யேஷ யதாதவ. 114-101. 26

பகைமைகள் சாவோடு முடிவுபெறுகின்றன. நமது பயன் நிறைவேறியது' இந்த ராவணனுக்கு சரமச்சடங்கு செய்யப்படட்டும். இவன் உமக்கு எப்படியோ எனக்கும் அப்படியே.

ஈடு. (தி—வாய். 2-7. ப்ரவேசம்) [மரணாந்தாநி வைராணி]—ரிஷிகள் குடியிருப்பை அழித்து, மைதிலியைப் பிரித்து, நம்முயிர்நிலையிலே நலிந்தாற்போலே ஸ்ரீஜடாயு மஹாராஜரை நலிந்து; இவையெல்லாம் செய்யமாட்டானே இவன் இனி. [நிர்வ்ருத்தம் நஃ ப்ரயோஜநம்]—இவன் ஜீவிக்கிற நாளிலே 'நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண்' என்றிருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம்; நாம் தேடியிருந்தது முந்தற முன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே. [க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரஃ]—இவன் நாம் செய்யும் நன்மை விலக்காதானனவளவு பிறந்தவின்றும் இழக்க வேணுமோ, வேண்டுவன செய்யப்பாரும். [மமாப்யேஷ யதா தவ]—நீர் இருய்த்திருந்தீராகில், குடல்துடக்குடையாரிலே ஒருவன் செய்யுமத்தனையன்றோ; நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய, நீர் பின்னைக் கடக்க நில்லீரென்றாரிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான்பக்கல் ஓரம் ராவணனளவுஞ் சென்றதிறே.

२७. निभृतः प्रणतः प्रह्वः ।
நிப்ருதஃ ப்ரணதஃ ப்ரஹ்வஃ. 116-. 274

ஈடு. (தி—வாய் 2-7-2) [நிருப்தஃ]—ஒரு அவயவத்திலே எல்லா அவயவங்களும் ஒடுங்கும் படியாயிருக்கை [ப்ரணதஃ]—வேறே சிலர் எடுக்கவேண்டும்படி சிதிலனாய் விழுந்து கிடக்கை. [ப்ரஹ்வஃ] 'இப்படி கிடந்தோம்' என்னுமது நெஞ்சில் நடையாடாதிருக்கை.

२८. दासीनां रावणस्याहं मर्षयामीह दुर्बला ।
தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா. 116-41. 28

பலமில்லாத நான் இங்கு ராவணனுடைய வேலைக்காரிகளுடைய (குற்றத்தை) பொறுக்கின்றேன்.

ஈடு. (தி—வாய். 5-4-5) [தாஸீநாமித்யாதி]—திருவடிசென்று ராக்ஷஸிகளை நலியப்புக, இவர்கள் ராவணன் சோறுண்டு அவனுக்குப் பரதந்த்ரைகளாகையாலே என்னை நலிந்தார்களாகில், தங்களாலே வந்ததொன்றன்றாகில், அது தனக்கு நாமும் 'பொறுத்தோம்' என்று நேர்த்தரவு கொடுத்த பின்பு இனி இவற்றை நலிகிறதென்னென்ன, 'ராவணனும் பட்டானாகில் நம்மை நெடுநாள் நலிந்து போந்த இப்பெண்பயல்களை இப்போது பொறுக்கவேண்டுகிறதென்' என்ன, [துர்பலா]—'சிலர் நம்மை நலிந்தார்கள் என்று நாமவர்களை நலியப்புக்கால், அப்போதே அவர்கள் கண்குழிவு காணமாட்டாதார் பின்பு செய்வதென் பொறாமல். ராவணனும்பட்டு பெருமாளும் விஜயிகளான பின்பு இனி இதொழிய வேறொரு தௌர்பல்யமில்லையிறே.

ஈடு. (தி—வாய். 6-10-10) [தாஸீநாமித்யாதி]—திருவடி 'ராக்ஷஸிகளை என் கையிலே காட்டித்தரவேணும்' என்ன, பிறர் கண்குழிவு காணமாட்டாத துர்ப்பலை காண் என்றாளிறே. ராவணன் பட்டானாகில், பெருமாள் விஜயத்தோடே நின்றாராகில்,

வேறொரு தௌர்ப்பல்யமில்லையிறே. இனி தௌர்பல்யமாவது. பிறர் நோவு காண மாட்டாமையிறே

२९. पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवंगम ।
कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति ॥

பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம,
கார்யம் கருணமார்யேண நகச்சிந் நாபராத்யதி. 116-45. 29

ஹநுமானே! பாபிகளாயினும் நல்லவர்களாயினும் கொல்லத்தகுந்தவர்களுடைய (விஷயத்தில்) தயையுள்ள கார்யமே நல்லவனால் செய்யத்தக்கது. எவனும் குற்ற மற்றவனல்லன்.

ஈடு. (தி—வாய். 6-10-10) [பாபாநாம்வா]—பிராட்டியுடைய அபயப்ரதான ச்லோகம். 'ராவணனும் பட்டு, பெருமாளும் விஜயிகளானார்' என்று பெரிய ப்ரியத்தைப் பிராட்டிக்குத் திருவடி விண்ணப்பம் செய்ய, பிராட்டியும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே விம்மல் பொருமலாய் ஸ்தப்தையாயிருக்க, இவனும் விக்கலுக்கு வெம்மாற்றம்போலே 'கிம் நு சிந்தயஸே தேவி கிம் த்வம் மாம் நாபிபாஷஸே' என்று பெரிய ப்ரியத்தை வந்து விண்ணப்பஞ்செய்த எனக்கொரு மறுமாற்றம் சொல்லாதே தேவரீரெழுந்தருளியிருக்கிற இருப்பு என்தான்? என்று திருவடி விண்ணப்பம் செய்ய, பிராட்டியும் 'உனக்கு ஸத்ருசமாகத் தரலாவதொன்று இல்லாமை காண் நான் பேசாதிருந்தது' என்ன, இவனும் 'இவ்வளவிலே நம்மபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்துகொள்ளவேணும்' என்று பார்த்து, தேவரைச்சுற்றும் முற்றும் நலிந்த ராக்ஷஸிகளாகிறார் க்ரூரைகளாய் ததநுகுணபாவைகளாயிற்று, ராவணனுக்கு முன்பே கொல்லவேண்டுவது இப்பெண் பிள்ளைகளையாயிற்று, அவனும் இவர்களோபாதி கேடனல்லன், இவர்கள் இப்போது பாம்புபடம் அடங்கினாப்போலே இருக்கிறார்களித்தனையாயிற்று, இவர்களை பஹுப்ர காரமாக ஹிம்ஸிக்கப்பாராநின்றேன், 'முஷ்டிபி: பாணிபிச்சைவ' என்று கையாலே குத்தியும் காலாலே துகைத்தும் நகங்களாலே சாடித்தும் பற்களாலே கடித்தும் துண்டித்தும் 'சிங்நம் பிங்நம் சரைர்தக்தம்' என்று பெருமாள் திருச்சரங்கள் செய்ததெல்லாம் நானே பண்ணப்பாராநின்றேன், பகவதபசாரிகளையும் பாகவதாபசாரிகளையும் தண்டிக்கும் க்ரமத்திலே தண்டிக்கக்கோலா நின்றேன், முன்பு வந்தபோது இடமில்லாமை விட்டுப்போனேனித்தனை, இப்போது எனக்கு எல்லா ப்ரத்யுபகாரங்களும் பண்ணியருளிற்றாகலாம், இதித்தனையும் திருவுள்ளம் ஆகவேணும் என்றான்; என்ன, 'பாபாநாம் வா' என்றருளிச் செய்கிறாள். [பாபாநாம் வா சுபாநாம் வா]—இவர்கள் நீ நினைத்திருக்கிறபடியே பாபைகளாகவுமாம், நான் நினைத்திருக்கிறபடியே சுபைகளாகவுமாம். அது தானேயன்றோ உத்தேச்யம். 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என்றாப்போலே அழுக்குடையவனன்றோ குளிக்க ப்ராப்தியுடையான். அவர்கள் பாபைகளாகிலன்றோ நாம் முகம் கொடுக்கவேண்டுவது, சுபைகளாகில் உன்வால் வேணுமோ, அவர்கள் புண்யங்களே அவர்களுக்குக் கை கொடுக்குமே, கைம் முதலில்லாதார்க்கன்றோ நாம் கைம்முதலாகவேண்டுவது என்றாள். [வதார்ஹாணாம்]—தண்ட்யரைத் தண்டிக்கவும் அல்லாதாரைத் தவிரவும் சொல்லுகிற தர்மசாஸ்த்ரம் தேவரைத் தோற்றிக் கிழித்துப் பொகடக்கடவதோ என்ன, ஆரேனுமாக சரணாகதரை ரக்ஷிக்கக்கடவதென்கிற விசேஷசாஸ்த்ரம் உன்னைத் தோற்றிக் கிழித்துப் பொகடக் கடவதோ என்கிறாள். 'சரணம்' என்று வந்த விபீஷணாழ்வான் தோஷவானேயாகிலும் 'நத்யஜேயம்' என்று பெருமாள் கடற்கரையிற் சொன்ன வார்த்தை கடலோசையாகக் கடவதோ என்கிறாள். [ப்லவங்கம]—பின்னையும் இவன் புத்தி திரியவிடாமையினாலே ஹரிஹரி என்கிறாள். ப்லவங்கம என்கிறாள். நச்சினத்தை நச்சும் ஜாதியானமை கண்டோமே என்கிறாள். வஸிஷ்டாதிகள் மந்த்ரிக்கும் குடியான இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தாயல்லை: யோகி

களான ஜநககுலத்தில் பிறந்தாயல்லை, காட்டிலே பணையோடு பணை தத்தித் திரிகிற ஜாதியிலேயிறே பிறந்தது. அங்ஙனொத்தார்க்கு சரணாகதியோட்டை தெரியாதிறே என்கிறாள். ஹரிஹரி என்கிறாள், 'வாநரோத்தம' என்றவள் தானேயிறே ப்லவங்கம என்கிறாள். ராஜாக்களுமாய் மூலையடியே நடக்கவுரியருமாயிருக்கிற பெருமாளும் எங்கள் முன் இத்தனை கோபித்தறியார், நீ வாநரஜாதியாயிருந்து வைத்து இங்ஙன் கோபிக்கக்கடவையோ. [கார்யம் கருணமார்யேண]—இவர்கள் புண்யபாபம் கிடக்க, இப்போதாக தயநீயதசையைப் பாராய், உன் கையிலே அகப்பட்டு நாமென்படக்கடவோம் என்று தியங்குகிறபடி பாராய். இவர்களுக்கு வேறு ரக்ஷகரில்லையே, இப்போது இவ்வளவில் நாம் இரங்கவேணும் காண். [ஆர்யேண]—இவையெல்லாம் இப்போது நான் கற்பிக்கவேண்டும்படியாவதே உனக்கு. [ஆர்யேண]—ஐந்த்ரவ்யாகரணபண்டிதனென்கிறது பொய்யோ. அவையுமெல்லாம் கற்றுக் கேட்டிருக்கச் செய்தேயும், இப்போது ராமகோஷ்ட்டியில் பரிசயம் பின்னாட்டினபடியாகாதே. அக்கோஷ்டியிற் பழக்கமிறே நீ இங்ஙன் சொல்லவல்லையாயிற்று. நான் போந்த பின்பு அக்கோஷ்டி இங்ஙனே நீரற்றதாகாதே என்று கருத்து. [நகச்சிந்நாபராத்யதி]—ஸமஸாரத்தில் குற்றமில்லாதார் யார். திரை நீக்கிக் கடலாடப் போமோ. நற் குதிரையாகப் பாவித்திருக்கிற பெருமாள்தான் குற்றவாளரல்லரோ, நான்தான் குற்றவாட்டியல்லேனோ, நீதான் குற்றவாளனல்லையோ? பெருமாள் குற்றவாளரானபடி எங்ஙனே என்னில், தாம் காடேறப் போந்தார். அவர்பின்னே மடலூருவாரைப்போலே இளையபெருமாளும் போந்தார் தம்மோடே ஏகாந்தபோகம் பண்ணக் கடவதாக இலையகலப் படுத்துக்கொண்டு நானும் போந்தேன். என்னைப் பிரிந்து பத்து மாஸமிருந்தார். தாம் வாராவிட்டால் தம்மதோர் அம்பு இசங்கமாட்டாமையில்லையிறே இவ்வழி. இத்தனை நாள் பிரிந்திருக்க வல்லரானபோதே பெருமாள் பக்கலிலேயன்றோ குற்றம் பாரதந்த்ர்யத்துக்கு அநுகுணமாகப் பேசாதிராதே, அதுதன்னைச்சொன்ன என்பக்கலதன்றோ குற்றம். இனி, நாயகன் சொன்ன கார்யம் செய்த அடியாரை தண்டிக்கப்பார்த்தவன்று, பெருமாளருளிச்செய்த கார்யம் செய்யப் போந்த உன்னை முற்பட தண்டித்துக்கொண்டன்றோ ராவணன் சொன்ன கார்யம் செய்த இவர்களை தண்டிப்பது. ஆகையால் நீயல்லவோ குற்றவாளன். எல்லாப்படியாலும் பெருமாள் ஒரு விஷயத்தை முனிந்தவன்று ஆறவிடுகைக்கு நானுண்டு. நானும் அவர் வழி போகவேண்டியிருந்தவன்றைக்கு நீ உண்டு என்றிருந்தேன். நீயும் இங்ஙனேயானால் அபராதம் செய்தார்க்குப் புகுவாசலுண்டோ என்கிறாள்.

३०. दीपो नेत्रातुरस्येव प्रतिकूलाऽसि मे दृढम् ।

தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்ருடம். 118-17. 30

கண்ணோவுள்ளவனுக்கு விளக்குபோலே எனக்கு வருத்தத்தைத் தருகிறவளாக இருக்கிறாய். (இது) உறுதியானது.

ஈடு. (தி—வாய். 7-3-7) இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும்படி—நேத்ரதோஷத்தால் வந்தது போக்கி, தீபதோஷத்தால் வந்ததன்று என்று.

३१. संगत्या भरतः श्रीमान् राज्यार्थी चेत्स्वयं भवेत् ।
प्रशास्तु वसुधां कृत्स्नामखिलां रघुनन्दनः ॥

ஸங்கத்யா பரதஃ ஸ்ரீமாந் ராஜ்யார்த்தீ சேத் ஸ்வயம் பவேத்,
ப்ரசாஸ்து வஸுதாம் க்ருத்ஸ்நாமகிலாம் ரகுநந்தநஃ. 128-16. 31

ஸ்ரீமானாகிய பரதன் நமது சேர்க்கையால் தான் ராஜ்யத்தை விரும்புகிறவனாக ஆவானேயாகில் ரகுகுலப்பிள்ளையாகிய பரதன் பூமிமுழுவதையும் கொஞ்சங்கூடவிடாமல் காப்பாற்றட்டும்.

பெ—வ்யா. (திருவிருத்தம் 51) [ஸங்கத்யேத்யாதி]—ஐயர் நியமிக்க ஆச்சியுடைய வரவ்யாஜத்தாலே நாம் ராஜ்யத்தைத் தனக்கே கொடுத்துப் போரச்செய்தேயும் நம்மைப் பின் தொடர்ந்து வந்து, சொன்ன நாள் எல்லை கழிந்தாற் பின்னை ஒரு க்ஷணம் நான் தாழ்க்கில் தன்னைக் கிடையாது' என்னும்படி நம் நெஞ்சிலே படுத்திப் போனான். இன்று நாம் சென்று கிட்டினால் பதினாலாண்டு பிரிந்து கண்ட ஹர்ஷத்தாலே 'நீ முடிசூடு' என்றால் 'அல்லேன்' என்னாதே அத்தை இசையப்பெறுவது காண். ஐயர் நம்மை முடிசூட்டப் பாரித்துப் பெறாதே யொழிந்த இழவு நாம் பிள்ளையை முடி சூட்டிக் கண்டு தீரப்பெறுவது காண். 'சனைர்ஜகாம ஸாபேக்ஷ:' என்கிறத்தை 'ஸாவேக்ஷ:' என்று திருத்தி, கீழ்விழியாலே பார்த்துப் போனானென்று பொருள் சொன்னபடியை பட்டர் கேட்டருளி 'அது வேண்டா காண். கிடந்த பாடந்தனக்கே பொருள் சொல்லலாம் காண்' என்று, 'இவ்வுபகரணங்களைக் கொண்டு நாம் பிள்ளையை முடிசூட்டிக் காணப் பெற்றிலோம் என்னுமபேக்ஷையோடே போனானென்கிறதுகாண்' என்றருளிச்செய்தார்.

३२. न हि ते राजपुत्रं तं काषायाम्बरधारिणम् ।
परिभोक्तुं व्यवस्यन्ति पौरा वै धर्मवत्सलम् ॥

நஹி தே ராஜபுத்ரம் தம் காஷாயாம்பரதாரிணம்,
பரிபோக்தும் வ்யவஸ்யந்தி பௌராவை தர்மவத்ஸலம். 128-16. 32

காஷாயவஸ்த்ரம் தரித்தவனும் தர்மத்தில் ப்ரியமுள்ளவனும் ராஜகுமாரனுமான அந்த பரதனை அநுபவிக்க அந்த பட்டணத்து ஜனங்கள் முயலவேயில்லை.

ஈடு. (தி—வாய். 9-2-2) [நஹீத்யாதி]—அருகேயிருக்கச் செய்தேயும் இவனைச் சூழ்விருக்கிற பௌரரானவர்கள், இவனை அநுபவிக்கையில் நசையற்றார்கள். அதுக்கடி என்னென்னில், [ராஜபுத்ரம்]—பெருமாள் போகின்றவநந்தரம் முடிந்தவன்மகனன்றோ, இவனோ தான் நமக்குத் தொங்கப் புகுகிறான் என்றிருந்தார்கள். [தர்மவத்ஸலம்]—இதுக்குமவனோடு ஒக்கும். தர்மத்துக்காகத் தன்னை அழியமாறினானிறே அவன்.

३३. ततो हर्षसमुद्भूतो निस्वनो दिवमस्पृशत् ।
स्त्रीबाल्युववृद्धानां रामोऽयमिति कीर्तिते ॥

ததோ ஹர்ஷ ஸமுத்பூதோ நிஸ்வநோ திவமஸ்ப்ருசத்,
ஸ்த்ரீபாலயுவவ்ருத்தாநாம் ராமோயமிதி கீர்த்திதே. 130-31. 33

பிறகு இவர் ராமன் (இதோ ராமன்) என்று சொல்லப்பட்டபொழுது பெண் பிள்ளைகளுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் கிழவர்களுக்கும் ஸந்தோஷத்தாலுண்டான கூச்சல் ஸ்வர்க்கத்தைத் தொட்டது.

ஈடு. (தி—வாய். 3-7-3.) 'தந்தாம் கற்பழியும் வார்த்தை சொன்னால், என்றிருக்கும் ஸ்த்ரீகள், முதலிலே வார்த்தை சொல்ல அறியாத பாலர்கள், வாய்விட்டொன்றும் சொல்லாத யுவாக்கள், கரணபாடவமில்லாத வ்ருத்தர்கள், இவர்களித்தனைவரும் வாய்விட்டேத்தும்படியாயிற்றுப் பெருமாளழகு.

३४. प्रदेहि सुभगे हारं यस्य तुष्टाऽसि भामिनि ।
ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி. 131-80. 34

*ஸௌபாக்கியம்பொருந்திய அழகுள்ள ஸீதே! நீ எவனிடம் ஸந்தோஷமுள்ளவளாக இருக்கின்றாயோ; (அவனுக்கு) முத்துமாலையைக் கொடு.*

பே—வ்யா. *(திருப்பல்லாண்டு. 8) [ப்ரதேஹீத்யாதி]—இந்த்ரன் வரக்காட்டின ஹாரத்தைப் பெருமாள் வாங்கிப் பார்த்தருளிப் பிராட்டிக்குக் கொடுக்கிறபோது, அத்தை வாங்குகிறவள் பெருமாளை ஒரு திருக்கண்ணாலும் திருவடியை ஒரு திருக்கண்ணாலும் பார்த்து வாங்கினாள் 'ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலாঃ' என்று. பார்வையிற் கருத்தறியுமவராகையாலே, அவனுக்குக்கொடுக்கலாகாதோ என்றருளினார். [ஸுபகே]—அடியார் ஏற்றமறிந்து கொண்டாடுகைக்கிடான ஸௌபாக்யமுள்ளது உனக்கேயன்றோவென்ன, உம்முடைய திருவுள்ளத்தாலேயன்றோ நான் கொடுக்கிறதென்று பிராட்டியருளிச்செய்ய, நான் முற்பாடனாகப் பெறுமையாலே உன்னுடைய உகப்பின் கார்யத்தைக் கொடுக்கலாகாதோ என்றார்.*

३५. रामो रामो राम इति प्रजानामभवन्कथाः ।
रामभूतं जगद्भूत् रामे राज्यं प्रशासति ॥
ராமோராமோ ராம இதி ப்ரஜாநா மபவந் கதாঃ,
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி. 131-101. 35

*ஜனங்களுக்கு ராமன் ராமன் ராமன் என்றே பேச்சுக்கள் நிகழ்ந்தன. ராமன் ராஜ்யத்தை ரக்ஷிக்கும்பொழுது உலகம் ராமமயமாகவே இருந்தது.*

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம். *(அமலனாதிபிரான் 2) [ராமோ ராமோ ராம இதி]—பாதம் தலைக் கட்டுகையாலே மீளுகிறதித்தனை என்றிறே நிர்வஹிப்பது. இத்த்ரைவித்யத்துக்குப்பொருள்—ஔதார்யகுணங்களைவென்றவடிவழகும், ('ஔதார்யகுணை:' என்கிறபடியே) அத்தை அநுபவிக்கக் கொடுக்கையும், கொடாநின்றால் இறுமாப்பற்றிருக்கையும். 'பும்ஸாம்தாருண்யமச' என்று (?) ஸ்த்ரீபும் விபாகமற ப்ரவணராமாகாரமுண்டாயிருக்கையாலே வீதராகரைச் சொல்லுகிறது. ப்ராப்தவிஷய ப்ராவண்யமிறே ஜிதேந்த்ரியத்வமாகிறது. [ப்ரஜாநாம்]—மாதாபிதாக்களுக்கன்று, வஸிஷ்டாதிகளுக்கன்று, ஜநிதர்மாக்களுக்கு. [கதாঃ]—லோகயாத்ரைக்கு உறுப்பாம் வார்த்தைகளும் பெருமாளைப்பற்றியல்லதிராது. [ராமபூதம் ஜகதபூத்]—ஜகத்தடைய ராமாத்வைதமாய்த்து. 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்' என்கிற பொதுவல்ல, ராமபூதம் என்று ராமாத்வைதமாய்த்து, ப்ரஹ்மாத்வைதத்தை வ்யாவர்த்திக்கிறது. பெருமாள் சுண்டுவில்கொண்டு லீலாரஸமநுபவிக்கிற காலத்திலேயோவென்னில், [ராமே ராஜ்யம் ப்ரசாஸதி]—தஹ பச என்கிற காலத்தில்.*

ஈடு. *(தி—வாய். 7-3-1) [ராமோ ராமோ ராம இதி]—சோறு சோறு சோறு என்பாரைப்போலே. [ப்ரஜாநாமபவந்கதாঃ]—மநிதர்மாக்களுக்கெல்லாம் பாசுரமிதுவே. [ராமபூதம் ஜகதபூத்]—நாடடங்க ராமாத்வைதமானபடி. நித்யவிபூதியிலே பரிமாறக்கடவது இங்கே பரிமாறுகைக்கு ஹேது என்னென்னில், [ராமே ராஜ்யம் ப்ரசாஸதி]—நாடடங்கலும் தந்தாமுடைய கர்மபலம் புஜிக்கப் பெற்றார்களில்லை, ராமபாக்யமே அநுபவித்துவிட்டது.*

யுத்தகாண்டம் முற்றிற்று.

# உ த் த ர கா ண் ட ம்

१. स्नेहो मे परमो राजन् त्वयि नित्यं प्रतिष्ठितः ।
भक्तिश्च नियता वीर भावो नान्यत्र गच्छति ॥
ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித꞉,
பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி. 1

*அரசனான ராமா! தேவரீரிடத்தில் எனக்கு மேலான அன்பு எப்போதும் உறைத்திருக்கிறது. வீரராகவா!, பக்தியும் உறுதியுடையது. மனம் வேறிடத்தில் செல்லுகிறதில்லை.*

பே—வ்யா. *(அமலனாதிபிரான் ப்ரவேசம்) [ஸ்நேஹோமேபரம꞉]—'என்றனுளவன்றால் யானுடையவன்பு. [ராஜந்த்வயி]—இதுதானும் என்னால் வந்ததன்று; அதுவுமவனதின்னருளே. [நித்யம் ப்ரதிஷ்டித꞉]—இன்றன்றாகில் மற்றொருபோது கொடுபோகிறோமென்ன, அங்ஙன்செய்யுமதன்று, தர்மியைப் பற்றிவருகையாலே. 'நின்னலாலிலேன் காண்' என்னுமாபோலே. [பக்திச்ச நியதா]—ஸ்நேஹமாவதென், பக்தியாவதென்னென்னில்—பெருமாளையொழியச்செல்லாமைபிறந்து வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை ஸ்நேஹம். பக்தியாவது—'நில்' என்ன, 'குருஷ்வ' என்னும்படியாய் முறையறிந்து பற்றின இளையபெருமாள் நிலை. [வீர]—தன்னைத் தோற்பித்த துறை. உம்முடைய வீரங்கொண்டு புறம்பே வென்றீரென்று இங்கு வெல்ல முடியாது. தானும் வீரனாகையாலே தோற்பித்த துறையைப் பிடித்துப் பேசுகிறான். [பாவோ நாந்யத்ர கச்சதி]—என்னை மீட்டீராகிலும் என்னுடைய நெஞ்சை மீட்கப்போகாது. 'அந்யத்ர' என்கிறது 'மற்றாரானுமுண்டென்பார்' என்னுமாபோலே கொடு போக நினைத்த தேசத்தின் பேரும் கூடத் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடி.*

*(ஈடு. 7-5-1-லும் இந்த வியாக்கியானம் இங்ஙனமே காண்க.)*

**முற்றிற்று.**

* न मन्थराया न च मातुरस्या दोषो न राज्ञो न च राघवस्य ।
वनप्रवेशे रघुनन्दनस्य मत्पापमेवात्र निमित्तमासीत् ॥
ந மந்தராயா ந ச மாதுரஸ்யா தோஷோ ந ராஜ்ஞோ ந ச ராகவஸ்ய,
வநப்ரவேசே ரகுநந்தநஸ்ய மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத். (அயோத்யா.)

*இராமபிரான் காடு புகுந்து வஸிப்பதில் மந்தரையினுடைய குற்றம் காரணமல்ல; இந்த (என்) தாயினுடைய குற்றமும் காரணமன்று; தசரதனுடைய குற்றமும் ஹேதுவல்ல; ராமனுடைய குற்றமும் காரணமன்று; இந்த விஷயத்தில் எனது பாபமே காரணமாக இருந்தது.*

பே—வ்யா. *(திருநெடுந்தாண்டகம். 12) [நமந்தராயா꞉]—இவ்வநர்த்தத்துக்கெல்லாம் ஹேதுபூதை மந்தரை என்று நினையா, அவளுடைய தோஷமன்று. அவள்*

* *இந்த ச்லோகம் ஸ்ரீராமாயணத்தில் இப்போது காணவில்லை.*

வார்த்தை கேட்ட கைகேயியின் தோஷமென்று நினைத்தான் ; [ந ச மாதுரஸ்யா:]—இவளுடைய தோஷமுமன்று. இவள் வார்த்தை கேட்ட சக்ரவர்த்திதோஷமென்று நினைத்தான் ; [தோஷோ ந ராஜ்ஞ:]—ராஜாவுக்கு ஒரு தோஷமுமில்லை. அவன் வார்த்தையைக் கேட்டுத் தமக்கு வகுத்த அபிஷேகத்தைப் போகட்டுக் காட்டிலே போன அவர் குற்றமித்தனை ; [ந ச ராகவஸ்ய]—அவர்க்குத் தான் குற்றமென் ? அவர் அபிஷிக்தராயிருந்தால் அநுகூலவ்ருத்தி பண்ணக் கடவனுயிருக்க, அதுக்கல்லாத என் பாபமே இவ்வனர்த்தத்துக்கெல்லாம் ஹேதுபூதம். [வநப்ரவேசே ரகுநந்தநஸ்ய]—இக்குடி வாழப்பிறந்த செல்வப்பிள்ளை வநவாஸம் பண்ணுகைக்கு நிமித்தம் என் பாபமேயா

கூனி சொன்னது கைகேயிக்குக் கேட்கவேண்டா. அவள் சொன்னது சக்ரவர்த்திக்குக் கேட்கவேண்டா. அவன் சொன்னது பெருமாளுக்குக் கேட்கவேண்டா. கூனி சொன்னது கேட்கவேண்டாதொழிகிறது—அடியாட்டியாகையாலே. கைகேயி சொன்னது சக்ரவர்த்திக்குக் கேட்கவேண்டாதொழிகிறதென்னெனில், ஸ்த்ரீ புத்ர வாத்ஸல்யத்தாலே சொன்ன வார்த்தையை பர்த்தாவுக்குக் கேட்கவேணுமோ? சக்ரவர்த்தி சொன்னது பெருமாளுக்குக் கேட்கவேண்டாவோ என்னில், தர்மாபாஸத்தை ஆலம்பநமாகக் கொண்டு ஸ்த்ரீ பாரதந்த்ர்யத்தாலே ப்ரமித்துச் சொன்ன வார்த்தையைப் பெருமாளுக்குக் கேட்கவேணுமோ? தம்முடைய அந்வயவ்யதிரேகங்களில் நான் படும்பாடு அறிவர், தாம் ராஜ்யப்ராப்தரென்னுமிடம் அறிவர், ஆனபின்பு அவனைக் கட்டி இட்டு வைத்து ராஜ்யத்தை ஆளத் தட்டென்? அவன் சொன்ன வசநத்தை அநாதரித்து ராஜ்யத்தை ஆண்டாராகில், தம்முடைய வ்யதிரேகத்தில் நான் முடியாதபடி ரக்ஷித்தாராகலாயிற்றதே. ஆகையால் என்பாபமே இதுக்கு நிமித்தமென்றுனிறே ஸ்ரீபரதாழ்வான். ... ... ... ... *

பூர்வாசார்ய வ்யாக்யான விசேஷங்கள்கொண்ட

ஸ்ரீராமாயணச்லோக மாலாத்மகமான

**ஸ்ரீராமாயண ஸௌரபம்**

**முற்றிற்று.**

நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.